2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

வரு.74 இல. 14

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

තිනකරන් වාරමන්ජරි

2022 ஏப்ரல் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

April 03 Sunday, 2022

32 பக்கங்கள் 50/-

















**மக்களின் பாதுகாப்பு, நாட்டில் அமைதியை பேணல்,சேவைகள்;**

# அவசரகால நிலைமை நாட்டில் பிரகடனம்

## ஜனாதிபதியினால் வர்த்தமானி வெளியிடப்பட்டது



நாட்டில் அவசரகால நிலைமை நேற்று முன்தினம் (01) முதல் அமுலாகும் வகையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.இதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மக்கள் அவசரகால நிலைமை நிலவுவதன் காரணமாக, பொது மக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல், பொதுமக்கள் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பேணுவதற்காக இவ்வாறு செய்தல் உசிதமானதாகவுள்ளதென தாம் அபிப்பிராயப்படுவதினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு 04

**பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி பிரகடனம்**

# மருந்துப் பொருட்களின் கொள்வனவுக்கு நிதி

## 38 மில் டொலரை ஒதுக்கியது அரசாங்கம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாட்டுக்கு தீர்வை பெற்றுக் கொள்ளும் வகையில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தற்போது 20 மில்லியன் டொலர்கள் சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், மேலும் ஒரு தொகை நிதி இந்தியாவிடமிருந்து நேரடியாக விரைவில் கிடைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். நாட்டில் தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் மருந்து கொள்வனவு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதால் அது தொடர்பில் சுகாதார அமைச்சரிடம் வினவிய போதே 04

**கட்டுப்பாட்டு விலைகளில் மாற்றம் செய்ய அரசு ஒருபோதும் இடமளிக்காது**



சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்கள்

## இந்திய இராணுவத்தைச் சேர்ந்த எவருமே இலங்கையில் இல்லை

04

## சித்தாலேப்ப குழும தலைவர் விக்டர் ஹெட்டிகொட காலமானார்



சித்தாலேப ஹெட்டிகொட குழுமத்தின் தலைவர் பிரபல வர்த்தகர் கலாநிதி விக்டர் ஹெட்டிகொட நேற்று தனது 84 ஆவது வயதில் காலமானார். தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். 04

## நிலைமைகளை நான் அவதானிக்கிறேன்

### ஜூலிசங் டுவிட்டரில்



இலங்கை மக்களுக்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமையுள்ளது. நான்நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கின்றேன் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜூலி சங் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது, இலங்கை மக்களுக்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமையுள்ளது . இது ஜனநாயக வெளிப்பாட்டுக்கு அவசியமானது, 04



மிரிஹானையில் ஜனாதிபதியின் இல்லத்துக்கருகே ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய தாக்குதல் மற்றும் தீ வைப்பு சம்பவத்தில் இராணுவத்துக்குச் சொந்தமான பஸ்சொன்று அடித்து நொருக்கப்பட்டு தீவைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். இத்தாக்குதலினால் பெருந்தொகையான அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. (படம் : சுலோச்சன கமகே)

## நாடு முழுவதும் நாளை திங்கள் அதிகாலை வரை ஊரடங்கு சட்டம் அமுல்

நாடு முழுவதும் நேற்று (02) மாலை 06 மணி முதல் ஊரடங்கு சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 06 மணிக்கு பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நாளை 04ஆம் திகதி அதிகாலை 06 மணி வரை அமுலிலிருக்குமென அரசாங்கம் அறிவித்துள்ளது. பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் விதிகளின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## இவ்வருட தேசிய மீலாத் விழா குருநாகலில்

### ஒக்டோபரில் நடத்த ஏற்பாடு சத்தார்



இவ்வாண்டுக்கான தேசிய மீலாத் விழா குருநாகல் மாவட்டத்தில் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளதாக பிரதமரின் முஸ்லிம் சமய விவகார இணைப்புச் செயலாளர் சத்தார் தெரிவித்தார்.

குருநாகல் மாநகர சபை கேட்போர் கூடத்தில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்சார் தலைமையில் நேற்று நடைபெற்றது.இக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கு 04

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 40,000 மெ.தொன். டீசல் வந்தது

### இந்தியா அறிவித்த கடன் எல்லையின் கீழ் ஏற்பாடு



இந்தியா அறிவித்த கடன் எல்லையின் கீழ் 40,000 மெற்றிக் தொன் டீசல் இலங்கைக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்டதாக இந்தியா அறிவித்துள்ளது.

இலங்கைக்கு 7,600 கோடி ரூபா கடனுதவி அளிப்பதாக இந்தியா அறிவித்திருந்தது. இதற்கிடையே இந்தியா அறிவித்த கடன் எல்லையின் கீழ் 04



காலவதியாகும் அனுமதிப்பத்திரம்

## வாகன சாரதிகளுக்கு விசேட அறிவித்தல்

04

**எங்கள் கருத்து**

## பிரச்சினைகள் தெருக்களில் அல்ல பாராளுமன்றிலேயே தீர்க்க வேண்டும்

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை போல நாடு வரலாறு காணாத நெருக்கடியில் சிக்கியிருக்கும்போது பாதுகாப்பு பிரச்சினையையும் உருவாக்கக் கூடிய வகையில் ஒரு வேண்டாத சம்பவம் மிரிஹானையில் நடந்தேறியிருக்கிறது.

இச் சம்பவத்துடன் இன்று 'மக்கள் பேரணி' ஒன்றுக்கு அழைப்பு விடப்பட்டிருப்பதும் நிலைமைகளை மோசமாக்கவும், இன்றைய நெருக்கடி நிலையை வேறு திசைகளில் உக்கிரமாகப் பணயிக்கவுமே உதவும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதும் அந்நிய செலாவணி கையிருப்பில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதும் மக்கள் அறியாததல்ல. நாடுகள் இத்தகைய கடுமையான சூழல்களுக்கு உட்பட்டிருந்ததை வரலாறு சொல்லும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பல நாடுகள் பேரழிவுகளை சந்தித்திருந்தன. பொருளாதார மீட்சிக்கான சகல தளங்களையும் அவை இழந்திருந்தன. எனினும் விடாமுயற்சி, திட்டமிடல், வெளிநாட்டு உதவிகளுடன் அவை எதிர்பார்க்கப்பட்ட காலத்திலும் பார்க்க விரைவிலேயே எழுந்து நின்றன. நீடித்து நிற்கவும் முடிந்தது.

எனவே இலங்கையாலும், சகல வளங்களும் இருப்பதால், விரைவிலேயே மீண்டெழ முடியும். இதற்கு முன்னரும் இந்நாடு வீழ்ச்சிகளை சந்தித்துள்ளது. ஆனால் மீண்டு வர முடிந்துள்ளது. இன்றைய சூழல் அவற்றைவிட மோசம் என்பது உண்மையானாலும் மக்களும் அரசியல்வாதிகளும் தமது வரலாற்றுத் தவறுகளைத் திருத்திக் கொண்டு இலங்கையை மீண்டும் வளமுள்ள நாடாக 04

## பாடசாலைகளுக்கான விடுமுறை 08ஆம் திகதி

### 18 இல் தவணை மீண்டும் ஆரம்பம்





அரசாங்க பாடசாலைகளுக்கு விடுமுறை எதிர்வரும் 08ஆம் திகதி வழங்கப்படுவதுடன், 18ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அடுத்த வாரம் அரசாங்க மற்றும் அரசாங்க அனுமதி பெற்று கொண்ட பாடசாலைகளுக்கு இவ்வாறு விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கோவிட்19 பெருந்தொற்று 04

## இலங்கைக்கு இந்தியா படைகளை அனுப்புமா?

### ஊடக செய்திகளுக்கு தூதரகம் மறுப்பு




இலங்கைக்கு இந்தியா தனது படைகளை அனுப்பவுள்ளதாக சில ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்திகளை இந்திய உயர்ஸ்தானிகராலயம் முற்றாக மறுத்துள்ளதுடன் இவ்வாறான செய்தி வெளியிடப்பட்டுள்ளமையை தொடர்பில் தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் 04

## இராஜாங்க அமைச்சர் ரொஷான் இராஜினாமா

### ஜனாதிபதியிடம் கடிதத்தை கையளித்தார்





மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொலன்னறுவை 04

## அவசரகால நிலையை மீள பெறுமாறு வலியுறுத்தி

### அரசிடம் TNA கோரிக்கை முன்வைப்பு



அவசரகால நிலைமை பிரகடனத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக மீளப் பெற வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் அதிகாரத்திற்கமைய அவரகால நிலைமை வெள்ளிக்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், தமது கூட்டணியின் நிலைப்பாட்டை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவசரகால நிலைமை பிரகடனத்தை ஜனாதிபதி உடனடியாக மீளப் பெற வேண்டுமெனவும், 04

**TNAயிலிருந்து TELO வெளியேற வேண்டும்;**

## சுமந்திரனின் கருத்துக்கு சம்பந்தன்,மாவை மௌனம்

### பதிலளிக்க கோருகிறார் செல்வம் எம்.பி

**மன்னார் குறூப் நிருபர்**



தமிழீழ விடுதலை இயக்கத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேற்ற எந்த ஒரு கட்சிக்கும் எந்த ஒரு நபருக்கும் அருகதை இல்லை.தமிழர்களின் போராட்டம் பற்றி தெரியாத சுமந்திரன் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து 04

**விக்கல் வீராச்சாமி**



அண்ணே, நாட்டில எங்க பாத்தாலும் ஆர்ப்பாட்டம், போராட்டங்களெண்டு சனம் ஒரே பிஸியா இருக்குது, உதுக்கு என்ன அண்ண முடிவு..?

தம்பி, சனத்துக்கு கஷ்டம் எண்டது உண்மைதான், அத அரசாங்கம் பாக்கும், உது ஆட்சிய பிடிக்க சிலரது வேலை, அவையின்ர கனவு ஒருநாளும் நிறை–வேறாது...!!!

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கலாபூஷண விருது விழா 2021


இராமலிங்கடப்பன் முருகேசு


ஆறுமுகம் இரத்தினவேலோன்


அம்பலவாணர் கௌரிதாசன்


அருணாசலம் தியாகலிங்கம்


இராமநாதன் சியாமளாதேவி


செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரி


சின்னத்துரை வேதவனம்


அம்பலவாணர் ஜெயராமன்


ஜெகதீஸ்வரி நாதன்


டி.ஆர் டிவான்சோ


எம். ஸீ.ஷெரீப்


ஓசன் சலாம்


கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்


எம்.எப்,எம் இக்பால்


எஸ்.எச் மும்தாஜ் பேகம்


எம்.எப்.எம் பாரீஸ்


அஷ்ரப் ஷிஹாப்தீன்

2021 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது விழா பண்டாரநாயக்க சர்வதேச மகாநட்டு மண்டபத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்றது. கலாசார அமைச்சு நடத்தும் இவ் விருது விழாவில் பிரதம விருந்தினராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபிலகுணவர்த்தன கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் தரணி அனோஜா கமகே, இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன், கல்வி அமைச்சின் ஓய்வு நிலை செயலாளர் கலாகீர்த்தி தில்லைநடராசா ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ், கலாபூஷண விருதுகளை வழங்கி வைத்தனர்.

(படப்பிடிப்பு : வத்தளை விசேட நிருபர் )


எம்.எச் முஸம்மில்


எம்,.எஸ் தாஜ்மஹான்

# கொழும்பு கொட்டாஞ்சேனை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அன்னை மகா கும்பாபிஷேக பெருவிழா


சிவாச்சாரியார்கள்

கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் கடந்த 168 வருடங்களாக அடியார்களுக்கு அருள் பாலித்து வரும் அன்னை முத்துமாரியின் திருவருளாலும் தமிழும், சைவமும், தருமமும் பேணி பெரும் இறைபணியாற்றி வரும் திருவிளங்க நகரத்து அறங்காவலர் நிர்வாகசபையினரின் பெருமுயற்சியினாலும் பக்த அடியார்களின் பேராதரவினாலும் பல புதிய திருப்பணிகள் செய்து, அழகுற வர்ணம் தீட்டி, பங்குனி மாதம் 23ஆம் நாள் (06.04.2022) புதன்கிழமை காலை 9:30 முதல் 10:30 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ முத்துமாரி அன்னைக்கும் விநாயகப்பெருமான் உட்பட பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

ஆலய அமைப்பு முறையில் புதிய சில மாற்றங்களைக் கொண்டு வருதல் மற்றும் அடியார்களின் வழிபாட்டுக்கு வசதி செய்தல் போன்ற காரணங்களுக்காக தமிழ்நாடு, சீர்காழி, திருவெண்காடு, சிற்பக்கலை ஆசான், கோவிந்தசாமி மதியழகன் ஸ்தபதி தலைமையிலான பத்து சிற்பக்கலைஞர்களின் உதவியோடு, கொவிட்19 வைரஸ் தொற்று காரணமாக நாடே ஸ்தம்பித்திருந்த சூழ்நிலையிலும் ஆலய நிருவாகக்குழு புனருத்தாரண நடவடிக்கைகளில் கடந்த பல வருடங்களாக ஈடுபட்டது.

**எண்ணெய்க் காப்பு (04–04–2022 காலை 08 மணி முதல், 05–04–2022 மாலை 05 மணி வரை)**

**மகாகும்பாபிஷேகம் (06–04–2022 காலை 9:30 மணி முதல் 10:30 மணி வரை)**

ஆலய அறங்காவலர் சபையைச் சேர்ந்த டொக்டர் எம். ராமசுப்பு, எஸ். செல்வரட்ணம், எம். வடிவேல், எஸ். ரி. சிவகுமார், எஸ். முத்துராமலிங்கம் ஆகியோரின் பெருமுயற்சியினாலும் நீண்ட காலமாகத் தடைப்பட்டிருந்த கும்பாபிஷேகப் பெருவிழாவை நடத்தியே தீர வேண்டும் என்ற உத்வேகத்தாலும் பக்தர்களின் அனுசரணையாலும் பக்தி உணர்வாலும் தெய்வத்திருவருளாலும் சிறப்பாக நிறைவு செய்திருக்கிறார்கள். ஆலய புனருத்தாரண நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் ஏற்கனவே உள்ள அமைப்புகள் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் புதிதாகவும் சில பரிவார மூர்த்திகள் அமைக்கப்பட்டுள்ளன. மூலஸ்தானத்தில் வழமை போல் அன்னை முத்துமாரி அமர்ந்து அருள் பாலிக்கின்றாள்.



நமது நாட்டின் இன்றைய சூழலில் அன்பையும், இரக்கத்தையும் யாசிப்பது ஓர் தார்மீகக் கடமை என்பதை நன்குணர்ந்த திருவிளங்க நகரத்தார் தமிழகத்தில் மட்டுமன்றி தாம் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தெய்வீகத் திருப்பணிகளைச் செய்து வருகின்றனர்.

## தல பெருமைகள்:

காசி என்றதும் விசாலாட்சியும், காஞ்சி என்றதும் காமாட்சியும் மதுரை என்றதும் மீனாட்சியும் நினைவில் எழுவது போல் கொட்டாஞ் சேனை என்றதும் முத்துமாரி அம்மைதான் நினைவில் வருகின்றாள். அருளாட்சி நடத்தும் அன்னையாக நந்தன சுந்தரியாக, சிறுமை கண்டு பொங்கும் தேவியாக, மகிஷாசுர மர்த்தனியாக, கொடுமையைக் கருவறுக்கும் காளியாக, பசிப்பிணி போக்கும் அன்னை பூரணியாக, அரனுடன் கலந்து அர்த்த நாரியாக, திருக்கோலம் காட்டும் அன்னை முத்துமாரியாக கொட்டாஞ்சேனை பதியில் குடிகொண்டுள்ளார்.


கோவிந்தசாமி மதியழகன் ஸ்தபதி

## பூஜை கிரியைகள்:

சுன்னாகம் ஸ்ரீ கதிர்மலைச் சிவன்கோவில் 'முத்தமிழ் குருமணி', சிவஸ்ரீ நா. சர்வேஸ்வர குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ மு. ரவிபாஸ்கர குருக்கள், பிரம்மஸ்ரீ பரமானந்த சனாதன சர்மா, சிவாகம பூஷ்ணம் பிரம்மஸ்ரீ விக்னேஷ் சிவாச்சாரியார் ஆகியோர்களுடன்

ஆலய தேவஸ்தான குருமார்களான சிவஸ்ரீ பால கணேஷ் குருக்கள், பிரம்மஸ்ரீ சண்முகானந்தா குருக்கள், பிரம்மஸ்ரீ எஸ். சுரேஸ்குமார் சர்மா, பிரம்மஸ்ரீ வி. ஞானசேகர சர்மா மற்றும் இளஞ்சுடர்களான கே. துஷாந்தன், ரா. நவின்குமார் ஆகியோரின் மங்கள இசையுடன் திருவருள் பாலிக்கச் செய்கிறார்கள்.


ஆலய அறங்காவலர்கள்

**எச்.எச்.விக்ரமசிங்க...**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






**சொந்த அரசியல் இலாபங்களைக் கைவிட்டு நாட்டை சரிவிலிருந்து மீட்டெடுப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் அரசாங்கத்துடன் கைகோர்க்க வேண்டும் என்று காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். தற்பொழுது நாட்டில் நிலவும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். தற்போதைய நிலைமைகள் குறித்து அமைச்சர் எமக்கு பேட்டி வழங்கினார்.**



# அரசியல் இலாபங்களை பெறுவதற்கு முயற்சிக்கும் தருணமல்ல இது!

## அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவுடன் சந்திப்பு

**கே: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோரிக்கையை அடுத்து ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டை நடத்தியிருந்தார். இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு சர்வாதிகாரி என்ற எண்ணம் ஆரம்பத்தில் சிலருக்குக் காணப்பட்டது. எனினும், அவரின் இரண்டு வருட நிர்வாகத்தைப் பார்க்கும் போது ஜனநாயகத் தலைவர் என்பது தெளிவானது. அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்து பல்வேறு அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. எனினும், அந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டவர்கள் எவரும் துன்புறுத்தப்படவில்லை அல்லது தொந்தரவு செய்யப்படவில்லை. இந்த டொலர் பிரச்சினையும் பொருளாதார நெருக்கடியும் ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டவை அல்ல. இது நீண்டகாலப் பிரச்சினை என்பதை பெரும்பான்மையான மக்கள் உணர்ந்துள்ளனர். கடந்த 74 வருடங்களாக இழுத்தடிக்கப்பட்டு வந்த பிரச்சினையே இதற்குக் காரணம் என ஜே.வி.பியும் கூறுகிறது. எவ்வாறாயினும், பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் நேர்மையான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

எனவே, சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானம் பாராட்டுக்குரியது. நாட்டின் தலைவர் என்ற வகையில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். பிரதான எதிர்க் கட்சி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட சில கட்சிகள் இதில் கலந்து கொள்ளவில்லை. இந்த மாநாட்டில் வடக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டதை பாராட்டுகிறோம். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட விடயத்தை முன்வைத்த போது, ஜனாதிபதி அவரிடம் தனது வருத்தத்தைத் தெரிவித்தார். ஜனாதிபதி அத்தகைய நெகிழ்வான தலைவர்.

மாநாட்டை ஜனாதிபதி கையாண்ட விதத்தைப் பார்க்கும் போது நாம் மகிழ்ச்சியடையலாம்.

அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்தமையால் பயங்கரவாதத்தை வெற்றி கொள்ள முடிந்தது. மக்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் விமர்சனங்கள் எதுவாக இருந்தாலும், ஜனாதிபதி பொறுமையாக நிலைமையை வெற்றிகரமாக எதிர்கொண்டு முன்னேறி வருகிறார். அரசியல் கட்சிகளின் கருத்துகளைக் கேட்டறிய சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது. அரசாங்கம் மற்றும் அரசியல் கட்சி என்ற ரீதியில் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்குப் பதிலாக, மக்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துகளைப் பெற்று நெருக்கடிகளைச் சமாளிப்பது மிகவும் பொருத்தமானது. இந்த செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி தலைமைத்துவத்தை வழங்கி வருகின்றார்.

நெருக்கடிக்குத் தீர்வு காண அனைத்து அரசியல் கட்சிகளும் கைகோர்க்க வேண்டும். மக்கள் கஷ்டப்படுவதை அனுமதிக்க முடியாது. மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களை அதிகப்படுத்தி தமது அரசியல் முகாம்களையும் வாக்குத்தளத்தையும் பலப்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சித்தால் அது ஜனநாயக விரோத நடவடிக்கையாகும். தேர்தல் வரும் போது, மற்ற அரசியல் கட்சிகளை வெற்றி கொள்ள தங்கள் பலத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

மக்கள் எதிர்கொள்ளும் சுமைகளையும் இன்னல்களையும் குறைக்க அரசியல் வேறுபாடுகள் இன்றி அனைவரும் கைகோர்க்க வேண்டும். மக்கள் புத்திசாலிகள். தங்களின் சார்பில் தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தைகளை புறக்கணிக்க முயற்சிக்கும் அரசியல் கட்சிகளுக்கு அவர்கள் எந்த மன்னிப்பும் வழங்க மாட்டார்கள். நாட்டில் பிரச்சினைகளை உருவாக்க சில அரசியல் கட்சிகளின் திட்டமிட்ட முயற்சிகளால் மக்கள் மகிழ்ச்சியடைய மாட்டார்கள். அத்தகைய அரசியல் கட்சிகளால் அவர்கள் ஏமாற்றமடைவார்கள்.

**கே: ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளான பிவித்துரு ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற பல அரசியல் கட்சிகளும் சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்திருந்தன. இது பற்றி உங்கள் கருத்து?**

பதில்: பதினொரு கட்சிகளில் சில கட்சிகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர். பேராசிரியர் திஸ்ஸ விதாரண, அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இருவரை மாத்திரம் அனுப்பாமல் ஏனையவர்களும் கலந்து கொண்டிருக்க வேண்டும். சரியாயின் அவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு முழு நாட்டையும் சரியான பாதையில் கொண்டு செல்லும் திட்டம் தொடர்பில் விவாதித்திருக்க வேண்டும். அது மாத்திரமன்றி முன்மொழிவுகளைசெயற்படுத்துவதற்கானசாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்திருக்கலாம்.

மாநாட்டைப் புறக்கணிப்பது சமகி ஜன பலவேகயா மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு ஏற்றதல்ல. மக்களின் எரியும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் எண்ணம் இவர்களுக்கு இல்லை என்பது புலனாகிறது. அவர்கள், எப்படியாவது, அரசாங்கத்தை சங்கடப்படுத்தவும், மக்களை சிரமத்திற்குள்ளாக்கி, தங்கள் வாக்குப் பலத்தை அதிகரிக்கவும் விரும்புகிறார்கள்.

## அனைத்துக் கட்சி மாநாட்டில் வடக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டதை பாராட்டுகிறோம்

**கே: பொருளாதார நெருக்கடி குறித்து ஆலோசிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சியின் விசேட கூட்டத்தின் முடிவு என்ன?**

பதில்: எங்களின் டொலர் கையிருப்பை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், எரிபொருள் மற்றும் எரிவாயுவை தட்டுப்பாடு இன்றி வழங்கவும், மின்வெட்டைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் எமது பிரதிநிதிகள் அனைவரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தியாவிடமிருந்து பெறப்பட்ட கடனுதவி மூலம் எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு போன்றவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ கூட்டத்தில் தெரிவித்தார். எதிர்வரும் பத்து நாட்களுக்குள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நிதியமைச்சர் நடவடிக்கை எடுப்பார். சிங்கள, தமிழ் புத்தாண்டு காலத்தில் உணவுப் பொருட்களின் விலைகளை குறைத்து தட்டுப்பாடு இன்றி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கத்தை விமர்சிப்பதை விட நெருக்கடியை சமாளிக்க தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்குமாறு அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். இந்த நிலைமையை அலட்சியப்படுத்த வேண்டாம் எனவும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விமர்சனங்களால் மட்டுமே தீர்வு கிடைக்காது எனவும் ஜனாதிபதி ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்தார். எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இந்த நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நிலைமையை எதிர்கொள்ள அரசாங்கத்தை அமைத்த அனைவரும் கைகோர்க்க வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

**கே: எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெறுவதற்கு மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்கள் நீண்ட நேரம் வரிசையில் நிற்க வேண்டும். நிலைமையைத் தீர்க்க எடுக்கப்பட்ட தீர்வு நடவடிக்கைகள் எவை?**

## நாட்டை வீழ்ச்சியிலிருந்து மீட்க அனைத்துக் கட்சிகளும் அரசுடன் கைகோர்க்க வேண்டும்!

பதில்: அரசாங்கம் இதை ஒரு பெரிய பிரச்சினையாகக் கருதுகிறது மற்றும் எரிவாயு மற்றும் எரிபொருளுக்கான வரிசைகளைத் தடுக்க முயற்சிக்கிறது. சமையல் எரிவாயு மற்றும் எரிபொருளை தட்டுப்பாடு இன்றி இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மின்வெட்டைத் தவிர்ப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு எரிபொருளை வழங்குவதற்கு முன்னுரிமை அளித்துள்ளோம்.




# தெற்கிலிருந்து தென்கிழக்காசியாவுக்கு பாலம் அமைக்கும் முயற்சியில் இந்தியா

தெற்காசியா மற்றும் தென்கிழக்காசியாவில் அமைந்துள்ள ஏழு நாடுகளின் பிம்ஸ்டெக் BIMSTEC அரசுத் தலைவர்களின் மாநாடு கடந்த புதன் கிழமை கொழும்பில் நடைபெற்றது. வங்காள விரிகுடாவை சூழவுள்ள நாடுகளின், பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார கூட்டமைப்பு எனக் குறிப்பிடப்படும் இந்த மகாநாடு 'பிம்ஸ்டெக்' என குறுகிய பெயரால் குறிப்பிடப்படுகின்றது.

தாய்லாந்து, மியன்மார், பங்காளதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை என்பன அந்த அமைப்பில் அடங்குகின்றன. இம்முறை அந்நாடுகளின் தலைவர்களின் ஐந்தாவது மாநாடே நடைபெற்றது. இம்முறை மாநாட்டிற்கு இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை வகித்தது விசேட அம்சமாகும். இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட அனைத்து அரச தலைவர்களும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மாநாட்டில் உரையாற்றியதோடு வெளிநாட்டு அமைச்சர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்கள்.

பிம்ஸ்டெக் மாநாட்டை உருவாக்கும் கொள்கை 1997 ஆம் ஆண்டு உருவானது. தாய்லாந்தின் பாங்கொக் நகரில் அதிகாரிகளின் கலந்துரையாடல் சுற்று நடந்தது.

பங்களாதேசம், இந்தியா ,இலங்கை மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளிடையே அதன் முதலாவது ஒப்பந்தம் நடைபெற்றது. வர்த்தகம், தொழில்நுட்பம், மின்வலு, போக்குவரத்து, சுற்றுலாத்துறை நடவடிக்கைகள், மீன்பிடித்துறை போன்ற 6 அம்சங்களே ஆரம்பத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. பயங்கரவாதத்தை ஒழிப்பது மற்றும் பிராந்தியத்தை ஒருமைப்படுத்துவது போன்ற அம்சங்களும் அடங்கியிருந்தன. தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரத் துறையை உள்ளடக்கி பல்துறை தொடர்பான வலையமைப்பை உருவாக்குவது வரையும் அது விரிவடைந்தது.

சார்க் அங்கத்துவ நாடுகளிடையே பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான வலுவான வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மேற்கொண்ட பயணத்தில் காணப்பட்ட தாமதமே இந்த கட்டமைப்பை முன்னெடுப்பதற்கான காரணியாக அமைந்தது எனக் குறிப்பிடலாம். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இணக்கமின்மையே அதன் ஆரம்ப காரணியாகும். இரு நாடுகளுக்கு இடையே ஏற்படும் சிறு சிறு மோதல்கள் வெளியே தெரிய வருவது சார்க் அமைப்பு பலவீனமடையும் பின்னணியில் என்பது இரகசியமான விடயமல்ல.

தெற்காசிய நாடுகளை ஒற்றுமையாக வைத்திருப்பதோடு பொருளாதார மற்றும் சமூக ரீதியாக தெற்காசியா வரை பரவியுள்ள வங்காள விரிகுடாவை சூழ புதிய வலுவை ஏற்படுத்திக் கொள்வது பிம்ஸ்டெக்கின் நோக்கமாகும். இது தந்திரோபாயமான, படைப்பாற்றல் மிக்க கருத்தென்பது தெளிவாக தெரிகின்றது.

அரசுத் தலைவர்கள் கலந்து கொண்ட முதலாவது சுற்று தாய்லாந்தில் 2014 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் நடைபெற்றது. அம்மாநாடு அன்று BISTEC என அழைக்கப்பட்டது. பல துறைகளினது தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வதே நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. மியன்மார் 1997 ஆம் ஆண்டும் இலங்கை 1998ஆம் ஆண்டும் இதில் அவதானிப்பு மட்டத்தில் இணைந்து பின்னர் நிரந்தர அங்கத்துவத்தை பெற்றுக் கொண்டன.

பிம்ஸ்டெக் நாடுகளின் சனத்தொகை 1.6 பில்லியன் ஆகும். உலக மக்கள் தொகை அறிக்கையின்படி உலகின் மொத்த மக்கள் தொகையில் நூற்றுக்கு இருபத்தொரு பாகமாகும். இந்த பிராந்தியத்தின் பொருளாதார அளவு 2.8 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் என்பதோடு ஏழு நாடுகளினதும் பொருளாதார வளர்ச்சி சாதாரணமாக நூற்றுக்கு 6.5 ஆகும் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தற்போதுள்ள கஷ்டமான நிலைமையில் இந்த தரவு மாறி இருக்கலாம் ஆனால் சர்வதேசத்தில் குறிப்பிடக் கூடிய அளவு பேரம் பேசக் கூடிய அமைப்பின் பண்பை கொண்டுள்ளது என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

இணைப்பே பிம்ஸ்டெக் நாடுகளின் பிரதான தலைப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து தரை வழியாக தாய்லாந்து வரை அதிவேக பாதை மூலம் தொடர்பினை ஏற்படுத்துவது இலக்குகளில் ஒன்றாகும். அது முதலீடு மற்றும் சுற்றுலாத் துறைக்கான பாரிய நடவடிக்கையாகும். அவ்வாறான யோசனை முன்வைக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பத்திலேயே திட்டத்துக்கான கடனுதவியை வழங்க இந்தியா விருப்பம் தெரிவித்திருந்தது. இந்தியா பிம்ஸ்டெக் நாடுகளின் பட்டியலில் பெரிய நாடு, பாரிய சந்தையையும் கொண்டது. அங்கு ஏற்படும் பொருளாதார விரிவாக்கல்களுக்கு தனித்துவமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள அதனுடன் இணைந்த நாடுகள் தயாராகவுள்ளன.

வங்காளவிரிகுடாவை சுற்றியுள்ள நாடுகளிடையே வடக்குப் பக்கத்தில் கதவு மற்றும் மேலதிக தூண்கள் இரண்டு என்ற ரீதியில் அண்மித்த நாடுகளுக்கு முதலிலும் மற்றும் கிழக்குக்கும் கவனம் செலுத்தும் வகையில் இரண்டு பிரிவுகளுக்கான யோசனையை இந்தியா முன்வைத்துள்ளது. நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கு முன்னால் அந்த கோட்பாடுகளுக்கு அமைய செயல்படுவதே அதன் கொள்கை எனக் கூறப்பட்டுள்ளது. நாடுகளை இணைப்பதோடு அதனால் கிடைக்கும் மூலதனத்துக்கான இடம் பிம்ஸ்டெக் நாடுகளின் கட்டமைப்பை மிகவும் சிக்கலான இடத்திற்கு கொண்டு செல்லும் எனக் கருதப்படுகிறது.

ஏழு நாடுகள் இணைந்து தெற்கிலிருந்து தென்கிழக்காசியா வரை நட்பு பாலம் ஒன்றை அமைத்து வருகின்றன. அது எதிர்காலத்தில் மேலும் விரிவடையும். தற்போது ஆசியான் அமைப்பு இந்த பிராந்தியத்தின் எதிர்காலத்தைப் பற்றிய பல எதிர்வு கூறல்களை தெரிவித்துள்ளது. வரி இல்லாமல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதன் மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய சூழலை ஏற்படுத்தும் முயற்சிக்காக கனவு காண்கின்றது. அமைப்பின் நோக்கம் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் வரை பயணிப்பதே என கூறப்படுகின்றது. உலகலாவிய போட்டித் தன்மைகளின் முன்னால் வலுவாக எழுவதற்கு புதிய இடமொன்று அவசியமாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# IMF அறிக்கை மீதான விவாதம் 8 ஆம் திகதி பாராளுமன்றில் முழுநாள் விவாதம்



இலங்கை தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டிருக்கும் அறிக்கை தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் எதிர்வரும் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் இரவு 08 மணி நடத்துவதற்கு பாராளுமன்ற நடவடிக்கை தொடர்பான செயற்குழு (கட்சித் தலைவர்கள்) தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றம் நாளை மறுதினம் 05 ஆம் திகதி முதல் 08 ஆம் திகதிவரை நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று கூடிய கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 05 ஆம் திகதி மருத்துவ கட்டளைச்சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2021.12.24 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கட்டளை மீதான விவாதம் நடைபெறும்.

06 ஆம் திகதி புதன்கிழமை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அன்றைய தினம் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் கீழான கட்டளைச் சட்டம் தொடர்பான விவாதம் நடைபெற இருக்கின்றது.

அத்துடன் 07 ஆம் திகதி மிகைவரி சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

அத்துடன் இறுதிநாளான 08 ஆம் திகதி இலங்கை தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டிருக்கும் அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சி கொண்டுவரும் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணி முதல் இரவு 08 மணிவரை விவாதத்தை நடத்துவதற்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக செயலாயர் நாயகம் தெரிவித்தார்.

தோட்டத்துரையின் தகாத வார்த்தை பிரயோகம்;

# செனன் தோட்ட மக்கள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம்



ஹற்றன் பிளான்டேஷன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் செனன் தோட்ட தொழிலாளர்கள் நேற்று தோட்டத்துரைக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தோட்ட பங்களாவில் காவல் வேலை செய்யும் தோட்ட தொழிலாளி ஒருவரை தோட்ட துரை தன் மனைவியின் ஆடையை துவைக்க சொன்னதாகவும் அதை மறுத்ததினால் கொச்சை வார்த்தைகளால் திட்டியதாகவும் தொழிலாளி கூற அதனால் ஒட்டு மொத்த செனன் தோட்ட தொழிலாளர்களும் தோட்ட துரைக்கெதிரான பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தோட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கையில்,..

தோட்டதுரையும் அவரோடு தோட்டத்தில் வேலை செய்யும் இரு கணக்குபிள்ளையும் இடமாற்றம் செய்ய வேண்டும். காரணம் இம்மூவரும் தோட்டத் தொழிலாளர்களை அடிமை போல நடத்தி வருகின்றனர்.அனைவரையும் தகாத வார்த்தை கொண்டு ஏசுகின்றனர். மேலும் இவ்விடயம் தொடர்பில் தோட்ட முகாமையாளரிடம் முறையிட்டுள்ளோம். அதுமட்டுமல்லாது அரசியல் தொழிற்சங்கங்களிடமும் கடிதங்களை அனுப்பியுள்ளோம். இதற்கு நிரந்த தீர்வு கிடைக்காவிட்டால் தொடர் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்க நேரிடும் என குறிப்பிட்டனர்.

சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்கள்

# இந்திய இராணுவத்தைச் சேர்ந்த எவருமே இலங்கையில் இல்லை

## பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்ண தெரிவிப்பு



இந்திய இராணுவத்தைச் சேர்ந்த எவரும் நாட்டுக்குள் நுழைய வில்லை. இது தொடர்பில் சில இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களூடாக பரப்பப்பட்டு வரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவையென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இவ்வாறு பொய்யாக பரப்பப்பட்டு வரும் செய்திகளில் சித்தரிக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், கடந்த ஆண்டு நடைபெற்ற 'மித்ர சக்தி' என்று அழைக்கப்படும் இந்தியஇலங்கை கூட்டு இராணுவப் பயிற்சியின் போது வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ புகைப்படங்களென அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இருதரப்பு கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காகவே இந்த இந்திய இராணுவக் குழு இலங்கையின் மத்தள சர்வதேச விமான நிலையத்தை அப்போது வந்தடைந்ததாக பாதுகாப்புச் செயலாளர் மேலும் விளக்கமளித்தார்.

மக்களைத் தவறாக வழிநடத்தும் நோக்குடன் வெளியிடப்படும் இது போன்ற தவறான தகவல்கள் தொடர்பில் பொதுமக்கள் வீணாக பீதியடைய வேண்டாமென்றும் ஊடக நெறிமுறைகளைப் பேணி சகல ஊடகங்கள் ஊடாக வெளியிடப்படும் அறிக்கைகள் தொடர்பில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் எந்தவொரு சூழ்நிலையையும் கையாளும் திறன் இலங்கை பாதுகாப்புப் படைகளுக்குள்ளது எனவும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

காலவதியாகும் அனுமதிப்பத்திரம்

# வாகன சாரதிகளுக்கு விசேட அறிவித்தல்

காலாவதியான சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்து விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகமவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, நேற்று 02 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 30ஆம் திகதியுடன் காலாவதியாகும் அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாகும் திகதியிலிருந்து 06 மாதங்களாக நீடிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 01ஆம் திகதி ஆரம்பமாகி செப்டம்பர் 30ஆம் திகதியுடன் காலாவதியாகும் சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாகும் திகதியிலிருந்து 03 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளுக்கான...

நிலைமைகளினால் கடந்த 2021ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை ஏப்ரல் மாதம் வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் இவ்வாண்டுக்கான முதலாம் தவணை கற்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## அவசரகால ...

அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பையும் போராட்டங்களையும் இதன் மூலம் அடக்க முடியாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.விடுதி நீச்சல் தடாகத்தில் சடலம்

யாழ் நகரிலுள்ள பிரபல தனியார் விடுதியொன்றின் நீச்சல் தடாகத்திலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. யாழ். நகரை சேர்ந்த 06 பேர் தனியார் விடுதியில் நேற்றிரவு தங்கியிருந்து இரவு ஒரு மணியின் பின்னர் நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை விடுதி நிர்வாகத்தினர் நீச்சல் தடாகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மிதப்பதை அவதானித்து யாழ். பொலிசாருக்கு தெரிவித்தனர். இதனையடுத்து யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். எனினும் உயிரிழந்தவருடன் மேலும் பலர் நீச்சல் தடாகத்தில் நீராடி இருக்கலாமென தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவம் கொலையா? அல்லது இயற்கை மரணமா? என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## நிலைமைகளை...

எதிர்வரும் நாட்கள் அனைத்து தரப்பினருக்கும் பொறுமையை கொண்டுவருமென கருதுகின்றேன்.

துயரத்தில் சிக்குண்டுள்ளவர்களுக்கு மிகவும் அவசியமான பொருளாதார ஸ்திரதன்மையும் நிவாரணத்தையும் கொண்டுவருமென எதிர்பார்க்கின்றேன் என்றார்.

## இலங்கைக்கு இந்தியா...

குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு இந்தியா தனது படைகளை அனுப்புவதாக சில ஊடகங்களில் வெளியாகியிருக்கும் அப்பட்டமான பொய்யானதும் முற்றிலும் ஆதாரமற்றதுமான செய்திகளை உயர் ஸ்தானிகராலயம் உறுதியாக நிராகரிக்கின்றது.

இவ்வாறான பொறுப்புணர்வற்ற செய்தியிடலை உயர் ஸ்தானிகராலயம் கண்டிக்கும் அதேநேரம் சம்பந்தப்பட்ட தரப்பினர் வதந்திகளை பரப்புவதை தவிர்க்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றது. என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இராஜாங்க அமைச்சர்...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான இவர், மே மாதம் முதலாம் திகதியிலிருந்து, தனது பதவியை இராஜினாமா செய்துகொள்வதாக குறிப்பிட்டு இந்த கடிதத்தை கையளித்துள்ளார்.

விவசாயிகள் பெரும்பான்மையாக வாழும் தனது மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

07 பக்கங்கள் கொண்ட நீண்ட கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த அவர், தமது பிரச்சினைகளை நேரடியாக ஜனாதிபதியிடம் முன்வைப்பதற்குக் கூட சந்தர்ப்பம் வழங்கப்படாமை தொடர்பில் தாம் மிகுந்த வருத்தமடைவதாக அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## எங்கள் கருத்து...

# பிரச்சினைகள் தெருக்களில் அல்ல பாராளுமன்றிலேயே தீர்க்க வேண்டும்....

மாற்றுவதற்கு முயற்சி செய்வதே இன்று நாம் செய்ய வேண்டிய காரியமே தவிர இருப்பதை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதல்ல.

இவ்வகையில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரசிங்கவின் ஆலோசனைகள் வரவேற்கத்தக்கவை. அவர் பிரச்சினைகளை தெருவுக்குக் கொண்டுவராமல் பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டுமென்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகிறார். ரணில் விக்கிரமசிங்க கடந்த பொதுத் தேர்தலில் மக்களால் ஓரங்கட்டப்பட்டது உண்மையானாலும் சிறந்த ஜனநாயகவாதி மற்றும் அரசியல் பொருளாதாரத்தில் விசாலித்த அறிவு கொண்டவரென்ற வகையிலும் அவரது இக்கூற்றுறை நாம் கட்சி அரசியலுக்கு அப்பால் பார்க்க வேண்டியது அவசியம்.

இன்றைய காலக்கட்டத்தில் இலங்கையர் உணர்ச்சி வசப்படாமல் அறிவு பூர்வமாக சிந்தித்து செயல்பட்டால் மாத்திரமே மக்கள் பொருளாதார மீட்சி அடைவதற்கான வழிவகைகளை கைகொள்ளக் கூடியதாக இருக்கும்.

மிரிஹானை சம்பவத்தை எடுத்துக் கொண்டால் ஒரு தரப்பினர் கூறுவதைப் போல அங்கே கூடியவர்கள் சாதாரண மக்களாக இருக்கலாம். ஆனால் ஒரு பெருங் கூட்டம் கூடும் போது நாசகார சக்திகளும் அங்கே ஊடுருவுவதற்கான வாய்ப்புகளுள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது. அவற்றின் நோக்கங்கள் நாட்டையும் அரசையும் குழப்பியடித்து பிரச்சினைகளை பூதாகரமாக்குவதே தவிர வேறு எதுவுமல்ல. மிரிஹானையில் அழிவு சக்தி எங்கிருந்து வந்திருந்தாலும் அது ஏற்படுத்திய விளைவுகளைப் பார்த்தோம். இத்தகைய சம்பவங்கள் ஆங்காங்கே நடக்குமானால், அவை சட்ட ஒழுங்கை பாதிக்கும், நிலைமைகளை சீரழிக்கும் என்பதும் மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆசிய நாடுகளில் மக்களை அரசியல் ரீதியாக உணர்ச்சி வசப்படுத்தி பலன்களை வன்முறைகள் மூலம் அறுவடை செய்தலென்பது பிரபலமான ஒரு உத்தி. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுதியாக அமைந்த ஒரு அரசை, ஒரு இக்கட்டான சூழலில், அந்த அரசுக்கு ஒத்தாசை வழங்காமல் அதற்கு மேலும் நெருக்கடிகளைத் தந்து ஆட்சி மாற்றமொன்றை நோக்கி நகர்த்துவது எவ்வகையிலும் இத்தருணத்தில் அனுமதிக்கப்படலாகாது.

பிரச்சினைகளை பாராளுமன்த்தில் விவாதித்து மக்கள் பிரதிநிதிகளின் சம்மதத்தோடு எவ்வாறான மாற்று நடவடிக்கைகளை எடுக்கலாமென்ற தீர்மானத்தை பாராளுமன்றமே எடுக்க வேண்டுமே தவிர தெருக்களில் வன்முறைகளில் ஈடுபடுவோரல்ல.

பொருளாதாரம் மீட்கப்பட வேண்டும். வன்முறை ஆயுதம் முற்றிலுமாக மழுங்கடிக்கப்பட வேண்டுமென்பதோடு நம் ஜனநாயக முறைமைகள் காப்பாற்றப்பட வேண்டுமென்பதும் மிக முக்கியம்.

## அவசரகால நிலைமைநாட்டில்...

இந்தக் கட்டளைச் சட்டத்தின் பாகம் 2 இன் ஏற்பாடுகள் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் இலங்கை முழுவதும் நடைமுறைக்கு வருதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாக்கப்பட்ட காவல்துறை ஊரடங்கு சட்டம் நேற்றுக் காலை 6 மணியுடன் நீக்கப்பட்டுள்ளது.

## மருந்துப் பொருட்களின் கொள்வனவுக்கு...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:

தட்டுப்பாடான மருந்துப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக 20 மில்லியன் டொலர்கள் சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ளது. எவ்வாறாயினும் தற்போதைய நிலைமைக்கு இது தீர்வாகாது.

மேலும் 18 மில்லியன் டொலர்கள் இந்தியாவிடமிருந்து நேரடியாக விரைவில் கிடைக்கவுள்ளது. அதன்மூலம் ஆறு மாதங்களுக்குப் போதுமான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

அதற்கிணங்க தற்போது நாட்டில் நிலவும் ஒரு சில மருந்து தட்டுப்பாடுகளுக்கு தீர்வு கிடைக்கும்.

பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவது போன்று நாட்டில் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு எதுவும் கிடையாது.

மருத்துப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படுமா?

விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்கான கோரிக்கையை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளதாக அறியமுடிகிறதே? என அவரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்:

ஆம். உலக சந்தையில் மருந்துப் பொருட்களின் விலை அதிகரிப்பு, டொலருக்கான நெருக்கடி ஆகியவற்றை காரணமாக வைத்து அவர்கள் மருந்துப் பொருட்களின் விலைகளை அதிகரிக்கலாம். எவ்வாறெனினும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைகளை மாற்றுவதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.

மருந்து விற்பனையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றார்கள். எவர் சொன்னாலும் நாம் கட்டுப்பாட்டு விலைகளை மாற்றுவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டில் உள்ளோம் என்பதை அவர்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

## சுமந்திரனின் கருத்துக்கு...

தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) வெளியேறுவது சந்தோஷம் என்றும் இதையே தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் விரும்புவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

இவ் விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் வெள்ளிக்கிழமை (1) மன்னாரிலுள்ள அலுவலகத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்தார்.

இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

தமிழ் தேசிய கூட்டமைப்பு சம்பந்தமாக பேசுவதற்கு சுமந்திரனுக்கு அருகதை இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கின்றேன்.

ஏனெனில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆரம்பித்து 10 வருடங்களுக்கு பின்பு தான் சுமந்திரன் இந்த கூட்டமைப்புக்குள் வந்து செயல்பட தொடங்கி இருக்கிறார்.கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.புலிகளின் ஆயுதப் போராட்டத்தை கூட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஏற்றுக்கொள்ளவில்லை.பல தடவைகள் கொச்சைப்படுத்தி இருக்கின்றார்.

இவருடைய கருத்துக்கள் தமிழர்களின் போராட்டத்தை மலினப் படுத்துவதாக இருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

மாவை சேனாதிராஜாவிடம் நான் கேட்க விரும்புகிறேன். வெளிப்படையாக பதில் கூறவேண்டும். தமிழரசு கட்சி இதை விரும்புகிறதா? சுமந்திரன் சொன்ன கருத்தை தமிழரசுக் கட்சி ஒட்டுமொத்தமாக ஆதரிக்கின்றதா? என்பதை வெளிப்படையாக கூற வேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் சம்பந்தன் சுமந்திரனுடைய கூற்றை ஆதரிக்கிறீர்களா? என்பதனையும் வெளிப்படையாகக் கூற வேண்டும்.

சுமந்திரன் கூறுவது தான் தமிழரசு கட்சி அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்தா? என்பதை வெளிப்படையாக தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலை இயக்கத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேற்ற எந்த ஒரு கட்சிக்கும் எந்த ஒரு நபருக்கும் அருகதை இல்லை.

சுமந்திரனுக்கு போராட்டத்தைப் பற்றி தெரியாவிட்டால் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும். எனவே இது விடயம் தொடர்பாக மாவை, சம்பந்தன், எமக்கு வெளிப்படையான பதிலைத் தர வேண்டும்.

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு...

40 ஆயிரம் டன் டீசல் இலங்கைக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்டது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இந்தியாவின் உதவியை இலங்கை அரசு நாடியது. இந்தியா சென்ற இலங்கை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பிரதமர் மோடியை சந்தித்து பேசினார்.

இதையடுத்து இலங்கைக்கு 7,600 கோடி ரூபா கடனுதவி அளிப்பதாக இந்தியா அறிவித்தது. இதன்படி இந்தியா அறிவித்த கடன் எல்லைக்கு கீழ் 40,000 மெற்றிக் தொன் டீசல் இலங்கைக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்டது.

அந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்தது. இந்தியா அனுப்பிய டீசல் நேற்று மாலை இலங்கை முழுவதும் விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு இலங்கையில் டீசல் கிடைக்காதென்று அறிவிக்கப்பட்டது. டீசலை இறக்குமதி செய்ய முடியாததால் டீசல் விநியோகம் முற்றிலும் நிறுத்தப்பட்டது. இதனால் பஸ்கள், சரக்கு வாகனங்கள் உட்பட பொதுப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கபட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

## இவ்வருட தேசிய மீலாத் விழா...

கருத்து தெரிவிக்கும் போதே பிரதமரின் முஸ்லிம் சமய விவகார இணைப்புச் செயலாளர் சத்தார் மேற்கண்டவாறு தெரிவித்ததார். கூடத்தில் குருநாகல் மாநகர சபை தலைவர் துசார சஞ்சீவவும் கலந்து கொண்டார்.

சத்தார் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இம்முறை தேசிய மீலாத் விழா குருநாகல் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

விழா தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,...

குருநாகல் மாவட்ட தேசிய மீலாத் விழா ஹிஸ்புல்லா மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.அத்தோடு பள்ளிவாசல் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு,மத்ரஸா பாடசாலை முன்னேற்றத்திற்கு தேவையான நிதி உதவி,முஸ்லிம் பாடசாலை அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் கிராமங்களில் உள்ள குறைபாடுகளும் நிவர்த்திக்கப்படும்.குருநாகல் மாவட்டத்தில் தேசிய மீலாத் விழாவை முன்னிட்டு பல அபிவிருத்திகள் செய்யப்படவுள்ளதாகவும் பிரதமரின் முஸ்லிம் சமய விவகார இணைப்புச் செயலாளர் சத்தார் தெரிவித்தார்.

## சித்தாலேப்ப குழும தலைவர்...

'வீட்டு வைத்தியர்' என புகழ் பெற்ற 'சித்தாலேப' ஆயுர்வேத தயாரிப்புகள், இலங்கை மக்களிடையே பிரபல்யமான ஒரு வலி நிவாரணியாக திகழ்கிறது.

பிரபல சித்தாலேப தயாரிப்பு நிறுவன குழுமம் 1934ஆம் ஆண்டு சிறுநீரக நிபுணர் மற்றும் ஜோதிடர் கலாநிதி ஹென்ட்ரிக் டி சில்வா ஹெட்டிகொடவினால் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1969 ஆம் ஆண்டில் ஹென்ட்ரிக் டி சில்வா ஹெட்டிகொடவின் ஒன்பது குழந்தைகளில் ஐந்தாவது குழந்தையான விக்டரைத் தேர்ந்தெடுத்து தனது ஆயுர்வேத மருத்துவப் பயிற்சியைத் தொடர்ந்தார்.

தனது மகனை ஒரு தொழில்முனைவோராக உருவாக்குவதை ஹென்ட்ரிக் டி சில்வா நோக்கமாகக் கொண்டிருந்தார்.

விக்டர் ஹெட்டிகொட உலகப் புகழ்பெற்ற பௌத்த மதகுரு மற்றும் தத்துவஞானி மறைந்த வணக்கத்திற்குரிய அக்கமஹாபண்டித பேராசிரியர் வல்பொல ஸ்ரீ ராகுல தேரரின் மருமகனும் ஆவார். அவர் மேற்கு நாடுகளில் பௌத்தத்தை பரப்பினார்.

மாத்தறை, ராகுல கல்லூரியின் மாணவரான விக்டர் ஹெட்டிகொட பின்னர் தனது தந்தையின் வழிகாட்டலின் கீழ் குடும்பத்தினரின் தொழிலில் பயிற்சி பெற்றார். அவர் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் ஆயுர்வேதத்தின் கோட்பாடு மற்றும் நடைமுறைகளைக் கற்றுக்கொண்டார்.

பண்டைய ஏடுகளின் பிரதிகள் மற்றும் புத்தகங்களை ஆராய்ந்த அவர் நடைமுறை அனுபவத்தையும் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -











# அமைதியான போராட்டத்துக்கு தீவைத்த தீவிரவாதிகள்

## மிரிஹான ஆர்ப்பாட்டத்தின் மறுபக்கம்

இன்று முழுஉலகமும் பல்வேறு பிரச்சினைகளுக்குள் சிக்கியிருக்கின்றது. கொவிட்தொற்றானது உலக பொருளாதாரத்திற்கு ஏற்படுத்திய தாக்கம் கொஞ்ச நஞ்சமானதல்ல. உலக பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீளுவதற்கு இலங்கை போன்ற சிறிய நாடுகளால் முடியாது. அதன் ஆரம்ப வீழ்ச்சியானது எமது பொருளாதாரத்திற்கு ஏற்படுத்திய தாக்கத்தை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். அதுநாட்டின் அனைத்து சேவைகளிலும் நெருக்கடிகள் உருவாக்கியது. சிலபிரச்சினைகள் காணப்படுவது தீர்த்து வைக்கக்கூடிய எல்லைக்கு அப்பாலாகும். இவைகளைப் புரிந்துகொள்ளக் கூடிய அறிவார்ந்த சமூகம் இருக்க வேண்டியதன் அவசியம் முன்னொரு போதும் இல்லாத வகையில் உணரக்கூடியதாக உள்ளது. எனவே கடந்துசென்று கொண்டிருக்கக் கூடிய இந்த காலத்தை பொறுமையுடனும், பயனுள்ளவகையிலும் கடத்த வேண்டியுள்ளது.

கொவிட்19 தொற்றினால் பாதிக்கப்பட்ட அனேக நாடுகள் இன்னமும் மீளுவதற்கு போராடிக் கொண்டிருக்கின்றன. அத்துடன் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களுக்காக தமது நாடுகளுக்கு அழைத்துக்கொள்ள வீசா வழங்காத காரணங்களினாலும் வளரும் நாடுகளுக்குப் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதன்காரணத்தினால் டொலர் கிடைக்கும் அல்லது அந்நியச் செலாவணி வருவது அந்த நாடுகளுக்கு பெரும் நெருக்கடியாக ஆகியிருக்கின்றது. வெளிநாட்டுக் கல்வியைப்போன்று வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களையும் இழந்து இதனிடையே இலங்கையும் பெரும் பொருளாதார பாதாளத்திற்குள் வீழ்ந்துள்ளது.

### அரசாங்கத்தைப் பற்றி கூறப்படும் கதைககள்

இந்நிலையின் உச்சகட்டம் இப்போது வந்திருக்கின்றது. அவை அனைத்தின்கீழ் இந்நாட்டு பொருளாதாரம் சரிவடைந்தது பார்த்துக்கொண்டிருக்கும் போதேயாகும். இந்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பும் வேகமாகக் குறைவடைந்து சென்றது. இவை அனைத்திற்கும் மத்தி



யில் சிலஅரசியல்வாதிகளின் முட்டாள்தனமான செயற்பாடுகளினால் நாட்டிற்கு கிடைக்கும் அவமதிப்பும், அதன்ஊடாக நாட்டு மக்கள் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் மீது ஏற்படுத்திக் கொள்ளும் விரக்தியும் அதிகரிக்கின்றது. சிறைச்சாலைக்குள் சென்று சண்டித்தனம் காட்டுதல், அமைச்சர்களைப் போன்று தந்தைமாரின் ஊக்கத்தினால் மக்களுக்கு சண்டித்தனம் காட்டும் மகன்களின் காரணமாகவும் அரசாங்கத்திற்கு பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. சிலகாலங்களுக்கு முன்னர் கிளப்மோதலின் காரணமாக கலாநிதி பட்டம்பெற்ற முன்னாள் அமைச்சர் ஒருவரின் மகனின் பெயர் தொடர்ச்சியாக தொலைக்காட்சிகளில் பிரசாரம் செய்யப்பட்டது

இவை அனைத்திற்கு மத்தியில் நாட்டை ஆட்சி செய்யவேண்டியுள்ள ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்திற்கு முகங்கொடுக்கவேண்டியுள்ள பிரச்சினைகளும், நெருக்கடிகளும் கொஞ்ச நஞ்சமானதல்ல. அரசாங்கத்திலேயே இருந்துகொண்டு, அரசாங்கத்திலேயே சலுகைகளைப் பெற்றுக்கொண்டு அரசாங்கத்தை விமர்சிக்கும் தரப்பினர் ஒருபுறத்தில் இருந்துகொண்டு தமது நலன்களுக்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தமக்கு நன்மை கிடைக்கும்போது அரசாங்கம் நல்லது. தமக்கு தீயது நடக்கும்போது, ஊழல் மோசடிகளைச் செய்யகிடைக்காதபோது அரசாங்கம் கூடாது.

முக்கியமாக மின்சாரசபையில் இடம் பெறும் பொறியியலாளர் மாபியாவும் இவற்றில் முதன்மை வகித்தன. எந்த அமைச்சராலும் இந்த பொறியியலாளர் மாபியாவைத் தடுப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை. அவசரநிலைமைகளில் பயன்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட மின் உற்பத்தி இயந்திரங்கள்கூட தற்போது செயலிழந்துபோயுள்ளன. மின்சார நெருக்கடிக்காக குற்றம் சுமத்தப்படுவது ஆட்சியாளர்கள் மீதேயாகும். பொறியியலாளர்கள் உள்ளிட்ட மாபியாகாரர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள் மற்றும் ஊழல்மோசடிகளினால் மின்சாரவிநியோகத்தைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கு முடியாது போயிருக்கின்றது. அத்துடன் இந்தியன் ஒயில் நிறுவனம் இலாபம்ஈட்டும்போது எரிபொருள் கூட்டுத்தாபனம் ஏன் கோடிக்கணக்கில் நஷ்டத்தை சந்திக்கின்றது? ஊழல் அதிகாரிகளின் அனைத்தும் செல்வது அரசாங்கத்தின் கணக்கிற்கேயாகும்.

இவை அனைத்திற்கும் மத்தியில் 13 மணிநேர மின்துண்டிப்பினால் அழும்நிலையிலிருந்த மக்களின் கண்களில் விரல்களால் குத்துவது போலிருந்தது. அதுகடந்த 31ம்திகதி வெடிக்க ஆரம்பித்தது.



இதன் ஆரம்பம் கடந்த வெள்ளிக்கிழமை பகல் எல்பிட்டி, வவுனியா, ஹட்டன், பலப்பிட்டி போன்ற இடங்களி ல்இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களினால் ஏற்பட்டது.

மிரிஹான ஆர்ப்பாட்டத்தின் ஆரம்பம்

அந்த ஆர்ப்பாட்டங்களின் மற்றுமோர் பிரதிபலனாகவோ என்னவோ அன்று மாலை நுகோகொடை ஜுப்லி கோபுரத்திற்கு அருகில் ஒன்று கூடியதரப்பினர் கேஸ், மின்சாரம், டீசல் போன்றவற்றைக் கேட்டு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஒருமணிநேரத்திற்கு பன்மடங்காக அதிகரித்தது. முக்கியமாக முச்சக்கரவண்டிச் சாரதிகள் மற்றும் கூலித்தொழிலாளர்களும் விரைவாக அங்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொண்டனர். அத்துடன் தொலைக்காட்சி அலைவரிசை மற்றும் முகநூல் ஊடாக இந்நிகழ்வு நேரடி ஒளிபரப்புசெய்யப்பட்டதைத் தொடர்ந்து வீடுகளிலிருந்தவர்களும், கடைகளிலிருந்தவர்களும் விரைந்துவந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொண்டனர்.

நினைத்ததைவிட பெருந்திரளானோர் ஒன்றுகூடியதன் காரணமாக ஒன்றுகூடியிருந்தவர்கள் எதிர்ப்பு கோசங்களை எழுப்பியவாறு மஹரகம தெஹிவளை119 ம் இலக்க வீதிமுழுதும் சென்று எதிர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்தனர். சிறிது நேரத்தில் 119 ம்இலக்க வீதி முற்றாக தடைபட்டது. அத்துடன் வாகனங்களுக்கு டீசல் பெறுவதற்காக வரிசையில் நின்றவர்களும் வாகனங்களை நிறுத்திவிட்டு இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டனர். கூடியிருந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றபோது நிலைமை சூடுபிடிக்கத்தொடங்கியது. அவர்கள் ஜனாதிபதியின் வீடு அமைந்துள்ள பெங்கிரிவத்தை பிரதேசத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள். நிலைமை அந்தளவுக்கு நல்லதாக இல்லை என்பதைப் புரிந்துகொண்ட நுகோகொடை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட அனைவரும் அப்பிரதேசத்தின் பாதுகாப்புக்காக அங்குவந்தனர். மக்கள் அலைஜனாதிபதியின் இல்லத்தை நோக்கிச்செல்வதைத் தடுப்பதற்கு அவர்கள் முயற்சித்தனர்.

### சூடுபிடித்தல்

ஜனாதிபதியின் வீடு அமைந்துள்ள திசையை நோக்கிச் சென்றவர்களைக் கட்டுப்படுத்துவது முடியாதகாரியம் என்பதைத் தெரிந்துகொண்டதன் பின்னர் பாதுகாப்புத்தரப்பினரால் கலகம் அடக்கும் பிரிவினரையும், பின்னர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரையும் அழைத்துக்கொண்டனர்.

இரவு 8.00 மணியளவில் நிலைமை தீவிரமடைந்திருந்ததோடு, ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்துவதற்கு முடியா தநிலையில் இராணுவத்தினர் அவ்விடத்திற்கு வரவழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கூடியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இடையில் வந்திருந்த சிலர் தலைமைத்துவத்தை மேற்கொண்டு இதனை வழிநடாத்திய முறையினையும் அறிந்து கொள்ள முடிந்துள்ளது. எந்தஒரு அரசியல் தலைவரையும் அவ்விடத்தில் காணக் கிடைக்கவில்லை. இறுதியில் இரவாகும் போதுவந்திருந்த வாகனங்களும் இவர்களுக்கு ஒத்துழைப்பை வழங்கும் நோக்கில் சிறிதுநேரம் வாகனங்களை நிறுத்திக்கொண்டு ஹோர்ன் ஒலியை எழுப்பி எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பாதுகாப்புப் படையினரைத் தவிர வேறு எவரும் வன்முறையைக் கட்டுப்படுத்தவோ அல்லது அவர்களை அமைதியாக இருக்குமாறு அறிவுறுத்தவோ நடவடிக்கை எடுக்காததால், நிலைமை தீவிரமடைந்தது. கலவரத்தை அடக்குவதற்காக இரவு9.35 மணியளவில் பெங்கிரிவத்தை பிரதேசத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் இருளில் அங்கிருந்து விலகிச் சென்றுவிடுவார்கள் என்று எண்ணியே அவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

### மனக்குமுறல்

எனினும் நடந்ததோ வேறு ஒன்றாகும். மின்சாரம் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த அவர்கள் ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கிச் செல்வதற்கு அவசரப்பட்டார்கள். நிலைமையினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கண்ணீர் புகைப்பிரயோகம் மற்றும் தண்ணீர்பிரயோகம் போன்றவற்றை மேற்கொள்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். அந்ததாக்குதல்களுக்கு முகங்கொடுத்தவாறு அதற்கு எதிராக முன்னேறிச் சென்றவர்கள் பொலிஸ் வீதித்தடைகளையும் புரட்டிப் போட்டார்கள். அவ்வாறு வந்தவர்களுக்கு வீட்டுக்கு அருகில் செல்வதற்கு முடியாதவாறு இறப்பர் குண்டுவேட்டுக்களை மேற்கொள்ளப்பட்டன.

அந்நிலையில் இராணுவத்தினரும் அவ்விடத்திற்குவந்ததோடு, அவர்கள் வந்த பஸ்வண்டிக்கும் கலவரக்காரர்களால் தீவைக்கப்பட்டது. அத்துடன் இறப்பர்குண்டுத் தாக்குதலால் கோபமடைந்தவர்கள் பொலிஸார்மீது கற்களைக் கொண்டு தாக்குதல் மேற்கொண்டனர். அத்துடன் அங்கு வந்த பாதுகாப்புதரப்பினரின் வாகனங்களின் மீதும் அவர்கள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு முன்னால் சென்ற மோட்டார்சைக்கிள் ஹெல்மெட் அணிந்திருந் தஇளைஞர் ஒருவர் தனது மனக்குமுறல்களை அவர்களிடம் வெளிப்படுத்தினார்.

அது சமூகஊடகங்களில் இன்னமும் வைரலாகி வருகின்றது. தான் வீட்டில் இருந்ததாகவும், இந்தப் போராட்டத்தைப் பார்த்து அவ்விடத்திற்கு வந்ததாகவும் அவ்விளைஞர் கூறினார். பொலிஸாரும் தம்மோடு இணைந்து இந்தப் போராட்டத்தில் பங்காளர்களாக ஆகவேண்டும் என்றும் அவ்விளைஞர் கூறினார். நாட்டுமக்கள் பசியினால் இருட்டில் வாழ்வதாகவும் அவ்விளைஞர் குறிப்பிடுகின்றார். சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களும் இந்தப் போராட்டத்தில் பங்காளர்கள் என்றும் அவ்விளைஞர் அங்கு குறிப்பிட்டார்.





எனினும் பொலிஸ் அதிகாரிகள் அவ்விளைஞரைத் தாக்கவோ அல்லது திட்டவோ இல்லை. படிப்படியாக அவர்களை அப்புறப்படுத்துவதற்கு முயற்சித்தனர். பின்னர் இராணுவத்தினர் வருகைதந்து நிலைமையினைக் கட்டுப்படுத்தும்போது அனேக விடயங்கள் நடந்து முடிந்து விட்டிருந்தன. இதனிடையே பொலிஸ்மா அதிபரின் உத்தரவில் நுகேகொடை, பெங்கிரிவத்தை பிரதேசம், கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு உள்ளிட்ட பலபிரதேசங்களுக்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அந்நேரம் இரண்டு பஸ்கள், ஜீப் வண்டி ஒன்று, முச்சக்கரவண்டி ஒன்று மற்றும் ஒருமோட்டார்சைக்கிளும் போராட்டக்காரர்களால் தீவைத்து அழிக்கப்பட்டிருந்தது. அத்துடன் தண்ணீர் தாக்குதல் வண்டிக்கும்சேதம் ஏற்படுத்தப்பட்டது.

### உடமைகள் சேதம்

இச்சம்பவத்தில் 60க்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களிடையே 24 பொலிஸாரும் அடங்குகின்றனர். 5 பொலிஸ் அதிகாரிகள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருவதோடு, அவர்களுள் உதவிபொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் உள்ளார். அத்துடன் நுகோகொடை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியும் காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவர்கள் அனைவரும் களுபோவில மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயங்களுக்கு உள்ளானவர்களுள் இச்சம்பவத்தி ல்செய்திசேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் சிலரும் உள்ளனர். அத்துடன் இச்சம்பவத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவரை வன்முறையாளராகக் கருதி பொலிஸார் கைது செய்திருப்பது தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது.

வன்முறையில் ஈடுபட்ட 45 பேர் அச்சந்தர்ப்பத்திலேயே கைதுசெய்யப்பட்டதோடு, பின்னர்9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடையே இளயும் யுவதி ஒருவரும் உள்ளார். அவர்கள் அனைவரையும் கடந்தவெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதேவேளை இந்த எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெற்ற இடத்திற்கு கறுப்புஆடைஅணிந்து, தலைக்கவசம் அணிந்தநிலையில் சென்றிருந்த தரப்பினர் தொடர்பிலும் பாதுகாப்பு தரப்பினர் விஷேட கவனம்செலுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் இதுதொடர்பான விசாரணைகள் தற்போது குற்றவிசாரணைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்குப் புறம்பாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரும், மிரிஹான மோசடி ஒழிப்பு பிரிவினரும், நுகோகொடை பொலிஸாரும் தனித்தனியாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பிரதேசத்தின்பாதுகாப்பிற்காகஇராணுவம்மற்றும்பொலிஸ்விசேடஅதிரடிப்படையினரும்தற்போதுஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### 39 மில்லியன் ரூபாய் இழப்பு

மிரிஹானவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் இதுவரைக்கும் மதிப்பிடப்பட்டுள்ள உடமைகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு 39 மில்லியன் ரூபாயாகும் என இதுதொடர்பில் கருத்து தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அத்துடன் இதுதொடர்பில் அறிக்கை ஒன்றைவெளியிட்டுள்ள ஜனாதிபதி ஊடகப்பிரிவு, நுகோகொடை, ஜுப்லி கோபுரத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடையே இருந்த ஒழுங்கமைக்கப்பட்ட தீவிரவாதிகள் குழுவினர் வன்முறையில் ஈடுபட்டு குழப்பகரமான சூழ்நிலையினை ஏற்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இரும்புத்தடிகள், கத்திகள், பொல்லுகளுடன் வந்துள்ள இந்தகுழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைத் தூண்டிவிட்டு மிரிஹான பெங்கிரிவத்தையில் அமைந்துள்ள ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கிப்பயணித்து குழப்பகரமான நிலையினை ஏற்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வன்முறையில் ஈடுபட்டவர்களுள் அனேகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவர்களுள் அதிகமானோர் ஒழுங்கமைக்கப்பட்ட தீவிரவாதிகள் என உறுதியாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள்"அரபிய வசந்தத்தை" இந்நாட்டில் ஏற்படுத்துவோம் என்றகோசத்துடன் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துச் சென்றதாகவும், இது மிகவும் திட்டமிட்ட வகையில் பெயர்குறிப்பிடாமல் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களைத் தூண்டிவிட்டு நாட்டை சீர்குலைக்கும் நோக்கில் இந்த வன்முறை நிலையினை ஏற்படுத்தியதாகவும் கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து தெரியவந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


குற்ற விசாரணைகள்திணைக்களம்உள்ளிட்டவிசாரணைக்குழுக்களின்முன்னால் அனைத்தும்வெளிவரும். ஆவேசமடைந்துள்ள மக்களைப்பயன்படுத்திக்கொண்டு தவறான நன்மைகளைப்பெற்றவர்கள் தொடர்பிலும்விடயங்கள்வெளிவரும்.

பலதசாப்தங்களுக்கு முன்னர் நாரஹேன்பிட்டவில் இடம்பெற்ற மேதின கூட்டம் மற்றும் புறக்கோட்டையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திலும் சாரமரியாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்குப் பாதுகாப்புத்தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ளாததற்கான காரணம் அவர்களை வழிநடாத்திய தலைமைத்துவமே அன்றி பலவீனமல்ல. பொலிஸ் அதிகாரிகளின் முன்னால் நாடகமாடிய இளைஞருக்கு அதற்கான பலம் கிடைத்ததும், பொலிஸ் அதிகாரிகளின் முன்னாலேயே "நாட்டின் அழிவுக்கு ஊடகங்களும், சமயத் தலைமைகளும் பொறுப்புக் கூறவேண்டுமென்றும், இந்தப் போராட்டத்தில் பாதுகாப்புத்தரப்பினரும் இணைந்து கொள்ள வேண்டும்" என்றும் குரல் எழுப்புவதற்கு அவரால் முடிந்தது அதற்கான சுதந்திரம் கிடைத்திருப்பதனாலாகும்.

எனினும் இந்த பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு நாட்டைக் கவிழ்ப்பதாலோ, வாகனங்களுக்கு த்தீவைப்பதாலோ அல்லது பொதுச்சொத்துக்களுக்கு சேதங்களை ஏற்படுத்துவதாலோ வழிகிடைக்காது என்பதை ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அவர்களை அடிமைகளாக்கி அரசியல் இலாபத்தையோ அல்லது வேறுபலன்களையோ பெற்றுக்கொள்வதற்கான தரப்பினர் உருவாவது மாத்திரமேயாகும்.

தாரக விக்ரமசேகர
தமிழில் எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம்விசேடநிருபர்)

## சிட்னியில் 'ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்' நூல் வெளியீடு




தமிழர்களின் பாரம்பரிய கலாசாரமும், ஈழத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் பிரதிபலிக்கும் மாட்டுவண்டிச் சவாரி பற்றிய நூல் நாளை சிட்னியில் வெளிவருகிறது.

கிழக்கிலங்கை பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறை பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய "ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்" என்ற நூல் வெளியீட்டு வைக்கப்படவுள்ளது.

டாக்டர் விக்கினேஸ்வராவின் 31ம் நாள் நினைவு வணக்க நிகழ்வாக எதிர் வரும் ஏப்ரல் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சிட்னி முருகன் கோயில் கலாசார மண்டபத்தில் இந்நூல் வெளியீடு நடைபெறும்.

## சீனன்கோட்டை ஆரம்ப பிரிவு பாடசாலையின் அபிவிருத்திக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்

### பரிசளிப்பு நிகழ்வில் மர்ஜான் பளீல் எம்.பி





பேருவளை சீனன்கோட்டை ஆரம்பப் பிரிவு பாடசாலை அபிவிருத்திக்கு தன்னால் முடியுமான அனைத்து உதவிகளையும் மேற்கொள்ள தயாராக இருப்பதாகவும் அரசாங்கம் கல்வித் துறைக்கு கூடுதலான நிதியொதுக்கீடுகளை வழங்கி மாணவ சமூகத்தின் கல்விக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

சீனன்கோட்டை ஆரம்ப பிரிவு பாடசாலையிலிருந்து 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் கௌரவிப்பும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் (31) பாடசாலையின் மர்ஹூமா இரீபத்துல் ஹைரா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி ஜெஸீலா தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், இன்று கல்வியின்றி எதனையும் சாதிக்க முடியாது.

அப்படியானதொரு காலகட்டத்தில் நாம் எமது சமூகத்தின் கல்வியின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டும். இன்று மேடையேற்றப்பட்ட மாணவர்களின் நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக இருந்ததை காண முடிந்தது.

அதேபோல், எனக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்படுகின்ற வரவு செலவு திட்ட நிதியிலிருந்து முடியுமான உதவிகளை இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு மேற்கொள்வதோடு சிறந்த கல்விச்சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் அர்ப்பணிப்போடு செயற்படும் பாடசாலை அபிவிருத்திக்குழுவிற்கும் எனது பூரண உத்துழைப்புகளை எதிர்காலத்தில் வழங்குவேன் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் இதன் போது தெரிவித்தார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# இலங்கையின் நெருக்கடி நீங்குவதற்கு இந்தியா வழங்கும் உடனடி உதவிகள்

**அந்நிய செலாவணிப் பற்றாக்குறையால் இலங்கை பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்திருக்கும் நிலையில், அயல்நாடான இந்தியா இதுவரை 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது. மூன்று சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இந்தத் தொகை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.**

எரிசக்தித் தேவைக்காக முதற்கட்டம் 5 பில்லியன் டொலர் கடன்தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் பின்னர் இந்தியா 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை வழங்கியது. இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய மேலும் ஒரு 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி உதவியை அடிப்படையாகக் கொண்டே நாட்டின் தேவைக்கான எரிபொருள், அத்தியாவசிய உணவுப்பொருட்கள் உள்ளிட்டவற்றை அரசாங்கம் இறக்குமதி செய்கிறது.

நிதியுதவிக்கும் அப்பால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு வழங்குவதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவித் திட்டத்தின் கீழ் இலங்கை பிரத்தியேக டிஜிட்டல் அடையாள முறைமையை அமுல்படுத்துவது குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை, கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று தீவுகளில் கலப்பு மின்சக்தி திட்டங்களை அமுல்படுத்துவது குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை, இலங்கையில் மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை, காலி மாவட்டத்தில் உள்ள 200 பாடசாலைகளில் பிரத்தியேகமான கல்வி மென்பொருளுடனான ஸ்மார்ட் அட்டைகள் மற்றும் நவீன கணனி ஆய்வு கூடங்களை ஸ்தாபிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, வெளிநாட்டு சேவைக்கான சுஷ்மா ஸ்வராஜ் நிலையம் மற்றும் பண்டாரநாயக்கா சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை என்பன கைச்சாத்திடப்பட்டுள்ளன.

கொழும்பில் நடைபெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய் சங்கர் இலங்கை வந்திருந்த போதே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இது தவிர, இந்தியாவின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட கலாசார மையம் மெய்நிகர் முறையில் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இவற்றுக்கும் அப்பால் இந்தியாவின் கடன் உதவியின் கீழ்தான் தற்பொழுது நாட்டுக்குத் தேவையான எரிபொருள் கொள்வனவு செய்யப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரையில் பிராந்தியத்தின் பலம்மிக்க நாடு என்பது மாத்திரமன்றி, இலங்கையின் நெருக்கமான நட்புநாடு என்பதே உண்மை. இலங்கை எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுத்தாலும் முதலில் உதவும் நாடாக இந்தியாவே காணப்படுகிறது.

கொவிட் தொற்றுநோய்த் தாக்கத்தின் போது முதன் முதலில் இலங்கைக்குத் தடுப்பூசிகளை வழங்கியது இந்தியா. இது மாத்திரமன்றி இறுதி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், 2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரலைத் தாக்கத்தின் போதும் இலங்கைக்கு முதலில் உதவிக்கரம் நீட்டிய நாடு இந்தியாவாகும். இதற்கும் அப்பால் இலங்கை கடற்பரப்பில் கப்பல் விபத்து உள்ளிட்ட திடீர் அனர்த்தங்களின் போதும் உடனடியாக உதவிக்கு ஓடி வந்த நாடாக இந்தியா காணப்படுகிறது.

இந்த வரிசையில் இலங்கை தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார



கொள்ளச் செய்து தேவையான உதவி பற்றி அறிந்து கொள்ளச் செய்திருந்தார். அத்துடன், கொழும்பில் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்திருந்தார். இக்கட்டான சூழ்நிலையில் இந்தியா வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட பலரும் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், இந்தியா வழங்கிவரும் உதவிகளின் பின்னணியில் நிகழ்ச்சிநிரல் இருப்பதாக விமல் வீரவன்ச போன்ற சிலர் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். நாட்டின் தற்போதைய நிலைமைகளை சீர் செய்வதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காது, மாற்று யோசனைகளை முன்வைக்காத இவர்கள், வீணாக மக்களைக் குழப்பும் செயற்பாடுகளையே முன்னெடுக்கின்றனர். கடந்த காலத்திலும் இவர்கள் இதுபோன்ற தேவையற்ற எதிர்ப்புகளை மக்கள் மத்தியில் உருவாக்கியிருந்ததை மறக்க முடியாது.



## இரு நாடுகளுக்குமிடையே மீண்டும் நெருக்கமடையும் உறவுகள்

நெருக்கடியில் உதவி செய்ய இந்தியா முன்வந்துள்ளது. இரு நாட்டுக்கும் இடையிலான உறவுகளை இது பலப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதுடன், பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பை இந்தியா வழங்கும் என்ற உறுதிமொழியைக் கொடுத்திருந்தார்.

அது மாத்திரமன்றி கொழும்பில் தங்கியிருந்த போது பேராதனை வைத்தியசாலையில் நிலவிய மருந்துத் தட்டுப்பாட்டினால் சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்ற செய்தியை அறிந்த அவர், உடனடியாக இந்திய உயர்ஸ்தானிகரைத் தொடர்பு

இது இவ்விதமிருக்க மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பிம்ஸ்டெக் அல்லது வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பின் (Bay of Bengal Initiative for Multi Sectoral Technical and Economic Cooperation) BIMSTEC உச்சிமாநாடு கொழும்பில் நடைபெற்று முடிந்துள்ளது. பிம்ஸ்டெக்கின் தற்போதைய தலைமைப் பதவியை வகிக்கும் இலங்கை இம்மாநாட்டை நடத்தியிருந்தது. நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருக்கும் நிலையில் இம்மாநாடு முக்கியம் வாய்ந்ததாக அமைந்தது எனலாம். இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளன.

**பி.ஹர்ஷன்...**

---

# இந்தியாவின் நல்லெண்ணத்துக்கு களங்கம் கற்பிக்கும் பிரசாரங்கள்!

**இலங்கையின் நலன்களுக்கு விரோதமாக இந்தியா ஒரு போதுமே செயற்பட்டதில்லை. பண்டைய காலத்தில் இலங்கை மீது இந்திய இராச்சியங்களின் படையெடுப்புகள் அவ்வப்போது இடம்பெற்றுள்ளதாக வரலாற்று நூல்களில் நாம் படித்திருக்கின்றோம். ஆனாலும் மறுபுறத்தில் இலங்கை, இந்திய இராச்சியங்களைப் பொறுத்தவரை இருதரப்பு நட்புறவுகள் தொடர்ந்தே வந்துள்ளன.**

தென்னிந்திய இளவரசிகளை இலங்கை மன்னர்கள் மணமுடித்த வரலாறுகளை நாம் கற்றுள்ளோம். தென்னிந்திய மன்னர்களுக்கு தேவை ஏற்பட்ட வேளையில் இலங்கை மன்னர்கள் தங்களது படைகளை அனுப்பி, உதவியளித்த உண்மையான வரலாறுகளையும் நாம் கற்றுள்ளோம். இலங்கை மன்னன் நெல் உட்பட உணவுப் பொருட்களை தென்னிந்திய மன்னன் ஒருவனுக்கு அனுப்பி வைத்து அங்கு நிலவிய பஞ்சத்தைத் தணிப்பதற்கு உதவியதாக வரலாற்று நூல் ஒன்று கூறுகின்றது.

இவை தவிர, வடஇந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலும் பண்டைக் காலத்தில் நட்புறவுகள் நிலவியதாக சரித்திரம் கூறுகின்றது. அந்த நட்புறவின் காரணமாகவே உலகம் போற்றுகின்ற காருண்ய மதமான பௌத்தம் இலங்கையில் பரவியது. மௌரிய வம்சத்து மன்னனான அசோகச் சக்கரவர்த்தி இலங்கை மன்னன் தேவநம்பியதீசன் மீது கொண்ட அன்பின் காரணமாகவே இந்தியாவிலிருந்து பௌத்தம் இலங்கையில் பரவியது.

மஹிந்த தேரர் இலங்கையில் காலடி பதித்த பின்னர் அசோகச் சக்கரவர்த்தி மீது கொண்ட அபிமானம் காரணமாக இங்கிருந்து பரிசுப் பொருட்களை அங்கு அனுப்பி வைத்த வரலாறும் உள்ளது.

பண்டைய காலத்தைப் பொறுத்தவரை படையெடுப்பும், ஆக்கிரமிப்பும் புதுமையானவையல்ல. அக்காலத்தில் காலத்துக்குக் காலம் அவ்வாறான ஆக்கிரமிப்புகள் நடந்துள்ளன. ஆனால் இந்தியாவிலும், இலங்கையிலும் பிரித்தானிய காலனித்துவம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர், தென்னிந்திய படையெடுப்புகளும் முற்றாகவே ஓய்ந்து போய் விட்டன.

இரு நாடுகளும் ஜனநாயக ஆட்சிமுறையின் கீழ் மிகுந்த பற்றுக் கொண்ட நாடுகளாக மாறிக் கொண்டன. பிரித்தானியர்கள் அறிமுகப்படுத்திய பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையை சரிவரப் பேணியவாறு இரு நாடுகளுமே ஜனநாயகப் பாதையில் பயணிக்கத் தொடங்கின. அந்தப் பயணம் இன்றும் தொடர்கின்றது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பாரதம் மிகப்பெரும் வல்லரசு தேசமாகத் திகழ்கின்றது. ஆயுத வல்லமையைப் பொறுத்தவரை இந்தியா தனது பலம் குறித்து ஒருபோதுமே தம்பட்டமடித்துக் கொண்டது கிடையாது. தனது அயல்தேசங்களால் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை அதிகம் எதிர்கொள்கின்ற நாடு இந்தியா ஆகும். ஆனாலும் அயல்நாட்டு நிலங்களை ஆக்கிரமிக்கும் போக்கை இந்தியா கொண்டிருக்கவில்லை.

ஒருபுறத்தில் சீனாவின் அத்துமீறல்கள், மறுபுறத்தில் பாகிஸ்தானின் ஊடுவல்... அயல்நாடுகளில் இருந்து அவ்வப்போது உருவெடுக்கின்ற அத்துமீறல்களையெல்லாம் சமயோசிதமாகவும், பரஸ்பர நல்லிணக்கத்துடனும் தீர்த்துக் கொண்டு வருகின்றது இந்தியா.

சீனாவும், பாகிஸ்தானும் எல்லைப் பகுதிகளில் இருந்து கொண்டு அடிக்கடி இந்தியாவைச் சீண்டும் வகையில் நடந்து கொள்கின்ற போதிலும், இந்தியா அவற்றையெல்லாம் பொறுமையுடனேயே கையாண்டு வருகின்றது. படைபலத்தைக் கொண்டு எல்லைப் பிரச்சினைக்கு முடிவு காண்பதென்பது இருதரப்பிலும் அழிவுகளைத் தருமென்பது இந்தியாவுக்குப் புரியாததல்ல.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை இந்தியாவின் நட்புநாடுகளில் முதன்மையானதாக இலங்கையைக் குறிப்பிடலாம். பிரித்தானியரிடமிருந்து இந்தியா 1947 இல் சுதந்திரம் பெற்றது.



இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் இரு நாடுகளும் தம்மையே சுயமாக ஆட்சி செய்கின்ற ஜனநாயக ஆட்சி முறைக்குச் சென்று விட்டன. அத்துடன் இரு நாடுகளுக்குமிடையில் நட்புறவும் பலமடையத் தொடங்கியது.

தனக்கு அயலில் உள்ள சிறியதொரு பலமற்ற குட்டித்தீவாக இலங்கையை இந்தியா ஒருபோதுமே கருதியதில்லை. இலங்கையை உற்ற நண்பனாகவும், சில வேளைகளில் இளைய சகோதரனாகவுமே இந்தியா கருதி வருகின்றது. இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறை மலர்ந்ததன் பின்னர் எமது நாடு அவ்வப்போது நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

1971 இல் ஏற்பட்ட ஜே.வி.பி கிளர்ச்சியை இலங்கையின் முதலாவது நெருக்கடியாகக் கொள்ளலாம். நாட்டின் ஓரிரு இடங்களை ஜே.வி.பியினர் அப்போது கைப்பற்றியிருந்தனர். அவ்வேளையில் பிரதமராகவிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் வேண்டுகோளின் பேரில், பிரதமர் இந்திரா காந்தியின் உத்தரவுக்கிணங்க இந்தியப்படையினரில் ஒரு தொகையினர் உடனடியாக இங்கு வருகை தந்து எமது நாட்டின் சில கேந்திர நிலையங்களில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இது முதலாவது சம்பவம். அதன் பின்னர் புலிகளின் தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கைக்கு இந்தியா உதவியளித்தமை நன்கு தெரிந்த விடயமாகும்.

எமது வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் அதிகம் உள்ளன. இலங்கையின் நிதிநெருக்கடி வேளைகளில் கைகொடுத்து உதவுவதற்கு இந்தியா ஒருபோதுமே தயங்கியதில்லை. இலங்கையில் பல்வேறு கட்டுமானத் திட்டங்களிலும் இந்தியாவின் பங்களிப்பு உள்ளது. வடபகுதி ரயில்வே புனரமைப்பு, வீடமைப்புத் திட்டங்கள், துறைமுக உட்கட்டுமானம், விமானநிலைய கட்டுமானம் என்றெல்லாம் இந்தியா பல வழிகளிலும் இலங்கைக்கு உதவியளித்தே வந்துள்ளது.

இந்தியாவின் உதவிக் கரம் தற்போதும் இலங்கைக்குக் கிடைத்து வருகின்றது எனலாம். எமது நாட்டுக்கு தற்போது பொருளாதார நெருக்கடி நிறைந்த காலகட்டமாகும்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைக்கு கைகொடுக்க இந்தியா ஒருபோதுமே தயங்கியதில்லை; தனது பெருமைகள் குறித்து பாரதம் ஒருபோதும் தம்பட்டம் அடித்ததுமில்லை!

**சாரங்கன்...**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



வார இறுதி

## அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

# பெரும்பான்மை மக்களுக்கு இனவாத அச்சமூட்டும் தென்னிலங்கை சக்திகள்!

**டொலர் தட்டுப்பாட்டினால் நாட்டில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு பல்வேறு மாற்று வழிகள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது. இந்தியா, சீனா போன்ற நட்பு நாடுகளிடம் கடன் பெறப்பட்டிருப்பதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பின்னணியில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களிடமிருந்து முதலீடுகளைப் பெறுவதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.**

குறிப்பாக வெளிநாடுகளில் பரந்து வாழும் புலம்பெயர் தமிழர்களின் (டயஸ்போரா) உதவியை அரசாங்கம் நாடியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியுள்ள நிலையில், டயஸ்போராவினருடன் இணைந்து பணியாற்றுவது குறித்து இரண்டுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷ, ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரெஸை சந்தித்த போது டயஸ்போராவினருடன் இணைந்து செயற்படத் தயார் என்பதை முதன் முதலில் கூறியிருந்தார்.

இவ்வாறான நிலையில், நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார சூழல் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் நடத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டிலும் டயஸ்போராவினர் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்ற அழைப்பை ஜனாதிபதி விடுத்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதும் இந்த விடயம் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நாடு பாரிய டொலர் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள

## புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை அரசியல் கருவியாக வைத்து இனவாத பிரசாரங்கள்!



சூழ்நிலையில், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உதவி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதும், புலம்பெயர்ந்துவாழ் தமிழர்கள் கடந்த தசாப்தங்களில் பல்வேறு சந்தர்பங்களின் போது நாட்டுக்கும், தாம் சார்ந்த சமூகத்துக்கும் பாரிய ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளனர். குறிப்பாக 1983ஆம் ஆண்டு ஜுலை கலவரத்தைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் இலங்கையை விட்டு வெளிநாடுகளுக்குத் தஞ்சம் கோரிச் சென்றனர். அதன் தொடர்ச்சியாக நிலவிய யுத்த சூழலில் நாட்டை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை பல்மடங்கானது. எனினும், ஆரம்ப காலங்களில் வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் தற்பொழுது பல சந்ததியினரைக் கண்ட போதும் அன்று ஏற்பட்ட அச்சம் இன்னமும் அவர்களது மனதிலிருந்து நீங்கவில்லை என்பதே உண்மை.

அமெரிக்கா, கனடா, சுவிஸ், லண்டன், அவுஸ்திரேலியா உள்ளிட்ட உலகின் பல்வேறு பகுதிகளில் புலம்பெயர்ந்துவாழும் இலங்கைத் தமிழர்கள் பலர் வசித்து வரும் நிலையில், இவர்களில் பலர் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அந்தந்த நாடுகளில் பலமான நிலைகளில் காணப்படுகின்றனர். உலகளாவிய ரீதியில் பிரபல்யமான பல்தேசிய கம்பனிகளின் உரிமையாளர்களாகவும், பெருநிறுவனங்களின் பங்காளர்களாகவும் பல தமிழர்கள் காணப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் சிலர் இலங்கையில் தமது முதலீடுகளை மேற்கொண்டிருந்தனர். இருந்தபோதும் யுத்த காலத்தில் அதற்குப் பொருத்தமான சூழல் காணப்படவில்லை. அதன் பின்னர் யுத்தம் முடிவடைந்ததும் தென்பகுதி அரசியலில் யுத்த வெற்றியை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட அரசியல் நகர்வுகளால் பெரும்பாலான புலம்பெயர்ந்துவாழ் தமிழர்கள் முதலீடுகளில் அக்கறை காண்பிக்கவில்லை.

இவ்வாறான நிலையிலேயே தற்போதைய அரசாங்கம் புலம்பெயர்ந்துவாழ் சமூகத்தின் முதலீடுகளை எதிர்பார்த்துள்ளது. வடபகுதியில் மேற்கொள்ளப்படக் கூடிய முதலீடுகள் குறித்து புலம்பெயர் தமிழர்கள் நாட்டம் தெரிவித்தால் அது குறித்து அரசதரப்புடன் தொடர்பு கொண்டு பேச முடியுமென வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அண்மையில் கூறியிருந்தார். ஜனாதிபதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் இந்த விடயத்தை வலியுறுத்தியிருந்தார்.

புலம்பெயர்ந்துவாழும் சமூகத்தின் முதலீடுகளை அரசாங்கம் கோருகின்ற போதும், தாம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களுக்குத் தொடர்ந்தும் அரசாங்கம் தடைவிதித்திருப்பதாக உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருந்தார். 'முதலீடுகளை மேற்கொள்ள வாருங்கள்' என அழைத்தாலும் நாட்டுக்கு வருவதற்குத் தடை தொடர்வதாக அவர் குறிப்பிட்டிருந்தார். எனவே இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

மறுபக்கத்தில் புலம்பெயர்வாழ் அமைப்புகளின் முதலீடுகளை



## அரசுக்கு எதிரான சக்திகளின் கைகளில் தற்போது 'டயஸ்போரா' ஆயுதம்!





தொடர்ந்தும் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் தரப்பினரும் இருக்கத்தான் செய்கின்றனர். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் முதலீடுகளால் நாட்டில் மீண்டும் ஒரு குழப்பநிலை ஏற்பட்டு விடும் என்ற சந்தேகம் நிலவுவதாக சமூக ஊடகங்களில் தகவல்களைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனியார் இலத்திரனியல் ஊடகமொன்றின் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இது பற்றி கேள்வியெழுப்பியிருந்தார் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியவர். இதற்கு ரணில் விக்கிரமசிங்க பதிலடி வழங்கியிருந்தார்.





நாடு தற்பொழுது இருக்கும் நிலையிலிருந்து மீண்டு எழுவது அவசியமா அல்லது மீண்டும் மீண்டும் இனவாதக் கருத்துகளைத் தூண்டிவிட்டு அதலபாதாளத்துக்குப் பொருளாதாரத்தைக் கொண்டு செல்வது அவசியமா என்பதை நாம் தீர்மானிக்கவேண்டும் என்றார் ரணில். இந்த விடயத்தில் ஊடகங்களும் இனவாதத்தைத் தூண்டும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது என்பது அவருடைய பதிலாக அமைந்தது.

அதேநேரம், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உறுதியான தீர்வொன்றை வழங்கும் பட்சத்திலேயே புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டுவர முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

தற்பொழுது இருக்கும் சூழ்நிலையில் உடனடியாகத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசாங்கத்தினால் தீர்வை வழங்க முடியுமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், கடந்த கால அனுபவங்களின் அடிப்படையை வைத்து நோக்கும் போது அவர்களின் சந்தேகத்தில் நியாயம் இருப்பதை மறுக்க முடியாது. எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கம் தனது சாதகமான நிலைப்பாட்டையாவது தெரியப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அரசாங்கம் அவ்வாறானதொரு நம்பிக்கையை ஏற்படுத்தும் பட்சத்தில் புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருவார்கள். அது மாத்திரமன்றி முதலீடுகளை மேற்கொள்ள வருபவர்கள் தொடர்பில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் சிக்கலான நடைமுறை இலகுபடுத்தப்படுவது பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

புலம்பெயர்ந்துவாழும் தமிழர்களைப் பொறுத்த வரையில் தேசம் விட்டு தேசம் சென்றிருந்தாலும் தாய்நாட்டின் மீதான பற்று என்றும் அவர்கள் மத்தியில் குறைந்ததில்லை என்றே கூற வேண்டும். தாய்நாட்டில் உள்ள தமது உறவுகள் குறித்து என்றென்றும் தேடிப் பார்ப்பவர்களாகவே பெரும்பாலானவர்கள் காணப்படுகின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் தாய்நாடு நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதன் ஊடாக நாட்டில் காணப்படும் டொலர் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதற்கு அவர்களின் ஒத்துழைப்பு அவசியமாகிறது.

இது இவ்விதமிருக்க, எப்பொழுதும் இனவாதத்தை அல்லது பயங்கரவாதம் என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் விதைத்து குறுகிய அரசியல் செய்யும் தரப்புக்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அரசாங்கத்திற்குள் இருந்து தற்பொழுது முரண்பாடுகளை உருவாக்கியுள்ள சிலர், தமது சொந்த அரசியல் இலாபங்களுக்காக இதுபோன்ற விஷமப் பிரசாரங்களை மக்கள் மத்தியில் விதைத்து வந்தனர். இதுபோன்ற அனுபவங்கள் காணப்படுவதால் புலம்பெயர் சமூகம் முதலீடுகளைக் கொண்டு வரும் நிலையில், தேவையற்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி நிலைமைகளைக் குழப்பாமல் இருப்பதையும் அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

**புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களைப் பொறுத்த வரையில், தேசம் விட்டு தேசம் சென்றிருந்தாலும் தாய்நாட்டின் மீதான பற்று என்றுமே அவர்கள் மத்தியில் குறைந்ததில்லை. இலங்கையினால் உத்தரவாதம் வழங்கப்படும் பட்சத்தில் இங்கு தொழில் முதலீடுகளை மேற்கொள்வதில் புலம்பெயர் தமிழர் பலர் ஆர்வம்**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# ஜீவன் தொண்டமானின் எதிர்ப்புக் குரல்

## அரசின் கடைக்கண் பார்வையைத் திருப்புமா ?



பன். பாலா ...

அண்மையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சர்வகட்சி மாநாடு ஒன்றினை கூட்டியிருந்தார். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடக்கூடிய வழிவகைகளை ஆராய்வதற்காகவே இம்மாநாடு நடந்தது. இதில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான இ.தொ.கா. கலந்து கொள்ளாமல் புறக்கணித்தது. இப்படியான அதிரடி முடிவுகளை எடுப்பதில் முன்பு அமரர் ஆறுமுகன் தொண்டமான் சமர்த்துக்காட்டினார். இப்பொழுது அவர் மகன் ஜீவன் தொண்டமான் அசத்த ஆரம்பித்திருக்கிறார்.

இதுவொரு அரசியல் நாடகம் என்றும் விமர்சனம் இருக்கிறது. இருந்தாலும் அரசாங்கத்திலிருந்து இ.தொ.கா வெளியேறப் போவதாகவும் எதிர்வு கூறல்கள் எழாமல் இல்லை. கடந்த வாரங்களில் மலையக அரசியலில் சலசலப்பு ஏற்பட இதுவே காரணமாகவும் அமைந்தது. ஆனால் சர்வகட்சி மாநாட்டைப் பகிஷ்கரித்தாலும் அரசாங்கத்தை விட்டு வெளியேற எந்த முகாந்திரமும் இல்லை. வழமைபோல எமது கூட்டுத் தொடரும் என்கிறது இ.தொ.காவின் உயர்மட்டம்.

அது சரி, இ.தொ.கா. சர்வகட்சி மாநாட்டில் ஏன் கலந்துகொள்ளவில்லை எனும் கேள்விக்கு இ.தொ.கா தரப்பு எமக்கு நான்கு காரணங்களைக் கூறியது. 1000 ரூபா சம்பள அதிகரிப்பு தொழிலாளர்களுக்கு கிடைப்பதில் எழுந்துள்ள இடையூறு களையப்படாமை, நுவரெலியா மாவட்டத்தில் சனசெரிவுக்கு ஏற்ப மேலும் புதிதாக 5 பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட வேண்டுமெனும் கோரிக்கை நிறைவேற்றப்படாமை, ஆசிரியர் உதவியாளர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வு கிடைக்காமை, இறுதியாக கோதுமை மாவுக்கான மானியம் சம்பந்தமான சிக்கல்களே சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிக்க முடிவு எடுக்கத் தூண்டியதாம். ஏற்கனவே அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டவை தான் இப்பிரச்சினைகள்.

ஆனால் அரசாங்கம் அலட்சியமாக இருப்பதால் எமது அதிருப்தியைக் காட்டிக்கொள்ள சாணக்கியமான காய்நகர்த்தல் தான் இப்புறக்கணிப்பு என்றும் இ.தொ.கா தரப்பில் கூறப்பட்டது. சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிப்பதால் இவையெல்லாம் சாத்தியப்படப் போவதில்லை என்பது அக்கட்சிக்குப் புரியாத காரியமல்ல. ஜீவனைத் தவிர்த்து வேறு பல அநுபவமிக்க பிரமுகர்கள் இ.தொ.காவில் இருக்கிறார்கள். எனவே அக்கட்சி கத்துக்குட்டி அரசியல் செய்யப் போகாது. அப்படியானால் இ.தொ.கா.வின் முடிவால் ஆகப்போவதுதான் என்ன?

கடந்த வாரத்துக்கு முதல்வாரம் ஒரு பரபரப்பான செய்தியைச் சிங்கள பத்திரிகையொன்று வெளிப்பட்டது. அதில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கெபினட் அமைச்சுப் பதவி கேட்பதாக குறிப்பிடப்பட்டிருந்து. பத்திரிகை விபரங்களைப் படித்துக் காட்டும் சிங்கள தொலைக்காட்சி செய்தியாளர் இதனை முகம் சுழிக்கும் வகையில் முன் வைத்தார். ஜீவன் அப்போதைய பொதுத்தேர்தலில் தனது அப்பாவின் சவப்பெட்டியோடு வந்து வாக்கு கேட்டதாக விமர்சித்தார்.

இதன் பின்னரே கெபினட் அமைச்சுப் பதவி கோரிய விடயம் பிற பத்திரிகைகளிலும் வெளியானது. தமிழ் பத்திரிகைகள் அது பற்றிய மேலும் சில விபரங்களையும் சேர்த்து தந்தன. அதாவது தற்போதைக்கு கெபினட் அமைச்சுப் பொறுப்பு வழங்க முடியாவிட்டால் கால்நடை அல்லது கல்வி இராஜாங்க அமைச்சாவது வேண்டும் என்று ஜீவன் தொண்டமான் கேட்டிருந்தாராம். ஆனால் அரசாங்கத்தின் சார்பில் பச்சைக் கொடியேதும் காட்டப்படாததால் அவர் கடுப்புக்குள்ளாகிய நிலையிலேயே தனது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்த சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்ததாக விமர்சிக்கப்படுறது. இதனை ஜீவன் மறுத்திருந்தாலும் இ.தொ.கா தலைமைகளின் கடந்தகால செயற்பாடுகளை ஞாபகத்துக்குக் கொண்டு வந்தால் ஐயம் எழுவது இயல்பே.

இராஜாங்க அமைச்சுப் பதவி சிறுபான்மை இன அரசியல்வாதிகளைப் பொறுத்தமட்டில் அலங்காரத்துக்கு உரியவையாக மட்டுமே காணப்படுகின்றது. நல்லாட்சியில் கல்வி இராஜாங்க அமைச்சுப் பதவியை வகித்த வே. இராதாகிருஷ்ணன் இதுபற்றி வெளிப்படையாகவே பாராளுமன்றத்திலும் பொது வெளியிலும் தமது கண்டனத்தை அடிக்கடி பிரஸ்தாபிக்கத் தவறவில்லை. அதிகாரம் எதுமின்றி பெயரளவிலான அமைச்சை வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்ற என்னால் முடியாது என்று இராதாகிருஷ்ணன் ஆட்சியோடும் தான் கூட்டணி கொண்ட கட்சியோடும் முரண்பட்டார்.

முன்னர் பிரதிக் கல்வி அமைச்சராக இருந்தவர் முருகன் சச்சிதானந்தன். அடடா! சிறுபான்மை இனத்தவருக்கு பிரதி கல்வி அமைச்சர் பொறுப்பா? அதுவும் பிரதி கல்வியமைச்சர் வாய்ப்பா? என்று பலரும் வியந்து போனார்கள். ஆனால் அதனால் பலன் ஏதும் ஏற்பட்டதா என்றால் அதுதான் இல்லை. ஒரு ஆசிரியர் இடமாற்றத்தைக் கூட செய்வதற்கு அதிகாரம் இல்லாத பொம்மைப் பதவி இது என அவரும் பொரிந்து தள்ளினார். பின்னர் விரக்தியடைந்தவராக பிரதி கல்வி அமைச்சர் பதவியைத் தூக்கியெறிந்தார் சச்சிதானந்தன்.

ஆக, இராஜாங்கம், பிரதி என்பது எல்லாம் வெறும் கண்துடைப்பு பதவிகள் தான் சிறுபான்மை இனத்தவருக்கு இப்பொழுது ஜீவன் தொண்டமான் இராஜாங்க அமைச்சராகவே இருக்கிறார். அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி என்னும் ரீதியில் வீடமைப்புத் திட்டத்தை செயற்படுத்துவதில் சில பிரத்தியேக அதிகாரங்கள் (சலுகைகள்) அவருக்குக் கிடைக்கலாம். ஆனால் இதன் மூலம் பெரிதாக எதனையும் சாதித்து விட முடியாது.

காணி உரிமை, மலையக பல்கலைக்கழகம், தனிவீட்டுத் திட்டம் பற்றி எல்லாம் வீராப்போடு பேசும் ஜீவனுக்கு இவற்றைப் பெறுவதில் காணப்படும் அதிகாரப் பற்றாக்குறை ஆதங்கத்தை தருவதில் வியப்பு இல்லைதான். முன்னைய ஆட்சியில் இரண்டு முழு அமைச்சுக்கள் ஒரு இராஜாங்க அமைச்சைப் பெற்றிருந்தும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தர்மசங்கடத்தை எதிர்நோக்கவே செய்தது. அதனையும் மீறி அது சில நல்ல காரியங்களையும் மலயக மக்களுக்கென பெற்றே தந்தது.

பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டம், மலையக அதிகார சபை, பிரதேச சபை சட்டத்திருத்தம், பிரதேச சபை அதிகரிப்பு என அக்கட்சி சில சாதனைகளை படைத்தது. பிரதேச செயலகங்கள் ஐந்தினை புதிதாக நுவரெலியா மாவட்டத்தில் அமைப்பதற்கான சட்டரீதியான சகல ஏற்பாடுகளும் செய்யக் காரணமாக இருந்தது. அன்றைய ஆட்சியில் நிலவிய குளறுபடி, ஆட்சி மாற்றம் காரணமாக சில நல்ல ஏற்பாடுகள் கூட நடைமுறைக்கு வராமல் போயுள்ளன.

காலி மாவட்டத்தில் புதிய செயலங்கள் அமைப்பதற்கான ஏற்பாடு முன்னைய ஆட்சியின் போதே இடம்பெற்றது. ஆயினும் ஆட்சி மாற்றத்தால் முழுமை பெறவில்லை. தற்போதைய ஆட்சி அதை அப்படியே நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. அதேநேரம் சகல சட்ட அங்கீகாரமும் முன்னைய அட்சியால் வழங்கப்பட்ட நிலையில் நுவரெலியா மாவட்டத்துக்கான 5 புதிய பிரதேச செயலகங்களுக்கான அனுமதி குறித்து அவதானம் செலுத்தாமல் உள்ளது. இது பற்றி அதிருப்தியைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு தமிழ் முற்போக்குக் கூட்டணி, இ.தொ.கா ஆகிய இரண்டு கட்சிகளுக்குமே உண்டு. அனை ஜீவன் தொண்டமான் தம் கையில் எடுத்துள்ளமையை வரவேற்கத்தான் வேண்டும்.

எது எப்படியோ இராஜாங்க அமைச்சராக இருந்து கொண்டு உருப்படியாக எதனையும் சாதிக்க முடியாது என்பதை ஜீவன் அனுபவரீதியாக புரிந்து கொண்டிருப்பதன் அடையாளமாகவே கெபினட் அந்தஸ்து கொண்ட அமைச்சுப் பதவி வேண்டுவதாக புரிந்துகொள்ள முடியும். அவரை அனாகரிகமாக விமர்சிக்கும் சில சிங்கள ஊடகங்கள் அவரது ஆளுமையை இனவாத போக்கில் எடைபோடக்கூடாது. நுவரெலியா மாவட்டத்திலிருந்து இலட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவானவர் அவர். தற்போதைய அரசாங்கம் நுவரெலியா, பதுளை, கண்டி மாவட்டங்களில் கணிசமான சிறுபான்மை (தமிழ்) வாக்குகளைப் பெற இ.தொ.காவே காரணமாக இருந்தது. தவிர மலையகத்தில் முக்கிய அரசியல் கட்சிகளில் அதுவும் ஒன்று.

அமரர் ஆறுமுகன் தொண்டமான் பல்வேறு விமர்சனங்களுக்கு மத்திலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கான ஆதரவு போக்கினைக் கைவிடாது கடைசிவரை கூடவே பயணித்தவர். எனவே பொதுஜன பெரமுன இ.தொ.காவை இழக்க விரும்பாது. இதனையெல்லாம் உள்வாங்கிக் கொண்ட நிலையிலேயே ஜீவன் காய் நகர்த்தல் செய்வதாகக்கூட இருக்கலாம்.

ஆனால் ஜீவன் தொண்டமானின் எதிர்பார்ப்பு எந்த வகையில் நிறைவேறப் போகிறது என்பதை விளங்கிக்கொள்ள சில காலம் செல்லும். சர்வகட்சி மாநாட்டை இ.தொ.கா புறக்கணித்தமையை ஆளுந்தரப்பு கண்டு கொள்ளாததைப் போலவே நடந்து கொள்கிறது. இ.தொ.காவை விமர்சிக்க ஆளுந்தரப்பில் எவருமே முன்வரவில்லை. இதன்மூலம் இ.தொ.காவின் நிலைப்பாடு பற்றிய புரிந்துணர்வு அவர்களுக்கு அத்துபடி என்பது புலனாகிறது.

இ.தொ.கா பொதுஜன முன்னணியைப் பகைத்துக் கொள்ளப் போவது இல்லை. அதே போன்று ஆட்சியை விட்டு வெளியேறப் போவதும் கிடையாது. அப்படியென்றால் கெபினட் அமைச்சுப் பதவி கோரலும், சர்வகட்சி மாநாட்டைப் பகிஷ்கரித்தலும் எதற்காக? இதேவேளை பட்டும் படாமலும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கும் இ.தொ.கா பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானின் போக்கும் கொஞ்சம் கடுமையாவே அரசாங்கத்தை சாடும் இ.தொ.கா.தலைவர் செந்தில் தொண்டமானின் அணுகுமுறையும் தமது அரசியல் எதிர்காலத்தை கருத்திற்கொண்ட காய் நகர்த்தல்களாகவே பலரும் கருதுகின்றார்கள்.

இ.தொ.காவை இலகுவில் கழற்றிவிட தற்போதைய ஆட்சி தயாரில்லை என்பது மட்டும் நிச்சயம். அதே நேரம் இ.தொ.கா. அரசியல் ரீதியில் எடுக்கும் எந்தமுடிவும் அதன் தலைமைகளை தனிப்பட்டவகையில் பாதிக்காமல் போகலாம். ஆனால் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மலையக சமூகத்தின் தலைவிதியைத் தீர்மானிப்பதில் தாக்கம் செலுத்தவே செய்யும். மக்களுக்காகவே அரசியல். அரசியலுக்காக மட்டும் மக்கள் அல்ல. ஜனநாயகத்தை ஆதரிப்பவர்கள் சரியானதைப் புரிந்து நடப்பதுதான் நல்லது.

# தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டும் தோட்டக் கம்பனிகள்

**தேயிலைத் தளிர் நிறுவையில் மோசடி செய்து கோடிகளில் சுரண்டல்!**

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் இதுவரையில் வெளிவராமலிருக்கும் சிறியளவிலான சுரண்டல்கள் கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான பணம் பெரும் சுரண்டல்களாக மாறியுள்ளன.

தொழிலாளர்கள் நாளாந்தம் கொய்யும் தேயிலைத் தளிர்களில் மட்டும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மேற்படிச் சுரண்டல்கள் மாதமொன்றிற்கு ஐந்து கோடி ரூபாவிற்கு மேல் இடம்பெற்று வருவதாக மதிப்பிடப்படுகின்றது. ஆரம்ப காலத்திலிருந்து, தேயிலைத் தளிர்களை நிறுக்கும் தராசுகள் பல்வேறு வகைகளில் அமைந்திருந்தன. தற்போது நவீன முறையிலான 'டிஜிட்டல்' தராசு முறைமை பெரும்பாலான தோட்டங்களில் பின்பற்றப்படுகின்றது.

இவ்வகையிலான 'டிஜிட்டல்' தராசுகளில் காண்பிக்கப்படும் எடைகள் குறித்த சந்தேகம் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து ஹப்புத்தளைப் பகுதியின் பண்டாரயெலிய பெருந்தோட்டப் பிரிவின் தொழிலாளர்கள் 'டிஜிட்டல்' தராசு பயன்பாட்டினை அகற்றக்கோரி, தோட்ட நிருவாகத்திற்கு எதிராக கடந்த 9ந் திகதி பணிப் பகிஷ்கரிப்பு மற்றும் ஆரம்ப்பாட்டப் பேரணியொன்றினை மேற்கொண்டிருந்தனர்.



இத் தராசில் தொழிலாளர்களின் அடையாள அட்டைப் பதிவுகளும் இடம்பெறுவதாக தொழிலாளர்கள் பலரும் தெரிவித்தனர். தாம் கொய்யும் தேயிலைத் தளிர்களில், இத்தராசு எடைகளைக் குறைப்பதாகவும், அத் தொழிலாளர்கள் உணர்ந்து, ஊடகங்களுக்கும் தெரிவித்துள்ளனர். நவீன முறையிலான 'டிஜிட்டல்' தராசுகளின் நிலை இவ்வாறிருக்க, ஏற்கனவேயுள்ள தராசுகளில் தேயிலைத் தளிர்களின் எடை சுரண்டல்கள் நீண்டகாலமாகவே இடம்பெற்று வருகின்றது. ஆனால், இச் சுரண்டல்களை தோட்டத் தொழிலாளர்களோ, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களோ தட்டிக் கேட்டதாகத் தெரியவில்லை. இச்சுரண்டல்களைக் கண்டுகொள்வதாகவும் இல்லை.

தோட்டத் தொழிலாளியொருவர் தினமொன்றுக்கு மூன்று தடவைகள், அவர் கொய்யும் தேயிலைத் தளிர்கள் தராசுகளில் நிறுக்கப்படுகின்றன. காலை 9, பகல் 12 மணி, மாலை 4 மணி என்ற வகையில் யூரியா உரப்பை மற்றும் சாக்குகள் ஆகியவற்றில் தேயிலைத் தளிர்கள் கொட்டப்பட்டு நிறுக்கப்படுகின்றன. தோட்டங்களுக்கு தோட்டம் வித்தியாசப்படும் வகையில் யூரியா உரப்பை மற்றும் சாக்குகள் ஆகியவற்றின் எடை என்ற பெயரில் இரண்டு அல்லது மூன்று கிலோ மொத்த எடையில் கழிக்கப்படுகின்றன.

பெருமளவிலான தோட்டங்களில் யூரியா உரப்பைகளே தேயிலை தளிர்களை கொட்டி நிறுப்பதற்கு பயன்படுத்தப்படுவதால் இரண்டு கிலோகிராம் எடையே யூரியா உரப்பைக்கு கழிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் (2 × 3) ஆறு கிலோ தேயிலைத் தளிர்கள் ஒரு தொழிலாளியிடம் ஒரு நாளைக்கு கழிக்கப்படுகின்றது. ஆனால், யூரியா உரப்பையின் எடையோ நூறு கிராமைக் கொண்டதாகவேயுள்ளது. அப்படியிருந்தும் உரப்பைக்கு இரண்டு கிலோ என்ற வகையில் கழிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வகையில் தொழிலாளியொருவர் மாதமொன்றில் 20 தினங்கள் தொழில் கடமைகளில் ஈடுபட்டாரெனில் (20 × 6) 120 கிலோகிராம் தேயிலைத் தளிர்கள் சம்மந்தப்பட்ட தொழிலாளிக்கு தெரியாமலேயே, தோட்ட நிருவாகத்தை செய்றடைகின்றன. ஒரு தோட்டத்தில் நூறு தொழிலாளர்கள் தொழில் கடமைகளில் ஈடுபட்டார்களாயின் மாதமொன்றில் 12 ஆயிரம் (120 ×100) கிலோகிராம் தேயிலைத் தளிர்களுக்கான வருமானத்தை தம்மை அறியாமலேயே இழக்கின்றனர்.

மலையகத்தின் பெருந்தோட்டப் பகுதிகளில் ஒரு இலட்சத்து அறுபத்தி மூன்றாயிரம் தொழிலாளர்கள் நிரந்தர தொழில் கடமைகளில் ஈடுபட்டு வருவதாக புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வருகின்றது. இவர்களில் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் தேயிலைத் தளிர் கொய்யும் கடமைகளில் ஈடுபட்டாலும், ஒரு மாதத்தில் ஐந்து கோடி ரூபாவிற்கு மேல் தோட்டத் தொழிலாளர்கள் தமது வருமானத்தை அநியாயமாக இழக்கின்றனர்.

இவ் வகையிலான இழப்பு எந்தவொரு கணக்கறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் எங்கு செல்கின்றதென்று, பெரும் புதிராகவேயுள்ளது.

அத்துடன், பெருந்தோட்டங்களில் பெரியளவிலான சுரண்டல்களும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. தோட்டங்கள் எவ்வகையிலும் பராமரிக்கப்படுவதில்லை. தோட்டங்கள் காட்டுமிருகங்கள் வாழும் காடுகளாகி மாறி வருகின்றன. இக் காட்டு மிருகங்களிலும், பாம்பு போன்ற விஷ ஜந்துக்களினாலும், குளவிகளாலும் தொழிலாளர் சமூகம் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சிறியளவிலான இழப்பு குறித்து, மலையக தொழிற்சங்க சட்ட ஆலோசகர் ஆர். சுப்ரமணியத்திடம் வினவிய போது, 'இது போன்ற இழப்பு எமக்கும் தெரியாதென்றார்.

"யூரியா உரப்பைக்கு 2 அல்லது 3 கிலோகிராம் கழிப்பது ஜீரணிக்கவே முடியாது. இதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு உரப்பை நூறு கிராமை விட குறைவான எடை கொண்டது. இதனை பதுளை தொழில் நீதிமன்றின் கவனத்திற்கும் கொண்டு சென்று, தோட்ட நிருவாகங்கள் தொழிலாளர்களிடம் மேற்கொள்ளும் நாளாந்த சுரண்டல்களை வெளிக்கொணர்வேன். 'சிறு துளி பெரு வெள்ளம்' என்பது பொன்ற கோடிக்கணக்கான ரூபா சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைப்பேன். தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா தினச் சம்பளத்தில் தில்லுமுல்லு செய்து வருவதற்கும் தேயிலைக் கொழுந்தின் எடை குறைப்புக்கு இடையே தொடர்புள்ளது" என்கிறார் இவர்.

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் நிதிச் செயலாளர் இரா. சலோபராஜாவுடன் பேசினோம். யூரியா உரப்பையில் கொழுந்து நிறுக்கப்படுகையில் 6 முதல் 8 கிலோ வரையில் வெட்டப்படுவது பெரும் அநீதியாகும்.

பெருந்தோட்டங்களில் பல்வேறு வகையில் வளங்கள் சுரண்டப்படுவது பொன்று தொழிலாளர்கள் நாளாந்தம் எடுக்கும் தேயிலைக் கொழுந்திலும் சுரண்டப்படுவது நியாயமே இல்லை. இச் செயற்பாட்டினை எதிர்த்து அனைத்து தொழிற்சங்கங்களும் போராட்டக் களத்தில் இறங்கி, தடுத்து நிறுத்த வேண்டும்' என்றார் இவர்.

முழு மலையகத்தின் ஒரு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம் தோட்டத் தொழிலாளர்களிடமும் இவ்வகையில் ஒரு தினத்தில் இவ்வளவு பெரிய தொகை சுரண்டப்படுகின்றமை எவருக்கும் தெரியாமலுள்ளது.

இது தவிர பிழையான எடையைக் காட்டும் தராசுகள் மூலமும், தொழிலாளர்களின் உழைப்பு திட்டமிட்டுச் சுரண்டப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தேயிலைத் தளிர்கள் நிறுக்கும் விடயத்தில் மலையகத்தில் ஒரு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம் தோட்டத் தொழிலாளர்களிடமும் இருந்து பலகோடி ரூபா நிதி தோட்ட நிருவாகங்களை சென்றடைகின்றன. இது எவருக்கும் தெரியாமல் தோட்ட நிரவாகங்களுக்கு கிடைக்கும் பெரும் வருமானமாகும்.

ஆரம்ப காலத்தில் தேயிலைத் தளிர்கள் நிறுப்பதற்கு பெரியளவிலான தட்டுக்கள் இருந்தன. இத் தட்டுக்களுக்கு இரண்டு கிலோ கிராம் வீதம் கழிப்பதில், ஓரளவு நியாயம் இருந்தது. தற்போது அத்தட்டுக்கள் முறை நீக்கப்பட்டு, யூரியா உரப்பைகளில் தேயிலைத் தளிர்களைப் போட்டு நிறுக்கும் முறைமை பின்பற்றப்படுகின்றது.

மட்டக் கொழுந்து மலை என்றழைக்கப்படும் புதிய தேயிலை மலைகளில் தொழிலாளியொருவர் ஒரு கிலோ கிராம் தேயிலைத் தளிர்களை கொய்வதற்கு 450 முதல் 500 தடவைகள் தமது கரங்களைப் பயன்படுத்த வேண்டும். சாதாரண தேயிலை மலைகளில் அறுநூறு முறைகளிலும், பழைய தேயிலை மலைகளில் 1200 முதல் 1500 வரைக்குமாக ஒரு கிலோ தேயிலைத் தளிர்களைக் கிள்ளுவதற்கு, தமது கரங்களைப் பயன்படுத்த வேண்டும்.



பெருந்தோட்டங்கள் பராமரிப்பின்றி காடுகளாக காட்சியளிக்கும் இவ்வேளையில், தேயிலைத் தளிர்களை கொய்வதற்கு தேயிலைச் செடிகளை மூடியிருக்கும் புல், பூண்டு, கொடிகளை அப்புறப்படுத்தி, தேயிலைத் தளிர்களைக் கொய்ய வேண்டிய இக்கட்டான நிலையும் பெண் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் தேயிலைத் தளிர்களை நிறுப்பதற்கு, தோட்ட நிருவாகங்களின் கையாட்களாக இருந்து வரும் தோட்டக்கங்காணிகளே பயன்படுத்தப்படுகின்றனர். இக் கங்காணிகளே, ஒரு சில தொழிற்சங்கங்களின் தோட்டக் கமிட்டித் தலைவர்களாகவும் இருந்து வருகின்றனர். தொழிற்சங்கங்களின் தோட்டக் கமிட்டித் தலைவர்களாகியதுமே, தோட்ட நிருவாகத்தினால், அவர்களுக்கு கங்காணி வேலைகள் மற்றும் இலகு வேலைகள் வழங்கப்படுகின்றன. இது ஒரு வகையில் இலஞ்சமாகும். அதனால், அவர்கள் தோட்ட நிருவாகங்களுக்கே விசுவாசமாக இருந்து, தாம் சார்ந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு வகைகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றனர். பெரும்பாலான தோட்டங்களில் இதைக் காணமுடிகிறது.

தேயிலைத் தளிர்களை நிறுக்கும் விடயத்தில் இடம்பெறும் மோசடிகளை தட்டிக் கேட்பதற்கு, எந்தத் தொழிலாளியும் முன்வருவதில்லை. அப்படியே கேட்டாலும், கேட்கும் தொழிலாளிக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளி ஒருவரின் வழக்கு பதுளை தொழில் மன்றில் நடைபெற்று வருகிறது. ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் ஆ. முத்துலிங்கம் இது தொடர்பான வழக்கை தாக்கல் செய்துள்ளதோடு, பாதிக்கப்பட்ட தொழிலாளி சார்பாக வாதாடியும் வருகின்றார்.

தற்போது பதுளைப் பகுதியில் ஒருசில தோட்டங்களில் பிளாஸ்டிக் தட்டங்கள் மற்றும் கத்திகள் ஊடாக தேயிலைத் தளிர்களைக் கொய்யும் முறையும் பின்பற்றப்படுகின்றன. இம்முறையின் மூலமும் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படவே செய்கின்றனர்.

பெருந்தோட்டங்களைப் பொறுப்பேற்ற தோட்டக் கம்பனியினர் தோட்டங்களில் பராமரிப்பு வேலைகள் எதையும் செய்யாமல், தோட்ட வளங்களை சுரண்டும் நோக்கிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தோட்டத் தொழில் துறை மூலம் பெரும் இலாபங்களை, தோட்ட நிருவாகங்கள் ஈட்டி வந்த போதிலும், தோட்டத் தொழில்துறை பாரிய நஷ்டத்திலேயே, இயங்குவதாக தோட்ட நிருவாகங்கள் அடிக்கடி கூறி வருகின்றன.

தேயிலைத் தளிர்கள் நிறுக்கும் விடயத்தில் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டுவது குறித்த எத்தகைய பதிவுகளும் இல்லை. உழைப்பில் சுரண்டப்படும் பெருந்தொகைப் பணம், தோட்ட முகாமைத்துவங்களையே சென்றடைகின்றன.

ஆகையினால், பெருந்தோட்டங்களையும், அதனை நம்பியிருக்கும் தொழிலாளர்களையும் பாதுகாக்க அரசு முன்வர வேண்டும். பெருந்தோட்டங்களில் நிலவும் நேரடி மற்றும் மறைமுக ஊழல், மோசடிகளை விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமிக்க வேண்டும்.

பதுளை எம். செல்வராஜா ...

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# புலம்பெயர்ந்தோர் மடியில் பொழுது விடியும் வியூகம்!

"காடுகாடாகப் பாய்ந்தாலும் மானின் புள்ளி மாறாது" என்பார்கள். இவ்வாறு மான் ஏன் பாய்கிறது? கஷ்டம் வந்தால் பாய்கிறது, சில வேளைகளில் களிப்புக்காகவும் துள்ளுகிறது. எப்படிப் பாய்ந்தாலும் அதன் புள்ளிகள் மாறுவதில்லை. இப்படித்தானிருக்கிறது தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியலும். முப்பது வருடங்கள் கடந்தும் முனைப்புக்கள் சளைக்கவில்லை. நகர்வுகள் நலிவடையவில்லை, நம்பிக்கைகள் தளரவில்லை. இது எதனைக் காட்டுகிறது? அக்கட்சியின் இயல்பையே! இருப்பதிலிருந்துதானே இயல்பு பிறக்கிறது. தமிழர்களுக்கு பிரச்சினை இருக்கிறது, அது தீர்க்கப்படுவதை இக்கட்சி விரும்புகிறது, இதனால்தான் இந்த இயல்பு இருக்கிறது. இதற்காகக் கிடைத்த எந்தச் சந்தர்ப்பங்களையும் இக்கட்சி தவறவிட்டதுமில்லை. அண்மையில் கிடைத்த இரு சந்தர்ப்பங்களையும் கூட இக்கட்சி தவறவிட்டதில்லை. சர்வகட்சி மாநாட்டில், இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்திருக்கிறது. ஜனாதிபதியைச் சந்தித்து தீர்வைத் திணித்திருக்கிறது. இந்திய வெளியுறவு அமைச்சரிடம் தமிழர்களின் அபிலாஷைகளுக்காக அரசாங்கத்தை அழுத்தும்படியும் கேட்டிருக்கிறது. இந்த முயற்சிகள் எப்போதாவது பலனளிக்கட்டும். ஆனால், அரசியலிலுள்ள சுபாவம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதுதான் இங்குள்ள விடயம்.

பொருளாதாரத்தின் மிகப்பெரிய நெருக்கடியில், தமது மக்களின் அரசியலை முதலிடுவதை விட வேறென்ன வியூகம் வேண்டியிருக்கிறது. சர்வதேச உதவிகளின் எல்லைகள் கை கடந்து போனால், புலம்பெயர் சமூகங்களின் தயவுகள் தேவைப்படுமென்ற புரிதல்தான், தமிழ் தேசிய கூட்டமைப்பின் வியூகமாயிருக்கிறது. கைதிகள் விடுதலை, காணிகள் விடுவிப்பு, 13 ஆவது திருத்தம், அபிலாஷை அரசியல் இன்னும் எத்தனையோ தமிழர்களின் தேவைகளை புலம்பெயர் தமிழ் சமூகத்தின் பொருளாதார பலத்துடன் முடிச்சுப்போட்டுள்ளது இக்கட்சி. இதற்கு இந்தியாவை மேய்ப்பாளனாக்கிய சம்பந்தனின் சாணக்கியம், தருணம்பார்த்து தலையைப் பிடித்தது போன்றதுதான்.





இச்சந்திப்புக்கள் முடிந்த கணத்தில், இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகள் பற்றிய விபரங்களை கையளிக்குமாறு இராணுவத் தளபதியால் கோரப்பட்டிருக்கிறது. தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை விடுவிப்பதற்கு சமிக்ஞை காட்டப்பட்டிருக்கிறது. புலம்பெயர் தமிழர்களை வடக்கு, கிழக்கிலாவது முதலிட வைக்கும் அரசாங்கத்தின் அணுகுமுறைகளில்தான் தமிழர்களின் இந்த அபிலாஷைகள் அடையப்பட உள்ளன. இதற்கும் மேலாகச் சிந்தித்த இந்த தமிழ் தரப்பு காணி, பொலிஸ், நிதி அதிகாரங்களுடன் ஆளுநர்களின் அதிகாரங்களையும் ஐதாக்கிய மாகாண சபையையும் முன்மொழிந்திருக்கிறதே, ஏன்? பிடியில் பலமிருக்கிறது, வழியும் திறந்திருக்கிறது, எதற்கு தயங்க வேண்டும் இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு? இவை,இப்போதா சாத்தியம் எனச் சிலர் சிந்திக்கலாம். சாத்தியம் பற்றி இங்கு அலசப்படவில்லை. சந்தர்ப்பம், சமயோசிதம், மானின் புள்ளி மாறாத குணங்களே குறித்து காட்டப்படுகின்றன.

இப்பின்னணியில் கொதித்திருப்பது, இன்றுள்ள நெருக்கடியை தீர்க்குமா? அல்லது தீராப் பிரச்சினையாக்குமா? இதிலும், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு சில வகிபாகம் இருக்கவே செய்கிறது. முதலீடுகளுக்காக புலம்பெயர் தமிழர்களை நம்பிக்கையூட்டல், இந்த நம்பிக்கை பிறக்க அரசாங்கத்தைப் பலப்படுத்தல் என்பவைகளே அவை. இடைவெளியாகிப்போயுள்ள தமிழ் தரப்பு அரசியல் இழுபறியைத் தீர்க்க இதுதான் இன்றுள்ள தெரிவு. தருணம்பார்த்து தலையைப்பிடித்துள்ள தமிழர் தரப்புக்கு, இது போன்ற சந்தர்ப்பம் இனி எப்போது வாய்க்கும் என்பதெல்லாம் ஆரூடங்களுக்கு அப்பாலானவை. யார் வந்தாலும் இருக்கப்போகும் (பொருளாதாரம்) இப்பிரச்சினையை இருப்போரை வைத்தே தீர்க்க முயற்சிப்பதுதான் தீர்க்கதரிசனம். இதுதான், புரையோடியிருக்கின்ற தமிழர்களின் அரசியல் பிரச்சினையையும் தீர்த்து வைக்கும். மக்கள் திரட்சியை விடுத்து ஏனைய எந்த நிலைமைகளிலும் இந்த வகிபாகம் இக்கட்சிக்கு இருக்கவே செய்யும்.

இன்றைய நிலையில் புதிய அரசியலமைப்பை மாத்திரம் சிந்திக்காது, உள்ளதற்குள் ஒரு வழி தேடுமாறு ஜெய்சங்கர் கூறியிருப்பதும் இதைத்தானோ தெரியாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில், இந்திய மேற்பார்வைகளுடன் சில திட்டங்கள், ஒப்பந்தமாகியிருக்கையில், தொப்புள்கொடி உறவுகளுக்கு என்ன சிக்கல்? புலம்பெயர் உறவுகள்தான் இதுபற்றி அதிகம் சிந்திக்க இருக்கிறது. போரியல் வலிகளிலும், வாழ்வாதார வடுக்களிலும், பொழுதுகளைப் போக்கும் இந்த தொப்புள்கொடிகளுக்கு, புலம்பெயர் உறவுகள் தங்கள் மடிகளை விரிக்கக் கூடாதா? உள்ளக புலம்பெயர் உறவுகளின் ஆதங்கங்களே இவை.

ஆனால், இங்கு மிகப்பிரதான தவறும் நடந்திருக்கிறது. இந்திய வெளியுறவு அமைச்சரை தமிழ், முஸ்லிம் தரப்புக்கள் ஒரே தரத்தில் சந்தித்திருக்க வேண்டும். தமிழ்மொழி பேசுவோர் என்ற அடையாளத்துக்குள் இருக்கும் வேறுபாடுகளை இந்தியா புரிவதற்கு இவ்வாறான சந்திப்பு பலனளித்திருக்கலாம். இந்தத் தவறுக்கு அதிக பங்கெடுக்க வேண்டிய தரப்பு எதுவென யாரும் சொல்லத் தேவையில்லை. சர்வதேச அல்லது அயல் தேசத்தின் தார்மீகத் தேவைகளுக்குள் அரசாங்கம் இருக்கையில், தமிழ்மொழிச் சமூகங்களில் எது அதிக இலாபம் அடையும் என்பதையும் சொல்லவா வேண்டும்?

சுஹைப் எம்.காசிம்...

# ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம்; வாய்ப்புகளை பயன்படுத்தத் தவறும் மலையக இளைஞர்கள்

"இலவச தங்குமிட, உணவு வசதிகளுடன் கட்டணமின்றியே தொழில் பயிற்சியும் வழங்கப்படுவதை ஹட்டன், கொட்டகலை பகுதி இளைஞர்களே அறியாதிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது"

ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பயிற்சி மற்றும் வதிவிட முகாமையாளர் எஸ். விஜேசிங் உடனான நேர்காணல்.







**ஹட்டனில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் என்ன?**

2001 ஆம் ஆண்டு நோராட் நிறுவனத்தின் 132 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதியுதவியில் இத்தொழிற்பயிற்சி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளின் சுயதொழில் திறன் அபிவிருத்தியை விருத்தி செய்யும் நோக்கிலேயே இந்நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டு சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் அமைக்கப்பட்டதும் 2007 ஆம் ஆண்டிலிருந்து அதன் கீழ் இயங்கி வருகின்றது.

பின்னர் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இந்நிறுவனத்துக்கு இந்தியாவிலிருந்து ஏழு போதானாசிரியர்கள் பணியாற்ற வந்தனர். அவர்களால் பயிற்சியளிக்கப்பட்ட மற்றும் இந்நிலையத்தில் பயிற்சி பெற்ற பலர் இங்கு போதானாசிரியர்களாக கடமையாற்றுகின்றனர். ஆரம்பத்தில் 10 தொழிற்பயிற்சிகள் இங்கு



போதிக்கப்பட்டாலும் தற்போது 17 சான்றிதழ் பாடநெறிகள் இங்கு போதிக்கப்படுகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையம் பெருந்தோட்டத் துறை இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி வழங்குதல் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களாக உருவாக்குதல் என்ற கனவினை நனவாக்கியுள்ளது.

பெருந்தோட்டத்துறை சமூகத்திற்கான தொழிற்பயிற்சியை வழங்கும் உயரிய நிலையமாக தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் விளங்குகின்றது. கண்டி மற்றும் பதுளை மாவட்ட இளைஞர் யுவதிகளை கருத்திற்கொண்டு இதன் பிராந்திய கிளை நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் முன்னெடுக்கப்படுகின்றது.

**தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகிறது?**

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற சுமார் 250 தொழிற்பயிற்சி நிலையங்கள் இலங்கையெங்கும் காணப்படுகின்றன. இவற்றில் சுமார் 20 பயிற்சி நிலையங்கள் தமிழர்கள் செறிவாக வாழ்ந்து வரும் வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ளன. அதேவேளை பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகளுக்காக மட்டுமே செயற்படக்கூடிய நிறுவனமாக ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிறுவனம் விளங்குகின்றது. பெருந்தோட்ட பகுதிகளைச் சேர்ந்த சாதாரண மற்றும் உயர்தரம் கற்று அடுத்த இலக்கை நோக்கி செல்வதற்கு காத்திருப்பவர்களுக்கு இந்நிறுவனம் உயர் அங்கீகாரம் கொண்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களை (NVQ) வழங்குகின்றது.

இங்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு விடுதி மற்றும் உணவு அமைச்சினால் இலவசமாக வழங்கப்படுகின்றது. அத்துடன் பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இங்கு 6 மாத கால மற்றும் ஒரு வருடகால பயிற்சி நெறிகள் காணப்படுகின்றன. 6 மாத கால கற்கை நெறி நிறைவடைந்த பின்னர் தொழிற் பயிற்சிநெறி 6 மாத காலம் பெற வேண்டும். அதன் பின்னர் வருட இறுதியில் இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுசான்றிதழ்கள்வழங்கப்படுகின்றன. தொழில்பயிற்சி கல்லூரியில் இணையும் மாணவர் ஒருவர் பயிற்சி மட்டம் 1 முதல் 7 வரை கற்க முடியும். எமது நிலையத்தில் மட்டம் 3, மட்டம் 4 என்பவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்நிலையத்தில் (NVQ) மட்டம் 4 இன் நிலையை வெற்றிகரமாக பூர்த்தி செய்த ஒருவர் இலங்கையிலுள்ள ஏனைய தொழிற் பயிற்சி நிலையங்களில் மட்டம் 5 தேசிய டிப்ளோமா மட்டம் 6 உயர் தேசிய டிப்ளோமா 7 தொழில்சார் பட்டதாரி தகமை சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியும். இதுவரை காலமும் நோர்வே, இந்தியா ஆகிய அரசாங்கங்கள் எமக்கு வழங்கிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போதனாசிரியர்களின் சேவைகள் எதிர்காலத்தில் எமது இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஊடாக பெற்றுக்கொடுக்கப்படுமாயின் தேசிய டிப்ளோமா மட்டம் 5 மற்றும் உயர் தேசிய டிப்ளோமா மட்டம் 6 வரையிலும் இந்நிலையத்தை தரமுயர்த்த முடியும்.

மலையகத்திற்கு தனியாக பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மலையகத்தில் அமையவுள்ள நகர் பல்கலைக்கழகம் எமது மாணவர்களது உயர்கல்வி தேவையை பூரணப்படுத்தக்கூடும். அதில் மலையக மாணவர்களது தொழில்சார் தேவைகளை இலக்காக கொண்டு பாநெறிகள் உருவாக்கப்படும் போது இந்நிலையத்தில் பயிற்சிபெற்ற மாணவர்களும் அதன் பயன்பாட்டை அனுபவிக்க முடியும்.

**தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற ஒரு மாணவனிடம் இருக்க வேண்டிய கல்வித் தகுதி என்ன?**

பாடசாலைகளில் க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சை எழுதியவர்கள் இங்கு பயிலுனர்களாக இணையலாம். 16 தொடக்கம் 25 வயதுக்குட்பட்டவர்களாகவும் திருமணம் முடிக்காதவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவர்களுக்கு திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை பயிற்சி நெறிகள் கற்பிக்கப்படும்.

தலவாக்கலை பி. கேதீஸ்...

பயிலுனர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் மூன்றாம நான்காம் நிலை கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் தர நிர்ணய அங்கீகாரத்துக்கு உட்பட்டவையாக இருக்கும்.

இவ்வாறு ஆண்டுதோறும் 500 இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியை வழங்கி அவர்களை எதிர்காலத்திற்கு தயார்படுத்துவது எமது நோக்கமாகும். இதன் மூலம் அவர்களின் நிரந்தர வருமானத்திற்கு வழிவகைகள் ஏற்படுகின்றன.



**தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் கற்பிக்கப்படும் பாடநெறிகள் என்னென்ன?**

மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல், இயந்திரவியல், மின்னிணைப்பாளர், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல், காய்ச்சி இணைத்தல் (வேல்டிங்), அலுமினிய வேலை, மோட்டார் சைக்கிள் பழுது பார்த்தல், தச்சு வேலை, ஆடை தயாரித்தல், ஹோட்டல் அறை பராமரிப்பு, உணவு பரிமாறல், முன்பள்ளி ஆசிரியர், அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரம், படவரைஞர், முச்சக்கர வண்டி திருத்துநர், வானொலி தொலைக்காட்சி பழுது பார்த்தல், தாதியர் பயிற்சி, வீட்டு மின் உபகரண திருத்தம் போன்ற பாடநெறிகள் இங்கு அனுபவம் வாய்ந்த போதானாசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுகின்றன.

குறித்த பாடநெறிகள் 6 மாத காலம் மற்றும் ஒரு வருட காலம் உள்ளன. தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர்கள் கற்கை நெறிக்காக உள்வாங்கப்பட்டவுடன் இலங்கை வங்கியினூடாக ஒவ்வொரு மாணவனுக்கும் இலவசமாக வங்கி கணக்கு திறக்கப்பட்டு ஏடிஎம் (Atm) காட் வழங்கப்படுகின்றது. இம்மாணவர்கள் கற்கை நெறியை முழுமையாகப் பூர்த்தி செய்து சான்றிதழை பெற்றவுடன் அபிவிருத்தி வங்கி கடன் என்ற பெயரில் இலங்கை வங்கியினூடாக ரூபா 5 இலட்சம் ஒரு மாணவனுக்கு கடன் வழங்கப்படுகின்றது. மேலும் தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சினூடாக சுயதொழில் முயற்சிக்கு ரூபா 2 இலட்சம் கடன் தொகை வழங்கப்படும். அதுமட்டுமல்லாமல் ரூபா 75 ஆயிரம் பெறுமதியான தொழில்சார் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இச்சலுகைகளை பயனாளி ஒருவர் பெற்றுக்கொண்டு தனது சொந்த காலில் நின்று சுயதொழிலில் ஈடுபட முடியும். மலையக இளைஞர் யுவதிகள் எதிர்காலங்களை சிறப்பாக அமைத்துக் கொள்ள இந்த பயிற்சி நிலையம் துணை நிற்கின்றது. க.பொ.த. சாதாரண தரம் முழுமையாக சித்தியடைவில்லை என்ற கவலையை விடுத்து இந்த பயிற்சி நிலையத்திற்கு உள்ளே வருவதற்கான கல்வி தகமையை பெற்று இங்கு வந்து கல்வி கற்று சிறப்பானதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முடியும்.

**இங்கு பல துறைகளில் பயிற்சி பெற்ற மாணவர்கள் தான் பயிற்சி பெற்ற துறையில் தன்னை வளர்த்து கொள்வதை விட்டு விட்டு வேறு தொழில்களை நாடிச் செல்கின்றனர் இதற்கு காரணம் என்ன?**

கடந்த 20 வருடங்களாக ஹட்டனில் இயங்கி வருகின்ற இந்த தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் சுமார் ஏறத்தாழ 3000 மாணவர்கள் பயிற்சி பெற்று சென்றுள்ளனர். இங்கு பயிற்சி பெற்ற பலர் இலங்கையில் பல இடங்களில் வேலை செய்கின்றனர். வெளிநாடுகளிலும் தொழில் புரிகின்றனர். இங்கிருந்து பயிற்சி பெற்று வெளிநாடுகளில் தொழில் புரியும் பல இளைஞர்கள் என்னோடு தொடர்பை ஏற்படுத்தி பேசுகின்றனர். சுமார் 3000 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கியுள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிறுவனத்தை எத்தனை பேர் அறிந்துள்ளனர் அல்லது பயன்படுத்திக்கொள்கின்றனர் என்ற கேள்வி எம்மில் பலருக்கு உள்ளது.

இத்தொழிற்பயிற்சி நிலையத்தினூடாக என்னென்ன நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம் என்பதனை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். காலி, மாத்தறை, கேகாலை, இரத்தினபுரி, பதுளை, மொனராகலை போன்ற பிரதேசத்தை சேர்ந்த மக்களிடம் இதைப்பற்றி விரைவாக கொண்டு செல்ல வேண்டும். இவர்களுக்கு இதைப் பற்றி தெரியாது என்றால் ஒரு நியாயம் இருக்கின்றது. ஹட்டன், கொட்டக்கலை, தலவாக்கலை, நுவரெலியா, டயகம, மஸ்கெலியா, பொகவந்தலாவ பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இதைப்பற்றி தெரியவில்லை என்றால் என்ன செய்வது!

(16ஆம் பக்கம் பார்க்க)



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



களனி பல்கலைக்கழகம் - இலங்கை

# பதவி வெற்றிடங்கள்

**2020/2021 கல்வி ஆண்டிற்காக கீழ்க்காணப்படும் பதவிகளிற்காக, 2022.04.20 வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

- தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் II
- தற்காலிக விரிவுரையாளர்
- தற்காலிக செய்து விளக்கம் காட்டுபவர்/ஆசிரியர்

**விஞ்ஞான பீடம்:**
கணக்கியல் பிரிவு/தாவரவியல் மற்றும் அணுமூலக்கூற்றுக்கல்விப் பிரிவு/பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் கல்விப்பிரிவு/இரசாயனவியல் கல்விப்பிரிவு/புள்ளிவிபரம் மற்றும் கணனிக்கல்விப்பிரிவு/நுண் உயிரியல் கல்விப்பிரிவு/மிருக விஞ்ஞானம் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ கல்விப்பிரிவு/கைத்தொழில் நிர்வாகக் கல்விப்பிரிவு/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம்/மென்பொருள் பொறியியல் கல்விப் பிரிவு

**கணனி தொழில்நுட்பவியல் பீடம்:**
கணனித்தொகுதி பொறியியல் கல்விப்பிரிவு/மென்பொருள் பொறியியல் கல்விப் பிரிவு/பிரயோக கணனிக் கல்விப்பிரிவு

**விண்ணப்பிக்கும் முறை:**
மேற்படி பதவிகளிற்காக மெய்நிகர் (Online) முறை மூலம் மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படும். விண்ணப்பப்படிவங்களிற்காகப் பிரவேசித்தல் விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தல்களிற்கான வழிகாட்டிகள், கல்வித்தகைமைகள், சம்பளம் மற்றும் அனுகூலங்கள் தொடர்பான தகவல்களை https://www.kln.ac.lk/vacancies என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மெய்நிகர் முறைமையின் பிரகாரம் பிழைகளின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2022.04.19 அன்று அல்லது அதற்கு மன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம்.**
**2022.03.29**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

## கல்வி அமைச்சு

| | |
|---|---|
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | STHRD/SB/-E40: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்தின் மருந்தாக்கல் ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2022.04.27ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி, அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் STHRD/SB/-E40 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பீடத்திற்கான மருந்தாக்கல் ஆய்வுகூட உபகரணங்களுக்கான ("பொருட்கள்'') பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் மருந்தாக்கல் ஆய்வுகூடத்திற்கான உபகரணங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 4ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தக்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

**விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்**

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 | நிரல் - 4 |
|---|---|---|---|
| லொட் இலக்கங்கள் | லொட் விபரங்கள் | ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா) | வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா) |
| Lot 01 | Laboratory Equipment for Bioenergy Lab (Measuring Equipment) | 1,471,184 | 3,677,960 |
| Lot 02 | Laboratory Equipment for Bioenegy Lab (Machines) | 4,786,080 | 11,965,200 |
| Lot 03 | Laboratory Equipment for Bioenegy Lab (Analyzer) | 12,418,848 | 31,047,120 |
| Lot 04 | Glassware | 1,914,000 | 4,785,000 |
| Lot 05 | Chemicals | 400,080 | 1,000,200 |
| Lot 06 | Equipment (Consumable items) | 3,610,000 | 9,025,000 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட - ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   **சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
   **செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**
   **ZIP code: 70140**
   **தொலைபேசி: 045-2280081**
   **தொலைநகல்: 045-2280081**
   **மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.**lk
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இலங்கை சபரகமுவ மாகாணத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும் என்பதுடன் இடம்பெறும் திகதி மற்றும் நேரம் என்பன 3 நாட்களுக்கு முன்னர் அறியத்தரப்படும்.
7. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் STHRD/SB/-E40: தொழில்நுட்ப பீடத்திற்கான மருந்தாக்கல் ஆய்வுகூட உபகரணங்களுக்கான பெறுகை - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் என முகவரியிடப்பட்டு, மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD Project, Sabaragamuwa University of Sri Lanka அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் 2022 மார்ச் 31ஆம் திகதி முதல் வார நாட்களில் பி.ப. 3.30 மணி வரை வழங்கப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
8. 2022.04.27ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   **பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
   **செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**
9. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுலஓய, இலங்கை.**
**ZIP code: 70140**

திகதி: 2022-04-01.

# பதவி வெற்றிடங்கள்

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நீர் வழங்கல் அமைச்சு**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் நிலவுகின்ற பின்வரும் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

## நில அளவையாளர்

மேற்குறித்த பதவிக்கு உயர் ஊதியமும் பிற சலுகைகளும் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முடிவுத் திதகி 2022.04.18 ஆகும். மேலதிக விபரங்களுக்கு 2022.04.03ஆம் திகதிய 'Sunday Observer' பத்திரிகையை பார்க்கவும்.

**பொது முகாமையாளர்**
**தேசிய நீர் வழ்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**

# வெற்றிடங்கள்

## பொயிலர் இயக்குநர் பதவி

மேற்படி பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| | | |
|---|---|---|
| **கல்வித் தகைமைகள்** | : | க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் (02), (06)ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |
| **தொழில்சார் தகைமைகள்** | : | பதவியுடன் சம்பந்தப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தொழில்நுட்ப/தொழில்சார் பயிற்சி நிறுவனத்திலிருந்து விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகளுடன் 4ஆவது மட்டத்திற்கு (NVQ4) குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| **அனுபவம்** | : | அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றின் குறித்த கடமை பற்றிய 05 வருட அனுபவம் இருத்தல் (சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்) |
| **வயது** | : | 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| **சம்பள அளவு** | : | i. ரூ. 34,815 - 10 x 365 - 38,465<br>ii. மேற்படி சம்பளத்திற்கு மேலதிகமாக சகல அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும். |
| **சேவை நிபந்தனைகள்** | : | ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் பொறுப்பு நிதிகளுக்கு உரிமை உண்டு. |

அரச சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை தாம் கடமையாற்றும் நிறுவன தலைமையூடாக நேரடியாக பிரதியொன்றை சமர்ப்பித்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படின் விடுவிக்க முடியும் என்பதை தெரிவிக்கும் நிறுவன தலைமையின் சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.
பதவிக்கு நியமனம் செய்யும் அல்லது செய்யாதிருக்கும் உரிமை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சபைக்கு உரியது. விண்ணப்பிக்கும் பதவியை உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரிகளால் தமது முழுமையான சுயதரவு மற்றும் உறவினரல்லாத பரிந்துரைப்பவர்கள் இருவரின் பெயர்களுடன் 2022.04.22ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணுபவருக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

UCSC

**கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனம்**

## பெறுகை அறிவித்தல்

## சிற்றுண்டிச்சாலைக்காக விலைமனு கோரல்

**UCSC/S/NCB/APB/2022/003**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனத்திற்குரித்தான சிற்றுண்டிச்சாலையை 02 வருட காலத்திற்கு நடாத்திச் செல்வதற்காக 03 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட சிற்றுண்டிச்சாலையாளர்களிடமிருந்து 2022 ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை பெறுகை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

- மாணவர் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கு தெரிவு செய்யப்படுபவர்களால் பணியாட் தொகுதியினருக்கான சிற்றுண்டிச்சாலையும் நடாத்திச் செல்லுதல் வேண்டும்.
- மீளளிக்கப்படாத 1,000.00 பண வைப்பொன்றை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை, உதவி பதிவாளர் / கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் குறித்த பெறுகை மாதிரிப் படிவங்கள் மற்றும் விபரங்களை 2022 ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி ந.ப. 12.00 மணி வரையான வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட 2022ஆம் திகதி 25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கொழும்பு பல்கலைக்கழக கல்வி நிறுவனத்தின் கல்வி மற்றும் வெளியீட்டு பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் 2022 ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
- விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று (Pre-Bid Meeting) 2022-04-20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனத்தின் பணியாளர்கள் கூட்ட மண்டபத்தில் இடம்பெறும்.
- நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
- சகல விலைமனுக்கள் தொடர்பிலான தீர்மானங்களையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**உதவி பதிவாளர்,**
**கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்வி நிறுவனம்,**
**இல. 35, ரீட் மாவத்தை,**
**கொழும்பு 07.**
**(தொலைபேசி: 011-2589123)**

INTERNATIONAL DRIVING LICENCE

Obtain Your Licence From Kandy

AA CEYLON Estd. 1904

Contact :
Automobile Association of Ceylon
35, 2/9, Silverdale Shopping Complex
Yatinuwara Weediya,Kandy
Tel: 081-7201020
WEB : www.aaceylon.lk

## 2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

2022ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

2021ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

**மற்றும்**

**18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொருமுறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை**

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தேர்தல் ஆணைக்குழு**
**011-2868441 / www.elections.gov.lk**

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

களனிப் பல்கலைக்கழகம் இலங்கை

## பெறுகை அறிவித்தல்

## தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்கல்

**களனிப் பல்கலைக்கழகம் இலங்கை**

களனிப் பல்கலைக்கழகத்திற்கு உரித்தான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் விடுதிகளின் பாதுகாப்புச் சேவைகளிற்காக பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப் பெற்றுள்ள ஐந்தாண்டு கால சேவை அனுபவமுள்ள ஏற்கனவே சேவை பெறும் நிறுவனமொன்றிற்காக நூற்றுக்கு மேற்பட்ட பாதுகாப்பு ஊழியர்களை பணியில் அமர்த்தியுள்ள அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.04.26 அன்று பி.ப. 2.30 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. களனிப் பல்கலைக்கழகம், தளுகம வளாகம், (UK/GA/GA7/SS/DAL/2022)
2. களனிப் பல்கலைக்கழகம் ராகம வளாகம், (UK/GA/GA7/SS/RAG/2022)

மீளளிக்கப்படாத ரூபா 2,000.00 இற்கான படிவக்கட்டணத்தை பல்கலைக்கழக சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து விபரங்களுடன் கூடிய விலைமனுப் படிவங்களை 2022.04.25 அன்று பி.ப. 3.00 வரை பிரதிப் பதிவாளர்/பொது நிருவாகம் இடம் பெற்றுக் கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் முத்திரையிடப்பட்டு 2022.04.26 அன்று பி.ப. 2.30 இற்கு முன்னர் பல்கலைக்கழகத்தின் பிரதான பாதுகாப்பு அலுவலகத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள பொது நிருவாகப் பிரிவின் பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 2.30 இற்கு விலைமனுத் திறக்கப்படும். அவ் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**தளுகம, களனி.**

2022.04.03

BE BETTER INFORMED!

Dinamina Daily News Thinakaran

News you can trust now free on your mobile phone.

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!




AVAILABLE AT

LAKE HOUSE

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -







# கைத்தொழில் அமைச்சு

## கைத்தொழில் அமைச்சினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ள கைத்தொழிற்பேட்டை/ கைத்தொழில் வலயங்களில் சூழலுக்கு உகந்த கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக அல்லது ஏற்கனவே நடைமுறையிலுள்ள கைத்தொழில்களை விரிவுபடுத்துவதற்காக தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலகம் | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|---|---|
| மேல் | கம்பஹா | திவுலபிட்டிய | 89, அலுத்தேபொல மேற்கு |
| | களுத்துறை | பேருவளை | 738 A, வேரகல |
| | | புலத்சிங்கள | 819 B, மஹகம கிழக்கு |
| ஊவா | பதுளை | மஹியங்கனை | கல்போருயாய (1B) |
| | மொனராகலை | வெல்லவாய | கித்துல்கோட்டே |
| வடமேல் | குருணாகலை | மாகோ | 205, கஜநெக்கம |
| | புத்தளம் | மகவெவ | இரணவில மேற்கு |
| மத்திய | கண்டி | யட்டிநுவர | 186, கிரிமெட்டிய |
| | மாத்தளை | தம்புள்ளை | எம்புல்அம்பே |
| வடமத்திய | அநுராதபுரம் | மிகிந்தலை | மிகிந்தலை |
| | | ரம்பேவ | சந்தமல்கம 113 |
| | பொலன்னறுவை | திம்புலாகலை | 213 பெலட்டியாவ |
| தெற்கு | மாத்தறை | திக்வெல்ல | உருகமுவ - தெற்கு |
| | ஹம்பாந்தோட்டை | சூரியவெவ | சுருவிருகம |
| | காலி | பலபிட்டிய | 16 D, நானதொட்டபலாத்த |
| வடக்கு | கிளிநொச்சி | கண்டாவளை | KN 45 உமையாள்புரம் |
| | யாழ்ப்பாணம் | வலிகாமம் கிழக்கு | அச்சுவேலி |
| | திருகோணமலை | திருகோணமலை பட்டினமும் சூழலும் | முத்துநகர் |

**மூன்றவத்தை மின்சாரம், நீர், அகன்ற பாதையமைப்பு உள்ளடங்கலாக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பல்துறை கைத்தொழிற்பேட்டையாக நிறுவப்படவுள்ள இக் கைத்தொழில் வலயங்களில் முதலீடு செய்யவுள்ள உங்களுக்கு,**

- 35 வருட நீண்டகால குத்தகை அடிப்படையில் அரச காணித்துண்டு
- இக் காணித்துண்டிற்காக முதல் 5 வருடங்களிற்கு வரிச் சலுகைக்காலம்
- கைத்தொழிலிற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் (மூன்றவத்தை மின்சாரம், நீர், அகன்ற பாதையமைப்பு)
- கைத்தொழில் வலயங்களை “கைத்தொழில் பிரதேசம்” என வர்த்தமானியில் பிரசுரிப்பதனூடாக கைத்தொழிலைக் கொண்டு நடாத்துவதில் ஏற்படும் இடையூறுகளை குறைப்பதற்கான நிலைமைகள்
- கைத்தொழில்களை ஆரம்பித்தல் மற்றும் நடாத்திச் செல்வது தொடர்பில் ஏனைய அரச நிறுவனங்களுடன் மேற்கொள்ள வேண்டிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.
- மின்சாரத்தைப் பெற்றுக்கொள்கையில் கைத்தொழில்களுக்காக வழங்கப்படும் சலுகைக் கட்டண முறையை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு

**இத்திட்டத்தின் கீழ் பிராந்திய ரீதியான கைத்தொழில் அபிவிருத்தியினூடு தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தித்துறை கைத்தொழில் முதலீடுகளுக்காக முந்துரிமை வழங்கப்படும்.**

I. புதிய முதலீடுகள்
II. ஏற்றுமதித்துறை அல்லது இறக்குமதி பிரதியீட்டு கைத்தொழில்கள்
III. பிராந்திய ரீதியாக நடைமுறையிலுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரின் மற்றும் புதிய தொழில்முனைவோரின் முதலீடுகள்
IV. ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் தனித்துவ பாரம்பரிய கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் பிராந்தியத்திற்குரித்தான விசேட மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யும் தொழில்முனைவோரின் முதலீடுகள்
V. பிராந்திய பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவல்ல தொழில்நுட்பத்தை மையப்படுத்திய முதலீடுகள்
VI. வெளிநாடுகளில் வதியும் இலங்கைப் பிரஜைகள் உழைத்த வெளிநாட்டு நாணயத்தினூடு இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள்
VII. பிராந்திய ரீதியாக பெற்றுக்கொள்ளக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழில்களுக்கு முந்துரிமை வழங்கப்படும்

**மேற்குறிப்பிட்ட உத்தேச கைத்தொழில் வலயம் / கைத்தொழிற் பேட்டைகளில் உமது கைத்தொழில்களை தொடங்க விரும்பின், கீழ்காணப்படும் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து 2022.04.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு இவ் அமைச்சிற்கு அனுப்பி வைக்கவும்.**

முதலீட்டாளரின் பெயர் :................................................. தொலைபேசி எண் :.................................................

முகவரி :................................................. மின்னஞ்சல் :.................................................

கைத்தொழிற் துறை :................................................. முக்கிய உற்பத்தி :.................................................

எதிர்பார்க்கப்படும் சந்தை - உள்நாட்டு ☐ வெளிநாட்டு ☐ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ☐

முதலீடு (மொத்தம்) (ரூ.மில்லியன்) :.................................................

உத்தேச வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை :.................................................

தேவைப்படும் குறைந்தபட்ச நிலப்பரப்பு :.................................................

நீங்கள் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கும் கைத்தொழிற்பேட்டை (விருப்புத் தெரிவு)

முதல் தெரிவு:.................................... இரண்டாம் தெரிவு................................ மூன்றாம் தெரிவு :....................................

மேலதிக தகவலகளுக்கு –
முகவரி :
பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி)
கைத்தொழில் அமைச்சு, இல 73/1, காலி வீதி,
கொழும்பு 03.
மின்னஞ்சல் – idmic110@gmail.com

பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி) 011 244 1490
பிரதிப் பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி) 0112 322782
உதவிப் பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி) 0112343997

விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்காக

**செயலாளர் (கைத்தொழில் அமைச்சு)**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



பொருளாதார அரசியல்

# மக்கள் தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கான புறச்சூழல் உருவாக்கப்பட வேண்டும்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

**பதின்மூன்று மணித்தியால மின்தடை நாட்டின் பொருளாதாரத்தை மட்டுமன்றி ஒவ்வொரு குடிமகனின் அன்றாட வாழ்க்கையையும் வெகுவாக பாதித்திருக்கிறது.**

வளர்ச்சியடைந்த ஒரு நாட்டில் ஒருசில நிமிடங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டாலும் அது ஒரு முக்கிய பேசுபொருளாக மாறிவிடும். ஒரு நாளின் அரைப்பங்கிற்கு மேல் மின்சாரம் கிடையாதென்பது மிக மோசமான ஒரு நெருக்கடி நிலை என்பதில் சந்தேகமில்லை.

மின் பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தி நிலைமையை சமாளிப்பதாயின் அவற்றுக்குத் தேவையான எரிபொருளும் இல்லை. எரிபொருள் தாங்கிய கப்பல் ஒன்று கடந்த 7 நாட்களாக டொலர் செலுத்தாதபடியினால் நாட்டின் துறைமுகத்துக்குள் வர மறுத்து சர்வதேச கடற்பரப்பில் தரித்து நிற்கிறது. இவ்வாறு துறைமுகத்திற்கு அருகாமையில் எரிபொருள் எற்றிய கப்பல்கள் நாட்கணக்கில் காத்திருக்கும் நிலை தொடர்கிறது. அவ்வாறு காத்திருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் செலுத்தப்படவேண்டிய தாமதக் கட்டணம் மிகமிக அதிகமாகும். டொலர் கிடைக்காமையினால் கடன் கடிதங்களைத் திறக்க முடியாமல் இவ்வாறு கப்பல்கள் தரித்து நிற்பது பல தடவை நடந்திருக்கிறது.

இதன் காரணமாக எரிபொருள் இறக்குமதிச் செலவினம் தேவையற்ற விதத்தில் அதிகரித்துள்ளது. இச்சுமையினையும் நாட்டு மக்களே சுமக்க வேண்டியுள்ளது. அமைச்சர்களும் அதிகாரிகளும் எரிபொருள் நெருக்கடி சிலவாரங்களில் தீர்ந்து விடும் என உறுதியளித்த போதிலும் இவ்வாறான பலவீனமான முகாமைத்துவக் குறைபாடுகளால் நாட்டில் எரிபொருளுக்கான பற்றாக்குறை தொடர்ந்து செல்கிறது.

ஒரு புறம் நாட்டுக்குத் தேவையான மின்சார விநியோகத்தைத் தொடர்ச்சியாக வழங்கமுடியாத கையாலாகாத நிலையில் இலங்கை மின்சார சபை உள்ளது. மறுபுறம் மின்சார உற்பத்திக்கும் நாட்டின் ஏனைய தேவைகளுக்கும் அவசியமான எரிபொருளைப் போதியளவு வழங்க முடியாத கையாலாகாத நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளது. இவை இரண்டும் இணைந்து நாட்டின் உற்பத்தித் துறை போக்குவரத்து என்பவற்றை முடக்க நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது.

நாட்டின் பொருள் விநியோகச் சங்கிலி முறிந்துள்ளது. சமையல் எரிவாயுவுக்கு நிலவும் தட்டுப்பாடு நாட்டின் ஹோட்டல் கைத்தொழிலை பெரிதும் பாதித்திருக்கிறது. அத்துடன் வீடுகளில் மக்களின் உணவுப் பாதுகாப்பினை மோசமாகப் பாதித்திருக்கிறது. ஒருபுறம் அத்தியாவசியப் பொருள்கள் சேவைகளின் விலைகள் மிகச் சடுதியாக அதிகரித்துச் சென்றுள்ளன. மறுபுறம் அதிகரித்த விலைகளிலும் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத பொருட் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மக்கள் ஒரு நாளின் கணிசமான பகுதியை வரிசைகளில் நிற்பதிலும் பொருள்களைத் தேடித் திரிவதிலும் கழிக்க நேர்ந்துள்ளது. முன்பெல்லாம் பொருள்களின் விலைகள் மிகச்சிறிய அளவிலேயே அதிகரிக்கும் மக்கள் அதற்கு எதிராகப் போராட்டம் நடத்துவார்கள். இப்போது பொருள்விலைகள் எதிர்பாராத அளவு பெரிய தொகைகளில் அதிகரிக்கின்றன. அத்துடன் அவற்றுக்கு தட்டுப்பாடும் நிலவுகிறது.

உதாரணமாகப் பால் மாவை எடுத்துக் கொண்டால் ஒரு கிலோ 790 ரூபாவாக இருந்து 945 ரூபா வரையில் சிறிது சிறிதாக படிப்படியாக அதிகரிக்கப்பட்ட போது மக்களின் வெளிப்படையான அதிருப்தியைக் காணமுடிந்தது. ஆனால் இம்முறை பால்மா என்பதை மக்கள் தேடியலையும் அளவுக்கு கிடைப்பதற்கு அரிதான ஒரு பொருளாக மாற்றினார்கள். பின்னர் விலையை இருமடங்காக அதிகரித்தார்கள். அதன் பின்னரும் அது போதியளவில் சந்தையில் கிடைக்காதவாறு பார்த்துக்கொண்டனர்.

எனவே மற்றொரு தடவை விலை அதிகரிக்கப்பட்டாலும் அதனால் விற்பனையில் பாதிப்பு ஏற்படாது. அரசாங்கமோ பால்மா உடல் நலத்திற்கு கேடு ஆகவே திரவப்பாலுக்கு மாறுமாறு ஆலோசனை கூறுகிறது. முன்பெல்லாம் பொருளாதார நெருக்கடிகளும் யுத்த சூழல் காரணமாக ஏற்பட்ட பொருள் தட்டுப்பாடுகளும் மக்களின் வாழ்க்கையை பாதித்த போதிலும் வடக்கு கிழக்குக்கு வெளியே இன்று ஏற்பட்டிருப்பதைப் போன்றதொரு மோசமான நிலையினை மக்கள் அனுபவிக்கவில்லை என்றே கூறலாம்.

> “இலங்கை ரூபாவை மிதக்க விட்டதன் பின்னர் சந்தை சக்திகளுக்கு அமைய மாற்றுவீதம் தீர்மானிக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் டொலருக்கு எதிரான நாணய மாற்று வீதம் 300 ரூபா மட்டத்தை விஞ்ச வேண்டிய நிலை ஏற்பட ஏதுக்களில்லை”

இப்போது ஏற்பட்டுள்ள இந்த நிச்சயமற்ற நிலையைப் பயன்படுத்தி ஒரு சில பதுக்கல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதிக இலாபம் உழைக்க முயல்வதையும் காண முடிகிறது. மறுபுறம் விலைகள் மேலும் அதிகரிக்கும் என்ற ஒரு எதிர்பார்க்கையை உருவாக்குவதன் மூலம் உண்மையாகவே பொருள் விலைகளை அதிகரிக்கும் உத்தியை வியாபாரத் தரப்பினர் கையாள்வதைக் காண முடிகிறது.

இலங்கை ரூபாவை மிதக்க விட்டதன் பின்னர் சந்தை சக்திகளுக்கு அமைய மாற்றுவீதம் தீர்மானிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் டொலருக்கு எதிரான நாணய மாற்று வீதம் 300 ரூபா மட்டத்தை விஞ்ச வேண்டிய நிலை ஏற்பட ஏதுக்களில்லை.

வேண்டுமென்றே டொலருக்கு அதிக விலைகளை வழங்கி அதன்மூலம் நாட்டின் நாணய மாற்றுவீதத்தை உயர்ந்த மட்டத்திற்கு நகர்த்த முனைவதாக ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு ஒரு நாணயமாற்று முகவரின் உரிமமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. நாட்டுக்குள் டொலர் உட்பாய்ச்சல்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் அதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மையை நீக்கும் நடவடிக்கையில் உரிய தரப்பினர் ஈடுபடவேண்டும்.

கடந்த வியாழன் இரவு எற்பட்ட வன்முறைச் சம்பவங்களும் அதன் பின்விளைவுகளும் நாட்டுக்குள் வரும் டொலர் உட்பாய்ச்சல்களையும் மேலும் மோசமாகப் பாதிக்கும். மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியும் விரக்தியும் கோபமும் நாட்டுக்கும் அதன் ஆட்சியாளர்களுக்கும் நல்லசெய்தியாக அமையாது.

குறைந்த பட்சம் மக்கள் தமது வாழ்வாதாரத்தைத் தொடர்வதற்கு அவசியமான புறச்சூழலை உருவாக்கி பொருள் தட்டுப்பாடுகள் இன்றி வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும். அது ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

கோவிட் 19 நோய்த்தாக்கம் ரஷ்ய உக்ரைன் நெருக்கடி போன்ற எந்த நொண்டிச் சாட்டையும் கூறி அதிலிருந்து அரசாங்கம் விலக முடியாது. ஏனெனில் இலங்கையைப் போலவே இவற்றை எதிர்கொண்ட நாடுகள் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளன.

அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற பிம்ஸ்டெக் என்ற பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டில் வங்காள தேசத்தின் பிரதமர் ஆற்றிய உரை இதற்கு நல்ல உதாரணம்.

# உக்ரைன்–ரஷ்யப் போர் உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக மாறுகிறதா?



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**உக்ரைன் ரஷ்யப் போர் தளர்வுக்கான முனைப்புடன் நகர்வதாக தெரியவருகிறது. ரஷ்யா படைகளை விலக்கிக் கொள்வதாக அறிவித்த போது அமெரிக்க வெள்ளை மாளிகையின் தகவலின் பிரகாரம் படைகளை பின்வாங்காது ரஷ்யா செய்தியை மட்டும் வெளிப்படுத்துவதாக ஜோ பைடன் தெரிவித்துள்ளார். அச்செய்தியையே உக்ரைன் ஜனாதிபதியும் படைகளை பின்வாங்காது இடமாற்றம் செய்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். அதேநேரம் இரு நாட்டுக்குமான உரையாடல்களும் போர் நிறுத்த உடன்பாட்டுக்கான நகர்வுகளும் தொடர்வதனைக் காணமுடிகிறது. அதேநேரம் உலகம் ரஷ்ய, உக்ரைன் போரில் கவனம் குவிந்திருக்கின்ற போது வடகொரியா ஏமன் மற்றும் இஸ்ரேலின் நகர்வுகள் பற்றி அதிகம் முதன்மைப்படுத்தப்படுவதில்லை. இக்கட்டுரையும் உக்ரைன் ரஷ்யப் போர் உலகளாவிய மட்டத்தில் ஏற்படுத்திவரும் மாற்றங்களை தேடுவதாக அமையவுள்ளது.**



முதலாவது, வடகொரியாவின் அண்மைய நடவடிக்கைகள் அதிகம் இராணுவ ரீதியிலும் அமெரிக்காவுக்கு எதிரானதாகவும் காணப்படுகிறது. ரஷ்யா சீனாவின் கூட்டுக்குள் பயணிக்கும் வடகொரியா உக்ரைன் ரஷ்யப் போரில் அமெரிக்கா சார்ந்த மேற்குலகத்திற்கு எதிராக அணுகுமுறையை வெளிப்படுத்தி வருகிறது. அத்தகைய வெளிப்படுத்தலில் ரஷ்யாவுக்கு ஆதரவான தோற்றப்பாட்டையும் போரில் திசை திருப்பலுக்கான நகர்வுகளையும் முதன்மைப்படுத்தி வருகிறது. அதேநேரம் தனது இராணுவ பலத்தை அதிகரிக்கும் சந்தர்ப்பமாகவும் இக்காலப் பகுதியை வடகொரியா பிரயோகப்படுத்தி வருகிறது. குறிப்பாக கண்டம் விட்டு கண்டம் செலுத்தக்கூடிய ஏவுகணையை அண்மையில் (24.03.2022) பரிசோதித்ததன் மூலம் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை செய்துள்ளது. அமெரிக்காவின் எப்பாகத்தையும் தாக்கும் திறனுடைய ஹவாசோங்-17 எனும் ஏவுகணை பரிசோதனை வடகொரியாவின் இராணுவ பலத்தை அதிகரிப்பை காட்டுகிறது. ஏற்கனவே அணுவாயுத வலுவுடைய வடகொரியா மீளவும் அத்தகைய அணுவாயுதத்தை காவிச் செல்லும் ஏவுகணைகளை தயாரிக்கும் திறனை உருவாக்கி வருகிறது. வடகொரியாவின் ஏவுகணை வளர்ச்சியானது அயல் நாடுகளான ஜப்பான், தென்கொரியா மட்டுமல்ல மேற்குலக நாடுகளுக்கும் ஆபத்தானதாகவே உள்ளது. பாரிய பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் இராணுவ ரீதியான வளர்ச்சியே வடகொரியாவினது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடியது என வடகொரியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் இராணுவ ரீதியான பெருக்கமானது, சமகால உலகத்தை எதிர்கொள்வதென்ற அணுகுமுறையைத் தந்துள்ளதுடன் மேற்குலகத்தின் நெருக்கடிகால சூழலைப் பயன்படுத்திக் கொள்வதற்கான நகர்வாகவும் தெரிகிறது. வெளிப்படையாக இராணுவ வளர்ச்சியே ரஷ்ய உக்ரைன் போர் உலக நாடுகளுக்கும் அதன் தலைவர்களுக்கும்' உணர்த்தி வருகிறது. வடகொரியாவும் அத்தகைய இராணு வலிமையினாலேயே அமெரிக்காவின் படையெடுப்புக்களிலிருந்து தப்பிக் கொள்ள காரணமாக அமைந்தது. அதனை தொடர வேண்டிய நிலையே வடகொரியாவுக்கு தந்துள்ள பாடமாக அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையினதும் அமெரிக்காவினதும் பொருளாதாரத் தடைகளால் வடகொரியா தொடர்ச்சியாக இராணுவ வலிமையில் கவனம் கொள்வதை தவிர்க்க முடியாததாக்கியுள்ளது. ரஷ்யாவின் உக்ரைன் மீதான போர் உலகளாவிய சிறிய நாடுகளையும் அணுவாயுதங்களை தயாரிக்கத் தூண்டுவதாகவே உள்ளது.

இரண்டாவது, ஏமனில் கடந்த எட்டு ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் உள்ளாட்டு போர் சமாதானத்தை நோக்கி நகர்ந்துள்ளது. குறிப்பாக இஸ்லாமிய மக்களின் புனித மாதமான ரம்மான் காலப்பகுதியில் போர் நிறுத்தத்தை சவுதி அரோபிய கூட்டுப் படைகள் அறிவித்துள்ளன. இத்தகைய தற்காலிக போர் நிறுத்தமானது ஏமனில் ஓர் அமைதியை ஏற்படுத்தும் என்ற செய்தியை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரம் சவுதிக் கூட்டுப்படைகளின் இத்தகைய போர் நிறுத்த அறிவிப்பை ஹவுத்தி கிளர்ச்சிக் குழு ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் ஐக்கிய நாடுகள் சபை போர் நிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த 2015ஆம் ஆண்டு தென் மேற்கு ஆசிய நாடான ஏமனில் சுன்னி முஸ்லிம் பிரிவுக்கும் ஷியா முஸ்லிம் பிரிவுக்கும் இடையில் தொடங்கிய போர் எட்டு ஆண்டுகளாக நீடித்து வருகிறது. குறிப்பாக ஏமனின் சுன்னி பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும் ஹியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையில் போர் நிகழ்துவருகிறது. மன்சூர் பதவி விலகிய பின்னர் ஜனாதிபதியாக அலி அப்துல்லா சாலே பதவியேற்றார். உள்நாட்டுப் போரில் ஏமன் அரசுக்கு ஆதரவாக சவுதி அரேபியாவும் கிளர்ச்சிக் குழுவுக்கு ஆதரவாக ஈரானும் செயல்படுவதனால் போர் நீண்ட நெருக்கடியை தந்துள்ளது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டதாவும்' பல இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தகவல்கள் உண்டு. ஏறக்குறைய ஒரு ஈரான் ஈராக் போர் போன்று இப்போர் நகர்கிறது. சவுதியின் ஏமனுக்கு ஆதரவான நடவடிக்கைக்கு எதிராக ஹவுத்திக் கிளர்ச்சியாளர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அதிகம் பொருளாதார நெருக்கடியையும் மனித அவலத்தையும் தருவதாக சவுதி குற்றம் சாட்டிவருகிறது. அதேநேரம் சவுதி மட்டுமன்றி மேற்கு நாடுகளும் அக்கிளர்சிக் குழுக்களுக்கு எதிராக ஏமன் ஆட்சிக்கு உதவுவதாக ஈரான் குற்றம் சாட்டுகிறது. உலகில் இராணுவத்திற்காக அதிக நிதி ஒதுக்கும் நாடுகள் பட்டியலில் சவூதி அரேபியா இரண்டாவது இடத்தில் இருப்பதென்பது கவனத்திற்குரியதாகும்.

மூன்றாவது, இஸ்ரேலின் நகர்வுகள் பாரிய தாக்குதல் உத்தியைக் கொண்டுள்ளது என ஈரான் மற்றும் சிரியா போன்ற நாடுகள் குற்றம் சாட்டிவருகின்றன. குறிப்பாக ஈரானின் அணுவாயுத உற்பத்திக்கான நடவடிக்கைகளை தடுக்கும் விதத்தில்' பெரும் தாக்குதலை நிகழ்த்த இஸ்ரேல் திட்டமிடுவதாக தெரிய வந்துள்ளது. ஏற்கனவே ரஷ்யாவின் போர்ச் சூழலிலும் அந்த நாட்டின் ஜனாதிபதியுடன் இஸ்ரேலிய பிரதமர் ரஷ்யாவுக்கு விஜயம் செயதமையும் ரஷ்யாவுக்கு எதிரான ஆதரவை வெளிப்படுத்தியமையும் கவனத்திற்குரியதாகும். அந்த வரிசையில் பாரிய போருக்கு இஸ்ரேல் திட்டமிடுவதாக குற்றச்சாட்டுக்கள் வெளியாகியுள்ளன. அது மட்டுமன்றி பாலஸ்தீனம் மீதான அடக்குமுறைகளை முதன்மைப்படுத்தும் இஸ்ரேல் உக்ரையினிலிருந்து வெளியேறும் யூதர்களை இஸ்ரேலில் குடியமர்த்துவதை அதிக சிரத்தையுடன் கையாண்டுவருகிறது. ஏறக்குறைய யூதர்களின் சனத் தொகையை அதிகரிக்கச் செய்வதன் மூலம் பாலஸ்தீனர் மீதான வெளியேற்றத்தை திட்டமிட்டு இஸ்ரேல் நகர்த்துகிறது. ரஷ்ய உக்ரையின் போர் இஸ்ரேலுக்கு இராணுவ நகர்வையும் போருக்கான நடவடிக்கையையும் இலகுபடுத்தியுள்ளனது.


நான்காவது பாகிஸ்தானின் தற்போதைய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரும் விதத்தில் எதிர்க்கட்சிகளது கூட்டு நகர்வு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமர் இம்ரான்கான் பெரும்பான்மையை இழக்கும் நிலை ஏற்படும் என எதிர்வு கூறப்படுகிறது. ஏறக்குறைய வாக்கெடுப்புக்கான திகதி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் சட்டத்துறையில் விவாதம் நிகழ்ந்து வருகிறது. ஏப்ரல் மூன்றாம் திகதி ஆட்சிக்கு நெருக்கடி ஏற்படும் நிலையில் தெஹ்ரிக் ஈஇன்சாப் கட்சியின் முத்த உறுப்பினர் பைசல் வக்டா இம்ரான்கானுக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டிருகிறது என எச்சரித்துள்ளார். இது ஏறக்குறைய பாகிஸ்தானின் அரசியலில் நிகழும் வழமையான நிகழ்வாகவே தெரிகிறது. அதாவது ஜனநாயக ஆட்சியாளர்கள் தமக்கு நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் இவ்வாறு கூறிக்கொண்டு ஒன்று இரண்டு குண்டுகளை வெடிக்க வைத்து விட்டு இராணுவ ஆட்சியை கட்டமைக்கும் தன்மை ஏற்படுவதை கடந்த காலத்தில் அவதானிக்க முடிகிறது. அல்லது இராணுவ எச்சரிக்கைகளை மேற்கொண்டு பெரும்பான்மை ஆதரவைத் திரட்டுவதை காணமுடிகிறது. அதற்கான நகர்வுகளுடனேயே இம்ரான் கான் செயல்படுகின்றார்.

எனவே மரியப் போலில் பாரிய போர் நிகழ்ந்த போதும் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவின் அறிவிப்புடன் இரு நாட்டுக்குமான போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் உலக நாடுகள் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையை அதிகரித்துவருகின்றன. அதே நேரம் அமெரிக்கா ரஷ்யா மீதும் ரஷ்ய ஜனாதிபதி மீதும் அதிக குற்றச்சாட்டை போலந்து விஜயத்தின் போது பைடன் முன்வைத்தாலும் பின்னர் அதனை பின்வாங்கியுள்ளமை அதிகமான செய்தியை வெளிப்படுத்துகிறது. மேற்கின் நெருக்கடியும் ரஷ்யாவின் நகர்வுகளும் அதிக மாற்றத்தை உலகம் அடையும் என்பதை மீளவும் பைடனின் போலந்து விஜயம் உணர்த்துகிறது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# ரமழான் நோன்பு ஓர் அறிமுகம்



இலங்கை உட்பட உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் தற்போது இவ்வருடத்திற்கான ரமழான் மாத நோன்பை அடைந்து கொண்டுள்ளனர். இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாக விளங்கும் இம்மாத நோன்பை முஸ்லிம்கள் நோற்பது கட்டாயக் கடமையாகும்.

நோன்பு என்பது அரபு மொழியில் 'ஸவ்ம்' எனப்படுகிறது. மொழி அடிப்படையில் விட்டுவிடுதல், நிறுத்திக்கொள்ளல், தவிர்ந்து கொள்ளல் போன்ற கருத்துகளை இது தருகின்றது. இன்னொரு வகையில் அல்லாஹ்வை நெருங்கும் நோக்கில் அனுமதிக்கப்பட்ட சில விடயங்களை தவிர்ந்து கொள்வதைக் குறித்து நிற்கிறது. அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு அவனை நெருங்குவதற்காக பகல் பொழுது முழுமையாக உணவு வகைகளை உண்பது பானங்களை அருந்துவது கணவன், மனைவி உடல் உறவில் ஈடுபடுவது போன்ற விடயங்களை தவிர்ந்து கொள்வதையே நோன்பு என்பது குறித்து நிற்கிறது.

'ஆதமுடைய பிள்ளையின் நோன்பைத் தவிரவுள்ள அனைத்து செயல்பாடுகளும் அவனுக்கானது. நோன்பு எனக்கானது, அதற்கு நானே கூலிகொடுக்கிறேன். உணவையும் இச்சைகளையும் அவன் எனக்காக வேண்டி தவிர்ந்து கொள்கிறான். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

இன்னொரு அறிவிப்பில் 'எனக்காக வேண்டி உணவை தவிர்ந்து கொள்கிறார், எனது திருப்தியை நாடி பானங்களை விட்டு விடுகின்றார். எனது திருப்தியை பெறுவதற்காக உடல் இச்சைகளை தவிர்க்கிறார், எனக்காக வேண்டி மனைவியிடமிருந்து விலகியிருக்கின்றார்' என்றும் வந்துள்ளது (ஆதாரம்: இப்னு குஸைமா)

நோன்பின் நோக்கங்கள்

'நோக்கங்களை விளங்கிக்கொள்வது செயல்பாடுகளின் உயிர்' என்று இமாம் ஷாதிபி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுவார்கள். இவ்வகையில் நோன்பின் நோக்கங்கள், அது விதியாக்கப்படுவதற்கான காரணிகளை விளங்கி நோக்கம் நிறைவேறும் விதமாகக் கடமைகளை அமைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் எமது நோன்புகள் உயிர்ப்பு மிக்கதாக அமையும். இவ்வகையில் கீழ்வரும் விடயங்களை நோன்பின் நோக்கங்களாக குறிப்பிட முடியும்.

உள்ளங்களை தூய்மைப்படுத்தல்

இறை கட்டளைகளுக்கு கட்டுப்படுவதும் அவன் தடுத்தவைகளை தவிர்ந்து கொள்வதும் உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்கான சிறந்த முறைவழியாகும். ஒருவன் யாரும் அறியாத முறையில் சாப்பிடலாம், பானங்களை அருந்தலாம், மனைவியுடன் உறவில் ஈடுபடலாம். ஆனால் அல்லாஹ் பார்த்துக் கொண்டு இருக்கிறான் என்ற உணர்வின் காரணமாக அவற்றை தவிர்ந்து கொள்கிறான் என்பதும் இதனை தொடராக ஒரு மாத கால அளவு பேணுகின்றான் என்ற விடயமும் உள்ளத்தை தூய்மைப்படுத்தி உளக்கறைகளை போக்கி மனிதனின் சிந்தனையை ஒழுங்குபடுத்துவதற்கான சிறந்த வழியாகும்.

ஆன்மீக மேம்பாடு

உடல், அறிவு, ஆன்மாவின் கூட்டுக்கலவையே மனிதன். இம்மூன்று தேவைகளும் அவனிடம் இயல்பாக அமைந்துள்ளது. இஸ்லாம் இம்மூன்று பகுதிகளுக்கும் தனியான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. இவ்வகையில் ஆன்மாவை மேம்படுத்துவதற்கான செயல்பாடுகள் ஆன்மீக விடயங்கள் எனப்படும். எனினும் உடல், அறிவு சார்ந்த பகுதிகளும் ஆன்மாவும் இணைத்தே நோக்கப்படுகின்றது

நோன்பில் உடல் சார்ந்த பயன்கள் பல காணப்படுகின்றன. அதனை மிகைத்ததாக ஆன்மீக பயன்கள் இருக்கின்றன. நோன்பின் ஊடாக சட உலக தேவைகள், உடல் தேவைகளை விட ஆன்மீகத் தேவைகள் முற்படுத்தப்படுகின்றன. அத்துடன் மனோ இச்சையை விட அறிவு முற்படுத்தப்படுகிறது. இதனைத்தான் நபி(ஸல்) அவர்கள் 'நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் கணப்படுகின்றன. ஒன்று நோன்பு துறக்கும் போது, மற்றையது அல்லாஹ்வை சந்திக்கும் போது' என்றார்கள் (ஆதாரம்: புகாரி முஸ்லிம்)

நோன்பு துறக்கும் போது உடல் ரீதியான மகிழ்ச்சியும் இறைவனை சந்திக்கும் போது ஆன்மீக ரீதியான மகிழ்ச்சியும் கிடைக்கிறது

நாட்ட சக்திக்கான பயிற்சி

நோன்பு நாட்ட சக்தியை மேம்படுத்தக்கூடிய உள ரீதியான ஒரு பயிற்சியாகும். அது பொறுமையை ஏற்படுத்துகிறது. பழக்கங்களுக்கு அடிமைப்பட்ட நிலையிலிருந்து மனிதனை விடுவிக்கிறது. நாட்டசக்தியின்றி மனிதன் வாழ முடியாது. நாட்டசக்தியின் உதவியின்றி மனிதனால் நல்லவற்றை செய்யவோ தீயவற்றிலிலுந்து விடுபடவோ முடியாது.

நோன்பை 'பொறுமையின் மாதம்' (ஆதாரம்: பஸ்ஸார், தபரானி) என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நன்மையை செய்யவும் தீமைகளிலிருந்து விடுபடவும் பொறுமை மிக அவசியமானது.

பாலியல் நடத்தைகளை நெறிப்படுத்தல்

நெறிப்படுத்தப்படாத பாலியல் நடத்தைகள் மிக மோசான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதற்கு ஏராளமான உதாரணங்களை நாம் கூற முடியும். நோன்பு இச்சையை நெறிப்படுத்தக்கூடியதாகும். எனவேதான் நபி(ஸல்) அவர்கள் 'இளைஞர்களே! உங்களில் சக்தியுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள். இது பார்வையை தாழ்த்தும் மர்மஸ்தானத்தை பாதுகாக்கும். திருமணம் செய்ய முடியாதவர்கள் நோன்பு பிடியுங்கள். இது பெண்கள் மீதான இச்சையை குறைத்துவிடும்' என்றார்கள் (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

இறையருளை உணர்ந்து கொள்ளல்

மனிதன் அருள்களோடு வாழும்போது அதனை மறந்து விடுகிறான். இழப்பின் போதுதான் அருளின் சுவையை உணர்கிறான். நிழலின் அருமையை வெயிலில் புரிந்துகொள்கிறான். பசியும் தாகமும் ஏற்படும் போதுதான் வயிறு நிரம்புவதன், தாகம் தீர்வதன் அருமையை உணர்ந்து கொள்கிறான். அவன் மனம் நிறைந்தவனாக 'இறைவா உனக்கே அனைத்து புகழும்' என்று தெரிவிப்பான். இறைவனுக்கு நன்றியுள்ளவனாக தன்னை மாற்றிக்கொள்ள முயற்சிப்பான்.

'அல்லாஹ் எனக்கு மதீனாவின் பள்ளத்தாக்குகளை தங்கமாக மாற்றிக்காட்டினான்' அதற்கு நான், 'வேண்டாம் இறைவா!, ஒருநாள் பசியிலும் அடுத்தநாள் வயிறு நிரம்பியும் இருக்கவே நான் விரும்புகிறேன். பசி ஏற்பட்டால் உன்னிடம் மன்றாடி கேட்பேன், உன்னை ஞாபகப்படுத்துவேன். வயிறு நிரம்பினால் உன்னை புகழ்வேன் உனக்கு நன்றி செலுத்துவேன்' என்றார்கள். (ஆதாரம்: அஹ்மத், திர்மிதி)

அடுத்தவர்களின் பசியை உணர்ந்து கொள்ளல்

கடமையான நோன்பின் ஊடாக நிர்ப்பந்தமானதொரு பசி விதிக்கப்படுகின்றது. உணவும் பானங்களும் தாராளமாக இருக்கும் நிலையிலும், அதனை பயன்படுத்துவதற்கான ஆற்றலும் சக்தியும் தாராளமாக காணப்படும் போதும் இவற்றை தவிர்ந்து கொள்வது, இல்லாமையில் நிர்ப்பந்தமானதொரு சமத்துவத்தை தோற்றுவிக்கின்றது. கொடுப்பவர்களது உள்ளத்தில் வறுமையில் உழல்பவர்களின் பிரச்சினைகள் பற்றிய ஒரு உறுத்தலை உருவாக்குகிறது. இத்தகைய் உறுத்தல் ஒரு மாத காலம் தொடரும் போது அது அவனில் அன்பு, சமத்துவம் போன்ற பண்புகளை தோற்றுவிக்கிறது. இதுவே 'ரமழான் சமத்துவத்தின் மாதம்' (ஆதாரம்: இப்னு குஸைமா) என்று அழைக்கப்பட காரணமாகும். மேலும் நபி (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்தில் வீசுகின்ற காற்றை விட வேகமாக தர்மங்கள் செய்துள்ளார்கள் (ஆதாரம்: அஹ்மத், திர்மிதி, இப்னுமாஜா)

இறையச்சத்தை ஏற்படுத்தல்

மேலும் நோன்பு இறையச்சத்தை தரக்கூடியதாகும். இறைவன் பார்த்துக்கொண்டு இருக்கிறான் என்ற உணர்வின் காரணமாக உணவு, பானங்களை தவிர்க்கும் ஒருவன், இதனை ஒரு மாதகாலம் தொடர்கின்ற போது, ஏனைய மாதங்களில், வாழ்வின் அனைத்து விடயங்களிலும், இறையச்சம் ஏற்பட காரணமாய் அமைகின்றது. இதனை அல்லாஹ் 'முன்பிருந்த சமூகங்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் விதியாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நீங்கள் இறையச்சம் உள்ளவர்களாக மாறலாம்.

(ஆதாரம்: அல் குர்ஆன் 02:185)

எனவே நோன்பின் நோக்கமறிந்து இலக்குகள் பூரணமாகும் விதமாக நோன்பை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

அஷ் ஷெய்க்
யூ.கே. ரமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# தமிழ்ப் பத்திரிகைத் துறையில் வரலாறு கண்ட தினகரன்

THINAKARAN தினகரன்

தினகரன் வழமையான செய்தித் தாளாக மட்டுமன்றி ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு காலங்காலமாக சிறப்பான பங்களிப்பை செய்துவந்துள்ளது. தினகரன் ஆசிரியர் தே.செந்தில்வேலவர் உள்ளூர் மற்றும் உலகச் செய்திகளை மட்டுமன்றி இலக்கிய எழுத்துக்களையும் வரவேற்று செம்மைப்படுத்தித் தமிழ் கூறும் நல்லுலகிடம் சமர்ப்பித்து வருகிறார். இன்று அவருடைய தலைமையில் இந்நிகழ்வு நடப்பதும் பொருத்தமானதே என்று பேராசிரியர் சோ. சந்திரசேகரன் கூறினார்

(கொழும்புத் தமிழ்ச் சங்கசங்கரப்பிள்ளை மண்டபத்தில் (19. 03 .2022 அன்று)தினகரன் வாரமஞ்சரி ஏற்பாட்டில் அதன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் தலைமையில் இடம்பெற்ற தி. ஞானசேகரனின் யாவரும் கேளிர் நூல் வெளியீட்டு விழாவில் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்து தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் சோ.சந்திரசேகரன்.ஆற்றிய உரை)



தினகரன் வாரமஞ்சரியில் வெளிவந்த ஞானசேகரனின் பத்திஎழுத்துக்கள் இன்று கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபமேடையில் வெளியிடப்படுவது பெருமையைத் தருகின்றது.எண்பதாவது அகவையை எட்டியுள்ள மருத்துவரான ஞானசேகரன் தமிழ் இலக்கியத் துறையில் பத்தி எழுத்துக்கள்,ஞானம் மாதாந்த சஞ்சிகை, நாவல், சிறுகதை, பயணக் கட்டுரைகள் எனப் பல துறைகளில் பணியாற்றி வருபவர். அவருடைய பணிக்காகப் பல விருதுகளைப் பெற்றவர்.மருத்துவராக மனிதர்களுக்குச் சிகிச்சை வழங்கிய ஞானசேகரன்,அதில் திருப்திகாணாது, தமது எழுத்துக்களின் மூலம் சமூகத்துக்கு உகந்தசெய்திகளைக் கூறிவருகிறார். அவருடைய யாவரும் கேளிர் நூல் ஒரு தகவல் களஞ்சியம்; இலக்கிய வரலாற்று ஆவணம். நாவல் நூல்கள், தமிழ் நூல்கள் தமிழ் இலக்கியம் இலக்கியஆளுமைகள் இலக்கியக் கருத்தரங்குகள் எனப் பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் நூலில் அடங்கியுள்ளன.

1950கள் 1960களில் தினகரன் ஆசிரியர்களாக இருந்த க.கைலாசபதியும், எஸ்.தில்லைநாதனும் பின்னர் பல்கலைக்கழக பேராசிரியர்களானவர்கள். அவர்களிடம் பாடம் கேட்ட அனுபவம் எனக்கு உண்டு. தினகரனைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி நோக்கித் திசை திருப்பிய இவர்கள். மண் வாசனையுடன் கூடிய தேசிய இலக்கியம் இலங்கையில் மலர வளர்ச்சி பெறத் தினகரன் ஊடாக வழிசமைத்துக் கொடுத்தவர்கள் இவர்கள். தமிழில் பத்திரிகைகளை செம்மைப்படுத்தும் அவர்கள் ஆசிரியர்கள் என அழைக்கப்படுகின்றனர். பாடசாலைஆசிரியர்கள் மாணவர்கள் போன்றவர்களின் அறிவு, உளப்பாங்கு,திறன் என்பவற்றைச் செம்மைப்படுத்துபவர்கள். இவ்வகையில் இன்றைய தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் போன்ற பத்திரிகை ஆசிரியர்களும் ஆசிரியர்கள் போன்றவர்களே.பாடசாலை ஆசிரியர்களின் களம் மாணவர்களை வழி காட்டுவது மட்டுமே. பத்திரிகை ஆசிரியர்கள் பணியாற்றும் களவும் பரந்து விரிந்தது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். தொடர்ந்து முறையாகத் தினகரனை வாசிப்பவர்களின் உலக அறிவும் தமிழ் இலக்கிய அறிவும் பரந்து காணப்பட்டதை நான் அனுபவ ரீதியாகக் கண்டுள்ளேன். 21ஆம் நூற்றாண்டில் அறிவுச் சமூகத்தில் பாடசாலைகள் போன்ற நிறுவனங்கள் மட்டுமல்லாது சமூகத்தில் உள்ளஅனைத்து நிறுவனங்களும் கற்கும் தாபனங்களாக மாறவேண்டும் என்ற கருத்தை யுனெஸ்கோ முன்மொழிந்துள்ளது. கோயில்கள், அலுவலகங்கள் சமுதாய நிலையங்கள், நூல் நிலையங்கள் என இப்பட்டியல் நீண்டு செல்கின்றது. இவற்றில் பத்திரிகைகளும் ஏனைய ஊடக நிறுவனங்களும் அடங்கும். தினகரன் இத்தகைய அறிவுப் பணியை பலதசாப்தங்களாக செய்துவந்துள்ளது. இதற்கு, தற்போது வெளியிடப்படும் ஞானசேகரனின் யாவரும் கேளிர் நூலின் உள்ளடக்கம் ஒரு சான்றாக விளங்குகிறது. நமதுநோக்கில் இத்தகைய இலக்கிய நிகழ்வுகளுக்கு மற்றொரு முக்கியத்துவம் உண்டு. இத்தகைய நிகழ்வுகள் நாட்டில் தேசிய ஐக்கியத்தையும் சமூக இணக்கத்தையும் ஏற்படுத்தவல்லன. இனமதபேதமின்றி சகலரும் கலந்துகொள்ளும் வகையில் இலக்கிய நிகழ்வுகள் இன உறவுப் பாலத்தை அமைக்கின்றன. ஞானம் சஞ்சிகையின் இலக்கியப் போட்டியில் பல முஸ்லிம்,கிறிஸ்தவ எழுத்தாளர்கள் பரிசு பெற்றிருக்கிறார்கள்.



இன ஐக்கியத்தை வளர்ப்பதற்குப் பாடசாலைகளில் பல ஏற்பாடுகள் உண்டு.அதற்கும் அப்பால் தினகரன் ஏற்பாட்டில் நிகழும் இந்நூல் வெளியீடும் இத்தேசியப் பணிக்குப் பங்களிப்பை வழங்கியுள்ளது.இலக்கிய வரலாற்று ஆவணம் நாவல்கள் தமிழ் நூல்களின் தமிழ் இலக்கியம் ஆளுமைகள் இலக்கியக் கருத்தரங்கு என பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் நூலில் அடங்கி உள்ளன.

- கே.பொன்னுத்துரை







கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் 2021 ம் ஆண்டிற்கான கலைவிழா அண்மையில் ஆர்.ஐ.டி.அலஸ் மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதிகள் வரவேற்கப்படுவதையும் அத்துடன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.ஆர்.வி.லோஷனை பாடசாலையின் அதிபர் பிரசன்ன உடுமுகந்திரம் கௌரவிப்பதையும் பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றுச்சென்ற உப அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவதனையும் ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம்.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



வாழைச்சேனை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முகம்மது இஸ்மாயில் முகம்மது நவாஸ், ஸலாமி தேசமானி, பல்லின சமூகத்தில் இன நல்லிணக்கம் நூலின் ஆசிரியர், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கான தேசிய நல்லிணக்க பிரதிநிதி, வரையறுக்கப்பட்ட மக்கள் சகவாழ்வு சங்கங்கத்தின் ஸ்தாபகர்) நாடு முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



வாழைச்சேனை கோழிக்கடை விதியை சேர்ந்த முஹம்மது பாருக் முஹம்மது இம்ரான் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதாவனாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.





இலங்கை தமிழ் மாதர் சங்கத்தின் "சர்வதேச மகளிர் தினம்" வெள்ளிக்கிழமை மாலை சங்கத்தின்"கலாலய"மண்டபத்தில் தலைவி மலர் பொன்சேகா முன்னிலையில் சாந்தி பாலசுப்பிரமணியம் தலைமையில் நைடைபெற்றது. நான்கு முதன்மைப்பெண்கள் கௌரவிக்கப்பட்டனர். இலங்கை மூத்த பாரம்பரிய நடனக் கலைஞரும், நடன இயக்குனருமான தேசமான்ய வஜிரா சித்திரசேன, கஸ்தூரி செல்லராஜ், ரிஃப்பா முஸ்தப்பா, வசந்தா நல்லதம்பிஆகியோர் இலங்கை தமிழ் மாதர் சங்கத்தின் தலைவி மலர் பொன்சேகா, நிகழ்வின் தலைவி சாந்தி பாலசுப்பிரமணியம் பொதுச்செயலாளர் கௌரிசங்கர், கலாலய நடனக் கல்லூரி அதிபர் சரோஜினி கதர்காமர், பொருளாளர் ஸ்ரீ லயாயன், உப தலைவி யாழினி கூக், உப தலைவி சுபத்திரா கணேசன், கலாலயா இசை, நடனக்கல்லூரி அதிபர் நிர்மலாஜோன் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்கள் இணைந்து பொன்னாடை போர்த்தி, பூச்செண்டு கொடுத்து, சான்றிதழ் வழங்கி கௌரவித்தபோது பிடிக்கப்பட்ட படம். (படப்பிடிப்பு : எஸ். எம். சுரேந்திரன்)



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






# இனிநாம் நாமேதான்!

ஏறாவூர் தாஹிர்

நீ...
நீயேதான்!
நெருக்கமாய் இணைதலும்,
நெருஞ்சிமுள்ளாதலும்
நீயேதான்!
பாசமாய் இருத்தலும்,
பாகாய் இனித்தலும்
நேசப் பிணைப்பினில்
நெருப்பாய் எரிதலும் நீ...
நீயேதான்!
அன்பினைச் சொரிதலும்,
ஆணவம் புரிதலும்,
பண்பினில் தோய்தலும்,
பாதியாய் தேய்தலும்,
என்னையும், உன்னையும்
எம்மெனக் காணனும்,
எம்மெனும் வாழ்வினை
எண்ணா மறத்தலும் நீ...
நீயேதான்!

கரும்பு, தேன், பால் என,
கனிதரும் சுவையென,
கனவு, நனவினில்
காட்டலும், ஊட்டலும்,
இருப்பின் இறுக்கமாய்,
எறும்பின் நெருக்கமாய்
மாறி, மறைதலும்,
மறுகணம் தோன்றலும் நீ...
நீயேதான்!

அடிக்கடி சொல், செயல்
இடைக்கிடை மாற்றி நீ,
இதுவரை வாழ்ந்தவை
இடம்பெறா வாறெனில்
இனிநாம்
நாமேதான்



# மாறும் உலகில் மாறாதது பசி...

என்.நூர்,
தர்கா நகர்

மண்ணில் பிறந்து
மடியும் வரை
மாறும் உலகில்
மாறாதது பசி...

அன்னையின் அன்பில்
மலர்ந்தது முதலே
கதறித் துடிக்கும்
பசியால் குழந்தை...

ஆதியில் கிழங்குடன்
அணைந்த பசி
ஆடம்பரம் பெருகிட
விடாத பிணியாக...

பசிக்கு உணவென்பதை
மறந்த பாவிகள்
வீசியே வீணாக்கி
வில்லங்கம் புரிகின்றனர்...

ஒருவாய் கவளத்திற்கும்
தெருவோரம் காத்திருக்கும்
ஏழைகள் இங்கே
ஏணிப்படி ஏறுபவர்களாக...

அந்தோ பரிதாபம்
அட்டூழியங்களின் பெருக்கம்
பசியின் கொடுமையில்
பாலகர்களின் திண்டாட்டம்...

# குடும்ப கட்டமைப்பு

சிதைவை நோக்கி
பயணித்துக் கொண்டிருக்கும்
குடும்பக் கட்டமைப்பால்
எதனையும் தீர்மானம்
செய்யும் சக்தியாக
பொருளாதாரமே
முதன்மை பெறுவதாக

மனித மனங்களால்
தீர்வு காணப்பட
வேண்டியவற்றுக்கு
சட்டங்களுக்காக
நீதிமன்றங்களை
தேடும் அவலமான
நிலையாக

குடும்பமாக இருந்து
கதைக்க ஒதுக்கிக்
கொள்ள முடியாத
நேரங்களும்
ஓடிக்கொண்டிருக்கும்
வாழ்வின்
யதார்த்தமாகிப் போன
துரத்தல்களுமான
குடும்ப உறவுகளின்
அந்நியமாகிய நிலை

உணர்வுகளின்
சங்கமத்தால் இணைந்து
இருந்த குடும்ப உறவுகள்
நிறுவன மயப்பட்ட
நகர்வை நோக்கிய
திசையில் பாதையை
மாற்றிக் கொள்ளும்
நவீனம் தேடும் மனங்கள்

நட்சத்திரங்களால் நிரம்பிய
வானம் அழகை
வெளிப்படுத்துவது போல
உணர்வுகளில் ஒன்றாகி
இருக்கும் குடும்பங்களின்
வெளிப்பாடும் காட்டி நிற்கும்

அடிமை இல்லா
அனுசரித்துச் செல்லும்
வாழ்வை தேடிய புதிய
நடைமுறைகளில்
மீண்டும் குடும்பக்
கட்டுமானங்கள்
புதுமையை புகுத்தி
தன்னை பாதுகாத்துக்
கொள்ளுமா

அ. ஜெகன்
சுவிஸ்



# குருவிகளின் மகிழ்வு

கந்தளாய் முஸ்தபா சகாப்தீன்

எவருக்கும் இல்லாத சுதந்திரம்
இறைவன் எமக்குத் தந்தவரம்
வானமே எங்கள் எல்லை
மரக்கிளைகளே எங்கள் நிழற்குடைகள்
மரம்பொந்துகளும் கந்துகளும்
மனதுக்கினிய வீடுகள்
ஈனமில்லை எங்கள் மனதில்
பூக்களும் காய்களும் பழங்களும்
ஏற்றமாய் இறைவன் தந்துதவுகிறான்

வஞ்சகமற்ற எங்கள் வாழ்வு
வளமாகத்தான் இருக்கிறது
ஆட்டிப்படைக்க அரசனில்லை
பஞ்சம் பசி எங்களுக்குத் தெரியாது
எல்லாமே எங்களுக்கு இலவசம்
பூமிக்கு நாங்கள் செய்த
பூர்வீகப் பயன் எமைக் காக்கிறது

குருவிகள் என்னும் பெயரில்
குதூகலமான எங்கள்வாழ்வு
கொட்டிக்கிடக்கும் செல்வங்களை
கூடியாடி உண்டு மகிழ்கிறோம்
அழுகையை எமக்கிறைவன் தரவில்லை
அழகான குரலில் காலைமாலை
அன்புடன் கீச்சிட்டு மகிழ்கிறோம்
காற்றும் வெய்யிலும் மழையும் எங்கள்
சிறகுகளுக்கு உரமூட்டி மகிழ்விக்கின்றன
அறவழியில் குருவிகளாகவே வாழ்கிறோம்

# தினகரன்

அன்புடன் நதுநசி

விடிந்ததும் நான்
உன் முகம்
தான் பார்ப்பேன்

முடிந்தது என்ற
என் வாழ்வு
மலர்ந்த புதுமை

புதுமை செய்யும்
உன் முகம்
எந்தனுக்கு ஒளி

செந்தாமரை போல;
குளத்திடை நின்றும்
கதிர் பட மலரும்

தினமும் காலை
உன் சந்திப்பு
நாளும் முதல் போல

# தடம் மாறிய உள்ளங்கள்...

நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை

தடம் மாறிய உள்ளங்கள்
தம் தவறை உணர்வது
தாமதித்துத்தான்...

தங்கு தடையின்றிக் கிடைத்த
அன்பை விட...
தவறாய் கிடைத்த
அன்பால் வந்த வினை
தன்னைக் கொல்லுமே...

ஆயிரம் காரணங்கள் கூறி
அசிங்கங்களை அரங்கேற்றிவிடலாம்....
அழகு மங்கி
அங்கம் தொய்யும் நேரம்...
அரவணைத்த கரங்கள்
தூரப் போயிருக்கலாம்...

நீரோடையாய் போன வாழ்வு
நீண்டு போயிருக்கணுமே....
நின்று நிதானித்து
நீ போயிருந்தால்
நீண்ட பந்தம்
நீண்டு போயிருக்குமே...

சிக்கலின்றிய சிலரைத்தான்
காட்டமுடியுமா...
சில்லறை முடிவுகளால்
சிக்கல்களை சீராக்கிடலாமா...

பூரணத்துவம் இறை பண்பு...
அதை
உன் சரிபாதியாய் வாய்த்தவனி(ளி) டம்
எதிர்பார்ப்பதில் யாது நியாயம்...
அங்கங்கே குறைகள் இருக்கத்தான்
செய்யும்...

இந்த வாழ்வில்
இறுதித்தவணை
இயல்பாகவே உண்டு...
இன்பம் முற்றி
இனிமை காண்பது
இல்லற வாழ்வில்
இறுதிப்பாகத்தில் தான்...

ஆதலால்.....
இறுகப்பற்றிக் கொள்வோம்
இனணயவனி(ளி)ன்
இரு கரங்களையும்
இறுதிவரை..

ஏனெனில்....
தடம் மாறிய உள்ளங்கள்
தம் தவறை உணர்வது
தாமதித்துத் தான்...

# ஊடகவியலாளன்

ரதிதேவி, மானிப்பாய்

அவன் பேனாவை எப்பொழுதும்
அவன் சட்டைப் பையின் வலப்புறம்
இதயத்திற்கு அருகாமையில்
வைத்திருப்பான்

சன்னங்களின் சரமாரி மழையில்
அகப்பட்டபொழுது
அவன் பேனா கேடயமாய்த் தடுத்ததில்
இரண்டு வினாடிகள்
இன்னும் உயிர் வாழக் கிடைத்தது


பேனையின் மையும்
நாளத்தின் குருதியும் கலக்க
புகை மூடிய வானத்துள்ளே
சூரியனைத் தேடிய படி
திறந்து கிடந்தன
அவன் கண்கள்



# ஆண்டாலாக்கி விடுவாயா

என்.கே.வேணி, பாலங்கொடை

நெஞ்சினிலே நின்னையே
என் மணவாளன்
என்று முப்பொழுதும்
நினைந்து நினைந்து
தான் சூடிய
மலர்மாலையை
கண்ணுக்கு சூடி
மகிழ்ந்த ஆண்டாளைப்
போல் மாலை சூடி
மகிழ்கிறேன் கண்ணா
நீ குழல் ஊதும்
கண்ணனாய் வருவாயா?
வில்லேந்திய இராமனாய்
வருவாயா?
பாஞ்சாலிக்கு துயில்
கொடுத்த
வாசுதேவனாய்
வருவாயா?
பாஞ்சாலிக்கு துயில்
கொடுத்த
வாசுதேவனாய்
வருவாயா?
கீதையில் கண்ணனைப்
போல் காதலுக்கும்
உபதேசம் கூறி
என்னையும் சூடிக்கொடுத்த
நாச்சியார் போல்
ஆண்டாளாக்கி விடுவாயா
கண்ணா?



# நானாக ஆசைப்படும் நான்

தெளபீக் முஹம்மது நவீத்,
புல்மோட்டை

அநீதி தலைதூக்கி நீதி மரணித்த
காலமதில் நீதிக்காக மடிகின்றேன்......

சூட்சி வலைகள் நெய்து ஏப்பமிட
கனாக்காணும் கயவர்கள் இடைநடுவே
சிகரம் தொட செத்துப் பிழைக்கின்றேன்...

துணைவிக்கு மனையில் ஒத்தாசையாக
உதவுவதை அவமானமென நகைக்கும்
மானிடரை வெறுத்து நானாகி அவளுக்கு
சேவகனாகின்றேன்......

தாயென்றால் தகாத வார்த்தைகளை
அள்ளி வீசும் புத்திரர்கள் இடையில்
கனிவான மகனாகின்றேன்.....

பாடசாலையில் ஒழுக்கம் தவறி
பெற்றவர்களை தூற்றும் தீய
மாணாக்கர் குழாத்தில் சிறந்த மாணவனா
கின்றேன்.....

இயற்கையில் குளித்து அதையே சிதைக்
கும்
விசமிகள் நடுவே சிறந்த
இயற்கை காதலாகின்றேன்.....

பேருந்தில் நிறைய பயணிகளுக்கு
இடையூறு கொடுத்து தான் இன்புறும்
மனிதர் மத்தியில் நல்ல பயணியாய்
பண்ணிக்கின்றேன்.....

சிந்தைக்கு விரோதமாய் தயங்காமல்
தவறு செய்யும் மனிதம் அற்ற மானிடர்
மத்தியில் மனிதம் கொண்ட மனிதனாக
தனித்துவமான வாழ்கின்றேன்.....

# ஞாபகங்களுக்குள் நாம்...!

சி.எம். சங்கர் பண்டாரவளை



தணலை அணைக்கின்ற
திறன் இருந்தும்
பாத்திரத்தில் இடப்பட்டு
பற்றவைத்த அடுப்பில்
வைக்கப்பட்டதால்
ஆவியாக அழியும் நீர்போல்
ஆகிப்போனேன் உன்
அன்புக்குள் அகப்பட்டதால்...

ப்ரியமானவளவே
யார் எழுதிய காதல் கவிதைகளை
வாசித்தாலும் உன் ஞாபகம் வருகிறது...

தவிர்க்க முடியாமல்
தடைபடும் மின்சாரம் போல்தான்
நீ என் உறவை தவிர்த்திருப்பாய் தவிர
என்னை தண்டிக்கவென்று
துண்டித்திருக்கமாட்டாய் என
என் மனம் சொல்கிறது...

உனக்குத்தெரியுமா?
காதல் பூக்கள் மலர்வது மட்டும்தான்
அவை உதிர்வதில்லை...

உன்னோடு யார் இருந்தாலும்
உனக்குள் நானும்
என்னோடு யார் இருந்தாலும்
எனக்குள் நீயும்
ஞாபகங்களில்
இருந்து கொண்டே இருப்பாய்...!

# காதலிக்கோர் கடிதம்

பாண்டியூர் பொன். நவநீதன்

காதலி உனக்குள்
வீட்டறை(ச்) சிறையா?
வீட்டுக் காலர் உனை வைத்துப்
பூட்டுவது முறையா?

கவலைப் படாதே கண்மணியே!
என் பாட்டுவரும்
உன் வீட்டுப் பூட்டுடைத்த
என்னிடத்தே உன்னைக்
கூட்டிவரும்!

நீயங்கே யாரிடத்தும்
போராடத் தேவையில்லை!
நான் பாடியனுப்புவது
நாலடிச்சீரடி நீ
நலமுற என்னிடம்
வந்து சேரடி!

# மறதி

குப்பிளான் குமரன்



இயற்கையால்
வடிவமைக்கப்பட்டு
வழங்கப்பட்டுள்ளது மறதி
மனிதனுக்கு அருமருந்தாக
இயற்கையின் சக்தியை
கூறுவர் சிலர்
இறை சக்தி என்று
இறைவன் நிறைந்துள்ளான்
எங்கும் எதிலும்
இறை சக்தியால்
உருவாக்கப்பட்டது உலகில்
உள்ள அத்தனையும்

படைத்தான் இறைவன்
மறதியை மனிதனுக்கு
அவன் வாழ்வு
நிலைத்து நிற்பதற்காக
மறதியே இல்லாவிடில்
மறக்க முடியாது
துன்பங்களை
மறக்க முடியாத
துன்பங்களுடன் வாழ்பவன்
ஏங்கித் தவிப்பான் என்றும்
நோயாளியாய் வாழ்வான்
வாழ்வின் என்னாளும்

ஆயுள் முடிந்துவிடும்
அற்ப காலத்தில்
ஆசைப்பட முடியாது

வாழ்க்கையில்
சந்தோசம் பெறுவதற்கு
ஏனென்றால்
இயற்கை உருவாக்கி உள்ளது
மனித வாழ்வை இன்பங்களால்
மட்டுமல்ல துன்பங்களாலும் தான்
என்பதே உண்மை

மறுபக்கத்தில் மறதி என்பது
நோயாகவும் காணப்படுகிறது
சிலரிடம் அன்றாட வாழ்வில்
அது ஏற்படுத்துகிறது
பிரச்சினைகளை ஆனால்
மாற்றக்கூடியது அது
மருத்துவத்தாலும் பயிற்சியாலும்

நம்பலாம் இயற்கை வழங்கிய
மறதிதான் மனித வாழ்வை
அழகாக்குகிறது
துன்பங்களை மறக்கச் செய்து

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# மானிப்பாய் மருதடி விநாயகராலய இரதோற்சவம்

யாழ்ப்பாணத்தை தமிழரசர் ஆண்ட காலத்தில் சைவசமயத்தின் மகத்துவங்களை நிலைநாட்டினார். இக்காலத்தில் ஒரு தபசிரேஷ்டரானவர் தமிழரசர் பிற் காலத்திலும் பறங்கியர் யாழ்ப்பாணத்தைத் தம்வ யப்படுத்திய சொற்ப காலங்களுக்கு முன்னருமாய் மானிப்பாய் மருதடி விநாயகராலயத்தில் நிஷ்டை யில் இருந்து சமாதியாய் விட்டார். மேற்படி மகான் சமாதி அடைந்த காலத்தில் பறங்கியர் மருதடி விநாய கர் ஆலயத்தை இடித்துச் சவக்காலையாக்கி விட்டனர்.

இந்நாட்களில் மக்கள் மகான் சமாதியடைந்த இடமும் மூலஸ்தானத்திற்குப் கிழக்கில் இருப்பது மாகிய மருதமரத்தின் கீழ் கண்களுக்கு புலப்ப டாத நேரங்களிலும் பொங்கலிட்டு கற்பூரமெரித்து இவ்வாறாக பல இக்கட்டான நிலைகளைக் கடந்து வரும் காலகட்டத்தில் 40 வருடங்களின் பின்னர் பறங்கியர் அரசு ஒல்லாந்தர் கைக்கு மாறியது. இராக்காலங்களிலும் பறங்கியர் விநாயகரை வழி பட்டு வந்தார்கள். ஒல்லாந்தர் காலத்தில் பொங்கல் வணக்கங்கள் மருதடியில் விசேடமாகவும் வெளிபொ ருளாயும் நடந்து வந்தன. இக்காலத்தில் தொண்டை மண்டலத்தில் இருந்து வந்த தியாகராசுக் குருக்கள் நவாலி தூக்கிணி கோவிலடியில் தங்கினர். தூக்கிணி வைரவ கோவிலில் இருந்து ஒரு வருடமாக சிவபூசை வணக்கம் செய்து வரும் நாட்களில் அங்கு வேள்வி நடைபெற ஆயத்தமாகியது. பெரியவர் பெருந்தொ கையான ஆடுகள் வெட்டப்படுமென்று கேள்விப்பட் டார். உடனே அவ்விடத்தை வீட்டு மானி நகரிலுள்ள மருதஞ்சோலையை அடைந்தார்.

அங்கு எமது கொப்பாட்டன் சுவாமிநாத முதலி யாரின் உதவியை நாடி நிலம் பெற்று சிறு வீடு கட் டியிருந்தார். அந்த நாட்களில் இவ்விடத்தில் அனேக சனங்கள் பொங்கல் வணக்கஞ் செய்து வந்தமை கண்டு ஓர் விநாயகர் சிலை வைத்துப் பூசாக்கிரமங் கள் செய்து வந்தார். பின்னர் சுவாமிநாத முதலியா ரின் உதவியுடன் மருதமரத்தின் மேற்குத் திசையை நோக்கிக் கர்ப்பக் கிரகமும் அர்த்த மண்டபமும் கட்டி முடித்து எஞ்சிய பாகங்களை மரந்தடிகளால் உரு வாக்கிய பங்குனி மாசத்தில் மகோற்சவம் ஆரம்பஞ் செய்து சித்திரை முதலாம் திகதியில் ஆருஷம் ஆரம் பம் ஆகும் வேளையில் இரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடத்தி வந்தார். ஆலயம் உற்பத்தியான காலங்களில் ஒல்லாந்த அரசு முடிந்து ஆங்கிலேயர் காலம் உதயமானது.

கோயில் திருப்பணி வேலைகள் பல பெரியார் களால் செய்யப்பட்டது. இத்திருப்பணி வேலைகள் பெரியவர்கள் ஒவ்வோர் காரணம் பற்றிச் செய்வித் தார்கள். ஊதாரணமாக இரகுநாத முதலியார் சின் னத்தம்பி ஒருமுறை கொடிய விஷம் தீண்டப்பெற்று அவ்விஷம் முறிந்தால் விநாயகருக்கு இரதஞ் செய்து வைப்பதாகப் பிரார்த்தனை செய்ததாகவும் அதனால் அக்கொடிய விஷம் நீங்கி அவர் சுகம் பெற்றதாகவும் அறியக் கூடியதாக உள்ளது. சைவசமயத்தை நிலை நிற்கசெய்து ஆலயங்களில் ஒன்று இம் மருதடி ஆலயமே தற்பொழுது தர்மகத்தா சபையினர் ஆல யத்தை நிகர்வாகம் செய்கின்றனர்.

புது வருடம் ஆரம்பமாகும் நேரத்தில் விநாயகப்பெ ருமான் அலங்காரம் அமைக்கப் பெற்ற இரதத்தில் ஏறி வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சியை எல் லோரும் கண்டு இன்புறுகின்றனர். மருதடி இரதம் தனிச்சிறப்புக் கொண்டது. இவ்வமைப்புக் கொண்ட இரதம் திருவாலங்காட்டில் சிவானந்தத்தைப் பெற்று வாழ்ந்த பிரம்ம ஸ்ரீ சச்சிதானந்த ராஜயோகீஸ்வரர் சங்கர சுப்பைய சுவாமியால் நன்கு மதிக்கப்பெற்றது.

வருஷம் பிறந்த 2ம் நாள் தீர்த்தோற்சவம் நடை பெறுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மருதடியில் 22.03.2022 கொடியேற்றம் ஆரம்பமாகி வருஷப்பி றப்பன்று இரதோற்சவம் நடைபெறுகிறது.

**சுவாமிநாதன் தர்மசீலன் JP**

## இந்தியாவின் நல்லெண்ணத்துக்கு...

*(06ஆம் பக்கத் தொடர்)*

கொவிட் தொற்று இரு வருட காலமாக ஏற்படுத்திய பாதிப்பினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இது. எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கு இலங்கையில் பற்றாக்குறை நிலவு கின்றது.

இன்றைய வேளையிலும் இலங்கைக்குக் கைகொ டுக்க இந்தியா கொஞ்சமும் தயங்கவில்லை. சமீப காலமாக இந்தியா எமது நாட்டுக்கு வழங்கிய உத விகளை இங்கு விபரிக்க வேண்டியதில்லை. கடன் அடிப்படையிலான நிதியுதவிகளை இந்தியா வழங்கி யுள்ளது. எரிபொருட்களை வழங்கியுள்ளது. இவை தவிர மருந்துப் பொருட்களையும் இந்தியா வழங்க வுள்ளது.

இலங்கையில் கொவிட் தொற்று உச்சமடைந் திருந்த வேளையில் இந்தியா வழங்கிய உதவி யொன்றை நாம் மறந்து விட முடியாது. இலங் கைக்கு முதல் கட்டமாக கொவிட் தடுப்பூசிகளை வழங்கிய நாடு இந்தியா ஆகும். அதுவும் இந்தியா முதன் முதலில் தடுப்பூசிகளை அன்பளிப்பாக வழங் கிய நாடாகவும் இலங்கை திகழ்கின்றது. இப்பிராந்தி யத்தில் இந்தியா எந்த நாட்டுக்கு முன்னுரிமை வழங் குகின்றது என்பது இதன் மூலம் புலனாகின்றது. இலங்கை மீதான இந்தியாவின் விசேட கரிசனைக்கு இதை விட உதாரணம் அவசியமில்லை.

இவ்வாறான உதவிகள் இன்றைய சூழலில் இலங் கைக்கு மிகவும் அவசியமானவையாகும். அவற்றை நாம் புறக்கணிக்கலாகாது. இலங்கையின் பொருளா தார நிலைமை சீரடையும் வரை இந்திய உதவிகள் எமக்கு அவசியமாகின்றன. ஆனால் இந்தியாவின் இந்த மனிதாபிமான கரிசனையை அரசியல்வாதி கள் சிலர் தவறான கண்ணோட்டத்தில் நோக்குவதும், அபத்தமான பிரசாரங்களை மேற்கொள்வதும் வேத னைக்குரியவையாகும். இந்திய உதவிகளை துரும் பாக வைத்துக் கொண்டு, இனவாத நோக்குடன் விஷமப் பிரசாரம் மேற்கொள்வதில் அரசியல்வாதி கள் சிலர் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது.

அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுக்க வேண்டு மென்பதே இந்த அரசியல்வாதிகளின் நோக்கம் ஆகும். அரசியலுக்கான பிரதான ஆயுதம் இனவா தம் ஆகும். இந்திய உதவிகளுடன், தமிழர்களின் அர சியலை தொடர்புபடுத்தியதாக இனவாத நோக்கத்தில் அவர்கள் பிரசாரங்களை தற்போது முன்னெடுத்து வருகின்றனர். அதாவது வடக்கு, கிழக்கு தமிழ் அரசி யல் சக்திகளின் நோக்கத்தை நிறைவேற்றி வைக்கும் நோக்குடனேயே இந்தியா தற்போது இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருவதாக அந்த அரசியல்வா திகள் கூறுகின்றனர். எமது நாட்டுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுகின்ற வேளையில் உதவி புரிவ தற்கு முன்வருகின்ற அயல்தேசத்தின் நல்லெண் ணத்தைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் பிரசாரம் மேற்கொள்கின்ற அரசியல்வாதிகளின் செயல் உண் மையிலேயே அருவருக்கத்தக்கதாகும்.

நாட்டின் நெருக்கடியைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடுவதற்கு முற்படுகின்ற இவ்வாறான அர சியல்வாதிகளின் உள்நோக்கத்தை மக்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | STHRD/SB/-E41: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பீடத்தின் நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.04.27ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி, அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல் நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் STHRD/SB/-E41 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பீடத்திற்கான நுண்ணுயிரியல் ஆய்வுகூட உபகரணங்களுக்கான (''பொருட்கள்'') பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்திற்கான உபகரணங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக்குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 4ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

**விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்**

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 | நிரல் - 4 |
|---|---|---|---|
| **லொட் இலக்கங்கள்** | **லொட் விபரங்கள்** | **ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா)** | **வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)** |
| Lot 01 | Tabletop Micro Centrifuge | 1,000,000 | 2,500,000 |
| Lot 02 | Lab Freezer (-21°C) | 770,000 | 1,925,000 |
| Lot 03 | Lab refrigerator with glass doors (-5 to +5 °C) | 980,000 | 2,450,000 |
| Lot 04 | Microbiological shaking Incubator | 760,000 | 1,900,000 |
| Lot 05 | Laboratory vertical autoclave | 1,715,000 | 4,287,500 |
| Lot 06 | Vertical Laminar flow cabinet | 455,000 | 1,137,500 |
| Lot 07 | Shaking Water bath | 770,000 | 1,925,000 |
| Lot 08 | Digital Vertex machine | 364,000 | 910,000 |
| Lot 09 | Micropipettes | 450,000 | 1,125,000 |
| Lot 10 | Microbiology Laboratory Equipment | 1,200,000 | 3,000,000 |
| Lot 11 | Microbiology Laboratory Equipment | 1,110,000 | 2,775,000 |
| Lot 12 | Laboratory Digital Bench top pH Meter | 250,000 | 625,000 |
| Lot 13 | Laboratory Analytical balancer | 500,000 | 1,250,000 |
| Lot 14 | Digital Magnetic Stirrer with Hot Plate | 250,000 | 625,000 |
| Lot 15 | Laboratory oven | 630,000 | 1,575,000 |
| Lot 16 | Automated bacterial Colony Counter | 600,000 | 1,500,000 |
| Lot 17 | Low noise electric small oil free vacuum pump | 490,000 | 1,225,000 |
| Lot 18 | Ultrasonic cell disruptor | 1,200,000 | 3,000,000 |
| Lot 19 | Plate Reader (Microplate reader) | 1,315,000 | 3,287,500 |
| Lot 20 | Benchtop Manifold Lab Freeze Dryer | 2,000,000 | 5,000,000 |
| Lot 21 | Microbiology Laboratory glassware | 150,000 | 375,000 |
| Lot 22 | Microbiology Laboratory chemicals and consumables | 3,500,000 | 8,750,000 |
| Lot 23 | Biochemistry and Bioprocessing Technology Chemicals | 1,030,000 | 2,575,000 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட - ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   **சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
   **செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**

   **ZIP code: 70140**
   **தொலைபேசி: 045-2280081**
   **தொலைநகல்: 045-2280081**
   **மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk**

6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இலங்கை சப்ரகமுவ மாகாணத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும் என்பதுடன் இடம்பெறும் திகதி மற்றும் நேரம் என்பன 3 நாட்களுக்கு முன்னர் அறியத் தரப்படும்.
7. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் "STHRD/SB/-E41: தொழில்நுட்ப பீடத்திற்கான நுண்ணுயிரியல் ஆய்வுகூட உபகரணங்களுக்கான பெறுகை - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்" என முகவரியிடப்பட்டு, மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD Project, Sabaragamuwa University of Sri Lanka அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் 2022 மார்ச் 31ஆம் திகதி முதல் வார நாட்களில் பி.ப. 3.30 மணி வரை வழங்கப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
8. 2022.04.27ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   **பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
   **செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**திகதி: 2022-04-01.**

# ருஹுணு பல்கலைக்கழகம் – மாத்தறை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### ருஹுணு பல்கலைக்கழகத்தின் BRITAE செயற்றிட்டத்திற்கான கனணிகள் மற்றும் வலையமைப்பு துணைப்பாகங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல்

1. ருஹுணு பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பொருட்களை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ருஹுணு பல்கலைக்கழக துணைவேந்தரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

**விலைக்கோரல் இலக்கம்: RUH/AGRI/NCB/2022/02 (01-05 வரையான பொதிகளின் பின்வரும் பொருட்களை விவசாய பீடத்திற்கு விநியோகித்தல் வேண்டும்)**

| | பண்டங்கள்/விளக்கம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | விலைமனுப் பிணை முறி (ரூ) |
|---|---|---|---|---|
| **Package No. 01 – Computer Network, Power Cabling, Computers & Peripherals and UPS** | | | | |
| 1.1 | UTP Network Cabling | 01 (வேலை) | | 450.00 |
| 1.2 | Fiber Network Cabling | 01 (வேலை) | | 125.00 |
| 1.3 | Power Cabling | 01 (வேலை | | 930.00 |
| 1.4 | Server Rack | 01 | | 750.00 |
| 1.5 | 1.2KVA UPS | 01 | | 150.00 |
| 1.6 | 3KVA UPS | 01 | | 350.00 |
| 1.7 | Access Network Switch | 02 | ரூபா. 1,500.00 | 3,000.00 |
| 1.8 | Desktop Computer | 05 | | 7,500.00 |
| 1.9 | Notebook Computer | 02 | | 3,000.00 |
| 1.10 | Scanner | 01 | | 500.00 |
| 1.11 | Plotter | 01 | | 6,000.00 |
| 1.12 | 10KVA UPS | 01 | | 10,000.00 |
| **Package No. 02 – Teaching Aids and Video Conferencing Platform** | | | | |
| 2 .1 | Interactive Smart Panel | 01 | | 5,000.00 |
| 2 .2 | Multimedia Projector | 01 | | 1,500.00 |
| 2 .3 | Portable Multimedia Projector | 01 | | 1,000.00 |
| 2 .4 | Tablet Computers | 25 | ரூபா. 1,500.00 | 12,500.00 |
| 2 .5 | Display System | 01 | | 2,500.00 |
| 2 .6 | Audio / Camera System | 01 | | 4,000.00 |
| 2.7 | Podium with Sound System | 01 | | 5,000.00 |
| **Package No. 03 - Remote Sensing and IoT Data Collection and Processing Platform** | | | | |
| 3 .1 | UAV | 01 | | 8,000.00 |
| 3 .2 | Tablet Computer | 01 | | 750.00 |
| 3 .3 | GPS Receiver | 05 | | 7,500.00 |
| 3 .4 | Laser Range Finder | 01 | | 4,000.00 |
| 3 .5 | Data Collection Base System | 05 | ரூபா. 1,500.00 | 750.00 |
| 3 .6 | High-End Workstation | 01 | | 12,000.00 |
| 3 .7 | 3KVA UPS | 01 | | 350.00 |
| 3 .8 | Data Processing Software | 01 | | 4,000.00 |
| **Package No. 04 - Modeling and Simulation Platform** | | | | |
| 4 .1 | 3D Printer | 01 | | 5,000.00 |
| 4 .2 | Printer Filamet | 02 | ரூபா. 1,000.00 | 80.00 |
| 4 .3 | Virtual Reality Devices | 01 | | 2,000.00 |
| 4 .4 | Laser Engraver | 01 | | 1,500.00 |
| **Package No. 05 - Laboratory Equipment** | | | | |
| 5 .1 | Oscilloscope | 01 | | 1,250.00 |
| 5 .2 | Spectrophotometer | 01 | | 20,460.00 |
| 5 .3 | Handheld Infrared Thermometer | 02 | | 1,960.00 |
| 5 .4 | Handheld Digital Anemometer | 01 | | 800.00 |
| 5 .5 | Automatic Weather Station | 01 | | 12,000.00 |
| 5 .6 | Water Level Logger | 01 | ரூபா. 6,000.00 | 5,200.00 |
| 5.7 | Pocket Spectrometer | 01 | | 4,600.00 |
| 5 .8 | CHNS Analyzer | 01 | | 138,000.00 |
| 5.9 | Gas Sensor | 01 | | 750.00 |
| 5.10 | Geiger Counter | 01 | | 1,200.00 |
| 5.11 | Tensiometer | 01 | | 350.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையின் ஊடாகவும் ருஹுணு பல்கலைக்கழகத்தின் (மக்கள் வங்கி, கம்புறுபிட்டிய) 133100160000029 எனும் கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்த பின் ஸ்கேன் செய்யப்பட்ட வரவுத் துண்டை சமர்ப்பிப்பதன் பேரில் 2022-04-28ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வெல்லம்மடம, ருஹுணு பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
4. 2022-07-29ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. ஒவ்வொன்றும் உருப்படி அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. விலைமனுக்களுடன் இலங்கையில் செயற்படும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஏற்புடையதான விலைமனுக்கோரல் உருப்படிகளுக்கு உரித்தான (நிபந்தனையற்ற) விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. 2022-08-29ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் ''துணை வேந்தர், ருஹுணு பல்கலைக்கழகம்'' எனும் முகவரிக்கான விலைமனுப்பிணையாகவிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2022-04-29ஆம் திகதி மு.ப. 10.00 மணியாகும்.
9. 2022-04-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மெய்நிகரின் ஊடாக இடம்பெறும். (Zoom Meeting)
10. உரிய முறையில் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விவசாய பீடம், ருஹுணு பல்கலைக்கழகம், மாபலான, கம்புறுபிட்டிய** என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் மேற்படி முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாத்தறை, கம்புறுபிட்டிய, மாபலான, ருஹுணு பல்கலைக்கழக உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் மேற்படி முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
11. விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே மேலேயுள்ள முகவரியில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
12. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கம்புறுபிட்டிய, மாபலான, ருஹுணு பல்கலைக்கழகம், விவசாய பீடத்தின், சிரேஷ்ட உதவி நிதியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 041-2292200/2292380, மின்னஞ்சல்: **sab@agri.ruh.ac.lk**.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ருஹுணு பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**
**2022 ஏப்ரல் 03ஆம் திகதி.**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699- SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு** | STHRD/SB/E39: இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்திற்கு மருந்தியல் ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.04.27 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் பி.ப. 1.30 மணிக்கு |

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது நிதியமொன்றை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 145 மில்லியன் அ.ஐ.டொ. இற்கு சமமான நிதியமொன்றை கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக (STRHD செயற்றிட்டம்) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலை அமுல்நடாத்துவதற்கான ஆகுசெலவிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிதியத்தின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலேயுள்ள ஒப்பந்தத்திற்காக செலவிட உத்தேசித்துள்ளது. விலைமனுக்கோரலானது தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்களின் பங்கு பெறலாம்.
2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது (பண்டங்கள்) என அழைக்கப்படும் தொழில்நுட்பவியல் பீடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களை மருந்தியலின் பெறுகைக்காக ("கொள்வனவுக்காரர்" தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து **STHRD /SB-E39 -** இற்காக இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் சார்பாக பல்கலைக்கழக பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது உடன்படிக்கையில் கையொப்பமிடும் திகதியிலிருந்து 12 வாரங்களாகும்.
3. விலைமனுதாரரானவர் இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெறுவதற்கு பின்வரும் முக்கிய தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் பிரதான வழங்குநராக சித்திகரமாக ஆகக்குறைந்தது இரு ஒப்பந்தங்களை பூர்த்தி செய்திருந்ததுடன் ஒவ்வொன்றின் பெறுமதியானது பின்வரும் அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ளவாறு தன்மை மற்றும் சிக்கல்தன்மையுடன் 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு வழங்கலின் நோக்கம் இருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொண்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட பின்வரும் அட்டவணையின் 4 ஆம் நிரலின் ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வாகவிருத்தல்.

**இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெறுவதற்கான முக்கிய தகைமைகள்:**

| Column - 1 | Column – 2 | Column – 3 | Column- 4 |
|---|---|---|---|
| Lot numbers | Lot Description | Value of each contract (LKR) | Value of average annual turnover (LKR) |
| Lot 01 | Ultrasonic Bath | 480,000 | 1,200,000 |
| Lot 02 | Mini agarose gel electrophoresis unit | 300,000 | 750,000 |
| Lot 03 | Micropipette | 300,000 | 750,000 |
| Lot 04 | Laboratory Analytical Balancer | 500,000 | 1,250,000 |
| Lot 05 | Laboratory Digital Bench top pH Meter | 250,000 | 625,000 |
| Lot 06 | Digital Magnetic Stirrer with Hot Plate | 250,000 | 625,000 |
| Lot 07 | Digital Vertex Machine | 150,000 | 375,000 |
| Lot 08 | Tissue Culture Racks | 1,000,000 | 2,500,000 |
| Lot 09 | Laboratory Vertical Autoclave | 450,000 | 1,125,000 |
| Lot 10 | Hot Air Laboratory Oven | 250,000 | 625,000 |
| Lot 11 | Microwave Oven | 40,000 | 100,000 |
| Lot 12 | Refrigerator Volume: 250 L | 500,000 | 1,250,000 |
| Lot 13 | Rotary shaker | 250,000 | 625,000 |
| Lot 14 | Rotary evaporator with chiller and vacuum pump | 1,200,000 | 3,000,000 |
| Lot 15 | Heating mantle with magnetic stirrer | 125,000 | 312,500 |
| Lot 16 | C18 HPLC column | 100,000 | 250,000 |
| Lot 17 | Binocular compound Light Microscope | 350,000 | 875,000 |
| Lot 18 | Air conditioner | 400,000 | 1,000,000 |
| Lot 19 | Tissue Culture Laboratory Glassware and Consumables | 1,200,000 | 3,000,000 |
| Lot 20 | Biotechnology Laboratory Chemical and consumables – (I) | 3,800,000 | 9,500,000 |
| Lot 21 | Biotechnology Laboratory Chemicals and consumables – (II) | 2,500,000 | 6,250,000 |
| Lot 22 | Tissue Culture Laboratory Chemicals and consumables | 3,800,000 | 9,500,000 |
| Lot 23 | Tissue Culture Laboratory Glassware and consumables | 2,000.00 | 5,000,000 |

4. பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரலானது ADB இன் பண்டங்களின் பெறுகை தனிக்கட்ட-ஒரு உறை நடைமுறையில் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கேரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு அனைத்து விலைமனுதாரர்களும் தகுதியுள்ள நாடுகளிலிருந்து பங்கு பெறலாம்.
5. மேலதிக தகவலைப் பெறவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும் விலைமனுதாரர்கள் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**சிரேஷ்ட பெறுகை அலுவலர்**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்**
**தொழில்நுட்பவியல் பீடம்**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**
**பெலிஹுல்ஓய**
**இலங்கை. ZIP code: 70140**
**தொலைபேசி: 045-2280081**
**மின்னஞ்சல்: sposb-strhd@mohe.gov.lk**

6. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் சபை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறவுள்ளதுடன் திகதி மற்றும் நேரம் ஆகியன 3 நாட்களுக்கு முன்னராக அறிவிக்கப்படும்.
7. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலேயுள்ள முகவரிக்கு **"STHRD/SB-E39 – Procurement of Pharmacology Laboratory Equipment of the Faculty of Technology> Sabaragamuwa University of Sri Lanka"** இற்காக விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேவையென விண்ணப்பமொன்றை அனுப்பிய பின்னர், மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 இலங்கை ரூபாவை (ஐந்தாயிரம் இலங்கை ரூபாவை) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவொன்றை பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் STHRD செயற்றிட்டம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியிலுள்ள 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (அனைத்து லொட்டுக்களுக்கும் ஒரு ஆவணம்) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணங்கள் 2022 மார்ச் 31 ஆம் திகதியிலிருந்து வார நாட்களில் பி.ப. 3 மணி வரையும் வழங்கப்படும். இழப்பு அல்லது தாமதமான விநியோகத்திற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
8. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையொன்றுடன் 2022.04.27 ஆம் திகதியன்று பி.ப. 1.30 இற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உங்கள் விலைமனுக்களை அனுப்பி வையுங்கள்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**STHRD செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென அனுப்பப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதியென'' அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட உறைகளில் சேர்க்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவையிரண்டும் இன்னொரு தனியுறையொன்றில் சேர்க்கப்பட்டு உரித்தான ஒப்பந்த ID ஐ உறையின் இடது பக்க மேல் மூலையில் அடையாளமிடப்படல் வேண்டும்.

9. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரத்தின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் சமுகத்தில் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய,**
**இலங்கை.**

**ZIP code: 70140** திகதி: 01.04.2022

---

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK
Funded by The European Union

# பெறுகை அறிவித்தல்

**சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியிடப்பட்டது**
**கடன் இல. 5873 LK செயற்றிட்ட அடையாள இல. P156019**

**ஒரு வருட காலத்திற்கு விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் முன்னோடித் திட்டத்திற்கு விவசாயிகள் நிறுவனத்தை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்காக சேவை வழங்குநர்களை வாடகைக்கமர்த்துதல்**
**பெறுகை இல. LK-MOA- PMU-277937-NC-RFB**

மேற்குறிப்பிடப்பட்ட பெறுகையின் முடிவுறுத்தல் காலத்தை 2022-04-04ஆம் திகதி முதல் 2022-04-12ஆம் திகதி வரை நீடிப்பதற்கு செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் தீர்மானித்துள்ளார். 2022-04-12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். பத்திரிகை விளம்பரத்திலுள்ள ஏனைய தகவல்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**கமத்தொழில் அமைச்சு,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## களனிப் பல்கலைக்கழகம்

1. களனிப் பல்கலைக்கழகத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் 39.5 இல. ரூபா (வரிகள் மற்றும் சில்லறைச் செலவுகள் இன்றி) மதிப்பீட்டுச் செலவு மற்றும் UK/GA/GA3/2021/43 எனும் ஒப்பந்த இலக்கத்தின் கீழ் களனி, கண்டி வீதி, களனி பல்கலைக்கழகத்தில் தவறுதலாக வெட்டப்பட்டவற்றை சீர்செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
   இந்த வேலையின் முடிவுறுத்தல் காலம் 180 நாட்களாகும் என்பதுடன் களனி, கண்டி வீதி, களனி பல்கலைக்கழக வளவில் தவறுதலாக வெட்டப்பட்டவற்றை சீர்செய்வதற்காக அகழ்தல், மண்ணை இறுக்குதல் (Soil Nailing), வெடி வைத்தல், உருக்கு வேலி, சுவர் இடிபாடுகள், வடிகால் நிர்மாண வேலைகள் மற்றும் அதனோடிணைந்த வேலைகள் இதில் உள்ளடங்குகின்றன.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் இடம்பெறும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 2022-04-04ஆம் திகதி முதல் 2022-04-27ஆம் திகதி 09.00 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரையான காலத்தில் களனி, தலுகம, களனிப் பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர்/ பொது நிர்வாகம் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் தகைமைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - தற்சமயம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) (ICTAD யின் வெற்றி) கட்டிடம் மற்றும் சிவில் பொறியியலில் (C-3) விசேடத்துவத்துடன் ஒரு ஒப்பந்தக்காரராக பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிடப்பட்டவற்றுடன் மண்சரிவு தாக்கத்தைக் குறைத்தலில் முன் அனுபவம் அல்லது கடந்த 5 வருட காலத்தினுள் சரிவுகளை நிலைப்படுத்தல் மற்றும் மண்ணை இறுக்குதல் என்பவற்றின் கீழ் (SP-2) தரப் பதிவு மற்றும் விலைமனுக்கள் மதிப்பிடும் காலத்தில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன:
   - ➢ கடந்த 5 வருடங்களில் சராசரி வருடாந்த அளவாக ஆகக்குறைந்தது 119 மில்லியன் இலங்கை ரூபாவிற்கான நிர்மாண வேலைகளைச் செய்திருத்தல்.
   - ➢ கடந்த 5 வருடங்களில் இதற்கு நிகரான மற்றும் சிக்கல் நிறைந்த ஆகக்குறைந்தது ஒரு ஒப்பந்தத்தில் நிர்மாண அனுபவம் மற்றும் அது ஆகக்குறைந்தது 70% முடிவுறுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
   - ➢ ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளைத் தவிர்த்து ஆகக்குறைந்த திரவச் சொத்து மற்றும் / அல்லது கடன் வசதிகள் 19.75 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
   - ➢ அத்தியாவசிய உபகரணங்கள் மற்றும் பணியாளர்களை சரியான நேரத்தில் கையகப்படுத்துவதற்கான முன்மொழிவு
   - ➢ சாதகமான நிகர மதிப்பு மற்றும் வேலை செய்யும் விலைக்கோரல் திறன் இருத்தல் வேண்டும்.
6. 2022-04-19ஆம் திகதி 1000 மணித்தியாலத்தில் வேலைத் தள அமைவிடத்தில் வேலைத் தள விஜயம் இடம்பெறும்.
7. 2022-04-19ஆம் திகதி 1100 மணித்தியாலத்தில் களனி பல்கலைக்கழகத்தில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். விலைமனுதாரர்கள் 2022-04-21ஆம் திகதி 1400 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் எழுத்து மூலமாக அவர்களின் விசாரணைகள் மற்றும் தெளிவுபடுத்தல்களை தொழில் வழங்குநருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைகோருவதற்கு முன் மீளளிக்கப்படாத 7,500.00 ரூபா கட்டணத்தை வார இறுதி நாட்கள் தவிர்ந்த ஏனைய வேலை நாட்களில் களனிப் பல்கலைக்கழகத்தின் நிதிப் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி 2022-04-04ஆம் திகதி முதல் 2022-04-27ஆம் திகதி வரையில் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரையான காலத்தில் களனி, கண்டி வீதி, களனிப் பல்கலைக்கழகம், பொது நிர்வாகப் பிரிவு, உதவிப் பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
   மேலும், PAC 3 படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனி பதிவாளருடன் www.drc.lk மெய்நிகரில் (online) பதிவு செய்யவும். பதிவு செயற்பாடுகளானது web:eroc.drc.gov.lk. ஊடாக மெய்நிகர் முறையாக மாற்றப்பட்டுள்ளது.
9. நகல் பிரதிகளுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை தலைவர், பெறுகைக் குழு, களனிப் பல்கலைக்கழகம், களனி என முகவரியிட்டு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரமான 2022-04-28ஆம் திகதி 1430 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் களனி பல்கலைக்கழகம், பிரதான பாதுகாப்பு அதிகாரியின் அலுவலகத்திற்கு அருகிலுள்ள பொது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட நேரத்தின் பின் உடன் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுவர்.
10. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் (2022-07-28ஆம் திகதி வரை)
11. சகல விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தில் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புகழ்பெற்ற வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 790,000.00 ரூபாவுக்கான பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்கு 2 022-08-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
12. எந்தவொரு விலைமனுவையும் அல்லது சகல விலைமனுக்களையும் காரணம் காட்டாமல் ஏற்றுக்கொள்ளும் உரிமையை களனி பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதுடன் அவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
13. விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பாக ஏற்படும் எந்தவொரு கிரயம் மற்றும் செலவினத்திற்கு களனி பல்கலைக்கழகம் பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி.**
2022-04-03.

---

## ஹட்டன் தொண்டமான்...

**(09ஆம் பக்கத் தொடர்)**

எனவே, நுவரெலியா மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்களோடு தொடர்பை ஏற்படுத்தியிருக்கின்றோம். பாடசாலைகளில் நடைபெறும் பாடசாலை அபிவிருத்தி சங்க கூட்டத்தின்போதும் பெருந்தோட்ட பகுதிகளில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் கலந்துரையாடல்களின்போதும் நாங்கள் அங்கு சென்று பாடசாலை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் நலன் விரும்பிகளுக்கும் இது தொடர்பாக பூரண விளக்கமளிக்க இருக்கின்றோம். அவ்வாறு எமது மக்களுக்கு பூரண விளக்கம் இது தொடர்பாக கிடைக்கும்போது அவர்களின் பிள்ளைகளுக்கு சரியாக வழிகாட்டுவார்கள்.

பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்கள்ளும் தான் ஒரு சுயதொழிலை கற்று தன்னைத் தானே வளர்த்துக்கொள்ள முயற்சி செய்வர். வேறு தொழில்களை நாடி தலைநகருக்கு படையெடுப்பதை நிறுத்தி விட்டு ஒரு தொழிலை கற்று அதில் தேர்ச்சி பெறமுயற்சி செய்வார்கள். அதற்கான வழி வகைகளை செய்ய தொடர்ந்து முயற்சித்து வருகின்றோம்.

மேலும் 6 மாதத்தில் அல்லது 1 வருடத்தில் பாட நெறிகளை முடித்து சான்றிதழை பெறுபவர்கள் இங்கேயே வேறு பாடநெறிகளை தொடர்ந்தும் பயில அனுமதி உள்ளது. இதன் மூலம் வெவ்வேறான தொழிற்பயிற்சிகளை பெறும் அனுபவம் இவர்களுக்கு கிடைக்கின்றது. எனவே எமது பிரதேசத்தில் இவ்வாறு இலவசமாக பல சலுகைகளையும் கற்கை நெறிகளையும் வழங்கும் ஒரு அரசாங்க தொழிற்பயிற்சி நிறுவனத்தை எம்மவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**இந்நிலையம் தூரநோக்கு சிந்தனையற்று இருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது. இதைப் பற்றி என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

ஹோட்டல்களிலும், புடவைக் கடைகளிலும், வேறு இடங்களிலும் தொழில் புரிகின்றனர். இந்நிலை மாறவேண்டும். தான் கற்று பயிற்சி பெற்ற துறையில் தன்னை வளர்த்துக்கொண்டு பிரகாசிக்க வேண்டும். மிக நீண்டகாலம் ஒரு துறையில் நன்கு கற்று அதில் பயிற்சியும் பெற்று என்ன பலன் இருக்கின்றது.

எனவே இளைஞர் யுவதிகளே நன்கு சிந்தியுங்கள். நீங்கள் பயிற்சிபெற்ற துறையில் நீங்களே உங்களை நன்கு வளர்த்துக்கொள்ளுங்கள். உங்களின் நிரந்தர வருமானத்திற்கு வழிவகைகளை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். இங்கு சிறப்பாக பயிற்சியை பெற்று எவருக்கும் அடிபணியாது சொந்தமாக ஒரு தொழிலை ஆரம்பித்து வருமானம் ஈட்டலாம்.

இங்கு பயிற்சி பெற்றவர்கள் மாதாந்தம் ஒரு இலட்சம் வரை வருமானம் பெறுகின்றனர். எனவே இங்கு கல்வி கற்றவர்கள் நிச்சயமாக வாழ்க்கையில் பிரகாசிக்கலாம். அதற்கான சிறந்த வழிகாட்டல்களை இந்நிறுவனம் வழங்குகின்றது. தற்போது 48 பிரஜா சக்தி நிலையங்கள் காணப்படுகின்றன. தற்போது அதில் 44 இயங்குகின்றன. பிரஜா சக்தி நிறுவனத்திற்கும் எங்களுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் உள்ளது. அது அமைச்சினால் மாணவர்களுக்கு கடன் உதவி மற்றும் உபகரணங்கள் வழங்குவது தொடர்பான ஒப்பந்தம். மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் முறையாக பயன்படுத்தப்படுகின்றதா இல்லையா என்பது பற்றி 3 மாதத்திற்கு ஒருமுறை நாங்கள் சென்று அவதானிக்க இருக்கின்றோம். உபகரணங்கள் பயன்படுத்தப்படவில்லை என்றால் ஒப்பந்தத்தின்படி அதனை மீள ஒப்படைக்க வேண்டும். சட்டத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தும்போது பல மாற்றங்களை உருவாக்க முடியும்.

நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து கைத்தொழில் கிராமங்கள் ஹங்குராங்கெத்த, நுவரெலியா, மஸ்கெலியா, வலப்பனை, கொத்மலை ஆகிய பகுதிகளில் அமைக்கப்படவுள்ளன. அதில் இளைஞர் யுவதிகள் சுயதொழில் முயற்சியாளர்களாக தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த முடியும். அவ்வாறான வாய்ப்பு நிறைவு செய்யப்படும்போது தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் இக்கைத்தொழில் கிராமங்களில் சுயதொழில் முயற்சியாளர்களாக தங்களை அடையாளப்படுத்தி கொள்ள முடியும்.

## Best Web.lk இணையத்தளத்துக்கு வெங்கல விருது



சுமார் 50 ஆண்டுகளாக இலங்கையின் நாமத்தை புதிய பல உற்பத்திகள் ஊடாக இறப்பர் மற்றும் அதுசார்ந்த உற்பத்திகள் மூலம் உலக அரங்கில் நிலைநிறுத்திய இலாஸ்டோ குழுமத்துக்கு சொந்தமான டெக்ஸ்ரிப் நிறுவனம், முன்னணி டிஜிட்டல் தொழில்நுட்ப விருது வழங்கும் Best Web.lk விருதுவிழாவில் இணையத்தளத்துக்குரிய வெங்கலப் பதக்க விருதை வென்றுள்ளது.

ஆக்கத்திறன், இலகுவான பயன்பாடு மற்றும் நம்பகமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இலாஸ்டோ இணையத் தளமானது வாடிக்கையாளர்களின் தொடர்ச்சியான கவனத்துக்கும் பயன்பாட்டுக்கும் உட்பட்டுள்ளமையே இவ்விருதை வெல்வதற்கான பிரதான காரணமாகும். வாடிக்கையாளர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக தகவல்களை வழங்குதல், இணைய வழி சொப்பிங் அனுபவத்தை வழங்குதல் மற்றும் நெருக்கமான உறவைப் பேணுதல் எமது பிரதான நோக்கங்களாகும். மேம்பட்ட தரம் மற்றும் ஆக்கத்திறனுடன் கூடிய எமது இணையத்தளத்தின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையுடனும் இலகுவாகவும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள காரணத்தினால் வாடிக்கையாளர்கள் தொடர்ச்சியாக அதனுடன் இணைப்பில் இருந்து வருகிறார்கள். மேலும் இவ்வெற்றிக்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உழைக்கும் எமது பணியாளர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்வதாக இலாஸ்டோ குழுமத்தின் அதிபரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான மங்கள குணசேகர தெரிவித்தார்.

Textrip நிறுவனம் உலகின் நூற்றுக்கும் மேற்பட்ட முன்னணி விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி வர்த்தக நாமங்களுக்கு சேவைகளை வழங்கி ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்றது.

Textrip நிறுவனத்தின் பிரதான உற்பத்தியாக விளங்கும் TEXSTRETCH Progressive Exercise Resistance Bands உற்பத்தியை, மிகவும் முக்கியத்துவமிக்க சமகாலத் தேவையாக மாறியுள்ள மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துவதற்கு காத்திரமான பெறுபேற்றை அடையக்கூடிய உற்பத்தியாக முழு உலகமே தற்பொழுது அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



மங்கையர் முற்றம்

# மற்றவர்களுடன் உங்களை ஒப்பிடாதீர்கள்

நம்மில் பலர் நமது நிறைகளை ரசிக்காமல், குறைகளை மட்டுமே கவனிக்கிறோம். அதை மற்றவர்களுடன் ஒப்பிட்டு 'அவர்களைப்போல தோற்றம், அழகு, உடல் அமைப்பு இல்லையே' என யோசித்து மன அழுத்தம் கொள்கிறோம். இதனால் நம்மை அறியாமலே நமக்குள் தாழ்வு மனப்பான்மை உருவாகிறது.

பல நேரங்களில் பிறர் நம்மை நேசிக்கவில்லையே என்று கவலை கொள்கிறோம். பிறர் உங்களை நேசிக்க வேண்டுமெனில், முதலில் உங்களை நீங்கள் நேசிக்க வேண்டும். மாசு மருவற்ற முகம், கட்டுக்கோப்பான உடலமைப்பு, அளவான உயரம் மட்டும் தான் அழகு என்று எண்ணுவதை விட்டுவிடுங்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே உங்களை விரும்புங்கள்.

'எனக்கு அழகு இல்லை, உடல் எடை அதிகமாக உள்ளது, முகத்தில் பருக்கள் உள்ளது, உயரம் குறைவாக இருக்கிறேன்' என எதிர்மறையாக பேசுவதை நிறுத்துங்கள். காலையில் எழுந்தவுடன், கண்ணாடி முன்பு நின்று 'நான் அழகாக இருக்கிறேன், என் தோற்றம் அழகாக உள்ளது' என நேர்மறையாக பேசுங்கள். முகத்தில் புன்னகையுடன் சில நிமிடங்கள் கண்ணாடியைப் பார்த்து எந்தவித எதிர்மறை எண்ணங்களும் இல்லாமல், உங்களை நீங்களே பாராட்டுங்கள், ரசியுங்கள். உங்கள் காதலரோடு, கணவரோடு எப்படி அன்பாக பேசுவீர்களோ, அதேபோல் உங்களிடம் அன்பாக இருங்கள்.



நிறத்திற்கும், அழகிற்கும் சம்பந்தமில்லை என்பதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். நம்மை அடுத்தவர்களுடன் ஒப்பிடுகையில் தாழ்வு மனப்பான்மை அதிகமாகும். இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான அழகுதான். உங்களுக்கு இருக்கும் கண், மூக்கு, காது, நிறம், உடலமைப்பு போல் இந்த உலகில் வேறு யாருக்கும் இல்லை. அதனால் உங்களை மற்றவர்களுடன் ஒப்பிடாதீர்கள். உங்களுடைய மதிப்பு உங்களின் அழகில் இல்லை, உங்கள் திறமையில்தான் உள்ளது. மற்றவர்களை விட நீங்கள் தனித்துவமாகவும், அழகாகவும் இருக்கிறீர்கள் என்பதை ஆழமாக நம்புங்கள்.

உங்கள் தோற்றத்தைப் பற்றி எதிர்மறையான கருத்துக்களை மற்றவர்கள் கூறினால், அதை காது கொடுத்து கேட்காதீர்கள். மற்றவர்கள் கூறுவதை தடுக்கும் சக்தி நம் கையில் இல்லை. ஆனால் நாம் அந்த கருத்தை எப்படி மூளைக்குள் எடுத்துக்கொள்கிறோம் மற்றும் உணர்கிறோம் என்பது நம் கையில் உள்ளது. மற்றவர்கள் கூறும் கருத்திற்கு, சவாலாக இருக்கும் நேர்மறை கருத்தை மனதில் நிறுத்துங்கள்.

உதாரணமாக, ஒருவர் உங்களது ஆடையைப் பற்றி குறையாக பேசினால், அதை யோசித்து தாழ்வு மனப்பான்மை கொள்ளாமல், 'நான் இந்த ஆடையில் மிகவும் அழகாக இருக்கிறேன் அல்லது அவர்கள் என்ன பேசுகிறோம் என்று யோசிக்காமல் பேசுகிறார்கள்' என்று எதிர்மறையாக வரும் கருத்துக்களையும்கூட நேர்மறையாக மாற்றுங்கள்.

ஆரோக்கியமாகவும், தன்னம்பிக்கையோடும் இருக்கும்போது மற்றவர் கண்களுக்கு இயல்பாகவே நீங்கள் அழகாகத் தெரிவீர்கள்.


# கடுகு எண்ணெய்



சிலர் முகத்தோடு சேர்த்து கை கால்கள் அழகாக இருக்க வேண்டுமென்றால் மெனிக்யூர் பெடிக்யூர் செய்து கொள்வார்கள். ஆனால் எல்லோராலும் அழகு சிகிச்சை நிலையங்களுக்கு செல்ல முடியாது. காசு இருப்பவர்களுக்கு மட்டும் தான் அழகு சொந்தம் கிடையாது. காசு இல்லாதவர்கள் வீட்டில் உள்ள பொருட்களை பயன்படுத்தினால் கூட அழகாக மாறலாம்.

ஒரு சிறிய பாத்திரத்தில் கற்றாலை ஜெல் – மே.கரண்டி, கடுகு எண்ணெய் – 1 மே.கரண்டி, லெமன் ஜுஸ் – 1/2 மே.கரண்டி, இந்த மூன்று பொருட்களையும் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும். இதைத் தான் நம்முடைய உடம்பில் பொடிலோஷனாக அப்ளை செய்து கொள்ள வேண்டும்.

- கருத்திட்டத்தை பரிந்துரைப்பதற்காக தேவையான அனைத்தும் அரசாங்கம் அனுமதியுடன் கமத்தொழில் அமைச்சு மற்றும் கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் ஆதரவுடன் மற்றும் இணைப்பின் கீழ் முதலீட்டாளர்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.
- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் இதற்காக வரவேற்கப்படுகிறார்கள்.

**ஆர்வமுள்ள முதலீட்டாளர்களிடமிருந்து பின்வரும் செயல்பாடுகளுக்காக பரிந்துரைகள் கோரப்படும்.**

- பாரியளவிலான பாற்பண்ணைக்காக முதலீடு செய்தல்.
- பாற்பசுக்களின் உணவுக்காக பாரியளவில் சோளம், விலங்கு உணவு பயிரிடுவதற்காக முதலீடு செய்தல்.

இதற்கான பரிந்துரை, கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சில் பெற்றுக்கொள்ளல் அல்லது அமைச்சின் இணையத்தளத்தில் (https://www.livestock.gov.lk) பதிவிறக்கம் செய்து சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவத்துடன் 2022 ஏப்ரல் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்காக : டாக்டர்.எம்.ஐ.ஜி.ஜயதிலக்க**
**கையடக்க தொலைபேசி : 071-4496520**
**தொலைபேசி : 011-2883905**






2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | | 07 | 08 | 09 |
| 10 | 11 | 12 | 13 | 14 | |
| | 15 | | 16 | | 17 |
| 18 | 19 | 20 | | | 21 |
| | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ........................................................

வகுப்பு ........................................................

தொலைபேசி இல ........................................................

பாடசாலை பெயர் ........................................................

வதிவிட முகவரி ........................................................

........................................................

.............................. ..........................................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர்/கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) பாடல்கள் இயற்றும் கவிஞனை இவ்வாறும் குறிப்பிடலாம்.

(07) எங்களது அன்றாட கருமங்கள் பலவற்றை இலகுவாக்கும் இலத்திரனியல் சாதனம். உலக மக்களை இணைத்துள்ள விஞ்ஞானக் கண்டுபிடிப்பு இது.

(10) ஒருவருக்கு எத்தனை திறமைகள் இருப்பினும், இந்தப் பணிவு வேண்டும். இல்லையேல் திறமையினால் பயன் இல்லை (தலைகீழான சொல்)

(18) மூக்கினுள் உள்ள நுகர்ச்சி அங்கத்தினாலேயே இதனை உணர முடியும்.

(23) பலத்த காற்றை எதிர்த்து நிற்காமல், காற்றுக்கு சாய்ந்து நிற்பதால் சேதம் இன்றி தப்பிக் கொள்ளும் புல்வகைத் தாவரம் இது. பணிவு தான் சிறந்தது என்பதை உணர்த்தும் புல்(தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(01) ஆறு போன்ற நீர்நிலைகளைக் கடப்பதற்காக குறுக்காக நிர்மாணிக்கப்படுவது.

(04) பாடுவதில் வல்லவனான கலைஞன் இவன் (தலைகீழான சொல்)

(05) அதிகாலையிலும்,இரவிலும் கடும் குளிர் தருவது. மலையகத்தில் இதனை உணர முடியும்.

(08) விளையாட்டு வீரர்கள் குழு போன்ற ஏதேனுமொரு சிறிய மக்கள் குழுவைக் குறிக்கின்ற தனிச்சொல் (தலைகீழான சொல்)

(11) பாரி போன்று இவனும் கொடையில் சிறந்தவனாகக் குறிப்பிடப்படுகின்றான். பாரதத்தில் இவன் முக்கிய பாத்திரம்.

(17) விஜயனின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த சுதேச இனத்தவர்களாக இருவர் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களில் ஒரு இனத்தவர் இவர்கள். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 04

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. வேழம் 04. மேனி 07. கனி 10. மகாவலி
14. ஆரை 16. அல்லி 22. அகந்தை

**மேலிருந்து கீழ்**

01. வேலி 03. காகம் 05. மேடை 08. அவனி
10. மரை 13. பல்லி 14. ஆந்தை 20. கடா

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 03

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**ச. வகிஷ்னா,**
தரம் 06, மட்/வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு**
**அனீஸ் பாத்திமா அப்லா,**
தரம் 06, அல் அமான் மு.ம.ம.வி.,
கல்லொழுவ, மினுவாங்கொடை.

**மூன்றாம் பரிசு**
**எம்.எஸ்.எப். ஸல்மா,**
தரம் 06B, கொ/ஹைறியா மகளிர் கல்லூரி,
தெமட்டகொடை, கொழும்பு 09.

### பாராட்டு பெறுவோர்

1. **ராஷிட் வாஹிட்,**
*தரம் 12, அல் அதான் ம.வி.,*
*தாவரவியல் பூங்கா வீதி,*
*பதுளை.*
2. **எம்.எச்.சி. நூறுல் ஸம்றா,**
*தரம் 10சி,*
*மாறை/அறபா தேசிய பாடசாலை,*
*வெலிகம.*
3. **ஸீனத் தஹானி சாட்,**
*தரம் 09, பதியுத்தீன் மகளிர் கல்லூரி,*
*டி.எஸ்.சேனநாயக்க வீதி,*
*கண்டி.*
4. **ஹ. இமா சப்னம்,**
*அக்/அல்முனீறாபெண்கள்உயர்தரப்பாடசாலை,*
*அட்டாளைச்சேனை.*
5. **க. வினோபா,**
*தரம் 05,*
*கமு/கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை,*
*கல்முனை 06.*

குறுக்கெழுத்துப் போட்டி இல. 05
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**அருங்கேடன் என்பது அறிய மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.**

***தெளிவுரை :***

*ஒருவன் தவறான நெறியில் சென்று தீய செயல் செய்யாதிருப்பானானால் அவன் கேடு இல்லாதவன் என்று அறியலாம்.*




மரம் வளர்ப்போம், நலம் பெறுவோம் என்பது இந்நாட்டின் இன்றைய தேவைகளுள் ஒன்றாகும்.

"வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்" என்பது அன்றைய வாசகம், ஆளுக்கொரு மரம் வளர்க்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. மரங்கள் இயற்கையின் கொடை. இயற்கை அன்னையின் மடியில் மலர்ந்த முதல் குழந்தை தாவரம் தானே! அவற்றை நாம் இல்லாமல் செய்யலாமா?

மரங்களினால் கிடைக்கும் நன்மைகள் :

தொழில் வளர்ச்சியினாலும், பல மின் சாதனங்களைப் பயன் படுத்துவதனாலும் மாசு நிறைந்த இச்சூழலினைத் தூய்மையாக்குபவை மரங்களே! மரங்கள் காற்றினை தூய்மை செய்கின்றன, மேலும் நிழலைத் தருகின்றன. 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்பது பொன்மொழி. வெப்பம் அதிகமாகக் காணப்படக் காரணம் என்ன? நாம் மரங்களை அழித்ததும், அதனால் ஏற்பட்ட நிழலின்மையுமே காரணமாகும்.

எனவே மரங்களை வளர்க்க வேண்டும். மரங்கள் பறவைகள் மற்றும் விலங்குகளின் புகலிடமாய் விளங்குகின்றன. மரங்கள் மண் அரிப்பைத் தடுக்கின்றன. நிலத்தடி நீர் அமைய உதவுகின்றன. நீர் ஆவியாகி மேகமாகி மழையாகப் பெய்ய பெரிதும் துணை செய்பவை மரங்களே!

மரங்கள் நமக்கு பூ, காய், கனி, கீரை போன்ற உணவு வகைகளைத் தருகின்றன. அதுமட்டுமா சிறந்த மருந்துகளையும் உருவாக்க உதவுகின்றன. மேலும் கப்பல் கட்டுவதற்கும், மரவேலைப்பாடு நிறைந்த பெரிய பொருட்கள் முதல் தீக்குச்சி, தீப்பெட்டி போன்ற சிறிய பொருட்கள் வரை பல வகையான பொருள்களைத் தயாரிக்கவும் உதவுகின்றன.

இவ்வாறு பல வகையில் உதவும் மரங்களை நாம் வளர்க்க வேண்டும். நிறைய மரங்களை வளர்த்து காடுகளை உருவாக்க வேண்டும்.. இவை நம் நாட்டின் செல்வங்கள். அக்காலத்தில் தாத்தா மரம் நட்டால் பேரன் பயனடைவான். இக்காலத்தில் மரத்தினை வைத்தவனே பயனையும் துய்க்க ஆசைப்படுகிறான். இதுதான் இன்றைய நிலை.

செடிகள் வளர்ப்பதற்கு பெரிய இடம் தேவையில்லை. உபயோகமற்ற சின்னச்சின்ன பாத்திரங்களில் செடி வளர்க்க மன அழுத்தம் மறையும். நம் மனது எப்போதும் ஈரமாக, கோபமற்று குளுமையாக இருக்கும். அதோடு நம்மால் ஒரு காட்டை உருவாக்க முடியாது. குறைந்தது ஒரு மரம் கண்டிப்பாக வளர்க்க முடியும். அப்படி வளர்ப்பதால் நம் வீட்டிற்குத் தேவையான நிழல், குளுமை கிடைப்பதோடு, ஆரோக்கியத்திற்கும் நல்லது.

கொஞ்சம் நேசம், கொஞ்சம் மெனக்கெடல், கொஞ்சம் நேரம் ஒதுக்கினால் போதும், எல்லோரும் பசுமையைப் பயிரிடலாம். உடலுக்கும் பயிற்சி. அழகுக்கு அழகு. குழந்தைகளுக்கும் தொலைக்காட்சியிலிருந்து விடுதலை. (நமக்கும் தான்) மனமிருந்தால் மார்க்கமுண்டு. உபயோகித்துத் தூக்கி எறியும் பெரிய அளவு கோப்பைகளில், குளிர்பான போத்தல்கள், எண்ணெய்க் கொள்கலன் போன்றவற்றில் தற்போது செடி வளர்க்கிறார்கள். உங்களின் சாளரங்களும் பசுமையால் நிறைய செடி வளருங்கள். குருவிகள், காக்கைகளையும் நண்பர்களாக்க வேண்டுமானால் மரம் வளருங்கள்.

**வினோ மதிவதனி,**
லுனுகலை பஸார், லுனுகலை.

## இவ்வார மழலை




சுபாகரன்- தர்ஷினி ,
யாழ்ப்பாணம்.

## வரிக்குதிரைகள்



வரிக்குதிரைகளை மிருகக் காட்சி சாலைகளில் பார்த்திருப்பீர்கள்! அவற்றைப் பார்த்தவுடன் உங்கள் மனதில் தோன்றும் முதல் கேள்வி இந்தக் குதிரைகளுக்கு ஏன் இப்படி வரிகளாக இருக்கிறது என்பதுதான். இக் கேள்விகளுக்குப் பலரும் பலவிதமான பதில்களைக் கூறியிருந்தாலும் இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

இதற்கு பல காரணங்கள் இருப்பதாக விலங்கியலாளர்கள் கருதுகின்றனர். அடிப்படைக் காரணமாக அவர்கள் கூறுவது அபாயகரமான விலங்குகளிடமிருந்து தப்புவதற்காகத்தான் இப்படி வரிகள் உள்ளன என்கிறார்கள்.

ஆபிரிக்கக் காடுகளில் காற்றில் எந்நேரமும் அசைந்து கொண்டிருக்கும் நீண்ட கோரைப் புற்களின் நடுவே வரிக்குதிரைகளை அவ்வளவு எளிதாகக் கண்டுபிடிக்க முடியாது! புற்களின் நடுவே ஒரு வரிக்குதிரை அசையாமல் எவ்வளவு நேரமானாலும் நிற்கமுடியும். அப்படி நிற்பது அதைத் தாக்கவரும் சிங்கத்துக்கு தெரியாதாம்.

அதெப்படி? வரிக்குதிரையின் வரிகள் கருப்பு நிறத்திலும் சுற்றியுள்ள புற்கள் பச்சை வண்ணத்திலும் இருக்கும்போது எப்படித் தெரியாமல் போகும் என்று வியப்பாக இருக்கிறதல்லவா! நிறக்குருடு என்று கேள்விப்பட்டிருப்பீர்கள்! பல நிறங்களைப் பகுத்தறிய முடியாமல் எல்லாமே கறுப்பு வெள்ளையாகத் தெரியும் நிலைதான் நிறக்குருடு. பல மிருகங்களைப் போலவே காட்டு ராஜா சிங்கமும் ஒரு நிறக்குருடு! ஆகவே புற்களுக்கும் வரிகளுக்கும் வித்தியாசம் தெரியாது.


ஒவ்வொருவருக்கும் வேறு வேறு விதமாகக் கைரேகை இருப்பது போல வரிக்குதிரைகளின் வரிகளும் வேறு வேறாகவே இருக்கும். ஒன்றின் வரி அமைப்பு போல இன்னொரு குதிரையில் பார்க்கவே முடியாது.

இதில் மற்றொரு அதிசயம் என்னவென்றால், நமக்குத்தான் ஒரு குதிரையைத் தனியாக அடையாளம் காண முடியாதாம். வரிக்குதிரைகள் தங்கள் நண்பர்களையோ உறவினர்களையோ இந்த வரிகளை வைத்துதான் அடையாளம் கண்டு கொள்கின்றனவாம்! தாய்க்குதிரை தனது குட்டிகளை இனம் கண்டுகொள்ள இந்த வரிகள்தான் உதவுகின்றன. வரிக்குதிரைகளில் இம்பீரியல், சாதாரண வரிக்குதிரை மற்றும் மலை வரிக்குதிரை என்று மூன்று வகைகள் உள்ளன. மலை வரிக்குதிரைதான் அளவில் சிறியது. நான்கு அடி உயரம் இருக்கும். இவற்றில் உடலில் உள்ள வெள்ளை நிறம் வெள்ளியைப் போல பளபளக்கும். கறுப்பு வரிகள் உடலெங்கும் இருந்தாலும் வயிற்றுப் பகுதி மட்டும் வெள்ளையாகவே இருக்கும்.

சாதாரண வரிக்குதிரைகள் எப்போதும் கூட்டம் கூட்டமாகவே செல்லும். இவற்றின் உடம்பு சற்றே வெளிர் மஞ்சள் நிறத்திலும் அகலமான கறுப்புப் பட்டைகளையும் கொண்டிருக்கும். 4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பரிணாம வளர்ச்சி பெற்ற வரிக்குதிரைகள் ஆபிரிக்கக் காடுகளில்தான் அதிகமாக உள்ளன. மிகக் கூர்மையான பார்வையும் சிறிய ஒளியைக்கூடத் துல்லியமாகக் கணிக்கக்கூடிய செவித்திறனும் கொண்டவை. இவைகளுக்கு வண்ணங்களை அறியும் ஆற்றலும் உள்ளது. குதிரைகளைப் போல நின்றுகொண்டே தூங்கக்கூடியவை. புற்கள்தான் முக்கிய உணவு என்றாலும் இலை தழைகளையும் உணவாகக் கொள்ளும்.

**ஆர்.ராஹினி**
வெளிமடை




**எஸ். தனுஷா,**
தரம் 08 ப/இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
இதல்கஸ்ஹின்ன,
ஹப்புத்தளை.



**ஆர். யதுர்ஷினி,**
தரம் 08, கம்மடுவை தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**பி. ரோஹித்,**
தரம் 08B, ப/இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
இதல்கஸ்ஹின்ன,
ஹப்புத்தளை.



**பத்ரியா ஜெஹான்,**
தரம் 02 B, தெமட்டகொடை,
கொழும்பு 10.

## மகத்துவம் காண நீ வா ..!

துணிவே எங்கள் துணை
பணிவே அதற்கு இணை
கனிவே எங்கள் மொழி நல்ல
கண்ணியம் அதற்கு வழி.

கல்வியே எங்கள் சொத்து
பள்ளிதான் அதற்கு வித்து
எல்லையே இல்லாக் கல்வி அது
என்றுமே அழியாச் செல்வம்.

முயற்சியால் மேன்மை கிட்டும்
அயற்சியால் அனைத்தும் வீழும்
மனத்திடம் கொண்டு வாழ்வில் என்றும்
மகத்துவம் காணலாம் நீவா.

படிப்பதால் பட்டம் சேரும்
பதவியும் வந்து போகும், ஆனால்
நல்லதோர் மனித னென்று எங்கள்
நடத்தைதான் எடுத்துச் சொல்லும்.

**ஷெல்லிதாசன்**
திருகோணமலை.

## பழமொழிகளும் அதன் விளக்கங்களும்

**அடியாத மாடு படியாது.**

**விளக்கம்:** உண்மை பொருள் என்னவென்றால் மாட்டின் கால்களுக்கு லாடம் அடித்தால் தான் அதனால் கடுமையான வேலைகளை (உழுதல் போன்ற ) செய்ய முடியும் என்பது தான்.

**மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே.**

**விளக்கம்:** மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே என்பது தான் உண்மை. அதாவது ஆற்றுப்படுகைகளில் மண் குதிர்கள் இருக்கும். அவற்றில் கால் வைத்தால் கால்கள் உள்ளே பதியும். அந்த மண் குதிரை (குதிர் ஐ) நம்பி ஆற்றில் இறங்காதே என்பது தான் உண்மை.

**பசி வந்திட பத்தும் பறந்து போகும்**

**விளக்கம்:** அறிவுடைமை, இன்சொல், ஈகை, தவம், காதல், தானம், தொழில், கல்வி, குலப்பெருமை, மானம் ஆகிய பத்து குணங்களும் பசி என்று வந்து விட்டால் பறந்து போகும் என்பது உண்மை.

**நாயைக் கண்டால் கல்லைக் காணோம்; கல்லைக் கண்டால் நாயைக் காணோம்.**

**விளக்கம்:** பண்டைக்காலத்தில் அற்புத சிற்பங்கள் வடிக்கப்பட்டன. மாமல்லபுரம், தஞ்சை, காஞ்சி சிற்பங்கள் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கின. இங்கே ஒரு சிற்பி நாயின் உருவத்தை கல்லில் சிற்பமாக வடித்திருந்தான். அந்த சிற்பத்தை ஒருவன் மிகவும் ரசித்தான். அந்த சுவைஞனைச் சிற்பி கேட்டான் என் சிற்பம் எப்படி? என்று. அதற்குச் சுவைஞன் சொன்ன பதில் 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம்; கல்லைக் கண்டால் நாயைக் காணோம்' என்பதாக இருந்தது. அதாவது அதில் நாயைப் பார்த்தால் கல் தெரியவில்லை. கல்லைப் பார்த்தால் நாய் தெரியவில்லை.

**ஆ.லங்கேஷ்,** நோர்வூட் த.ம.வி, நோர்வூட்

இவ்வருடம் வெளிவந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட பசறை தமிழ் தேசிய கல்லூரியின் மாணவி எம்.ஆர். பாத்திமா தஹானி 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் எம்.வை.எம்.ரஸ்மி, ஏ.ஏ.இஸ்மத் பானு ஆகியோரின் புதல்வியாவார்.



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# விளையாட்டு



## 15வது ஐ. பி. எல். தொடர்:

# இலங்கை வீரர்களின் அசத்தலான ஆரம்பம்!

கடந்த வாரம் ஆரம்பமான இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் நீண்ட இடைவெளிக்குப் பின் இலங்கையிலிருந்து 5 வீரர்கள் இம்முறை தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து ரி/20 போட்டிகளில் பின்னடைவைச் சந்தித்து வரும் இலங்கை அணி இவ்வருட இறுதியில் அவுஸ்திரேலியாவில் உலகக் கிண்ணத் தொடர் நடைபெற உள்ளதால் சிறந்த பயிற்சிக்களமாகக் கருதி இலங்கை வீரர்கள் தமது திறமையை வளர்த்துக் கொள்வதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பமாக இத்தொடரைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இத்தொடரில் அதிக கவனத்தை ஈர்த்த இலங்கை வீரராக வனிந்து ஹசரங்க உள்ளார். பெங்களூர் அணி அவரது பந்துவீச்சை பெரிதும் நம்பியுள்ளது. மேலும் அவ்வணியில் வெளிநாட்டு வீரரொருவர் தலைவராக இருப்பதால் ஹசரங்கவுக்கு கூடுதல் அனுகூலமாக இருக்கலாம். பெங்களூர் நிர்வாகம் ஹசரங்கவை தொடர் முழுவதும் எல்லாப் போட்டிகளிலும் விளையாடும் வகையில் பதினொருவர் அணியில் சேர்த்துக்கொள்ள திட்மிட்டுள்ளது. இவரது துடுப்பாட்டத் திறமையும் அவ்வணிக்கு மேலதிக அனுகூலமாகும். கடந்த முறையும் இவர் பெங்களூர் அணியில் இடம்பெற்றிருந்தாலும் ஓரிரு போட்டிகளிலேயே விளையாடும் வாயப்புக் கிடைத்ததால் தனது திறமையை முழுமையாக நிரூபிக்கும் சந்தர்ப்பம் அத்தொடரில் கிடைக்கவில்லை.

இம்முறை தொடர் முழுவதும் பிரதான சுழற்பந்து வீச்சாளராக அவரை பயன்படுத்திக் கொள்ளவுள்ளதாக அறியமுடிகிறது. இதுவரை பெங்களூரின் நிரந்தர சுழற்பந்துவீச்சாளராக விளையாடிய யுஹேந்திரர் சஹால் இம்முறை அவ்வணியில் இடம்பெறாததும் ஹசரங்கவுக்கு நல்ல சந்தர்ப்பமாகும். இதை அவர் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பெங்களூர் அணி நிர்வாகம் தன்னை கூடிய விலைக்கு வாங்கிய தன் நோக்கம் என்ன என்பதை உணர்ந்து அதை மெய்ப்பிப்பது வனிந்து ஹசரங்கவின் பொறுப்பாகும். இதற்கு முன் லசித் மலிங்க இவ்வாறான அதிக விலைக்கு வாங்கப்பட்டிருந்தார். அது நியாயமான விலை என்பதை அவர் விளையாடிய எல்லாப் போட்டிகளிலும் நிரூபித்திருந்தமையினால் அவரை மும்மை இந்தியன்ஸ் அணி இறுதிவரை விடுவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் உடற் தகுதியைக் காரணம் காட்டி நிராகரித்திருந்த அதிரடி வீரர் பானுக்க ராஜபக்ஷ இம்முறை ஐ. பி. எல். தொடரில் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அண்மையில் இந்திய சுற்றுப்பயணத்தில் தேர்வு செய்யாமைக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு முன்பாக இவருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றது. அவ்வேளையில் இந்தியச் சுற்றுப்பயணத்துக்காக உடல் தகுதித் தேர்வில் இரண்டு கிலோ மீட்டர் ஓட்டத்தில் தேர்ச்சிபெற்றாலும் உடலில் படிந்துள்ள கொழுப்பின் அளவை அளவிடும் தேர்வில் அவர் தோல்வியடைந்திருந்ததனாலேயே பானுக்க ராஜபக்ஷ அத்தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டார் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதேபோல் அவிஷ்க குணதிலக்க, தீக்ஷன போன்றோரும் இதற்கு முன்னர் இதே பிரச்சினைக்கு முகம் கொடுத்தனர். பின்னர் அவற்றைச் சரி செய்து கொண்டனர். பானுகவும் தனது உடற்தகுதியை சரி செய்யவேண்டும். கிரிக்கெட் சட்டதிட்டங்களை மீறியோ, ஆர்ப்பாட்டங்களை நடத்தி கோஷமிடுவதாலோ அணியில் ஒரு வீரரை இணைத்துக் கொள்ள முடியுமா?

பானுக்க ராஜபக்ஷ ஒரு திறமையான அதிரடித் துடுப்பாட்ட வீரர் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. அதனால்தான் அவர் திடீரென தனது ஓய்வை அறிவித்ததும் விளையாட்டுத்துறை அமைச்சரே அவரை அழைத்து தனது முடிவை மாற்றிக்கொள்ளுமாறு கூறியிருந்தார்.

அதன்பின் அவர் தொடர்ந்து பயிற்சிகளை மேற்கொண்டு தனது உடற்தகுதியை மேம்படுத்தி சிறந்த முறையில் வைத்துக்கொள்ள முடிந்தமையினால்தான் இம்முறை ஐ. பி. எல். தொடரில் அவர் பஞ்சாப் அணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார். முதல் சில போட்டிகளில் இங்கிலாந்து வீரர் ஜோனி பெயார்ஸ்டோ பங்கு கொள்ளமாட்டார் என அறிவித்துள்ளதால் அநேகமாக இலங்கை வீரர் பானுக்க ராஜபக்ஷ விளையாடலாம். இது அவருக்குக் கிடைக்கும் சிறந்த சந்தர்ப்பமாகும். தொடர்ந்து இத்தொடரில் அவர் திறமையாக விளையாடினால் அவர் மீதான இலங்கை தேர்வுக்குழுவின் பார்வை திரும்பலாம். அவர் தற்போது சிறந்த உடற்தகுதியுடன் இருப்பதாகவும், இலங்கை அணியுடன் இணையும் தகுதி மட்டத்தை நெருக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. அது பானுக்கவைப் பொறுத்தவரையில் பாரிய வெற்றியாகும். பானுக்க மீண்டும் இலங்கை அணியுடன் இணைவதற்கு ஐ. பி. எல்லில் மறக்க முடியாத பல துடுப்பாட்ட இன்னிங்ஸ்களில் விளையாடுவதுடன் உடல் தகுதியையும் தேவையான அளவு மட்டத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இதைத்தவிர அரசியல்வாதிகளின் வேண்டுகோளுக்காகவோ வலைதளங்களில் உலாவரும் கதைகளுக்காகவோ அணியில் இணைய முடியாது என்பதை முதலில் பானுக ராஜபக்ஷ உணர்ந்து தனக்குக் கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி இலங்கை அணியுடன் இணைய முயல வேண்டும்.

இலங்கை அணியின் யோக்கர் மன்னர் லசித் மலிங்கவின் ஓய்வுககுப் பின் இலங்கை வேகப் பந்து வீச்சுக்கு உயிர்கொடுத்து வரும் துஷ்மந்த சமீரவும் இம்முறை லக்னோ சுப்பர் ஜெயன்ட் அணிக்குத் தேர்வாகியுள்ளார். புதிய அணி என்பதால் அவ்வணியில் சமீரவுக்கு இத்தொடர் முழுவதும் விளையாடும் சந்தரப்பம் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

மேலும் அவ்வணியில் தேர்வுசெய்யப்பட்ட இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் மார்க் வூட் திடீரென விலகியுள்ளதால் அவ்வணியின் முதல் தேர்வாக ஷமீரவே உள்ளார். புதுமுக வீரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதில் ஆர்வம் காட்டிவரும் அவ்வணியின் பயிற்சியாளர் அண்ரூ பிளவர் அவ்வணியின் ஆரம்பப் பந்து வீச்சாளராக அவேஷ் கானுடன் சமீர களமிறக்கப்படுவார் என எதிர்பார்க்கலாம். இத்தொடரில் ஓரிரு போட்டிகளின் முடிவுகளின் மாற்றத்தைக் கொண்டுவர சமீரவினால் முடியுமானால் அது அவ்வணியில் தொடர்ந்து நீடிப்பதற்கு அவருக்கு சந்தர்ப்பமாய் அமையும். அது இலங்கை அணிக்கும் சாதகமாய் அமையும்.

மேலும் கடந்த சீசன்களில் விளையாடிய சர்வதேச வீரர்கள் கடைசி நேரத்தில் தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளதால் எமது வீரர்களுக்கு இது சிறந்த சந்தர்ப்பமாகும். இதை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சென்னை அணிக்கு 70 இலட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்ட சுழற்பந்துவீச்சாளர் மஹீஸ் தீக்ஷன அவ்வணியின் முக்கிய வீரராகத் திகழ்வதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். ஆனாலும் இவரை ஏலத்தில் எடுத்ததிலிருந்து சென்னை ரசிகர்கள் கடும் எதிர்ப்புக்களைத் தெரிவித்து வருகின்றனர். இவர் இலங்கை இராணுவத்தில் பணியாற்றுவதால் இவருக்கு எதிரான சென்னை ரசிகர்களின் எதிர்ப்பு அதிகரித்துள்ளது. சென்னை அணியின் திட்டங்கள் முன்கூடியே அறியமுடியாததால் இவர் எல்லாப் போட்டிகளிலும் விளையாடுவாரா என்பதை இப்போதே கூற முடியவில்லை. ஆனால் இம்முறை போட்டிகள் சென்னையில் நடைபெறாததால் சென்னை ரசிகர்களிடமிருந்து மகீஷுக்கு தொந்தரவு இருக்காது. அதனால் அவர் அணியில் இணைத்துக்கொள்ளப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை அணியின் சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன முதன் முதலாக கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியில் இணைந்துள்ளார். என்றாலும் இவர் இம்முறை ஓரிரு போட்டிகளிலாவது இணைத்துக் கொள்ளப்படுவாரா என்பது சந்தேகமே?

எதிர்பாத்தபடி ஐ. பி. எல். தொடரில் துஷ்மந்த சமீர, ஹசரங்க, பானுக்க ராஜபக்ஷ ஆகியோர் இதுவரை விளையாடிய போட்டிகளிலே முத்திரை பதித்துள்ளனர். பானுக முதல் போட்டியில் 22 பந்துகளில் 43 ஓட்டங்கள் விளாசி பஞ்சாப் அணியின் வெற்றிக்கு பங்காற்றியுள்ளதுடன், சமீர விளையாடிய முதல் போட்டியில் லக்னோ அணி தோல்வியடைந்தாலும், எதிரணியின் ஆரம்ப இரு விக்கெட்டுகளையும் விரைவாக வீழத்தி சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுள்ளார். வனிந்து ஹசரங்கவும் கொல்கொத்தாவுடனான தனது 2வது போட்டியில் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தி பெங்களூர் அணிக்கு முதல் வெற்றியைப் பெற்றுக்கொடுத்துள்ளதுடன் 15வது ஐ. பி. எல். அத்தியாயத்தில் எமது வீரர்கள் அசத்தலான ஆரம்பத்தைப் பெற்றுள்ளனர்.

இவ்வாறாக இலங்கை வீரர்கள் ஐ. பி. எல். தொடர்களில் தமது பங்களிப்பை அளிப்பதோடு, முன்னாள் வீரர்களான மஹேல ஜெயவர்தன, குமார் சங்கக்கார, முத்தையா முரளிதரன், லசித் மலிங்க ஆகியோரும் ஐ. பி. எல். தொடரில் இணைந்துள்ளனர். இவர்கள் பங்களிப்புச் செய்யும் ராஜஸ்தான் ரோயல், மும்பாய் இந்தியன்ஸ், சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகளை விட எமது வீரர்கள் பங்குகொள்ளும் போட்டிகளே எமது கவனத்தை ஈர்த்துள்ளது.

இவ்வருட இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ரி/20 உலகக் கிண்ணத் தொடருக்கான சிறந்த பயிற்சிக்களமாக எமது வீரர்கள் இத்தொடரை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எமது ரசிர்களின் எதிர்பார்ப்பாகும்.

**எம்.எஸ்.எம்.ஹில்மி...**

# பேருவளை 'Golden Gate' சர்வதேச பாடசாலையின் விளையாட்டு நிகழ்வு





**அஜ்வாத் பாஸி**

பேருவளை 'கோல்டன் கேர்ட்' சர்வதேச பாடசாலை மாணவ சிறார்களின் விளையாட்டு போட்டி நிகழ்வுகள் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் (30) வெகுவிமர்சையாக நடைபெற்றது. பாடசாலை முகாமைத்துவ பணிப்பாளரும் பேருவளை நகர சபை எதிர்க்கட்சித்தலைவருமான ஹஸன் பாஸி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் EG Lab உரிமையாளர் எம். ரீ.எம். ஹாரிஸ் பிரதம அதிதியாகவும், வைத்தியர் மொஹமட் இஹ்திஷாம் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலை அதிபர் மொஹமட் சஹ்ரினின் வரவேற்போடு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. போட்டி நிகழ்ச்சிகளை அதிதிகள் மிகவும் மகிழ்ச்சியாக கண்டுகளித்ததோடு, அரசியல்வாதியாக சமூக சேவையாளராக இருந்துகொண்டு இப்படியான சர்வதேச பாடசாலையொன்றை வழிநடாத்தி வருவதையிட்டு முகாமைத்துவ பணிப்பாளர் ஹஸன் பாஸியை அதிதிகள் பாராட்டியதோடு எதிர்காலத்திலும் அவரது கல்விப்பணி தொடர வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன. விசேடமாக சிறார்களின் விளையாட்டு நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை மகிழ்வித்ததோடு வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் இதன்போது அதிதிகளினால் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

நிகழ்வில் பங்கேற்ற பிரதம அதிதி EG Lab உரிமையாளர் ஹாரிஸ் மற்றும் வைத்தியர் மொஹமட் இஹ்திஷாம் ஆகியோரை கௌரவிக்குமுகமாக பாடசாலை முகாமைத்துவ பணிப்பாளர் ஹஸன் பாஸி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.









இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# மஞ்சரி களஞ்சியம்

## வாழ்வாதாரமா சேதாரமா 218



தமிழ்க் கவி பேசுகின்றார்

# கடலளவு வீடிருந்தாலும் வீட்டு விஷேசம் மண்டபத்தில்தான்

கலியாண வீடொன்றுக்குப்போனேன். ஓ... அது வீடல்ல மண்டபம். என்ன தான் ஏக்கர் கணக்கில் வளவு இருந்தாலும். கடலளவு வசதி வாய்ப்புகள் இருந்தாலும் மண்டபத்தில் கலியாணம், காதுகுத்து, சாமத்தியம், சடங்குகள் என்று செய்வது தான் இப்போது நடைமுறையில் உள்ளது.

இந்த மண்டப நடைமுறையில் பெரிய நண்பர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்ப வேண்டியதுதான்.

எந்த மண்டப விழாக்களுக்குப் போனாலும் அங்கு சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்ததும் குளித்துவிட்டு படுக்கையை விரிப்பது எனது வழக்கம். ஆம் அதன் பிறகு அன்றைக்கு எந்த வேலையும் செய்ய முடியாது. எனக்குத்தான் அப்படி என்றில்லை பல நண்பர்கள் இப்படித்தான் சொல்கிறார்கள். என்ன காரணமாக இருக்கும் நிறைந்த சனக்கூட்டத்தில் இருக்கும் போது ஒருவர் சுவாசித்து வெளிவிடும் கரியமிலவாயுவை மற்றவர் சுவாசிப்பதால் தலைவலி ஏற்படுவதாக ஒரு வித்தகர் கூறினார். இல்லை அப்படி இல்லை உணவில் சுவைக்காக சேர்க்கும் ஒருவகை திரவியம் அல்லது உப்பு அவ்வாறு சோர்வைத் தருகிறது என இன்னொருவர் கூறினார். இருக்கலாம் நான் சனக்கூட்டம் அடங்கிய பின் சில விழாக்களுக்கு போயிருக்கிறேன். அப்போதும் எனக்கு இப்படித்தான் இருந்தது.

இந்த மாதிரி மண்டப விழாக்களில் ஒன்றும் கிராமத்துச் சமையலைப் போல அறுசுவை விருந்து பரிமாறப்படுவதில்லை. கிராமத்தில் வாழைப்பூவில் ஒரு சம்பல் துவர்ப்பாகவும் மிளகாய்ப்பொடி மிளகு காரமாகவும் பூசணிக்காய் இனிப்பாகவும் பாகற்காய் கசப்பாகவும், மரவள்ளி, கரணை போன்றவை இனிப்பும் மாச்சத்துமாகவும் தயிர் ஊறுகாய் என்பன புளிப்பாகவும் உப்பு அனைத்திலுமாகவும், உப்பு உறைப்பு புளிப்பு இனிப்பு கசப்பு துவர்ப்பு என அறுசுவையும் சேரும். அவ்வையார் சொன்னது போல நெய்யும் வீட்டிலேயே சமையல் நடந்தது. பலகாரம் சுடுபவர்கள் மாமரத்தடியில் பெரிய அடுப்பு மூட்டி அதிலே பலகாரம் சுட்டார்கள். அதையும் இரண்டுமூன்று பெண்கள் தனியே செய்தார்கள். விழாவின் முதல் நாளிரவு பெண்கள் பயற்றங்காய் உடைக்கவும் பூசணிக்காய் வெட்டவும் வெங்காயத்தை உடைத்து நீரில் போடவும், வேலை செய்ய ஆண்கள் பந்தல் போடவும் அழகிய சேலைகளால் அவற்றை அலங்கரிக்கவுமாக வேலை செய்தனர்.

சோறு சமைப்பதிலும் ஆண்கள் உதவினார்கள். ஊர்ப் பெண்களை அதிகாலையில் தொடங்கி விரைவில் சமையலை முடித்தனர். பந்திக்கான தலைவாழை இலைகளையும் கிராமத்தவர்களே கொண்டு வந்தார்கள். விழாவில் பெண்களே மாறிமாறி பந்திவைத்தனர். இதில் ஆண்களும் கலந்து கொண்டனர். இந்த வேலைகளில் பங்கேற்கும் போது பலநாட்களாக மனமுறிவில் பேசாமல் இருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள். ஒரு வருக் கொருவர் பரிமாறினார்கள். மகனோடு கோவித்துக் கொண்டு இருந்தவர் விழாவில் தன் பேரக்குழந்தைகளோடு கொஞ்சி மகிழ்ந்தார். அடிதடிப்பட்டு பிரிந்த மச்சான்மார் கைகோர்த்து பந்தலுக்கு பாய் விரித்தார்கள். வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் தமது ஊர்ப்புதினங்களை கலந்து பேசி மகிழ்ந்தார்கள்.

இப்படியாக கிராமமே ஒன்றுபட்டு மகிழ எனது தந்தை உணவுப் பொருட்களுக்கு மட்டுமே செலவழித்தார். வேறு செலவுகள் துணிமணிதான். விழா நிறைவடைந்து மூன்று நாட்களும் மக்கள் பிழங்கிக் கொண்டே இருந்தார்கள். பாடத் தெரிந்தவர் பாடினார். ஆடத்தெரிந்தவர் ஆடினார். விளையாட்டுகள் விடுகதைகள் என விநோதமாக பொழுது கழிந்தது. மூன்றாம் நாள் பந்தல் பிரிப்பு அன்றைக்கு அனைத்து மக்களையும் அழைத்து ஒரு நாலு சேவல்களை அறுத்து பெரிய விருந்தொன்றை ஏற்பாடு செய்தார் என் தந்தை. பாடுபட்ட அனைவரும் வந்தனர் நான்கு கல்லோயா கறுத்தப் போத்தல் சாராயம். சந்தோசமான விருந்து அனைவரும் குடித்து சாப்பிட்டு மகிழ்ச்சியாக கூடமாட பந்தல் பிரித்து பொருட்களையும் பகிர்ந்து கொண்டு சென்றனர்.



நன்மையாக கொள்ள வேண்டியது யாதெனில் வரும் விருந்தினர்கள் நாலு வேளைக்கு சாப்பிட்டு நாலாபத்துக் கதைகளையும் பேசி, உறவுகளுடன் கூடிக்குலாவி செல்ல முடியாது. நாமாக வந்தமா உட்கார்ந்தமா, என்றிருக்க வேண்டும். வாசலில் கூட வரவேற்பு கிடையாது.

உள்ளே வந்து உட்கார்ந்ததும் மண்டப பணியாளர்கள் ஒரு மிட்டாய் தருவார்கள் அடுத்து ஒரு ப(ை)ழ(ய)ரசம் தருவார்கள். பின்னே முதல் நாளே தயாரித்து குளிர்பதனப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைப்பது பழையதுதானே. சற்றேனும் ஏறுமாறாக நினைத்து விடாமல் அழைப்பைத் தந்தவர்கள் உட்கார்ந்திருக்கும் வரிசைகளை தேடித்தேடி வந்தவர்களுக்கு ஒரு புன்னகை, கைலாகு (ச்ச அதெல்லாம் கொரனா நேரம் சரிவராது) வணக்கம் ஒரே தடவையில் ஒரு வரிசையில் உள்ள அனைவருக்கும் வாங்க சாப்பிடலாம் என்ற அழைப்பு. அவர் கடந்து போக நாம் உணவு பரிமாறும் இடத்தை நாடி, வரிசையில் நின்று தட்டுகளைக் கைப்பற்றி, எமக்கான உணவை நாமே பரிமாறி, அப்படியே காலியான மேசையை தேடி உட்கார்ந்து, சாப்பிட்டுவிட்டு அடுத்ததாக கைகழுவி ஐஸ்கிறீம் சாப்பிட்டுவிட்டு அடுத்த வரிசைக்கு போக வேண்டும். இதுதான் முக்கியமான வரிசை நாம் விழாவுக்கு ஆஜரானதற்கான சான்றுப்பதிவு. அட அதாங்க படமெடுத்து பரிசும் வழங்கவேண்டிய மேடைக்கான வரிசை. இதுவும் முடிந்தால் ஆயிற்று. நாம் வெளியே போக வேண்டியதுதான். வழியனுப்புமிடத்தில் யாராவது நிற்பார்கள். அல்லது இல்லாமலும் போகலாம். நாமாக மண்டபத்தை ஒருதடவை திரும்பிப் பார்த்துவிட்டு, முடிந்தால் அருகில் வரும் உண்டு மோர் பெருக்கி நீர்சுருக்கி அழகிய ஆரோக்கியமான விருந்துகள் கிராமத்தில் இருந்தன. இப்போது எங்கே உண்டு. கிராமத்திலும் இப்போது ஒப்பந்தப் பந்தல்காரர்கள் தமது சமையற்கட்டுடன் வந்து மண்டபத்து சமையலை செய்து கொடுத்து காசை அள்ளிக் கொண்டு செல்கிறார்கள்.

மண்டப விருந்துகளில் புறொய்லர் கோழியின் பொரியல் அதன்மீது பதப்படுத்திய தக்காளி சாறு. கத்தரிக்காய் பொரித்துக் கடலை கலந்த கூட்டு, பொரித்தது போக மீதமிருக்கும் கோழியின் உடல்பாகங்களில் ஒரு குழம்பு, உருளைக்கிழங்கு பிரட்டல், பருப்பு, வெங்காயத்துடன் வெள்ளரி அல்லது தக்காளி கலத்த பச்சடி, பப்படம், உழுந்து விலை ஆகையால் வடை பட்டியலிலிருந்து நீக்கப்படுகிறது. எந்த மண்டபமானாலும் இதுதான் 'மெனு'மாற்றமில்லை.

எங்கள் வீட்டில் அக்காள் வயசுக்கு வந்துவிட்டாள் அவளுடைய நீராட்டு விழாவுக்கு ஐந்து நாட்கள் இருக்கும் போதே கிராமத்துப் பெண்கள் வீட்டுக்கு வரத் தொடங்கிவிட்டனர். இளம்பெண்கள் நெல் குத்தவும் மாவிடிக்கவுமாக நிற்க, மூத்த பெண்கள் மா வேகவறுக்க அரிசி புடைத்து வைக்க வேகமாக வேலை செய்தார்கள் இவர்களுக்கெல்லாம்

சொன்னால் நம்புங்கள் அதுவரை அங்கே குடிகாரரை நான் காணவில்லை. அவ்வளவு கவனமாக மக்கள் விழாவை சிறப்பித்தனர். ஆறு மாதத்திற்கு மேலாக விழா பற்றிய பேச்சு மக்களிடையே இருந்தது. பந்தலுக்கும் சமையலுக்கு பல்லாயிரக்கணக்கான பணத்தை இன்று ஒரே ஒரு முதலாளிக்கு கொடுத்து மண்டபத்தை சிறப்பிக்கும் யாருக்கும் தாம் வளர்த்து விட்டுக்கொண்டிருக்கும் முதலாளித்துவம் பற்றி எந்த அக்கறையும் இல்லை. சுற்றம் சூழ தாம் விழாவை செய்வதாக நம்பிக் கொண்டுதான் இருக்கிறார். வீட்டுக்குப்போனால் ...அவர் வாழும் அந்த வீடு வெறிச்சோடியிருக்கும். நாலு சனம் அங்கின இஞ்சின திரியும். மண்டபத்தில் மீதமிருந்த உணவு வரும் வராமலும் போகலாம் இரவுக்கும் எங்காவது 'ஒன்லைன் ஒடர்' போட வேண்டியதிருக்கும்.

# உலக டவுன் சிண்ட்ரோம் தினம்



ஹேமாஸ் குழுமத்தின் சமூகப் பொறுப்புணர்வுச் செயற்பாடுகள் பிரிவான Hemas Outreach மையம், மாற்றுத்திறன் படைத்த சிறுவர்களுக்கான AYATI தேசிய நிலையத்துடன் இணைந்து உலக டவுன் சிண்ட்ரோம் தினத்தை மார்ச் 16ஆம் திகதி ராகமவில் அமைந்துள்ள AYATI நிலையத்தில் அனுஷ்டித்திருந்தது. தமது சமூக முன்னெடுப்பான 'அனைவரையும் சமமாக நடத்துவோம் (Treat All Alike)' என்பது பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் இலக்குடன் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. டவுன் சிண்ட்ரோம் இனால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்காக தயாரிக்கப்பட்ட விசேட புதிய பாடல் ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. "அனைவரையும் சமமாக நடத்துவோம்" என்பது டவுன் சிண்ட்ரோம் உள்ள சிறுவர்கள் மற்றும் குடும்பதாருக்கு அவர்களின் உரிமைகளை ஏற்றுக் கொள்வதற்கான களத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், சமூகத்தில் அவர்களை உள்வாங்குவதை வலியுறுத்தி வலுவூட்டுவதாக அமைந்துள்ளது.



உள்ளடக்கமாக உலகை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் வகையில் பல விசேட விருந்தினர்கள் மத்தியில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரொட்டரி இன்டர்நஷனலின் முன்னாள் சர்வதேச தலைவரான கே. ரவிந்திரன் இந்நிகழ்வின் விசேட அதிதியாக கலந்து கொண்டார். சமூக சேவைகள் பணிப்பாளர் சந்தன ரணவீர ஆரச்சியிடம் டவுன் சிண்ட்ரோம் தொடர்பான மும் மொழிகளிலும் அமைந்த அறிவுறுத்தல் கையேடுகள் வழங்கப்பட்டதுடன், அவை நாடு முழுவதிலுமுள்ள 331 பிரதேச செயலகங்களுக்கும் விநியோகிக்கப்படும்.

ஆரோக்கியமான வாழ்வு, ஏனெனில் ஒவ்வொரு குடும்பமும் சிறந்த நாளையை கொண்டிருக்க வேண்டும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்பதை ஊக்குவிப்பதுடன், "எந்தவொரு பிள்ளையும் ஓரங்கட்டப்படக்கூடாது" எனும் சமூகத்தை ஊக்குவிப்பதில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி கவனம் செலுத்துகின்றது. இவ்வாறான செயற்பாடுகளினூடாக, இந்த சிறுவர்கள் மற்றும் குடும்பத்தார் தினசரி எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தவிர்த்துக் கொள்ள முடியும். டவுன் சிண்ட்ரோம் உள்ள சிறுவர்களை அன்புடனும் மதிப்புடனும் நடத்தப்பட வேண்டியதை குறிக்கும் வகையில் அமில ஜயசுவர்ணவின் புதிய பாடல் அமைந்துள்ளது.

பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் டவுன் சிண்ட்ரோம் உள்ள சிறுவர்கள் மத்தியில் காணப்படும் உளைச்சலை இல்லாமல் செய்வதற்காகவும் அமைந்த சமூக முன்னெடுப்புடன் இணைந்து கொள்வதற்கு: http://web.facebook.com/ekasesalakamu

களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, MAS ஹோல்டிங்ஸ், ரொஷான் விஜேராம மையம், இலங்கை இராணுவம் மற்றும் ரொட்டரி மாவட்டம் 3220 ஆகியவற்றின் பங்காண்மையில் மாற்றுத்தின் படைத்த சிறுவர்களுக்கான AYATI தேசிய நிலையம் செயற்படுகின்றது.

ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் கீழ் நிறுவப்பட்ட ஹேமாஸ் Outreach Foundation, கூட்டாண்மை சமூகப் பொறுப்பு என்பதனூடாக "ஆரோக்கியமான வாழ்க்கை" என்பதை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது. இலங்கையின் குடும்பங்களின் வாழ்க்கையில் பரிபூரண இடையீடுகளினூடாக "ஆரோக்கியமான வாழ்க்கை" என்பதை ஊக்குவிக்கும் குழுமத்தின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

இந்த மையம், நம்பிக்கை நிதியமாக முன்னணி காப்பாளர்களால் நிர்வகிக்கப்படுகின்றது.

அ. கனகசூரியர் ...



2021 ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்குமேல் புள்ளிகளைப்பெற்று தகுதியடைந்த ஏறாவூர் அல் ஜுப்ரிய்யா வித்தியாலய மாணவர்கள் 1 ஆம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்ஐ. எஸ். றிபாயா(ஆசிரியை), ஏ. மீராமுகைதீன் (பிரதி அதிபர்), எம்ஐ.. முகம்மட் (அதிபர்), யு.எல். யகியா (ஆசிரியை), ஏஎல். முர்ஷிதா (ஆசிரியை), 2 ஆம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்ஜே. ஷைனப் திக்ரா (156), பி. பாத்திமா அக்றிமா(147), ஏஆர். அபாப் பர்ஹா (163), ஏ. வஜீஹத்துன் நிஸா (174), எம்எப். பாத்திமா மீபா (163)), எம்பிஎம். பாத்துமா பரீரா (157), ஏஆர். ரீமா பர்ஹத்(172), எம்.பி. அலீனா ஸமா (160), எம்என். பாத்திமா நப்ஹத் மீபா (171), ஐ. ஸைனப் ஸம்றா (161), பி. ஸீனத் சமா (159), 3 ஆம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்எஸ். பாத்திமா ஸைனப் (148), ஐ. அகமட் ஷம்லான் (171) ஏஆர்.ஆரிஸ் (155), எம்.என்.என். ஸைத் ஸம்ரி (177), ரீ. அகமட் ஸஹ்ரான் (149), மற்றும் பி. ஸைனப் றணா (153) ஆகியோர். (படம்: ஏறாவூர் நிருபர் நாஸர்)



2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஏறாவூர் அறபா வித்தியாலயத்தில் தகுதியடைந்த மாணவர்கள் எடுத்துக்கொண்ட குழுப்படத்தில் முதலாம் வரிசையில் இடமிருந்து வலமாக ஜே. ஜலால்தீன் (பிரதி அதிபர்), எஸ்எம்எம். நவாஸ் (அதிபர்) மற்றும் ரீஎம். மன்சூர். இரண்டாம் வரிசையில் இடமிருந்து வலமாக எம். ஷம்லா நதா (151), எம்ஆர். பாத்திமா அப்லா (149), எம்ரீ. றிஸ்னத் றினா (154) எம்ரீ. பாத்திமா ஹனா (152), எம்யு. நிதா (159), ஐஏ. அயிஷா ஸன்ஹா (165), எஸ். பாத்திமா ஹிஸ்மா (152), ஜே. ஸெய்னப் ஸனா (162), எம். பாத்திமா மஹ்தியா (166), ஜே. பாத்திமா அதீலா (162). மூன்றாம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்என். ஹனீப் மனால் (154) எம்யு. முஹமட் முஹாபிஸ் (154), எம்எச். ஹஸ்னி இமாத் (158), எம்ஜே. அஹமட் அல்ஹம் (171), ஏஎன். அனூப் அஹமட் (161), ரீ. முஹமட் ஷிஹாப் (169), எம்ஜே. முஹமட் ஹஸீப் (150), எஸ். முஹம்மட் ஹிமாஸ் (157), எம்எப் .பாத்திமா ஷயாபா (153), கே.ஏ. பாத்திமா ஹனா (163), எஸ்என். பாத்திமா றிஹ்மா (168) மற்றும் எம்எஸ். பாத்திமா றஹா (157) ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: ஏறாவூர் நிருபர் நாஸர்)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சிறந்த பாடசாலை விநியோக வர்த்தக நாம விருதை சுவீகரித்தது அட்லஸ்

இலங்கை யின் முன்னணி காகிதா திகள் வர்த்தக நாமமான அட்ல ஸ், மக்கள் மத்தியில் கொண்டுள்ள அபிமானத்தை மேலும் உறுதி செய்யும் வகையில், தொடர்ச்சியான மூன்றாவது தடவையாகவும் SLIMKantar மக்கள் விருதுகள் 2022 (SLIMKantar People's Awards 2022) இல் ஆண்டின் சிறந்த பாடசாலை விநியோக வர்த்தக நாமம் 2022 எனும் விருதை தனதாக்கியிருந்தது. பயிலலில் அதிகளவு கவனம் செலுத்தியிருந்த, சமமான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தமைக்கு அங்கீகாரமாக வென்ற இந்த விருதை அட்லஸ் அக்சிலியா கம்பனி லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளர் அசித சமரவீர பெற்றுக் கொண்டார். இந்த விருதைப் பெற்றுக் கொள்ளும் போது, சந்தைப்படுத்தல் பணிப்பாளர் கௌஷாலி குசுமபால மற்றும் விற்பனை பணிப்பாளர் இந்திரஜித் பிந்துஹேவா ஆகியோருடன் அட்லஸ் அணியினரும் காணப்பட்டனர். 2022 மார்ச் 21ஆம் திகதி இடம்பெற்ற இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் இலங்கையின் சிறந்த 5 FMCG இளைஞர் அபிமான வர்த்தக நாமங்களில் ஒன்றாக, "2022 ஆம் ஆண்டுக்கான இளைஞர் அபிமான FMCG வர்த்தக நாம விருது" என்பதற்கும் பிரேரிக்கப்பட்டிருந்தது.

மக்களின் குரலை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கும் ஒரே வர்த்தக நாமச் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வாக SLIM மக்கள் அபிமான விருதுகள் வழங்கும் நிகழ்வு அமைந்திருப்பதுடன், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது.



இலங்கையில் தற்போது இயங்கும் உலகின் முன்னணி புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களில் ஒன்றாக Kantar LMRB இனால் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படும் ஆய்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றியாளர்களைத் தெரிவு செய்கின்றது. இலங்கையர்களுக்கு மிகவும் நெருக்கமான மற்றும் அபிமானம் வென்ற வர்த்தக நாமங்கள், நபர்கள், நிறுவனங்கள் போன்றவற்றை கருத்தாய்வின் மூலம் தெரிவு செய்து மக்கள் அபிமான விருது வழங்கப்படுகின்றது.

இலங்கையில் பயிலல் கட்டமைப்புக்கு உரிய தீர்வுகளை பொருத்தமாக வழங்கக்கூடிய வகையில் நிறுவனத்தின் பங்காளர் ஈடுபாட்டுடனான பயிலல் இடையீடுகள் அமைந்துள்ளன.

# இரண்டாவது அடுக்குமனை நிர்மாணச் செயற்திட்டத்தை தொடங்கவுள்ள Alpha Homes Pvt. Ltd



கொழும்பின் ஆதன நிர்மாணத் துறையில் அண்மையில் காலடியெடுத்து வைத்திருந்த Alpha Homes (Pvt) Ltd தனது இரண்டாவது அடுக்குமனை நிர்மாணச் செயற்திட்டமான Kings View Residencies ஐ தலாஹேனவில் தொடங்கவுள்ளது.

தலாஹேன Kings View Residencies கட்டுபடியான விலையில் வசதியான வாழ்க்கை அனுபவத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. மூலோபாய ரீதியாக மத்திய கொழும்புக்கு அருகில் அமைந்துள்ள தலாஹேன, பத்தரமுல்லை மற்றும் மாலபே ஆகியவற்றுக்கு இடையில் அமைந்துள்ள ஒரு வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் புறநகர்ப் பகுதியாகும். இது பெறுமான அதிகரிப்புடன் சிறந்த முதலீட்டு வாய்ப்பாக அமைகிறது. சர்வதேச தரத்திற்கு அமைவான நிர்மாணம், முழுமையான வசதிகள் மற்றும் நவீன கலைநயங்களுடன், தலாஹேன Kings View Residencies ஆனது அதன் குடியிருப்பாளர்களுக்கு அதிநவீன வாழ்க்கை அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Alpha Homes (Pvt) Ltd ஒரு மிகவும் திருப்தியான வாடிக்கையாளர் தளத்தைப் பேணிப் பராமரிப்பதில் பெருமிதம் கொள்கிறது. எதிர்காலத்தில் வலுவான வருமானத்துடன் சிறந்த சொத்து மீதான முதலீட்டை உறுதிசெய்து, தங்கள் வாடிக்கையாளர்களுக்கு நேர்மை, நாணயம் மற்றும் அர்ப்பணிப்புக்கு அதிமுக்கியத்துவம் அளித்துள்ளது. ஒவ்வொரு அம்சத்திலும் துல்லியமாக கவனம் செலுத்தி, கட்டுபடியான விலையில் தரமான அடுக்குமனையை வழங்கும் திறன் ஆகியவற்றில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பு ஆதன நிர்மாணத் துறையில் நிகரற்றது.

"ஆதனநிர்மாணங்கள்தொடர்ந்துவளர்ச்சிகாணும் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு முதலீட்டுக்கான பிரதிபலனை தொடர்ந்தும் வழங்க எல்லாராலும் முடியாத ஒரு துறையில், வாடிக்கையாளரின் முதலீடு நேர்மை மற்றும் நம்பிக்கையுடன் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கு Alpha Homes (Pvt) Ltd அதிமுக்கியத்துவம் அளிக்கிறது. எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த இல்லங்களை உலகத் தரம் மற்றும் கட்டுபடியான விலையில் வசதியுடன் அமைத்துத் தருவதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்," என்று Alpha Homes (Pvt) Ltd நிறுவனத்தின் ஸ்தாபகரும், பணிப்பாளருமான கிஹான் அத்தலே கூறினார்.

# இலங்கையில் சமையல் புரட்சி "Janalipa" மற்றும் 'EZ Industrial Stove' அடுப்பை அறிமுகப்படுத்தும் EZ Stove



வழக்கமான LPG சமையல் எரிவாயு அடுப்புகளுக்கு மாற்றீடாக, காப்புரிமை பெற்ற, கரியால் இயங்கும் இரண்டு புதிய தயாரிப்புகளை Janalipa மற்றும் EZ Industrial Stove அடுப்பை EZ Stove அண்மையில் வெளியிட்டுள்ளது. EZ Stove என்பது ஒரு திருப்புமுனை மிக்க சமூக நிறுவனமாகும். இது சமூகங்களுக்கு அதிகாரம் வழங்கும் அதே நேரத்தில் சூழல் மற்றும் பொருளாதாரம் தொடர்பான விடயங்களிலிருந்து LPG அடுப்புகளுக்கு நிலைபேறான ஒரு மாற்றீடாகும். குறிப்பாக தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடியின் கீழ் இது ஒரு சிறந்த மாற்றீடாகும். தற்போது வரை, அசல் வடிவமைப்புடனான 100,000 இற்கும் அதிகமான EZ Stove அடுப்புகள் விற்பனையாகியுள்ளன. இதன் மூலம் அத்தகைய மாற்றீட்டை நோக்கிய பொது மக்களின் ஆர்வம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

Janalipa என்பது EZ Turbo Charcoal Stove கரி அடுப்பின் செலவு குறைந்த பதிப்பாகும். தேங்காய் ஓட்டு கரி மூலம் எரியும், அதிக வெப்பநிலையைத் தாங்கும் வகையிலான களிமண்ணால் அதன் உடல் ஆக்கப்பட்டுள்ளதுடன், உயர் தரத்திலான வார்ப்பு இரும்பினால் செய்யப்பட்ட தட்டு ஆகியவற்றை இது கொண்டுள்ளது. வேகமான விசிறி (turbo fan) வசதியானது, குறைந்த புகை, குறைந்த சாம்பல் போன்றவற்றிற்கு உதவுகிறது. இது தொடர்பான மேலதிக தகவலுக்கு அல்லது கொள்வனவுக்கு, www.janalipa.lk இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

EZ தொழில்துறை அடுப்பானது, ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் போன்றவற்றில், அனைத்து வகையான சமையலுக்குமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அடுப்புக் கரி, தேங்காய் ஓடுகள் அல்லது மரத் துண்டுகள் மூலம் வெப்பத்தை ஏற்படுத்த முடியும். இதில் 3 அடி வரையான விட்டம் கொண்ட பாத்திரங்களை வைத்து சமைக்க முடியும். இதில் உள்ள turbo fan வசதியானது, வேகமாக சமைப்பதற்கு வசதியளிக்கிறது.

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருது, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் அகில இலங்கை புத்தாக்க விருது, தேசிய விஞ்ஞான அறக்கட்டளையின் (NSF) பல்வேறு பரிசுத் தொகைகள் மற்றும் விருதுகள், தொழில்நுட்ப விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையின் பொறியியலாளர்கள் நிறுவகத்தின் (IESL) அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு பாராட்டுகளையும் பரிசுகளையும் EZ Stove வென்றுள்ளது.

# எலும்பியல் மறுசீரமைப்பு முன்னோடியான OPPO உடன் பங்காண்மையில் ஹேமாஸ் பார்மசியூட்டிகல்ஸ்



ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையின் முன்னணி மருந்துப் பொருட்கள் இறக்குமதியாளரும் விநியோகத்தருமாகத் திகழும் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ், இலங்கையில் OPPO எலும்பியல் மறுசீரமைப்பு தயாரிப்புகளை விநியோகிக்கும் புதிய உத்தியோகபூர்வ விநியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பிரசன்னத்தைக் கொண்ட அமெரிக்க நிறுவனமான OPPO, 2007 ஆம் ஆண்டில் உள்நாட்டு சந்தையில் பிரவேசித்தது முதல் எலும்பியல் மறுசீரமைப்பு மருந்துப் பொருட்கள் பிரிவில் சந்தை முன்னோடியாகத் திகழ்கின்றது. இலங்கையினுள் OPPO தயாரிப்புகளை விநியோகிக்கும் உத்தியோகபூர்வ விநியோகத்தராக ஹேமாஸ் இயங்கும் என்பதுடன், மருந்துப் பொருள் உற்பத்தியாளருக்கு சந்தையில் காணப்படும் கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு பரந்தளவு சென்றடைவையும், உறுதியான பிரசன்னத்தையும் வழங்கும்.

ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் மற்றும் ஹேமாஸ் சேர்ஜிகல்ஸ் அன்ட் டயக்னொஸ்டிக்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் ஜுட் பெர்னான்டோ இந்தப் பங்காண்மை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "எலும்பியல் மறுசீரமைப்பு மருந்துப் பொருட்கள் விற்பனையில் சந்தையில் முன்னோடியாக OPPO திகழ்வதுடன், தொழிற்துறையில் உறுதியான தலைமைத்துவத்தை ஹேமாஸ் கொண்டுள்ளது. இந்நிலையில் இலங்கையில் அவர்களின் உற்பத்திகளை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வதற்கான நம்பகமான விநியோகத்தராகவும் திகழ்கின்றது. இந்தப் பங்காண்மையினூடாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒன்றிணைவுகள், சுகாதார பராமரிப்பு சேவைகள் வழங்குநர்களுடன் நாம் கொண்டுள்ள உறவுகளுடன் பொருந்துவதாக அமைந்துள்ளதுடன், OPPO இன் பரந்தளவு தயாரிப்புகளை நோயாளர்களுக்கு விநியோகிப்பதற்கு எமக்கு வாய்ப்பை வழங்கியுள்ளது." என்றார்.

# சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழில்துறையின் மேம்பாட்டிற்காக ரூபா 5 மில்லியன் முதலீடு

யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பிரதான வர்த்தகநாமமான சன்லைட், 'மனுதம் வியமன' செயற்திட்டத்தினூடாக தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள ஆடைத்தொழில் துறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்த உதவுவதற்காக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவுமற்றும் சிங்கர் பெஷன் அக்கடமி ஆகியவற்றுடன் கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ளது.

தொற்று நோய் மற்றும் அதன் தொடர்ச்சியான பொருளாதார சவால்களால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் வளர்ச்சியை தொடர்ந்து பேணுவதில் சன்லைட்டின் அர்ப்பணிப்பை இந்நிகழ்ச்சித்திட்டம் காண்பிக்கின்றது.

ஆடைத் தொழிற்துறை மீது கவனம் செலுத்தும் இத்திட்டம் 10,000 தொழில் முயற்சியாளர்களை இலக்குவைத்து வணிக அடிப்படைகள் குறித்த இலவச செயலமர்வுகளை நடத்துவதற்காக சிங்கர் பெஷன் அக்கடமியுடன் கைகோர்க்கும். அவர்கள் தமது நிபுணத்துவ விரிவுரையாளர்கள் அணியின் மூலமாக இலவச ஒன்லைன் செயலமர்வுகளை நடாத்துவர். இத்திட்டத்திற்காக பதிவை மேற்கொண்டுள்ள பங்கேற்பாளர்களில் 250 பேருக்கு பண உதவி வழங்கப்படவுள்ளதுடன் இதனை அவர்கள் தங்கள் வணிகத்தின் தரத்தை மேம்படுத்த பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த செயலமர்வில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் இதற்கான பதிவை www.manudamviyamana.lk எனும் இணையத்தளத்தினூடாக மேற்கொள்ளமுடியும்.




இந்த மூலோபாய ஒத்துழைப்பின் ஆரம்பத்தை குறிக்கும் வகையில் விளையாட்டு அமைச்சின் டங்கன் வைட் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

# சிறந்த தேசிய கைத்தொழில் முயற்சியாளருக்கான தங்க விருது QUIK PAK நிறுவனத்துக்கு



தேயிலை பொதியிடல் சார்ந்த உற்பத்தியில் முதன்மை நிறுவனமாக விளங்குகின்ற QUIK PAK தனியார் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் (IDB) ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த கைத்தொழில் முயற்சியாளருக்கான விருது விழாவில் பொதியிடல் மற்றும் கடதாசி சார்ந்த உற்பத்திபிரிவின் பாரியளவிலான பிரிவின் தங்க விருதை வென்றுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச ஆகியோரின் தலைமையில் கொழும்பு வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் வெகுவிமரிசையாக நடைபெற்ற விருதுவிழாவில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் மொஹமட் அஜ்மால் தமக்கான தங்க விருதை பெற்றுக்கொண்டார்.

1992 ஆம் ஆண்டில் வெறுமனே 20,000 ரூபாய் மூலதனத்தை கொண்டு சிறியளவில் ஆரம்பிக்கப்பட்ட QUIK PAK நிறுவனம் மிகக்குறுகிய காலத்துக்குள்ளேயே துரிதவளர்ச்சி கண்டது. தேயிலை பொதியிடும் நடவடிக்கைக்கு தேயிலைப் பெட்டிகள் பாவிக்கப்பட்ட காலத்தில் அதைவிடவும் வினைத்திறன் மிக்கதும் இலகுவானதுமான பதிலீடாக தேயிலை பொதியிடல் பைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் அவை இலங்கையில் உற்பத்தி செய்யப்படாது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

# ICRA லங்காவினால் SDB வங்கியின் தரப்படுத்தல் [SL]BBB ஆக உயர்வு



இலங்கையின் முன்னணி நிதிச் சேவைகளை வழங்கும் வங்கியான SDB வங்கியின் தரப்படுத்தல் [SL]BBBஇலிருந்து [SL]BBB ஆக உறுதியான புறத்தோற்றப்பாட்டைக் கொண்டிருப்பதாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. முன்னணி தரப்படுத்தல் முகவர் அமைப்பான ICRA லங்காவினால் இந்த தரப்படுத்தல் உறுதி செய்யப்பட்டிருந்தது. சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலிலும், SDB வங்கி தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வரும் மீண்டெழுந்திறனுடனான வினைத்திறன் மற்றும் வளர்ச்சி போன்றவற்றின் காரணமாக இந்த தரப்படுத்தல் உயர்வைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்பு வழங்குவதுடன், மொத்தத் தேசிய உற்பத்தியில் 53 சதவீத பங்களிப்பை வழங்கும் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரளவு வர்த்தகத் துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் SDB வங்கி தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதுடன், பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் பணிகளையும் மேற்கொள்கின்றது. இவற்றுடன் இலங்கை மக்கள் மத்தியில் டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் தனது செயற்பாடுகளில் அறிமுகம் செய்திருந்தது. சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC), நெதர்லாந்து அபிவிருத்தி நிதிக் கம்பனி (FMO) மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பெல்ஜியம் முதலீட்டு கம்பனி (BIO) ஆகிய பாரிய முதலீட்டாளர்களின் ஊக்குவிப்புடன் இந்த இலக்குக்கு வலுவூட்டப்பட்டுள்ளது.

# "இலங்கையின் பயண ஒப்பந்தங்கள்" சுற்றுலா மற்றும் பிரயாண துறையில் புரட்சி



டிராவல் லீட் லங்கா (பிரைவேட்) லிமிடெடினால் இயக்கப்படும் டெஸ்டினேஷன் மார்க்கெட்டிங் தளமான "ஸ்ரீ லங்கா டிராவல் டீல்ஸ்", சுற்றுலாத் துறையை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் வரம்புகளை மனதில் கொண்டு, இலங்கை பயண ஒப்பந்தங்கள் தளமானது அனுபவமிக்க இலக்கு முகாமைத்துவ நிறுவனங்களுடன் (DMCs) பணிபுரியும் பாதுகாப்பை வழங்குகிறது.


"ஒரு குறிப்பிட்ட பயணப் பொதியைத் தேர்ந்தெடுப்பதில் விருந்தினர்கள் தகவலறிந்த முடிவெடுக்கும் வழியை வழங்கக்கூடிய ஒரு தளத்தின் தேவை சந்தையில் இருப்பதை நாங்கள் உணர்ந்தோம் இது ஒரு தளத்தில் பாதுகாப்பான சலுகையின் நெகிழ்வுத்தன்மையையும் நம்பிக்கையையும் அவர்களுக்கு வழங்குகிறது. இது பயனர்களுக்கு நட்பானது" இது DMC களுக்கு தங்கள் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கும் சிறந்த வருவாய் வளர்ச்சியைப் பெறுவதற்கும், பூஜ்ஜிய சந்தைப்படுத்தல் முயற்சியுடன் உண்மையான முன்னணிகளுடன் இணைவதற்கும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது என்று Travel Lead Lanka (Pvt) Ltd இன் நிர்வாக இயக்குநர் ஷார்ம் பாஸ்டியன்ஸ் கூறினார்.

சுற்றுலாவை உருவாக்கும் முக்கிய சந்தைகளில் கவனம் செலுத்தும் திட்டங்களுடன், இலங்கை பயண ஒப்பந்தங்கள் சாத்தியமான புதிய சந்தைகள் மற்றும் வெளிச்செல்லும் பயணம் மற்றும் ஊவா மாகாணத்தின் பிரதி தலைமை செயலக அலுவலகம் (நிர்வாகம்) ஆகியவற்றின் அடிப்படையில் விரைவான மீட்சியைக் காட்டும் சந்தைகளையும் கவனிக்கும்.

2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து, சர்வதேச மற்றும் உள்நாட்டுப் பயணங்களுக்கான 'புதிய இயல்பான' அம்சத்துடன் தொடர்புடைய பண்புகளுக்கு ஏற்றவாறு, உலகளாவிய பயணச் சந்தை பல மாற்றங்களைக் கண்டுள்ளது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






## மேஷம்

உங்கள் ராசியில் ராகு பகவானும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிப்பதால் குடும்ப பிரச்சினைகள் அதிகரிக்கும்.அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி காண இயலும்.பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைப்பது அரிது. வாழ்கைத் துணையின் உடல் நலத்துக்காக செலவிடும் சூழ்நிலை உண்டு. பழைய வேலைக்கே செல்லலாமா என்ற சிந்தனை தோன்றும்.யோசித்து செயல்பட வேண்டிய நேரம் இது.

## ரிஷபம்

இதுவரை உங்கள் ராசியில் சஞ்சரித்த ராகு இப்பொழுது மேஷ ராசியில் சஞ்சரிப்பது நன்மைதான். அதே நேரம் கேது பகவான் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார்.இதனால் எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும்.எளிதாக முடிய வேண்டிய பிரச்சினை கொஞ்சம் இழுபறிக்கு பின்னரே முடிவுக்கு வரும். தூர தேசம் செல்லும் வாய்ப்பு கைநழுவிப் போகலாம். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துகொள்ளுங்கள்.கடன் சுமை குறையும்.சொத்து விற்பனையால் வரவு உண்டு.

## மிதுனம்

மேஷ ராசியில் ராகுவும் துலாம் ராசியில் கேதுவும் சஞ்சரிக்கின்றனர். இதுவரை உங்கள் ராசிக்கு 12இல் இருந்த ராகு லாப ஸ்தானத்திற்க்கு செல்வது யோகம்தான். தடைகள் விலகும். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். திறப்பு விழாக்களில் கவனம் செலுத்துவீர்கள்.கேதுவின் சஞ்சாரத்தால் எதிரிகள் விலகுவர். உத்தியோகத்தில் உயர் பதவி கிடைப்பதற்கான அறிகுறி தென்படும்.புதிய வாகனைங்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

## கடகம்

மேஷ ராசியில் ராகுவும் துலாம் ராசியில் கேதுவும் சஞ்சரிக்கின்றனர். 10ஆம் இடத்தில் ராகு பகவான் சஞ்சரிப்பதனால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொழில் முதலீட்டுக்கு பணம் இல்லையே என கவலைப்பட்டவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். சுக ஸ்தானத்தில் கேது இருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை.

## சிம்மம்

மேஷ ராசியில் ராகுவும் துலாம் ராசியில் கேதுவும் சஞ்சரிக்கின்றனர். 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகு வால்ஒளிமயமான எதிர்காலம் உருவாகும்.நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கும்.புதிய தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும். 3ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் உடன்பிறப்புக்கள் வழியில் செலவு ஏற்படும். உறவினர் இல்ல சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள்.வழக்குகள் சாதகமாகும்.

## கன்னி

இதுவரை உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தில் சஞ்சரித்த ராகு பகவான் அட்டமத்தில் சஞ்சரிக்கிறார். அதே நேரம் கேது 3ஆம் இடத்தில் இருந்து 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இந்த கிரக பெயர்ச்சிகள் அவ்வளவு நல்லதல்ல.கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. கொள்கைபிடிப்போடு செயற்பட முடியாது.பல இடையூறு வந்துசேரும்.அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது.ராகு கேதுவிற்குரிய சர்ப்ப சாந்தி பரிகாரங்களை அனுகூல நாட்களில் செய்து வருவதால் நன்மைகளை பெறலாம்.

## துலாம்

மேஷ ராசியில் ராகுவும் துலாம் ராசியில் கேதுவும் சஞ்சரிப்பதனால் சர்ப்பதோஷம் உங்களுக்கு வரப்போகிறது. இதனால் ஏற்றமும் இறக்கமும் கலந்த வாழ்கை அமையும். எப்படியேனும் கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடிவிடும்.இதுபோன்ற காலங்களில் நாக தலங்களுக்கு சென்று யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்தி பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.கேது பலத்தால் உடல் நலத்தில் தொல்லைகளும் மருத்துவ செலவும் ஏற்படும்.

## விருச்சிகம்

மேஷ ராசியில் ராகு பகவான் சஞ்சரிக்கிறார். இதுவரை உங்கள் ராசியில் சஞ்சரித்து வந்த கேது இப்பொழுது 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார்.எனவே சர்ப்பதோஷத்தில் இருந்து விடுபட்டு சந்தோஷத்தை காணப்போகிறீர்கள்.உங்களுக்கு அஷ்ட லட்சுமி யோகம் இந்த மாதம் ஏற்படுகிறது.தொழிலில் எதிர் பார்த்த லாபம் கிடைக்கும்.தைரியமும் தன்னம்பிகையும் கூடும். சுப காரிய பேச்சுக்கள் முடிவாகும். கேதுவின் சஞ்சாரத்தால் புதிய வாகன யோகம் உண்டு. புதிய தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும்.

## தனுசு

மேஷ ராசியில் ராகுவும் துலாம் ராசியில் கேதுவும் சஞ்சரிக்கின்றனர்.உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் பிள்ளைகள் வழியில் கல்வி,வேலைவாய்ப்பு தொடர்பாக நல்ல தகவல் கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக ஏதேனும் பஞ்சாயத்துக்கள் நடைபெற்றால் அது உங்களுக்கு சாதகமாக அமையும். பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் உண்டு.உடல் நலத்தில் மட்டும் கொஞ்சம் கவனம் தேவை.

## மகரம்

உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தில் ராகுவும் 10ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெற்றோர் வழி ஆதரவு குறையும்.பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தீர்த்துக்கொள்வது நல்லது.வீட்டை பழுது பார்ப்பதில் கவனம் செலுத்துவீர்கள். பயணங்கள் பயன் தரும். கேது பலத்தால் உத்தியோகத்தில் சில இடையூறுகள் வந்தாலும் அதை சமாளித்து விடுவீர்கள்.இக்காலத்தில் சர்ப்பசாந்தி பரிகாரங்களை மேற்கொள்ளுங்கள்.

## கும்பம்

மேஷ ராசியில் ராகுவும் துலாம் ராசியில் கேதுவும் சஞ்சரிக்கின்றனர்.உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தில் ராகுவும் 9ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உடன்பிறப்புக்குள் பிரச்சினைகள் உருவாகும்.தொழில் வளர்ச்சியில் சில குறுக்கீடுகள் வரலாம். எதிரிகன் பலத்தை அறிந்துகொண்டு செயற்படுங்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திடீர் இடமாற்றங்கள் உருவாக வாய்ப்பு உண்டு.

## மீனம்

மேஷ ராசியில் ராகுவும் துலாம் ராசியில் கேதுவும் சஞ்சரிக்கின்றனர். உங்கள் ராசிக்கு 2இல் ராகுவும் 8இல் கேதுவும் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. தடைகளும் குறுக்கீடுகளும் வரத்தான் செய்யும். புது முயற்ச்சிகளில் அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை கைகொடுக்கும்.கேதுவின் பலத்தால் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்து பேசுபவர்களின் எண்ணிக்கை கூடும்.பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். சர்ப்ப சாந்தி பரிகாரங்களை செய்வது நல்லது.

# மட்பாண்டத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட சறோஜா



மட்டக்களப்பு மாவட்டம் பெரியபோரதீவு கிராமத்திலிருந்து கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நான் மட்பாண்ட தொழிலைத்தான் செய்து வருகின்றேன். இருந்தும் இதனால் எனக்கு பெரியளவில் வருமானம் கிடைப்பதில்லை. என்ன செய்வது நாம் பழகிய தொழில் அது. வேறு தொழில் செய்ய முடியாது என்பதால் இதனை மேற்கொண்டு வருகின்றேன். எனினும் நாளாந்த செலவுகளைச் சமாளிக்கும் அளவுக்குத்தான் இதன்மூலம் வருமானம் கிடைக்கின்றது. களிமண்ணைக் கொண்டு நாம் சமையலுக்குரிய சட்டி பானைகள், கூசா உள்ளிட்ட பொருட்கள், அடுப்புக்கள், தேனீர் குவளைகள், தயிர் முட்டி, பெரிய பானைகள், உள்ளிட்ட பல பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றோம்

எமது வீட்டுக்கு ஒரு சிலர்தான் தேடி வந்து கொள்வனவு செய்வார்கள், கோயில் திருவிழாக் காலங்களில்தான் அதிகளவு பொருட்கள் விற்பனையாகும். ஆனாலும் தற்போது ஏற்பட்டிருக்கின்ற கொரோனா காராணத்தால் ஆலய திருவிழாக்களும் இல்லாமல் போயுள்ளன. இதனால் எமக்கும் விற்பனை முற்றாக இல்லாமல் போய்விட்டது. தற்போதைய நிலையில் தொலைவில் இருந்து வரும் ஒரு சில மொத்த வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றார்கள். அதுவும் தற்போதைய நிலையில் மிகவும் குறைவாகத்தான் உள்ளது.



எனது கணவரும் கூலி வேலைதான் செய்கின்றார். நான் இந்த மட்பாண்ட தொழில் செய்துதான் பிள்ளைகளையும் படிப்பித்து, எனது குடும்பத்தையும் கவனித்து வருகின்றேன். எனக்கு 2 பிள்ளைகள் மூத்த மகன் 10ஆம் ஆண்டு படிக்கின்றார். அடுத்தவர் மகள் 4ஆம் ஆண்டு படிக்கிறாள். நான் மட்பாண்ட தொழில் செய்து, சீட்டுபிடித்து சேமித்தும், கடனும் பெற்றுத்தான் இந்த வீட்டைக் கட்டினோம். ஆனாலும் இன்னும் எமது வீட்டை பூரணப்படுத்தக் கூட முடியாதுள்ளது.



எமக்கு சமூர்த்தி உதவித் திட்டத்தின் கீழ் மட்பாண்ட உற்பத்திக்குப் பயன்படுத்தும் சாதனம் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இதனைவிட எமக்கு யாரும் உதவவில்லை. எமது முயற்சியினால்தான் களிமண், உரிமட்டை வைக்கோல், மணல் உள்ளிட்டவற்றைக் கொள்வனவு செய்து வருகின்றோம். என தெரிவிக்கின்றார் மட்டக்களப்பு மாவட்டம் பெரிய போரதீவைச் சேர்ந்த ஈஸ்வரன்சறோஜா.

இருசக்கர உழவு இயந்திரத்தால் (சிறிய மெசின்) ஒரு லோட் களி 5000 ரூபா, அதே மெசினால் ஒரு லோட் உரிமட்டை 3000 ரூபா, அதுபோல் ஆற்று மணல், வைக்கோல் போன்றவற்றையும் கொள்வனவு செய்கின்றோம். ஆனாலும் தற்போது பிரதான மூலப்பொருளான களியைப் பெறுவது மிகவும் கடினமாகவுள்ளது. பட்டிருப்பு பாலம் அமைந்துள்ள பகுதியில்தான் நாம் இதுவரையில் களி எடுத்து வருகின்றோம். அப்பகுதியிலுள்ள வயல் உரிமையாளர்கள் தொடர்ந்து களி எடுக்க முடியாது என மறுப்புத் தெரிவிக்கின்றார்கள்.

தினக்கூலிகள் போன்று அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நகர்ந்து கொண்டிருக்கும் எமது இத்தொழிலை மேலும் மேம்படுத்த, தற்போதைய நிலையில் எமக்கு மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதுதான் மிகவும் கடினதாகவுள்ளது. மனிதநேய உள்ளம் படைத்தவர்கள், அல்லது தனவந்தர்கள், அதற்கும் மேலாக அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களோ எமது தொழிலுக்குத் தேவையான குறிப்பிட்ட அளவான மூலப் பொருட்களைப் பெற்றுத் தருவார்களோயானால் அது எமது வாழ்வில் பெரும் வாய்ப்பாக அமைந்துவிடும்.

எமது பாரம்பரியத்தொழிலான மட்பாண்டத் தொழிலைப் பழகுவதற்கு தற்காலத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் யுவதிகள் முன்வருவது குறைவாக உள்ளது. கைத்தொழில் ஒன்றைப் பழகிக் கொண்டால் நாளாந்த வருமானத்திற்காவது தொழிலைச் செய்து வருமான மீட்டலாம். எனவே யாரும் தொழில் இல்லை என்று வீட்டிலிருந்தால் சரி வராது. தொழில் தெரிந்த எம்மைப் போன்றவர்களிடம் வந்தால் அதனை நாம் அவர்களுக்கு விருப்பத்துடன் பழக்கி விடுவோம். மட்பாண்ட உற்பத்தி தொழிலையாவது பழகிக் கொண்டாலே அது அவர்களது வாழ்வை மேலும் முன்னேற்றும். என்று ஆலோசனையையும் தெரிவிக்கின்றார் சறோஜா.

வருடந்தோறும் மார்ச் மாதத்தில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு அத்தினத்தில் சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் சாதனை படைத்த பெண்கள் கௌரவிக்கப் படுகின்றனர். சறோஜா போன்று இன்னும் எத்தனை, எத்தனையோ பெண்கள், கிராமங்களின் மூலை முடுக்குகளில் இவ்வாறு களி, உள்ளிட்ட பல மூலப்பொருட்களைக் கொண்ட வாழ்வாதாரங்களை மேற்கொள்கின்ற நிலையில் இவ்வாறான பெண்களும், மதிக்கப்படல் வேண்டும்.

எனினும் சிறு கைத்தொழில் திணைக்களம், போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகம், மற்றும் சில தன்னார்வ அமைப்புக்களும், அவ்வப்போது சிற்சில உந்துசக்திளை வழங்கி வந்தாலும், இவ்வாறு தொழில் முயற்சியில் ஈடுபட்டு வருபவர்களின் வாழ்வில் மீட்சி இன்றியே காணப்படுவதாக அங்கலாய்க்கின்றனர்.

எனவே மட்பாண்டத் தொழில் செய்து குடும்பத்தைப் பாதுகாத்துவரும் சறோஜா போன்ற பெண்கள் வெளி உலகிற்கு வெளிக்கொணரப்படும் பட்சத்திலாவது அவர்களது துயரங்கள் துடைக்கப்பட வாய்ப்பாய் அமையும் எனவே சறோஜா போன்ற முயற்சியுடைய மகளிருக்கு உதவுவதற்கு மகளிர் அமைப்புக்களும், துறைசார்ந்தவர்களும் முன்வரவேண்டும் என்பதுவே அவர்களின் எதிர்பார்ப்பு.

வ.சக்திவேல் ...

# மட்டக்களப்பு வருடாந்த விழாவில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கான விழா வருடந்தோறும் நடைபெறுவது வழக்கத்திலிருப்பவைகளிலொன்று. விளையாட்டு வீரர்களை, கலைஞர்களை, மூதறிஞர்களை கௌரவிப்பது போன்று இதுவும் ஒன்று. இந்த நாட்டின் உணவு உற்பத்தியில் ஈடுபட்டு நமக்கெல்லாம் உணவளித்து பசிப்பிணிபோக்கும் விவசாயப் பெருமக்களை அவர்கள் படைத்த சாதனைகளுக்காக கௌரவித்து, பாராட்டுவது அவர்களுக்கு நாம் செலுத்தும் ஒரு நன்றிக்கடனாக பார்க்கப்படுகிறது. நன்றி மறப்பது நன்றல்ல.

இந்த விழா 2021ஆம் ஆண்டுக்கானது. மட்டக்களப்பு மாவட்ட விவசாய விரிவாக்கல் பிரிவின் மிகச் சிறப்பான திட்டமிடலில் அண்மையில் நடைபெற்றது. விழாவுக்கு முத்தாய்ப்பாக மாகாண ஆளுநர் திருமதி அனுராதா ஜகம்பத், விவசாய அமைச்சின் செயலாளர் .கே.ஜி. முத்துபண்டா, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.குசைன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை விவசாயிகளுக்கு மகிழ்சியை ஏற்படுத்தியிருந்தது.




மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறத்தாள 80 ஆயிரம் விவயாயிகள் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களது செயற்பாடுகள் வெவ்வேறானவை. அவற்றை மட்டக்களப்பு விவசாய விரிவாக்கல் திணைக்களம் நகர்ப்புற தோட்டச் செய்கை, முன்னோடி நெற்செய்கை, மறு பயிர்ச்செய்கையில் விதை உற்பத்தி, சிறந்த விவசாய நடைமுறையூடான பயிர்ச் செய்கை, வர்த்தக ரீதியிலான பயிர்ச் செய்கை, அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதியில் பயிர்ச் செய்கை, விவசாயத்துறையில் சிறந்த தொழில் முயற்சியாண்மை, விவசாய உபகரணங்களை கண்டபிடித்தலும், அதனை உருவாக்குதலும் பயன்படுத்தலும் என்ற வகையில் அவைகளை 8 வகையாக வகைப் படுத்தியிருக்கிறது, இவ்வாறான தலைப்புகளின் கீழே விவசாயிகள் தங்களது விவசாய நடவடிக் கைகளை செய்து வருகிறார்கள் என்பதை சற்று ஆழந்து பார்ப்பவர்கள் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இவ் வகைப்படுத்தலினூடாகவே சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்படல் வேண்டும் என்ற ஒழுங்கமைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வருகின்ற 44 விவசாயப் போதனாசிரியர்களின் பகுதியிலிருந்தும் ஏற்கனவே குறிப்பிட்ட 8 வகையான வெவ்வேறு பிரிவுகளுக்கும் தனித்தனியாக சிறந்த விவசாயிகளை ஒவ்வொரு வகைக்குமாக 5 பேர் என்ற எண்ணிக்கையில் தெரிவு செய்து அவர்களை ஒன்றிலிருந்து ஐந்து வரையாக இறங்கு வரிசையில் தரப்படுத்தப்பட வேண்டும் என்ற கருவூலத்தோடே போட்டிகள் நடைபெற்றன. தெரிவுக்குழு வேறாக இருந்தபோதிலும் இவைகளுக்கு அவ்அவ் பகுதிகளின் விவசாயப் போதனாசிரியர்களே பொறுப்பாக இருந்து போட்டிகளை ஒழுங்கு படுத்தியமையை அவதானிக்கக் கூடியமாக இருந்தது. உண்மையில் ஒரு விவசாயப்போதனாசிரியரின் பிரிவு சிறப்பான இடத்தைப் பெறுகிறதென்பதில் அப்பகுதியின் விவசாயப் போதனாசிரியரின் வகிபாகம், அர்ப்பணிப்புடனும், கடமையுணர்வடனும் கூடிய சேவையாக இருக்கும் என்பது உண்மை. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும், வெற்றிக் கேடயமும் சான்றிதழும் வழங்கப்பட்டன. இதைவிட 1ம், 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்றவர்களுக்கு பணப் பரிசுள் வழங்கப்பட்டன.1 ஆம் இடத்தைப் பெற்றவருக்கு 20 ஆயிரம் ரூபாவும்,, 2ஆம் இடத்திற்கு 15 ஆயிரம் ரூபாவும், 3ஆம் இடத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும், 4ஆம் இடத்திற்கு 5அயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன. 5ம் இடத்திற்கு பணப்பரிசு வழங்கப்படவில்லை.



விவசாயத்துறையில் சிறந்த தொழில் முயற்சியாண்மைக்கான முதலாம் பரிசைப் மயிலம்பா வெளியைச் சேர்ந்த ஜெயராஜா பெற்றிருந்தார். ஜெயராஜா இந்த விழா பற்றி கருத்துத் தெரிவிக்கையில், நமது நாட்டு மக்கள் நமது நாட்டில் உற்பத்தியாகும் தானியவகைகள், பழவகைகள், காய்கறிவகைகள், மாட்டுப்பால் என்பனவற்றை உண்டு பழக்கப்பட்டவர்கள். இந்த வகையான மூலப் பொருள்களில் தயாரிக்கப்படும் உணவு வகைகளிலிருந்தும் அவர்கள் விலகிச் செல்லமாட்டார்கள். ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்த மூலப் பொருட்களுக்கு வலுச் சேர்த்து உணவுப்பண்டங்கள் தயாரிக்கப் படுவதில்லை என்பது ஒருபுறமிருக்க, அவை வியாபார மட்டத்தில் தயாரிக்கப்பட வேண்டும் என்ற எண்ணமும் தோன்றவில்லை. இது எம்மத்தியில் இருக்கின்ற ஒரு பாரிய குறைபாடு. ஒரு புதிய முயற்சியில் இறங்குவது ஒரு சவால்தான். சவாலைத் தாண்டினால்தானே வெற்றி கிடைக்கும் இதுவே யதார்த்தம். இந்தக் குறைபாடு இருப்பதால், எமது மாவட்ட மக்கள் வெளிநாட்டு உணவுப் பண்டங்களில் ஈர்க்கப்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது. ஒரு பொருள் கிடைக்காதபோது அதற்கு ஈடாக இன்னொன்றை நாடுவது மனித சுபாவம். இது தவறாகாது. மக்களுக்கான தேவைக்கும், அத் தேவையை வழங்கலுக்குமிடையே ஒரு இடைவெளி இருப்பதை நான் உணர்ந்தேன். அதே நேரத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் என்றும் தொழிலற்றோர், வருமானமற்றோர் என்றும் பெரிய எண்ணிக்கையில் அனேகர் இருப்பதையும் நான் அறிந்தேன். இந்த இரு வெவ்வெறு பிரிவுகளையும் ஒன்றிணைத்து உணவுப் பொருட்களை வலுச்சேர்த்து தயாரிப்பது பிரயோசனமான விளைவைத் தோற்றுவிக்கும் என திடமாக நம்பினேன். அந்த நம்பிக்கைதான் உதவும் கரங்கள் என்ற பெயரில் ஒரு தொழிற்சாலை உருவாக காரணமாக விருந்தது.




இந்தத் தொழிற்சாலை உணவுப் பாவனைச் சட்டத்தின் கீழும், வியாபாரச் சட்டத்தின் கீழும் பதிவு பெற்றிருக்கிறது. இங்கே அரிசியை மாவாக்கி வறுத்தும், வறுக்காமலும் பொதி செய்யப் படுகிறது, அதேபோன்று மஞ்சள் அரைக்கப்பட்டு பொதி செய்யப்படுகிறது. இப்படி 8 வகையான உணவு தயாரிக்கும் மூலப் பொருட்களை நாம் வலுச்சேர்த்து தயாரித்து வருகிறோம். எங்களது தொழிற்சாலையில் 6 வகையான அரைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன, அதேபோல பொதி செய்யும் 2 இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மின்சாரச் செலவீனத்தை குறைப்பதற்காக விறகடுப்பு பாவிக்கப்படுகிறது. எமது ஸ்தாபனத்தைப் பொறுத்தவரையில் சந்தை வாய்ப்பு அதிகம் உ ண்டு. இப்போது நுகர்வோரின் காலடிக்குச் சென்று விற்பனையில் ஈடுபடும் செயற்பாட்டை ஆரம்பித்திருக்கிறோம். இதனால் விற்பனை அதிகரிப்பும், விளம்பரமும் எமது ஸ்தாபனத்திற்கு கிடைக்கின்றது. அதற்கென இரண்டு பிரத்தியேக வாகனங்கள் எம்மிடம் உண்டு.

(28ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.எஸ்.தவபாலன் ...
புளியந்தீவு குறூப் நிருபர்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






# கொட்டாஞ்சேனையின் வரலாறு

இன்று கொழும்பின் பதினைந்து வலயங்களில் 13 வது வலயமாக கொட்டாஞ்சேனையும், கொச்சிக் கடையும் காணப்படுகிறது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என பல்லின மக்கள் கலந்து வாழும் இந்தப் பகுதியில்; பரதவர், மலையாளிகள், கொழும்பு செட்டி போன்ற சமூகங்களும் குறிப்பிடத்தக்க செல்வாக்குடன் வாழ்ந்து வருகின்றன. கொழும்பில் தமிழர் செறிவாக வாழும் வாழிடங்களில் கொட்டாஞ்சேனை முக்கியமானது. தமிழ் தியேட்டர்கள், கோவில்கள்,தமிழ் பாடசாலைகள், தமிழில் பெயரிடப்பட்ட கடைகள் போன்றவற்றை இங்கே காணலாம்.

1856 The Ceylon Almanac and Annual Register for the Year of our lord, ஆண்டறிக்கையில் 49 வது பக்கத்தில் கொழும்பு நகரத்தில் இருந்த இடங்களின் விபரங்களும் அங்கே இருந்த வீடுகளின் எண்ணிக்கையும் பட்டியலிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் கொட்டாஞ்சேனையில் அன்று 253 வீடுகள் இருந்ததாக தெரிகிறது. அதேவேளை அன்றும் அதன் பெயர் கொட்டஹேன அல்ல. அதில் Cotanchina என்று தான் இருக்கிறது என்பதையும் இங்கே கவனிக்க வேண்டும்.கொட்டாஞ்சேனையில் கொட்டாஞ்சினா மில்ஸ் (Cottanchina Mills)என்கிற பெயரில் ஒரு ஆலை john F.Baker, T.W.Hall ஆகியோரால் நடத்தப்பட்டிருப்பதை 1887 இல் வெளியான சிலோன் டிரெக்டரி குறிப்பிடுகிறது.

கொட்டாஞ்சேனையை இப்போது Kotahena என்று அழைக்கப்பட்டாலும் சுமார் ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் கொட்டாஞ்சினா“Cottanchina” என்றே அரச பதிவுகளிலும் காணப்படுகின்றது.1866 இல் வெளியான The Ceylon Directory ; Calender என்கிற நூலில் கொழும்பில் உள்ள பிரதேசங்களின் எல்லைகளைப் பற்றிய விபரங்களைக் காண முடிந்தது. அதில்

“கொட்டாஞ்சினாவின்மேற்கில் கடல் எல்லையாக உள்ளது; வடக்கில், கடல், களனி கங்கை. களனி ஆற்றில் இருந்து ஏரிக்கு செல்லும் கால்வாய் வழியாக, வேந்தர்மெய்டன் போல்டரில் (Vandermeyden's Polder) உள்ள கால்வாயிலிருந்து புனித ஜோசப் தெருவுக்குச் செல்லும் வீதி வழியாக; தெற்கில், பார்பர் வீதி, ஆண்டர்சன் வீதி என்பவற்றை எல்லையாகக் கொண்டிருந்தது.” என்று குறிப்பிடுகிறது.

சிங்கள மொழியில் கொட்டாஞ்சேனையை “கொட்ட + ஹேன” என்பார்கள். அதாவது “கட்டையான மரங்கள்” என்று பொருள் படலாம். அதேவேளை தமிழிலும் “கொட்டான் + சேனை” என்பதற்கு நேரடி தமிழ் வடிவம் அசல் அர்த்தத்தை தருகிறது. 1690களில் வரையப்பட்ட டச்சு வரைபடமான Kaart van het Kasteel De Stad en omstreken van Colomboகொழும்பு கொட்டாஞ்சேனை Coutenchene என என்று குறிப்பிடுகிறது. ஆங்கிலேயர் கால குறிப்புகளில் கொட்டான் சீனா (Cottan China) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி டச்சு மொழியில் “Korteboam” என்றால் கட்டையான மரங்கள் என்று அர்த்தம். கொட்டாஞ்சேனையில் தற்போதைய இராமநாதன் வீதியின் முன்னைய பெயர் “Korteboam Street” என்பதையும் கருத்திற் கொள்க.


இந்தப் பிரதேசம் கொட்டாங்காய் மரத்துக்கு பிரபலமாக இருந்ததாலும், கொட்டாங்காய் உள்ளே இருந்து எடுக்கப்படும் கொட்டை உள்ளூர் “பாதாம் பருப்பு” போல பயன்படுத்தப்பட்டதாகவும் அதன் காரணமாக கொட்டாஞ்சேனை என்று பெயர் வந்திருக்கக் கூடுமென்றும் சில குறிப்புகள் கூறுகின்றன. எனக்கு விபரம் தெரிந்த காலத்தில் கொட்டாஞ்சேனையின் பொன்ஜீன் வீதி சந்தியில் கொட்டாங்காய் மரமொன்று இருந்ததைக் கண்டிருக்கிறேன்.

கொலேஜ் வீதியிலும், இன்னும் பல இடங்களிலும் சிறு வயதில் கொட்டங்காய் பறித்திருக்கிறோம். அவை அந்த மரங்களின் எஞ்சிய எச்சமா என்கிற சந்தேகமே எழுகிறது.

1868 இல் வெளியான Medical Times and Gazette இல் புனித லூசியாஸ் தேவாலயம் “கொட்டன் சீனா” (CottonChina) வில் இருப்பதாகக் குறிப்பிடுகிறது.

கொட்டாஞ்சேனை சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மிகவும் பரபரப்பான பிரதேசங்களில் ஒன்றாக இருந்தது. மேலும் மிகவும் பழமையான வரலாற்றையும் கொண்டது.

1618இல் வெளியான “Conquista temporal, e espiritual de Ceyl□o” என்கிற நூலில் குவேரஸ் (Ferna□ de Queyroz) கொட்டாஞ்சேனையில் அன்று இருந்த கத்தோலிக்க தேவாலயங்களைப் பற்றியும்,பிரபலம் பெற்றிருந்த கிறிஸ்தவப் பணிகளைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.



இயேசுநாதரின் 12 சீடர்களில் ஒருவரான புனித தோமஸ் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் வந்ததாக பிரபலமான கதையுண்டு. அவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை வந்திருந்தபோது இந்தப் பகுதியில் பிரசங்கங்கள் நடத்தியதாக சில ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

'அந்த இடத்தில் தான் இன்றைய ஜிந்துபிட்டி புனித தோமஸ் தேவாலயம் இருப்பதாக பல நூல்களிலும் கூறப்படுகின்றன. புனித தோமஸ் பின்னர் சென்னை மயிலாப்பூரில் இறந்ததாகவும் அந்தக் கதை தொடர்கிறது. இதன் நம்பகத்தன்மைக்கப்பால் இந்த விபரம் பல நூல்களிலும் பதிவு பெற்றிருப்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். மேலும் இந்தப் பிரதேசம் அப்போது மீனவர்கள் வாழ்ந்த பிரதேசமாக இருந்திருக்க வாய்ப்புண்டு.

போர்த்துக்கேயர் ஐநூறு வருடங்களுக்கு முன் வந்த போது இங்கே மிகப் பழமையான நெஸ்டோரியன் சிலுவையை(Nestorian Cross) கண்டெடுத்ததாக கூறப்படுகிறது.

கொட்டாஞ்சேனை தீபதுத்தமாறாமய விகாரை பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விகாரை. பௌத்த மறுமலர்ச்சியின் தோற்றம் இந்த விகாரையிலிருந்து தான் தொடங்கியது.

இலங்கையின் முதலாவது கலவரத்துக்கு காரணமான விகாரையும் இது தான். இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களில் முக்கியமானவர்களில் ஒருவரான கேர்னல் ஒல்கொட் முதலில் வந்தது குணானந்த தேரரை சந்திக்கத்தான்.

அது இங்கு தான் நிகழ்ந்தது. அநகாரிக தர்மபாலவை கவர்ந்த பல நிகழ்வுகள் இங்கு தான் நிகழ்ந்தன. இலங்கையின் பௌத்த கொடி உருவானதும் இங்கு தான். அந்த கொடி முதலில் ஏற்றப்பட்டதும் இங்கு தான். வெசாக் தினம் விடுமுறை தினமாக ஆக்குவதற்காக போராடியதும் இங்கிருந்து தான் அதனை முதலில் அறிவித்ததும் இங்கு தான். தாய்லாந்து இளவரசர் பௌத்த மத பிக்குவாக ஆனதும் இங்கு தான். இப்படி பல பௌத்த வரலாற்று சம்பவங்களுக்கு சொந்தம் இந்த விகாரை.

**கொச்சிக்கடை**

கொழும்பானது ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே ஒரு துறைமுகமாக பலரால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

1874 ஆம் ஆண்டு கொழும்புத் துறைமுகம் விரிவாக்கப்பட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட நீராவிக் கப்பல்கள் நங்கூரமிடும் அளவுக்கு இட வசதி பெருப்பிக்கப்பட்டது. கொழும்பின் அமைப்பையே மாற்றும் வல்லமையை துறைமுகம் பெற்றது. 1890 இல் கப்பல்கள் தரித்து நின்று பழுதுபார்த்து செல்லும் இடமாகவும் மாறியது. எனவே துறைமுகத் தொழிலுக்கு ஆளணியின் அவசியம் உணரப்பட்டது.

துறைமுகத்துக்கு வெளியில் கோட்டையில் வட பகுதியில் துறைமுகத்தோடு அண்டிய பகுதியான கொச்சிக் கடையில் தொழிலாளர்கள் குடியேற்றப்பட்டார்கள். ஆங்கிலேயர் மேற்கொண்ட நகர்ப்புற தொழிலாளர் குடியேற்றங்களில் மிகப் பழமையான குடியேற்றமாக கொச்சிக்கடைக் குடியேற்றத்தைக் குறிப்பிடலாம். கொச்சிக்கடை என்கிற இடப்பெயர் ஆங்கிலேயர்களுக்கு முன்னரே வந்துவிட்டதை அறிவீர்கள்.

கொச்சிக்கடையில் பல தொழிலாளர்கள் குடியேற்றப்பட்டார்கள். இந்தக் குடியேற்றம் கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை, ஜிந்துபிட்டி, ஆட்டுப்பட்டித் தெரு வரை நீண்டது.

கொச்சிக்கடை குடியேற்றம் மட்டுமல்ல; கொழும்புத் துறைமுகத்தின் அன்றைய திடீர் கட்டமைப்பால் தான் இலங்கையின் முதலாவது “இலங்கை வங்கி” (Bank of Ceylon) 1841 இல் உருவாக்கப்பட்டது. அது மட்டுமன்றி கொழும்பு நகரின் மையமான கோட்டைப் பகுதி இலங்கையின் பொருளாதார மையமாக மாறியதும் துறைமுகத்தை மையமாக வைத்துத் தான்.

கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடைப் பகுதிகள் நெடுங்காலமாக தமிழர்கள் செறிவாக வாழும் பகுதி. அதுபோல புறக்கோட்டைப் பகுதியில், நகை வியாபாரம், புடவை வியாபாரம், பலசரக்கு மொத்த விற்பனை, இரும்புகே கடைகள் உட்பட பெரிய கம்பனிகள் வரை தமிழர் வசம் இருந்தன. 1983 கலவரத்தின் போது இந்தப் பகுதிகள் கொள்ளையர்களின் இலக்காக மாறியது.

தமிழர்கள் அதிக சொத்திழப்பை எதிர்கொண்ட பிரதேசங்கள் இவை. இதேசமயம் இனவாதக் காடையர் கும்பல் இலங்கையிலேயே அடிவாங்கி பின்வாங்கி ஓடியதென்றால் அது கொச்சிக்கடையில் தான். கொச்சிக்கடையில் பாதிப்பு மிகவும் குறைவாகவே இருந்தது.

கொட்டாஞ்சேனை இலங்கையின் வரலாற்றில் முக்கிய பதிவுகளை வலுவாக பதித்த இடங்களில் ஒன்று. குறிப்பாக காலனித்துவ கால வரலாற்றுப் பதிவுகளைக் குறிப்பிடலாம். இத்தொடரில் வேறு பல இடங்களில் அவை பதிவு செய்யப்பட்டுள்ளன.

**(தொடரும்)**

# பிறவா அருள் வழங்கும் ஞானாலயம்

## நாம் எதை நோக்கிச் செல்கின்றோம்?

மனிதப் பிறவியின் நோக்கம் தான் என்ன? இயந்திர வாழ்க்கையில் சிக்குண்டு மாயையில் மயங்கி கொண்டு நம்முள் இயங்குகின்ற இயக்கத்தை அறியாமல் மாயை நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஓடிக்கொண்டிருக்கும் மனிதரை நிறுத்திய கோரோனா என்ற நோய் உனக்குள் இயங்குவதை உணரு என்று கூறியது. இல்வாழ்வில் சுகம் வேண்டும், தனம் வேண்டும், தானியம் வேண்டும், நிலம் வேண்டும், நீர் வேண்டும், பொருள் வேண்டும், புகழ் வேண்டும், பிணியற்ற உடல் வேண்டும்.

இவ்விதமே எண்ணுகின்ற மானுடரின் மனங்கள் யாவும் தன்னுள் வீற்றிருக்கும் ஆத்மாவினை உணர வேண்டும். ஆத்மா என்பது என்ன? அது எங்கு உள்ளது என்பதனை அறிந்து கொள்ள வேண்டும். பின்னர் ஆன்ம விடுதலை என்றால் என்ன? எவ்விதம் ஆத்மாவை விடுவிப்பது என்றும் அறிந்துகொள்ள வேண்டும். இக் கலிகாலத்தில் சுய முயற்சியில் ஆத்மாவை அறிவது மிகமிக கடினம். மாயை, கன்மம், ஆணவம் இம்மூன்றும் சூழப்பட்ட ஆத்மாவை விடுவிப்பதே ஆன்ம விடுதலையாகும். அதுவே பிறவா வரம் பெறுவது. பிறவா வரம் முக்தி நிலை இவற்றை எப்படி அடைவது? இந்த பிறவா வரம் குறித்து அற்புத தகவல்கள் ஞானாலயத்தில் வழங்கப்படுகிறது.

ஞானாலயம் எனும் திருக்கோவில், இந்தியாவில் உள்ள புதுச்சேரி மாநிலத்தில் 1997ஆம் ஆண்டில் குரு அன்னை பரிமளா ராஜ்’வினால் நிறுவப்பட்டதாகும். அகத்தியர் தலைமையில், சப்த ரிஷிகளும், முருகப்பெருமான் உடன் 18 ஆற்றல்களும், நவநாதசித்தர்கள், நவதேவியர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட தெய்வீக ஆற்றல்கள் இறங்கிய இடம் இவ்வாலயம் ஆகும். ஜனவரி 18, 1998 அன்று இந்த ஆலயம் திறக்கப்பட்டது. ஞானாலயம் கோவிலின் வடிவமைப்பு, குரு அன்னையின் ஆவிர்பாவத்தில் தோன்றிய அமைப்பாகும். அக்டோபர் 2001இல், 'அணையாதீபம்' ஞானாலயத்தில் ஏற்றப்பட்டது.

கலியுகத்தில் கலங்கரை விளக்கமாக, ஞானத்திற்கு என்றே அமைக்கப்பட்ட ஆலயமாம் ஞானாலயம்தனில் சூரியனின் மையத்தையும் பூமியின் மையத்தையும் இணைக்கும் ஓர் அற்புத 'ஒளிப் பாலம்' குரு அன்னையினால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஒளி பாலத்தின் வழியாக உயர் ஆற்றல்கள் பூமிக்கு இறங்கி வந்து, ஞானாலயத்திற்குள் அமைந்துள்ள மைய ஜோதியில் வீற்றிருக்கிறார்கள்.

நாம் இன்று கலியுகத்தின் இறுதி காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சதுர்யுகத்தின் நான்கு யுகங்களின் தொடக்க நிலையாகிய சத்யயுகம் ஆரம்பித்துவிட்டது. சத்ய யுகத்திற்கான ஆன்ம வித்துக்களை சேகரிக்க, சப்த ரிஷிகள் உட்பட, சித்தர்கள், முருகப் பெருமான், மகா அவதார் பாபாஜி, திருவருட்பிரகாச வள்ளலார், ஷீர்டி சாய் நாதர் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட பலர் உயர் தெய்வீக ஆற்றல்கள் ஞானாலய ஸ் தலத்தில் இறங்கியுள்ளனர்.

இதுவரை எங்கும் வெளியிடப்படாத ஆன்மீக ரகசியங்களையும் மனிம மூளையிலுள்ள அணுவினை பற்றியும், துணை அணுக்கள் பற்றியும், சிறைப்பட்டுள்ள பாதரச ஆன்ம துகள்கள், தலைமை சுரபி மற்றும் அதை சுற்றியுள்ள இதுவரை யாரும் அறிந்திடாத ஆறு சுரபிகள் பற்றியும், சூரிய ஒளியில் உள்ள ஆற்றல்கள் குறித்தும், பல விஞ்ஞானபூர்வமான தகவல்களையும் கடந்த ஐந்து வருடங்களாக, குரு அன்னையின் முதல் சீடர் அவர்களின் மூலம் தினந்தோரும் சிந்தணையின் வாயிலாக உரையாடி, தெரிவித்திருக்கிறார்கள். அவை யாவும் எங்கள் இணையதளத்திலும், யூட்டியூப்பிலும், புத்தகங்களாகவும் வெளிவந்துள்ளது.

இந்த கலியுகத்தின் முடிவில் மனிதார்களின் ஆத்மாக்களை அழிவிலிருந்து காப்பதற்காக, ஞானாலயத்தில் ஆத்ம விடுதலை என்ற ஒரு மாபெரும் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விடுதலை அடைந்த ஒவ்வொரு ஆத்மாவும் சத்திய யுகத்திற்கான வித்துக்களாக சேகரிக்கப்படுவர்.

ஞானாலயத்தில் வழங்கப்படும் ஸ்ரீ ரேணுகா தேவியின் மந்திர உபதேசத்தை பெறுவதன் மூலம், பிறவா பெருநிலை அளிக்கும் 'ஆன்ம விடுதலை'யில் கலந்து கொள்ளலாம். ஒரு மனித ஆன்மாவிற்கு அதன் வாழ்நாளில் ஒரே ஒரு முறையில் வழங்கப்படும் இந்த அற்புத ஆன்ம விடுதலையானது அகஸ்திய மகரிஷிகள் மற்றும் குரு அன்னையினால் உயர் ஆத்மாக்களின் துணை கொண்டு நடத்தப்படுகின்றது. உயர் ஆற்றல்கள் பூமிக்கு இறங்கி வந்து அதே ஒளிப் பாலம் வழியாக ஆன்ம விடுதலைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆன்மாக்கள் ஆன்ம விடுதலை அடைவர்.

குரு அன்னை திருமதி.பரிமளா ராஜ்’ அதிசக்தியாகிய ரேணுகா தேவியின் அவதாரம் ஆவார். ஒவ்வொரு கலியுக முடிவிலும் மனித ஆத்மாக்களை பாதுகாப்பதற்காகவும் சத்ய யுக வித்துக்களை சேகரிப்பதற்காகவும் ஒரு தெய்வம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதபோல், இந்த கலியுகத்தின் முடிவில், இந்த மாபெரும் இறை பணியாற்ற ரேணுகாதேவியின் அம்சமாய் குரு அன்னை, ஞானாலயத்தில் வீற்றிருக்கிறார்கள்.

குரு அன்னை திருமதி.பரிமளா ராஜ்’ 2020, செப்டெம்பர் 14ஆம் திகதி மஹாசமாதி அடைந்தார். கலியுக முடிவில் மனித ஆன்மாக்களை காப்பதற்காக நான்கு யுகங்களாக, பலமுறை ஒளியுடல் பெற்று, மீண்டும் பிறவி பல கண்ட காரணத்தால், அகத்திய மகரிஷிகளால் 'சதுர்வேதி' என்றே அழைக்கப்படுகின்ற குரு அன்னை, ஒளி ரூபம் கொண்டு தொடர்ந்து ஞானாலயத்தில் உரையாடி, வழிகாட்வருகிறார்.

ஞானாலயத்தில் தரப்படும் ரேணுகாதேவி மந்திர உபதேசம் பெறுவதன் மூலம் ஒருவரால் தன்னுடைய மூளைப்பகுதியில் உள்ள பீனியல் கிளாண்ட் என்கின்ற சுரபியை இயக்க முடியும். அதன் மூலமாக அறியாமை நீங்கி பிரபஞ்ச ஆற்றல்களைப் பெற்று, ஆன்ம விடுதலை பெற முடியும். கலியுகத்தின் முடிவு என்பதாலும் பூமித்தாய் தன்னை புதுப்பித்துக் கொண்டிருப்பதாலும் பல்வேறு பிணிகளும், இயற்கை சீற்றங்களும் பூமியை நெருங்குகின்றது. அதன் மூலம், ஆன்ம விடுதலை பெறாத மானுடர்களின் ஆத்மாக்கள் கலியின் எல்லையில் அழிவுறும் என்றுமே முருகப்பெருமானும் அகத்திய மகரிஷிகளும் எச்சரிக்கின்றனர். மாயை, கர்ம வினை மற்றும் ஆணவத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கு ஆன்ம விடுதலை ஒன்றே தீர்வாகும். மேலதிக விபரங்களுக்கு பாலாஜி ராஜை தொடர்பு கொள்ளவும்.



paribala.ba@gmail.com
+91 8870622882
+894059665
www.enlightenedbeings.org

## ஒட்டாத ஊரில்...

(30ஆம் பக்கத் தொடர்)

மருமகள் மாமா சொல்வதை பார்த்துக் கொண்டிருந்தாவே தவிர பதில் எதுவும் சொல்லவில்லை. அவவுக்கு சொல்ல வேண்டிய தேவை எதுவும் இருக்கவில்லை. பேரப்பிள்ளைகள் சாப்பிட்டுவிட்டு எழும்பி போய் விட்டார்கள்.

"இப்படி உழைச்சு மட்டும் என்னத்தை காணப் போறியள்.?கொஞ்ச காலத்திலை களைச்சு போயிடுவீங்கள். எங்கடை தமிழர் வாழ்க்கை இப்பிடி ஆகீட்டுதே.?" பெரு மூச்சு விட்டார் இராமநாதன்

"அப்பா எல்லாருக்கும் வெளிநாட்டு வாழ்க்கை இப்பிடித்தானே இருக்கு. அதை ஒண்டும் செய்ய முடியாது.''

"அதுதான் தம்பி என்னாலை இங்கை இருக்க முடியாது.எனக்கு ஊருக்கு டிக்கட்டை போடு. எவ்வளவு கெதியா போட முடியுமோ அவ்வளவு கெதியா போடு. நான் ஊரோடை போகப்போறன்.''

அப்பாவின் நிலமை மகனுக்கு விளங்கி விட்டது. அவரை இங்கு இனி வைத்திருக்க முடியாது.

"இங்கையுள்ள எங்கடை தமிழாக்களை நினைச்சால் தான் கவலையாக இருக்கு தம்பி. ஊரிலையும் வாழ்வு இல்லாமல் இங்கையும் வாழ்வு இல்லாமல் கிடந்து அலையுதுகள்.''

மகன் சாப்பிட்டு முடித்து விட்டு கொம்பியூட்டரை தட்டிப்பார்த்தார். அடுத்த வாரமே கொழும்புக்கு விமான டிக்கட் இருந்தது.

இராமநாதன் பொக்ஸ் றூமுக்குள் போய் படுத்துக்கொண்டார். உடலெல்லாம் வலித்தது. கட்டிலில் போடப்பட்டிருந்த மெத்தை சில இடங்களில் அழுத்தியது.

மனது ஊரை நினைத்துக்கொண்டாலும் அவர் தனது பேரப்பிள்ளைகளை நினைத்தார். ஊரில் இதுகள் பிறந்திருந்தால் என்ன பாசத்தோடு அப்பப்பா என்று தனது மடிக்குள்ளேயே கிடந்திருக்குங்கள். அந்த கொடுப்பினை இல்லாத பாவி என்று தன்னை நொந்து கொண்டார்.

பக்கத்து பெரிய அறையில் சத்தமாக டி வி பார்த்துக் கொண்டிருந்தார்கள் பேரப்பிள்ளைகள். அவர்களின் தலையை தடவி அன்பாக அவர்களோடு பேசவேண்டும் போல இருந்தது. தனது பேரக்குஞ்சுகள் அப்பப்பாவுக்கு கிட்ட வரவே மாட்டன் என்கிறார்கள். அவருக்கு அழுகை அழுகையாக வந்த்து. உறவுகள் தொலைந்து அன்னியமாகி போய் விட்டன. பாசம் செத்துப்போய் விட்டது.

இனிமேல் ஊருக்கும் இங்கும் ஒட்டுதல் கிடையாது. அதனை நினைத்துப்பார்க்க முடியாது. அடுத்த தலைமுறை ஊரை மறந்து விட்டது.

"அப்பா அடுத்த திங்கட் கிழமை இரவு 9.30 இற்கு கொழும்புக்கு டிக்கட் புக் பண்ணிப்போட்டன்."

மகன் சொல்லி விட்டு போனார். இன்னும் ஒரு வாரம் இந்த ஒட்டாத ஊரில் இருந்த தொலைக்க வேண்டுமே. மனது கனத்த்து.ji

## வருடாந்த விழாவும்...

(27ஆம் பக்கத் தொடர்)

அதே நேரத்தில் மட்டக்களப்பு நகரத்திலும் அயல் கிராமங்களிலும் இருக்கின்ற சில்லறைக் கடைகளுக்கும் எமது உற்பத்திகளை மொத்தமாக விற்பனை செய்து வருகிறோம். இப்போதைக்கு பெருத்த இலாபத்தை சந்திக்காவிடினும் நட்டத்தைச் சந்திக்கவில்லை என்று சந்தோசப்படுகிறேன்.

லாபம் விரைவில் கிடைக்கும். 17 தொழிலாளருக்கு மாதச் சம்பளம் வழங்குவதென்பது இலகுவானதல்ல. இன்னுமின்னும் வியாபாரத்தையும் உற்பத்தியையும் மேம்படுத்த புதுப்புது விடயங்களை புகுத்த இருக்கிறோம் எனக்கு கிடைத்த பரிசு எனது சிந்தனைக்கும், எனது தொழிலாளர்களுக்கும் கிடைத்த கொளரவமாகவே என்னால் பார்க்கப்படுகிறது. என்னை தேர்ந்தெடுத்து ஆக்கமும் ஊக்கமும் அளித்த மட்டக்களப்பு விவசாய விரிவாக்கல்சேவை பிரதிப் பணிப்பாளர் பேரின் பராஜாவுக்கும் அவரது காரியாலய, வெளிக்கள உத்தியோகஸதர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்

இதுபோன்ற போட்டிகளும், தேர்வுகளும், விவசாயிகளுக்க ஒரு கொளரவத்தை வழங்கிவருகிறது இரண்டு தசாப்தங்களுக்கு மேல் ஆரம்பித்த சிறந்த விவசாயிகளுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு இன்றுவரை உயிர்ப்போடும், துடிப்பொடும் நடைபோடுவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். என்னைப்போன்று பலர் மகிழ்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

விவசாய அமைச்சும் விவசாயத் திணைக்களமும் இதுபோன்ற பல நவீன திட்டங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென கோருகிறேன்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# பெறுகை அறிவித்தல்

## களனிப் பல்கலைக்கழகம்

1. களனிப் பல்கலைக்கழகம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| உருப்படி இல. | ஒப்பந்த இலக்கம் | பெயர் | மதிப்பிடப்பட்ட வேலை பெறுமதி | கேள்விக்கு முன்னரான பிணைப் பெறுமதி | CIDA பதிவு | ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | UK/GA/GA3/2022/07 | Modifications in Auditorium, Faculty of Science | 12,000,000.00 | LKR 120,000.00 | SP3, C6 & C5 | 3,500.00 |

2. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் செயற்பாட்டின் படி இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு விண்ணப்பதாரிகள் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்படாத ஒப்பந்தக்காரராக இருப்பதுடன் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (CIDA) பதிவு இருப்பதுடன் தகைமை மேலே தரப்பட்டள்ளவாறு அவர்களால் பூர்த்தி செய்தல் வேண்டும்.
4. மேற்படி உருப்படிக்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களுக்கு வேலைப் பொறியியலாளர் (011 2910163) வேலைப்பிரிவு, களனிப் பல்கலைக்கழகம், தளுகம, களனி இடம் கேள்வி கோரல் ஆவணங்களை பரீட்சித்தல் உதவிப் பதிவாளர்/பொது நிர்வாகம் களனிப் பல்கலைக்கழகம் இடம் 2022 ஏப்ரல் 04 முதல 2022 ஏப்ரல் 27 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் மு.ப. 11.30 வரை மற்றும் பி.ப. 1.30 முதல் பி.ப. 2.30 வரையாகும்.
5. மேற்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம், பல்கலைக்கழகம் இடம் செலுத்தி எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் 2022 ஏப்ரல் 04ம் திகதி முதல் 2022 ஏப்ரல் 27ம் திகதிவரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல 11.30 வரை மற்றும் பி.ப. 1.30 முதல் பி.ப. 2.30 வரை கேள்வி கோரல் ஆவணங்களை முழுமையான ஆங்கில மொழியிலான பிரதியொன்றை உதவிப் பதிவாளர்/பொது நிர்வாகம், களனிப் பல்கலைக்கழகம், தளுகம, களனி இடம் பெற்றுக் கொள்ளலாம். குறித்த கொடுப்பனவுகள் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்திற்கு காசாக செலுத்துதல் வேண்டும்.
6. குறித்தவாறு பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் முத்திரையிட்டு 2022 ஏப்ரல் 28 பிற்பகல் 2.30 இற்கு முன் பல்கலைக்கழகத்தின் பிரதம பாதுகாப்பு அதிகாரியின் அலுவலகத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. 2022 ஏப்ரல் 28ம் திகதி பிற்பகல் 2.30 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இவ் வேளையில் சமுகமளிக்கலாம்.
8. சகல கேள்வியுடனும் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய கேள்விப் பிணை மாதிரிக்கு அமைவாக (இதற்காக நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (Institute for Construction, Training & Development - ICTAD) மூலம் வெளியிடப்படுகின்ற உடன்பாடுகள் கேள்வி வைத்தல் ஆவணங்களில் அடங்கியுள்ள வகுதி இல.09 (Standard Bidding Document - Section 09) இல் உள்ளடங்கும் கேள்விப் பிணை மாதிரியை பயன்படுத்தல் வேண்டும்.) இலங்கையில் செயற்படும் வங்கியிலிருந்து (இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள) பெற்றுக் கொண்ட அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியத்திலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை அல்லது குறித்த கேள்விப் பிணையொன்றிற்காக குறித்த தொகையை பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் வைப்புச் செய்து அப் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**தளுகம, களனி.**

2022.04.03

# கம்பஹா விக்கிராமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்

## கண்டி வீதி, யக்கல, இலங்கை

## பெறுகை அறிவித்தல்

**சுதேச சுகாதார விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பீடத்திற்கு ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பயிற்சியளித்தல்**

**விலைக்கோரல் இல. GWUIM/FIHST/NCB/AC5/22/06**

1. பின்வரும் உருப்படிகளுக்கான பெறுகைக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிராமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| லொட் | உருப் படி | விபரங்கள் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறி (ரூபா) (மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து அல்லது ரொக்கப் பணமாக) | விலைக்கோரல் பிணை முறியின் குறைந்தபட்ச செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | 1. | Gel Electrophoresis System | 01 | 16,000/- | 24.08.2022 (118 நாட்கள் ) |
| | 2. | Power Supply for Gel Electrophoresis System | 01 | | |
| | 3. | Protein Gel Electrophoresis | 01 | | |
| 2. | 4. | Bio Photometer / Nano Drop | 01 | 40,000/- | |
| 3. | 5. | Ultrasonicator | 01 | 4,000/- | |
| 4. | 6. | Micro centrifuge (Non – refrigerated) | 01 | 9000/- | |
| 5. | 7. | Ice Maker | 01 | 13,000/- | |
| 6. | 8. | Gel Documentation System | 01 | 18,000/- | |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிராமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடம், நிதி நிர்வாகப் பிரிவு, உதவி நிதியாளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: **033 2226109/ 0332223785**) அத்துடன் மேற்படி முகவரியில் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவை:
   - (i) விலைமனுதாரர் கடந்த 10 வருடங்களில் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிகள் சட்டச்சபைக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு ஆய்வுகூட உபகரணங்களை வழங்கிய அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உள்ளாகாதவராக இருத்தல் வேண்டும்.
   - (ii) விலைமனுதாரர்கள் அரசாங்க அதிகாரத்தினால் இயைபுடைய துறைக்காக வழங்கப்பட்ட வியாபார பதிவுச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - (iii) விலைமனுதாரர்கள் உற்பத்தியாளர்களின் அங்கீகாரக் கடிதத்தை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - (iv) ஒரு முகவர் உற்பத்தியாளரின் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்தால், அந்த சகல விலைமனுக்களுக்காகவும் வெவ்வேறாக விலைக்கோரல் பிணை முறி இல்லையானால், ஒவ்வொரு விலைமனுவுக்கும் குறித்த உற்பத்தியாளர் அனுமதி வழங்கியிருந்தால் அவ்வாறான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.**

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-04-04ஆம் திகதி முதல் 2022-04-27ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கம்பஹா விக்கிராமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு 3,500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியும் மற்றும் நிறுவன கடிதத் தலைப்பில் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியில் கிடைக்கும் முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாகச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவைகளை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை தாங்கிய இரு கடித உறைகளையும் வேறொரு கடித உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் **''சுதேச சுகாதார விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பீடத்திற்கு ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பயிற்சியளித்தல் - விலைக்கோரல் இல. GWUIM/FIHST/NCB/AC5/22/06''** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. விலைமனுக்களை 2022-04-28ஆம் திகதி பி.ப. 02.30 மணி அல்லது அதற்கு முன்னர் கம்பஹா விக்கிராமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடம், நிதி நிர்வாகப் பிரிவு, உதவி நிதியாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டியில்'' உள்ளிடல் வேண்டும். அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கம்பஹா விக்கிராமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், கண்டி வீதி, கம்பஹா எனும் முகவரிக்கு மேற்குறிப்பிடப்பட்ட இறுதி நேரத்திற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
8. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2022-04-28ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கம்பஹா விக்கிராமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,**
**கண்டி வீதி, யக்கல.**
**தொலைபேசி: 033 2222748 தொலைபேசி/தொலைநகல்: 033 2223785 மின்னஞ்சல்: supplies@gwu.ac.lk**
**2022-04-01**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## காலி துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான முதலீட்டு முன்தகைமைக்கான ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு

**(IEOI No.: SLPA/EOI/GPDP/2022-01)**

## ஆர்வ வெளிப்பாட்டினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியை நீடித்தல்

1. விண்ணப்பங்களைத் தயாரிக்க ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்தான கோரிக்கைக்கு இணங்க, 2022 பெப்ரவரி 9ஆம் திகதி மற்றும் 13ஆம் திகதிகளில் இந்தப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் அட்டவணை பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| | நிகழ்வு | முன்னைய திகதி மற்றும் நேரம் | நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| அ. | ஆர்வ வெளிப்பாட்டு ஆவண அழைப்பை வழங்குதல் | 2022 பெப்ரவரி 9ஆம் திகதி மு.ப. 10.00 மணியிலிருந்து 2022 மார்ச் 31ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி வரையும் | 2022 பெப்ரவரி 9ஆம் திகதி மு.ப. 10.00 மணியிலிருந்து 2022 மே 05ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி வரையும் | குறிப்பு-1 |
| ஆ. | ஆர்வமுள்ள தரப்பினர் ஆர்வ வெளிப்பாட்டு ஆவண அழைப்பிற்கான தெளிவுறுத்தல்களுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி | 2022 மார்ச் 23 ஆம் திகதி | 2022 ஏப்ரல் 20 | |
| இ. | ஆர்வ வெளிப்பாட்டு ஆவண அழைப்பிற்கான தெளிவுறுத்தல்களை இலங்கை துறைமுக அதிகாரசபை வழங்கும் இறுதித் திகதி | 2022 மார்ச் 31 ஆம் திகதி | 2022 ஏப்ரல் 29 | |
| ஈ. | ஆர்வ வெளிப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2022 ஏப்ரல் 7ஆம் திகதி பி.ப. 2.00 மணி | 2022 மே 10ஆம் திகதி பி.ப. 2.00 மணி | குறிப்பு-2 |
| உ | ஆர்வ வெளிப்பாடுகளை திறத்தல் | 2022 ஏப்ரல் 7ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி | 2022 மே 10ஆம் திகதி பி.ப. 2.00 மணி | குறிப்பு-2 |

2. ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான ஆவணத்தின் திருத்தங்கள், ஆவணத்தை ஏற்கனவே கொள்வனவு செய்த அனைத்து தரப்பினருக்கும் ஒரு இணைப்பு வடிவத்தில் வழங்கப்படும்.
3. ஆர்வமுள்ள தரப்பினர் ஆர்வ வெளிப்பாட்டிற்கான திருத்தங்களுடனான ஆவணத்தை பின்வரும் 1ஆம் குறிப்பிலுள்ள முகவரியில் 2022 பெப்ரவரி 9ஆம் திகதியிலிருந்து 2022 மே 05ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 10.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்குமிடையில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. மேற்படி வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் வரி அடங்கலான ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவை (50,000.00 இ.ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்திய பின்னர், பின்வரும் 1ஆம் குறிப்பிலுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் எந்தவொரு ஆர்வமுள்ள தரப்பினரும் திருத்தங்களுடனான ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்களுக்கான அழைப்பின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.

**குறிப்பு-1:**
பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-1, இலங்கை.
தொலைபேசி இல.: +94(0) 112483456. தொலைநகல் இல.: +94 (0) 112323055. மின்னஞ்சல் முகவரி: **cepd@slpa.lk**

**குறிப்பு-2:**
தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழு, துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சு. இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-1.

5. ஆர்வ வெளிப்பாடுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக ஆர்வமுள்ள தரப்பினருக்கு ஏற்படும் எந்தவொரு கிரயங்கள் அல்லது செலவினங்களுக்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுவோ அல்லது இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையோ பொறுப்பேற்கமாட்டாது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழு.**

# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## வெற்றிடங்கள் - கற்கை உதவி பணியாளர்கள்

### தகவல் தொழில்நுட்பம் மற்றும் மேம்பாட்டு மையம்

01. வலையமைப்பு நிர்வாகி வெற்றிடம் - II தரம்
02. வலைத்தள வடிவமைப்பாளர் வெற்றிடம் - II தரம்

**சம்பள அளவு**

01. வலையமைப்பு நிர்வாகி வெற்றிடம் - II தரம் மற்றும் வலைத்தள வடிவமைப்பாளர் வெற்றிடம் - II தரம்
U-AS 2 (II) Rs. 50,625- 3 x 1,335 - 54,630 (EB) 55,965 - 14 x 1,335- 74,655 p.m

**ஆட்சேர்ப்பு முறை**

திறன் தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம்

**வேறு பிரதிலாபங்கள்**

வாழ்க்கை செலவு, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, பணிக்கொடை, இலவச சுகாதார காப்பீடு, ஆண்டு ஊக்கத்தொகை, ஊழியர்களின் குழந்தைகளுக்கான உதவித்தொகை, பல்கலைக்கழக மருத்துவமனை முன்னுரிமை மற்றும் பிற நன்மைகள்

**பொது நிபந்தனைகள்**

01. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரிகளை தெரிவு செய்தல், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளல் மற்றும் பதவி உயர்வு நடைமுறைக்கிணங்க மற்றும் நேர்முகத்தேர்வின் பெறுபேறுகளுக்கு ஏற்ப செயற்படுத்தப்படும்.
03. ஒவ்வொரு பதவிக்கும் / தரத்திற்கும் அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களுக்குள் மட்டுமே ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக நிர்வாக வாரிய அதிகாரிகளால் தேர்வுகள் செய்யப்படும்.
04. குறித்த தகைமைகளைப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
05. விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதற்கு முன்னர் அவர்களது பெயர் பட்டியலை தயாரிக்கும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உண்டு.
06. விண்ணப்பங்களை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் **(www.kdu.ac.lk)** தரவிறக்கம் செய்துகொள்ள முடிவதுடன் விண்ணப்பதாரரினால் முழுமையாக்கப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளுடன் **2022 ஏப்ரல் 22** ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் விலாசத்திற்கு பதிவுத்தபாலின் மூலம் அல்லது நேரடியாக கையளித்தல் வேண்டும்.
07. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வெற்றிடத்தை குறிப்பிட வேண்டும்.
08. ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு வெற்றிடங்களுக்கும் மேல் விண்ணப்பிக்க முடிவதுடன், அவ்வாறு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பங்களை தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும்.
09. அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / கட்டுப்பாட்டு வாரியங்கள் பல்கலைக்கழகங்க மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் பிரதானி மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் **(www.kdu.ac.lk)** தரவிறக்கம் செய்துகொண்ட விண்ணப்பப்படிவத்தின் மூலமாக மாத்திரம் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. பிந்திக்கிடைக்கும், பூரணப்படுத்தப்படாத அல்லது மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனை இல 09 இற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
11. தகுதியைப் பெற கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளம் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் படிமுறை 725, 957 இல் அறிவுறுத்தியபடி விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது.
12. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.
13. நிரந்தர ஊழியர் வெற்றிடங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சமீபத்திய சம்பளச் சுற்றறிக்கையின் படி சம்பளம் வழங்கப்படுவதுடன் சம்பளத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

பதிவாளர்,
**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**இரத்மலானை 10390 இலங்கை**
மின்னஞ்சல் - staffrecruit@kdu.ac.lk

**இறுதித்திகதி 2022 ஏப்ரல் 22**

மேலதிக விபரங்களுக்கு பிரவேசிக்கவும் **www.kdu.ac.lk.**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# ஒட்டாத ஊரில்...

**இளைய அப்துல்லாஹ் ...**
(லண்டன்)

லண்டனில் பனி பொழிந்துகொண்டிருந்தது. தமிழர்களுக்கு பனி உவப்பானதாக இல்லாவிட்டாலும் அது பொழிவதை விடுவதாக இல்லை.

இராமநாதன் தனது வலது கையை கன்னத்தில் வைத்தபடி ஒருக்களித்து படுத்திருந்தார். அவர் படுப்பதற்கு பட்ட சிரமம் அவர் முகத்தில் தெரிந்தது. மகன் கூப்பிட்டபோது லண்டனுக்கு வந்திருக்க கூடாது என்று அவர் இப்பொழுது ஒவ்வொரு நாளும் நினைத்துக்கொண்டிருக்கிறார்.

லண்டனில் குளிரும் மழையும் காற்றும் பனியும் என்று காலநிலை அவரைப்பாடாய் படுத்துகிறது. வெள்ளைக்காரர் அடிக்கடி சொல்லும் பழமொழி சரியாய்த்தான் இருக்கிறது என்று அவர் நினைத்தார். மூன்று டபிள்யு களை நம்பக்கூடாதாம் இந்த லண்டனில். வைஃப்,வெதர்,வேக்... ஒன்றும் நிரந்தரமில்லை. அவருக்கு சிரிப்பு வந்தது.

சிலோனை விட்டு லண்டனுக்கு வந்த நாளில் இருந்து ஏதாவது ஒரு நோய் அவரை பிடித்துக்கொண்டு போக மாட்டேன் என்று அடம் பிடிக்கிறது.

காற்று அதிகமாக அடித்தால் தொண்டை காய்ந்து தொண்டை கரகரப்பு,மழைபெய்தால் தும்மல்.குளிர் வந்தால் இழுப்பு,வெயில் வந்தால் தலைவலி

ஊர் பிறந்த வெள்ளைக்காரருக்கு இந்த நாடு ஒத்துப்போகும். ஆனால் தன்னைப்போல வந்தான் வரத்தான்களுக்கு பெரும் பிரச்சனைதான் என்று நினைத்துக் கொள்வார்.

மார்கழி மாதத்தில் இராமநாதன் லண்டனில் வந்து இறங்கினார். வந்த கையோடு இரண்டு கைகளிலும் தோல் உரிந்து போனது. உடம்பெங்கும் செதில் செதிலாக தோல் உதிர்ந்தது. அது இங்கை வாற எல்லாருக்கும் வருகிற ஒன்று தான் என்று மகன் அலட்சியப்படுத்தி விட்டார்.

லண்டன் தமிழர்களுக்கு, இரண்டாவது தேசம்போல் ஆகி விட்டாலும் எல்லாம் அன்னியமாகவே அவர் உணர்ந்தார்.மகன் லண்டனுக்கு அவரை கூப்பிடப்போறான் என்றவுடனேயே அவரது ஊர் புளியங்குளத்தில் அவருக்கு ஏகப்பட்ட மரியாதை.

இனி என்ன இராமநாதன் லண்டன் சீமைக்கு போய் வாழப்போறாராமே என்று அவரது வயதையொத்தவர்கள் அவரது காது படவே பேசியபோது அவருக்கு மனம் முழுக்க பெருமையாக இருந்தது.

அவர் படுத்திருந்த கட்டில் மெத்தையில் உள்ள கம்பியொன்று வெளியே துருத்திக்கொண்டிருந்தது. காலில் குத்தி விடுமோ என்று அவர் பயந்து கொண்டிருந்தார். மகனிடன் சொல்லி ஒரு மாதமாகி விட்டது. புது மெத்தை ஒன்று வாங்கித்தரும்படி அவர் மகனிடம் கேட்டிருந்தார். மகன் ஓம் வாங்கித்தாறன் என்று சொன்னவர் இன்னும் வாங்கிக் கொடுக்கவில்லை.

நான்கு அறை கொண்ட பெரிய வீட்டுக்கு மகன் சொந்தக்காரன். அதுவும் லண்டன் சிற்றியில் இருக்கிறது வீடு. மகன்; ஐந்து பெற்றோல் நிலையங்களுக்கும் சொந்தக் காரன்.

நான்கு அறை வீட்டில் ஒரு அறையில் மகளும் மருமகனும் அடுத்த அறையில் ஒரு பிள்ளை. மற்றைய அறையில் மற்ற பிள்ளை. பொக்ஸ் றூம் இராமநாதனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

இங்கு லண்டனில் பொக்ஸ்றூம் என்றால் ஒரு சிறிய கட்டில் போட்டு ஏறி படுக்க இறங்க மட்டும் போதுமானதாக இருக்கும் அவ்வளவுதான். அப்பாவுக்கு அது போதும் என்று மகன் நினைத்து விட்டார் போலும். இராமநாதனுக்கு அந்த அறையைப்போல மனதும் இட்டுமுட்டாகவே இருக்கிறது.

வளர்ந்த பேரப்பிள்ளைகள் அவரோடு ஒட்டுகிறார்களில்லை.

ஹாய் தாத்தா என்பதோடு சரி அவரவர் வேலையை பார்க்க போய் விடுகிறார்கள். அவர்களுக்கு தமிழ் பேசத்தெரியாது. அவருக்கு ஆங்கிலம் வராது.

தான் ஊரில் இருந்த வாழ்க்கையை யோசித்து யோசித்து மனம் வெதும்பிக் கொண்டிருந்தார். மனைவி உயிரோடு இருந்நதிருந்தால் தான் இங்கே வந்திருக்க மாட்டார். அவரும் மனைவியும் சேர்ந்து தனக்குவந்த விவசாய வருமானத்தில் பிள்ளைகள் இரண்டையும் வளர்க்க பெரும்பாடுபட்டதை அவர் இப்பொழுது நினைத்து கொண்டார்.1983 ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னர் அங்கு வாழவே பயமாய் இருக்க மகனை 1985 ஜனவரியில் லண்டனுக்கு அனுப்பி வைத்தார் மகள் மட்டக்களப்பில் கலியாணம் முடித்து இருக்கிறாள்.

'அப்பா உதிலை சும்மா படுத்திருக்காமல் உங்கை கொமினிட்டி சென்டரிலை வயதானவைக்கு ஸ்பீச் எல்லாம் வைக்கினமாம் போட்டு வாங்கோ''. மகன் சொல்லி விட்டு காரை எடுத்துக்கொண்டு போய் விட்டார். போற தெருவிலை அப்பாவை இறக்கி விட்டு போகலாம் என்ற நினைப்பு கூட மகனுக்கு வராமல் போய் விட்டது.

ஒவ்வொரு நிமிடமும் பணம் பற்றிய யோசனைதான அவர்களுக்கு. மகன் சொன்னதும் கொமினிட்டி சென்டருக்கு போவது நல்ல யோசனையாகவே அவருக்கு இருந்தது.

கொமினிட்டி சென்டர்கள்தான் இங்கு வயதாளிகளுக்கு ஆதரவு. இந்த சென்டர்கள் இல்லாவிட்டால் சிலோனில் இருந்து வந்த வயதாளிகளில் அரைவாசிப்பேருக்கு பொழுதுபோக்கு இல்லாமல் மூளை குழம்பியிருக்கும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் இங்கு எழுத்தில்தான் இருக்கிறது. வெள்ளைக்கார நாட்டில் ஒரு ஒழுங்கு வைத்துள்ளார்கள். அறுபத்தாறு வயதுவரை உழைத்தவர்கள் பென்சன் எடுத்துவிட்டு வீட்டில் இருக்கலாம். அவர்களுக்கு உழைப்பின்போது சம்பளத்தில் வெட்டிய வரிகள் பணம் எல்லாம் மாதாமாதம் பிரித்து கொடுப்பார்கள். ஆகவும் உடம்புக்கு முடியாவிட்டால் போய் வயோதிபர் இல்லத்தில் இருக்கலாம்.

மகன், மகள்மார் எல்லாம் ஃபாதர்ஸ்டே , மதர்ஸ்டே, பிறந்த நாள் என்று மட்டும் வந்து பார்த்துவிட்டு போய் விடுவார்கள். வெள்ளைக்கார வயோதிபர்களுக்கும் இது பழகிப்போன விஷயம். ஆனால் தமிழ் பெற்றொர்கள் பிள்ளைகளை பெற்று வளர்ப்பதே பிற்காலத்தில் பிள்ளைகள் தங்களுக்கு உதவி செய்வார்கள் என்ற எண்ணத்தில்தான் தமிழ் பிள்ளைகள் தங்களது வயதான பெற்றோரை ஊரில் இருந்து கூப்பிட்டு வைத்து பார்க்கிறார்கள்தான். ஆனால் அதுதான் வயதாளிகளுக்கு பெரும் வேதனையாகி விடுகிறது.

கொமினிட்டி சென்டரில் இருபது இருபத்தைந்து முதியவர்கள் இருந்தார்கள். இன்று மன அழுத்தம் தொடர்பாக பேசுவதற்கு டொக்டர் சசி வருவதாக அறிவிப்பு எழுதி இருந்தார்கள். இன்றுதான் முதன் முதலில் இராமநாதன் இந்த சென்டருக்கு வந்திருந்தார். அறிமகமில்லாத ஒருவர் அவருக்கு அருகில் வந்து அமர்த்தார்.

"என்ரை பேர் செல்லையா நீங்கள்''

"நான் இராமநாதன்''

"ஊரிலை எவ்விடம்''

"புளியங்குளம்'

"புளியங்குளம் என்றால்'

"ஒட்டுசுட்டான் புளியங்குளம்''

"இங்கை ஆரோடை இருக்கிறியள்?.'

"மகனோடை"

"நீங்கள்?"

"மகளோடை"

சொல்லும்போது செல்லையாவின் கண்கள் பனித்தன. இராமநாதனுக்கு என்னவோ போலிருந்தது.

"ஏன் சுகமில்லையே?"

"இல்லை கவலைதான். ஊரை விட்டுட்டு வந்து யாரும் இல்லாதவர்கள் போல அலைகிறோமே'' செல்லையா துக்கித்தது இராமநாதனுக்கும் மனதுக்கு அந்தரமாக இருந்தது. பேரப்பிள்ளைகள் கவனிக்குதுகள் இல்லை. இஞ்சை பிறந்த தாலை அவையள் நினைக்கினம் தாங்கள் வெள்ளைக்காரரர் எண்டு. எங்கடை தமிழ் சமூகம் எங்களோடை அழிஞ்சுபோயிடுமோ எண்டு கவலையாய் கிடக்கு. என்றார் செல்லையா.

"ஏன் அப்பிடி நினைக்கிறியள்?" இராமநாதன் கேட்டார்.

"இல்லை ராமநாதன் என்னுடைய மகள் டொக்டர். மருமகன் பல் வைத்தியர். அவையளுக்கு ஒரே ஒரு பொம்பிளை பிள்ளை. இப்பதான் பதினைந்து வயது. அவள் வெள்ளைக்கார போய் ஃபிரண்டை வைத்திருக்கிறாள். நான் பேத்தி எண்டு ஒண்டையுமே சொல்ல முடியாமல் இருக்கு.

நேரம் காலமில்லாமல் போய் ஃபிரண்டோடு சுத்திக்கொண்டு திரியுறாள். அவள் என்ரை ரத்தம். என்ரை பேத்தி. எனக்கு எந்த உரிமையும் இல்லை அவளை கேகக்குறதுக்கு. இது ஊரிலை என்டால் இப்பிடி நடக்குமே?''அவர் கண் கலங்கினார்.

"அப்ப நீங்கள் மகளிட்டை பேசேல்லையே" இந்த விசயம் பற்றி சொல்லேல்லையே

"கேட்டனான் கேட்காமல் விடுவனே.."

"மகள் என்ன சொன்னவா?"


"அதைக்கேட்டால் இன்னும் ஆச்சரியப்படுவீங்கள்.

இங்கை பிள்ளைகளை கேள்வி கேட்க கூடாதாம். கேட்டால் பிள்ளைகள் வீட்டை விட்டு போய் விடுவினமாம்."

"அப்ப சின்னப்பிள்ளைகள் ஆணும் பெண்ணும் என்னவும் செய்யலாமோ?"

"இங்கை சுதந்திரமாம் தனி மனித சுதந்திரமாம் எதுவும் பேச முடியாதாம்."

இராமநாதனுக்கு தூக்கி வாரிப்போட்டது.



அடுத்த தலைமுறை தமிழ் சமூகத்தை விட்டு விட்டு போய் விடுமோ என்ற பயம் வயதாளிகளிடம் வந்து விட்டது. ஜேர்மனி, கனடா, லண்டன், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஹொலன்ட் பெல்ஜியம் என்று எல்லா இடங்களிலும் இந்த பிரச்சனை தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. பாடசாலை, பப் கலாச்சாரம் என்று எங்கடை இளந்தலைமுறையினரை கட்டுப்படுத்த முடியாமல் போய்கொண்டிருக்கிறது. கேட்டால் உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று உரத்து சொல்கிறார்கள்.

இதுதான் வெள்ளைக்கார கலாசாரம், வெள்ளைக்கார நாட்டிலை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். வயதாளிகளை ஒன்றும்தெரியாத பட்டிக்காடு என்று இளம் பிள்ளைகள். நினைக்கிறார்கள்."

கொமினிட்டி சென்டரில் மாலையில் தேனீரும் பிஸ்கட்டும் வாழைப்பழமும் கொடுத்தார்கள்.

ஒவ்வொருவரும் வந்து தங்களை அறிமுகப்படுத்தி கொண்டார்கள். அனேகமாக எல்லோரின் முகம்களிலும் பிறந்த பூமியை விட்டு விட்டு ஏன் வந்தோம் என்ற கவலை அப்பிக் கிடந்தது. ஊரில் என்றால் கூப்பிட்ட குரலுக்கு யாராவது ஓடி வருவார்கள் . இங்கு பக்கத்து வீட்டுக்காரர் என்ன நிறம் என்றே தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"இப்படித்தான் போன திங்கட்கிழமை என்னுடைய பேத்தி தனது போய்ஃபிரண்டோடு வீட்டுக்கு வந்தாள்.வந்து அவனையும் கூட்டிக்கொண்டு தனது றூமுக்கு போனவள் ஐந்து மணித்தியாலத்திற்கு பிறகுதான் வெளியிலை வந்தினம்." இராமநாதன் செல்லையாவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்.

தனக்கும் இரண்டு பேரப்பிள்ளைகள் இருப்பதை நினைத்துக்கொண்டார். எங்களுடைய கலாசாரம் தமிழர் வாழ்வு கோவில் குளங்கள் என்று எதனையும் காப்பாற்ற முடியாமல் போய் விடுமோ என்ற அச்சம் அவர் மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

வெள்ளைக்கார நாட்டில் அவர்களுடைய கலாசாரத்தோடுதான் வாழ வேண்டும் என்று எமது பிள்ளைகள் அடம் பிடிக்கிறார்கள். அவர்கள் இங்கு பார்ப்பது பழகுவது எல்லாம் அதுதானே. பெற்றோர்கள் தமிழர் கலாசாரத்தை பின் பற்றவைக்க படாத பாடு படுகிறார்கள். தமிழ் பிள்ளைகள் தமிழை மறந்து விட்டார்கள்.

கோவில்கள் ஒவ்வொரு இடத்திலும் வந்து விட்டன.இங்கு லண்டனில் கோவில் திருவிழாக்களில் வெள்ளைக்காரர்கள் பட்டு வேட்டி அணிகிறார்கள். வெள்ளைக்கார பெண்கள் சாரி அணிந்து வருகிறார்கள். பிரதான வீதிகளில் தேர் இழுத்து தேங்காய் உடைக்கிறார்கள். எங்கள் தமிழ் சாப்பாட்டை வெள்ளைக்காரர்கள் விரும்பி சாப்பாட்டு கடைகளில் சாப்பிடுகிறார்கள். ஆனால் எங்கள் பிள்ளைகள் வெள்ளைக்கார கலாசாரம் தான் சரி அதனை விட்டு விட்டு வர முடியாது என்று அடம் பிடிக்கிறார்கள்.

இராமநாதன் மனச்சோர்வோடு அங்கு வரிசையாக போடப்பட்டிருந்த கதிரைகளில் ஒன்றில் உட்கார்ந்தார்.

டொக்டர் சசி அன்னியநாடு,புரியாத மொழி,பிள்ளைகளின் ஒதுக்குதல், பேரப்பிள்ளைகளின் அன்னியத்தனம், காலநிலை ஒவ்வாமை, பேசுவதற்கு யாருமற்ற நிலை எல்லாம் சேர்ந்து இங்குள்ள வயதாளிகளை பாடாய் படுத்தும் விதம் பற்றி பேசிக்கொண்டிருக்கும் பொழுது அனேகமாக எல்லா வயதாளிகளும் கண்ணீர் விட்டு அழுதார்கள்.

பேச்சு முடிந்ததும் கொமினிட்டி சென்டரை விட்டு குடையை பிடித்துக்கொண்டு வெளியில் வந்தார் அவர்

பஸ் தரிப்பிடத்தில் வெள்ளைக்கார வயதான தம்பதிகள் கைகளை பிடித்துக்கொண்டு நடந்து போனார்கள். சற்று தள்ளி இளம் ஆண்கள் இரண்டு பேர் முத்தமிட்டுக் கொண்டு நின்றார்கள். அவர்களை பார்த்த போது இந்த வெள்ளைக்கார நாட்டில் எப்படி நாங்கள் தமிழ் பிள்ளைகளை பாதுகாப்பது என்று நினைத்தார் இராமநாதன்.

ஒரு வீடு அதனை சுற்றி மூன்று ஏக்கர் காணி என்று புளியங்குளத்தில் வாழ்ந்த வாழ்க்கை என்ன? இந்த லண்டன் வாழ்க்கை என்ன என மனது சலித்துக்கொண்டது அவருக்கு.

இந்த இழவை விட்டு விட்டு தமிழர்கள் எல்லோரும் ஊரோடை போய் வாழ்ந்தால் எப்பிடி இருக்கும். மனதில் நினைக்கும் போதே அவருக்கு பேருவகையாக இருந்த்து.

237 ஆம் நம்பர் பஸ் வந்து நின்றது. அதில் ஏறி தனது டிக்கட்டை மெசினில் காட்டினார். கீக் என்ற சத்த்தோடு மெசின் அவருக்கு வழி விட்டது.

வீட்டுக்கு வந்தபோது வீட்டில் யாருமே இல்லை. மருமகள் சமைத்து வைத்திருப்பாள் என்று சமையலறைக்குள் போய் பார்த்தார் அங்கு உணவு இல்லை. தானாகவே தேனீரை போட்டு எடுத்துக்கொண்டு பிஸ்கட்டோடு தொட்டு சாப்பிட்டார். அந்தப்பெரிய வீட்டில் யாருமற்ற அனாதையாக உணர்ந்தார். என்றுமில்லாதவாறு மின்னல் வெட்டியது.

தமிழ் டி வி யை போட்டார். யாரோ ஒருவர் உப்பு சப்பில்லாமல் பேட்டி கண்டுகொண்டிருந்தார். இங்கு தமிழ் வானொலிகளும் தொலைக்காட்சிகளும் தமிழர்களை அனியாயத்துக்கு உணர்ச்சிவசப்படுத்திக்கொண்டு தங்களது வியாபாரத்தை செய்கின்றன.

இங்கு இருப்பதை விட ஊருக்கு போய் நிம்மதியாக அந்த மண்ணில் மூச்சு விடுவதே மேல் என்று நினைத்தார் இராமநாதன். அனேகமாக எல்லா தமிழ் வயதானவர்களும் நினைப்பதைதான் இராமநாதனும் நினைத்தார்.

இங்கு இயந்திரமயமான மனிதர்கள் மத்தியில் வாழ முடியாது. காலமை சாப்பாடில்லை. பகல் சாப்பாடில்லை.இரவு சாப்பாடு இரவு பதினொரு மணிக்கு. என்ன உலகமெடா இது? எல்லோரும் காலில் சக்கரத்தை பூட்டிக்கொண்டு ஓடித்திரிகிறார்கள்.

இரவு சாப்பாட்டை மருமகள் கடையில் இருந்து வாங்கிக்கொண்டு வந்திருந்தார். சாப்பாட்டு மேசையில் சாப்பாடு கிடந்தது. இராமநாதன் சாப்பாட்டு மேசைக்கு கிட்ட போனார்.

"வாங்கோ இருங்கோ அப்பா" மகன் கதிரை ஒன்றை இழுத்துப்போட்டார். மருமகளும் பிள்ளைகளும் அவரை பார்த்தார்கள்.

"தம்பி நான் ஊருக்கு போகப்போறன்."

"ஏன் அப்பா?" மகன்' மட்டும்தான் கேட்டார். மருமகளும் பேரப் பிள்ளைகளும் தங்களுக்கு சம்பந்தம் இல்லாததுபோல சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அவர் இருந்தாலும் ஒன்றுதான் போனாலும் ஒன்றுதான். ஏனெனில் அப்படித்தான் இவ்வளவு நாளும் கழிந்தது. அவரைப்பற்றி அவர்கள் அலட்டிக் கொள்வதே இல்லை. அவர்களைப் பொறுத்தவரை ஒருவர் வீட்டில் இருக்கிறார் அவ்வளவுதான். பாசம் செத்துப்போய் விட்டதை இராமநாதன் தெளிவாகவே உணர்ந்தார். வெளிநாட்டு வாழ்க்கை அவ்வாறு ஆக்கி விட்டிருந்தது.

"இல்லைத்தம்பி இங்கை தனிய என்னாலை இருக்க முடியாது. நீ மகன் எண்டு உன்ரை வீட்டிலை இருந்தாலும் நான் தனியத்தான் இருக்கிறன்.''


அப்பப்பா என்ன சொல்கிறார் என்று புரிய கூட பேரப்பிள்ளைகளால் முடியவில்லை. அவர்களுக்கு தமிழ் தெரியாது.

"இங்கை இப்பிடித்தான் அப்பா வாழ்க்கை எல்லாம். நானும் மனிசியும் வேலைக்கு போக வேணும். போனால்தான் இந்த பெரிய சொகுசான வீட்டுக்கு மோர்கேஜ் கட்டவேணும். சமூகத்திலை எனக்கு எண்டு ஒரு அந்தஸ்த்து இருக்கு அதனை பாதுகாக்க வேணும்.பெரிய வாகனம் பெரிய வாழ்க்கை வேணுமெண்டால் உழைக்க வேணும்."

"ஆனால் நிம்மதி இல்லையே தம்பி.எல்லாரும் காசு காசு எண்டு அலையுறீங்கள். எப்ப ஒண்டாய் இருந்து நிம்மதியாக அன்பாக பேசி சாப்பிட்டு மனதாறி சந்தோசப்பட்டிருக்கிறீங்கள் சொல்லுங்கோ?''

(28 பக்கம் பார்க்க)

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 17




திரு/திருமதி.செல்வி ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................
..............................
..............................

.............................. ..............................
திகதி கைையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 17**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :17

**இடமிருந்து வலம்**

(01) இம்மாதத்தில் வரும் தமிழ் சிங்கள மக்களுக்குரிய ஒரு பண்டிகை.
(05) மிகச் சிறிய கூறு
(06) இன்பம் குழம்பிவிட்டது
(08) வலிமை, உறுதி
(11) விளையாட்டுத் தனம்
(12) அறுபது நிமிடம் கொண்ட கால அளவு. நேரத்தையும் குறிக்கும்
(13) வாந்தி (குழம்பியுள்ளது)
(14) மிக அரிதாகப் பூக்கும் ஒரு மரம் (குழம்பியுள்ளது)
(16) துன்பம், வேதனை
(17) என்றும் தவறாத உண்மை (குழம்பியுள்ளது)
(18) ஒரு நீர்நிலை
(19) ஒரு தானியம் (குழம்பியுள்ளது)
(21) ஒரு கெட்டியான திரவ உணவு
(22) ஒரு தமிழ் மாதம் (திரும்பியுள்ளது)
(23) துணையற்ற நிலை

**மேலிருந்து கீழ்**

(01) அறிவுரை
(02) பணிவு
(03) நிலத்தில் காணப்படுவது (தலைகீழ்)
(04) முன்னைய காலத்தில் வீடு வேய்வதற்கு பயன்படுத்தப்பட்ட இது, தென்னோலையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. (குழம்பியுள்ளது)
(05) பயம் குழம்பிவிட்டதோ?
(07) இதுவும் ஒரு காட்டு விலங்கு. (குழம்பியுள்ளது)
(09) மூத்த சகோதரனின் மனைவி குழம்பிவிட்டாள்.
(11) மகள் (குழம்பியுள்ளது)
(15) இதுவும் ஒரு பறவை இனம் (குழம்பியுள்ளது)
(16) ஓர் உறுப்பு
(18) வறுமை நிலை
(19) லட்சத்தின் நூறு மடங்கு
(20) மெதுவாக நகர்ந்து செல்லும் பிராணி, தலைகீழாகி விட்டது.
(21) இராமாயணத்தில் வரும் ஒரு பாத்திரம். இந்தப் பெயரிலும் அழைக்கப்படுகிறது.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 16

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. எரிபொருள் 04. காவி 06. மேழி
07. சேதம் 08. வாசல் 10.முனைப்பு
11. வாயு 12. வடை 13. கூதல்
15. அவரை 18. சுற்றம் 19. தகராறு
21. சரிதை 23. விடை 24. நாம்பன்

**மேலிருந்து கீழ்**
01. எரிவாயு 02. பொழில் 03. மேரு
04. விதப்புரை 05. காம்பு 07. சேனை
09. சவால் 10. முடை 12. கூற்றுவன்
14. தராசு 15. வம்சம் 16. அத்தை
17. உதவி 20. கடை 22. நாரி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 15

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**கே. பத்மநாதன்,**
தெஹிகலகந்துர,
நாரங்கல,
ஹாலி எல.

**இரண்டாம் பரிசு**
**பி. குணசேகரன்,**
வன்னியா வீதி,
களுதாவளை,
களுவாஞ்சிக்குடி.

**மூன்றாம் பரிசு**
**எச்எம்.எம். லெப்பை,**
இல. 38/1,
வெலகெதர வீதி,
பதுளை.

### பாராட்டு பெறுவோர்

**1. T. நாகையா,**
209, மார்க்கண்டு வீதி,
பாண்டிருப்பு 01,
கல்முனை.

**2. ஏ.வி.எம். உமைர்,**
207/2, கல்பொக்கை,
வெலிகம.

**3. ஐ.எல். லதீபா,**
132, அரபிக் கல்லூரி வீதி,
அக்கரைப்பற்று 18.

**4. எஸ். கனகரெத்தினம்,**
975, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

**5. என். லியாஹ்ரீ,**
இல. 485/36ஏ,
3ம் குறுக்குத்தெரு,
பூம்புகார், மட்டக்களப்பு.

**6. என். உம்முஹபிரா,**
38, ஜின்னா வீதி,
அக்கரைப்பற்று 18.

**7. எஸ்.எச்.எம். ஜிப்ரி,**
155/32,
மொஹிதீன் மஸ்ஜித் வீதி,
மருதானை,
கொழும்பு 10.

**8. திருமதி பைசுல் அமீனா ஜலீல்,**
61/1ஏ/1, மகாபுத்கமுவ,
கொட்டிகாவத்தை.

✦✦✦

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கசப்பும்... இனிப்பும்...



தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு 1

கடந்த மாதம் 21லும், 22லும் இருபெரு விருது வைபவங்கள் நடந்து முடிந்து ரொம்ப கசப்பும், கொஞ்சம் இனிப்பும்,

நமது 'வாரமஞ்சரி' கடந்த ஞாயிறு பொழுதில் முதல் பக்கத்தில் "எங்கள் கருத்"தாகவும், 31ஆம் பக்கத்தில் பத்தி எழுத்திலுமாகவும் வாசக அபிமானிகளுடன் பகிர்ந்து கொண்டது.



21 திங்கள் கிழமை நிகழ்வுற்ற "வானொலி அரச விருது விழா"வில் கௌரவம் பெற்றுக் கொண்ட அரச வானொலியும், தனியார் வானொலிகளும் தங்கள் குதூகலத்தை எப்படியெல்லாம். நேயர்களுடன் பகிர்ந்து கொண்டன என்பதை இந்த மூத்த பேனை காது கொடுத்து ஒலிபரப்பு வழி கேட்டது. அச்சு ஊடக இதழ்களையும் ஒன்று விடாமல் பக்கம் பக்கமாகப் புரட்டிப் பார்த்ததும்.

வானொலிகளோ தங்கள் தங்கள் பண்பலைகளில் (7.M) செய்தி அறிக்கைகளில் சொல்லியதுடன் முடித்துக் கொண்டதையே அவதானிக்க முடிந்தது.

அவர்களது பெயர்கள் காற்றோடு காற்றாகக் கலந்து வானவீதியில் அழிந்தன.

மற்றபடி, நிரந்தரப் பதிவு என்று எதுவும் அச்சு ஊடகங்களில் இடம் பெறவில்லை.

இந்தக்காரியத்தைச் செய்திருக்க வேண்டிய 'தகப்பன்' சாமிகள் சம்பந்தப்பட்ட அமைப்பின் நிர்வாகிகளே அவர்களே அதிகாரபூர்வமான உத்தியோக ரீதியான விருதாளர் முழுப்பட்டியலையும் அச்சு ஊடகங்களுக்கு வழங்கி இருக்க வேண்டும்.

ஆயினும், நாளேடுகளின் மீது அத்தனை "நெருங்கிய நட்பின் காரணமாக" அவர்கள் மௌனம் காத்து ஓய்வில்? அடக் கன்றாவியே...

எவ்வாறாயினும், "ஒரு தனியார் பண்பலை" (7,M) நிறுவனம், ஒரேயொரு தமிழ் நாளேட்டில் மட்டும் அரைப்பக்க விளம்பரம் கொடுத்து, 'கண்ணே, கலைமானே' என்று தன் நிறுவன சார்பான விருதாளர்களின் நிழற்படங்களைப் போட்டுக் குதூகலித்தது.

வரவேற்றுப் பாராட்டவேண்டிய இனிப்பான விடயம்! ஆனால் "ஆனால்...? கசப்பு விழுங்க வைக்கப் பட்டுள்ளது அந்த விளம்பரத்தில்!

இங்கே பிரசுரம் அபிமானிகளும் அவதானியுங்கள்.

அந்தப் பண்பலை ஒலிபரப்பைப் புகழுடைய வைத்த அந்த நூறு பேரும் யார், எவர்? கடவுளே, அந்த நூறு பேருக்கு மட்டுமே தெரியும்!

என்றாலுங் கூட, பெயர்களை இருட்டடிப்புச் செய்திருந்தாலும், அந்தக் கிழக்கிலங்கை வானொலி 'ஜாம்பவானை' ஒரு நொடியில் நான் அடையாளம் கண்டேன் என்று அந்த அறிவிப்புக் கலைஞன் ஏ. எல். ஜபீர் ஒரு குறிப்பிட்ட வயது காலத்தில் என் வாசக அபிமானி!

ஆனாலும், ஆனாலும்... ஏனைய மூவரையும், பெயர் குறிக்காமல் படத்தை மட்டும் பிரசுரித்ததால் 'அநாதைக் கலைஞர்களாகி விட்டனரே...!

அறைப்பக்கம் விளம்பரம் போட்டு ஆனந்தக் கூத்தாடி இருக்கும் நிறுவனம், நால்வர் பெயர்களையும் இருட்டடிப்புச் செய்து ஆனந்தக் கூத்தாடி இருக்கிறதா?

இது, ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான கேள்வி!

## கசப்பு 2




'உய்குர்' உய்கு' என்றொரு பகுதி ஒரு தேசத்தில் அங்கே வாழ்வது முஸ்லிம் சமுதாயத்தினர்,

இந்தத் தகவல் ஏற்கனவே இப்பகுதியில் பதிவு. 'ஒரு தேசம்' என்பதை அலசி ஆராய வேண்டியதில்லை அது, நாம் நன்கறிந்த சீனா.

அந்தத் தேசத்திற்கு அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி ஒன்றில் ஒவ்வாமை. (அலர்ஜி) அது, அந்த உய்கு ஊரின் முஸ்லிம் கலாசாரம் அவர்கள் இஸ்லாமிய அடையாளங்களைக் கைவிட வேண்டும் என்பதில், சீனா 'கயிறு இழுப்புப் போட்டி' ( Tug of war) ஒன்றை எப்பவோ தொடங்கி இப்பவும் நடத்திக் கொண்டிருக்கிறது.

"அப்படியா?" என்று ஆட்சியாளரிடம் வினவினால் அடித்துச் சொல்வார்கள், "அல்ல, அல்ல" என்று!

எவ்வாறாயினும், சமீபத்தில் சீன ஜனாதிபதி தேசிய மக்கள் காங்கிரஸில் ஆற்றிய உரையில் பளிச்! பளிச்!

அவர் பேச்சில் இடம்பெற்றிருக்கும் ஒரு நான்கு வரிக் கருத்து இது

★ முழுச் சீனதேசத்தின் உணர்வுகளும், கலாசார எழுச்சியும் சின்ஜியாங் உய்குர் சுயாட்சிப் பிரதேசத்தில் ஏற்பட வேண்டும்: இந்த இரண்டையும் ஊக்குவிப்பதில் அப்பகுதி அரச ஆதரவுப் பிரஜைகள் ஈடுபடுவர்!

அவ்வாறாயின் பெரும்பான்மை மக்களாக ஒரு பிராந்தியத்தில் வாழ்கிற முஸ்லிம்கள் சிறுகச்சிறுக தங்கள் தனித்துவத்தையும் கலாசாரத் தொன்மைகளையும் தொலைத்து விட்டு, அல்லது கைகழுவி விட்டு பெரும்பான்மைச் சீனர்களின் நோக்குக்கும் போக்குக்கும் தலைசாய்த்து உணவுப் பழக்கங்களிலிருந்து (ஹராம் ஹலால்) அன்றாட மார்க்க அனுஷ்டானங்கள் வரை மாற்றம் செய்யவேண்டும் என்பதா அர்த்தம்?

தலையை என்னவோ செய்கிறதே....? அதுவும் மகிமை மிகு ரமழான் நோன்பு நம் வீட்டு வாசலுக்கு வந்து எங்களை மகிழ்வுக்கும் நேரத்தில்...?

**ஒரு முக்கிய அடிக்குறிப்பு**

இது அச்சுக்குப் போகும் சமயம், சீனாவின் ஒரு பெரும் நகரத்தில் முழுநாள் ஊரடங்காம் கிருமியார் மீண்டும் தலைதூக்கித் தடுமாற்றம்! அவரை அழிக்கவே சிந்தித்துச் செயல்பட வேண்டும். வரலாற்றுப் புகழ் கலாசாரத்தை அன்று!

## இனிப்பு 1

இந்தக் கசப்பும் இனிப்பும் விளையாட்டுப் போல இரண்டு ஆண்டுகளை நெருங்குகிறது.

ருசிக்கக் கொடுத்தவை அத்தனையும் கலை இலக்கியம் சம்பந்தப்பட்டவையே! உள்நாட்டு அரசியலைத் தொட்டதில்லை. தமிழ் பற்றுதலால் தமிழக நிலவரம் கருவேப்பில்லையாக மணம் வீசும். இன்று ஒரு மாறுதலுக்கு! ஆன்மிகம்! ஆம்! ஆன்மிக இனிப்பே!

அதை அளிக்க முன் ஒன்றை விவரித்தல் அவசியம்.

என்னையும் உங்களையும் சேர்த்து ஆண், பெண் அனைவரும் இருபத்து நான்கு மணி நேரமும் விரும்பி எதிர்பார்ப்பது 'இன்பம்' என்ற ஒன்றையே. 'துன்பம் தா' எனக் கேட்பாருமில்லை விரும்புவாருமில்லை.

கொஞ்சம் என்னோடு சேர்ந்து இதிகாசப் பக்கங்களைப் புரட்டுங்கள்.



பஞ்ச பாண்டவர்கள், திரௌபதி, குந்திதேவி, மன்னர் யதிஷ்டிரா இவர்களுடன் கண்ணபிரான் என்கின்ற கிருஷ்ணர்.

மேலே குறிப்பிட்டவர்களுள் ஒருவர், அதுவும் பெண்ணரசி, துன்பம் ஒன்றையே வேண்டி நின்றாள்! யாரிடம்? மாயக் கண்ணனிடம்!

'திரௌபதி' என்று அவசரப்பட்டு சொல்லிவிடாதீர்கள் கேட்டவர் குந்திதேவி! அன்னை ஸ்தானத்தில் அந்தக் குந்தி தேவி!

பின்னணிக் கதையை மிகவும் கொஞ்சமாகப் பிட்டு வைக்கிறேன்.

தர்மத்துக்கும், அதர்மத்துக்கும் இடையிலான குருசேத்திரப் போர் முடிந்து விட்டது. பலம் பொருந்திய பலர் பலியாகி விட்ட போதிலும் தர்மம் வெற்றிபெற்றதில் அனைவருக்கும் மகிழ்ச்சி, யுத்தம் முடிந்த யுதிஷ்டிரர் மன்னனான முடி சூட்டப்பட்டுவிட்டார். எல்லா காரியங்களையும் தன் கண் அசைவிலேயே நடத்தி முடித்து விட்ட கண்ணனும் கூட துவாரகைக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

புறப்படும் சமயத்தில் அவர், தன்னுடைய அத்தை குந்தியை சந்தித்து ஆசி பெறச்சென்றார். அப்போது குந்திதேவி, "கண்ணா... எங்களை விட்டுச் செல்கிறாயா?. உன்னைத் தினமும் பார்க்கும் பாக்கியம் எனக்கு இனி கிடைக்காதே" என்று வருந்தினாள்.

இந்த உலகத்தில் எதுவுமே நிலையானது கிடையாது. பிரிந்தவர்கள் சேர்வதும், சேர்ந்திருப்பவர்கள் பிரிவதும் கூட அப்படிப்பட்டதுதான். அத்தை, உனக்கு ஒரு வரம் தர தயாராக இருக்கிறேன். என்ன வரம் வேண்டுமானாலும் கேட்டு பெற்றுக்கொள்" என்றான் கண்ணன்.

ஆனால் குந்திதேவி கேட்ட வரமோ கண்ணனையே திகைக்கச் செய்தது.

"எனக்கு தினமும் ஒரு துன்பத்தைத் தந்தருள் கண்ணா தந்தருள்"

"என்ன அத்தை சொல்கிறாய்? எல்லாரும் இன்பமாக வாழ வரம் கேட்பார்கள். நீ என்ன தினம் ஒரு துன்பம் வேண்டும் என்று வரம் கேட்கிறாய்?" என்று ஆச்சரியப்பட்டவாறே கேட்டான் கண்ணன்.

"கண்ணா... இதுநாள் வரையிலும் என்ககு எப்போது துன்பம் நேர்ந்தாலும், நான் உன்னைத்தான் நினைத்துக் கொள்வேன். யுத்தம் காரணமாக இதுவரை நீ என்னுடன் இருந்தாய். உன்னைப் பார்த்துக் கொண்டிருந்ததிலேயே என் துன்பங்கள் எல்லாம் விலகி விட்டன. இப்போது நீ என்னை விட்டு நீங்கிச் செல்வதாக சொல்கிறாய். ஆகையால் நான் உன்னை நினைக்காமல் இருந்துவிடக் கூடாதே என்ற எண்ணம் என்னை அச்சுறுத்துகிறது. தினமும் ஏதாவது துன்பம் வந்தால். அதன் வாயிலாக உன்னை நினைத்து ஆறுதல் பட்டுக் கொள்வேன். உன்னை நினைப்பதால், உன் அருட்பார்வை எனக்கு கிடைக்கும் அல்லவா? அதற்காகத்தான் என்குக துன்பத்தையே வரமாக கொடு என்று கேட்கிறேன்" என்று விளக்கம் அளித்தாள் குந்திதேவி.

மாயக் கண்ணன் மாதரிசியின் மனத்தை மாற்றினானா அல்லது வரம் அளித்தானா என்பதை எல்லாம் அந்த மாபெரும் இதிகாசத்திற்குள்? நுழைந்து தேடும் ஆளுமை வரத்தை மூத்த பேனை பெறவில்லை! எவ்வாறாயினும் ஒன்றை மட்டும் திட்டவட்டமாகப் பதிய முடியும்.

பொதுவாகவே இன்பத்தில் இருக்கும் எவரும், இறைவனை சுலபமாக மறந்து விடுவதுதான் வாடிக்கை. துன்பம் என்ற ஒன்று இருப்பதால்தான். அவ்வப் போது, இறைவனை நினைத்து வழிபடுகிறார்கள். தன்னை அனைவரும் நினைக்க வேண்டும் என்பதற்காகத் தான் இறைவன் துன்பத்தைத் தருகிறான் என்று நினைத்தால், அதுவும் மனிதர்களின் அறியாமைதான். ஏனெனில் அதன் வாயிலாக இறைவன் நமக்கு சொல்லித்தருவது, வாழ்க்கைக்கான ஆன்மாவின் முதிர்ச்சிக்கான பாடம்.

ஒவ்வொரு துன்பத்தின் போதும், ஒரு அனுபவத்தையும், சோதனைகளை வெற்றி கொள்ளும் சூட்சுமத்தையும் மனிதன் அறிந்து கொள்கிறான். அதோடு இறை வழிபாடும் இணையும் போது அந்த துன்பம், இன்பத்தை அளிப்பதாக மாறுகிறது.




**கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!**

கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.
ஆமாம்,
இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:
**கொல்லுவதோ இளமை**
தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்
கொழும்பு10.

## 20 பாளை விரிவது பருவத்திலே காதல் பாடம் பரிவது பழக்கத்திலே!

சிறிது நேரம் வரையில், மதுமிதாவையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மெல்லச் சிரித்தான் பிரசன்னா!

"இந்த சிரிப்புக்கு என்ன பொருள்!" அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தபடியே கேட்டார் மதுமிதா

"என்னுடைய ஜெக்கை எடுக்க வேண்டாமா...? அதே நேரம் நமது காலை ஆகாரத்தை எடுக்க வேண்டாமா...ம்... துரத்தி அடித்தால் எப்படி மது?" தலையை ஒரு பக்கம் சாய்த்த படியே கேட்டான் பிரசன்னா!

"ஐயோ... சொரி சொரி நான் மறந்தே போயிட்டேன். இருங்க ஜெக்கை எடுக்கிறதுக்கு நானும் உங்களுக்கு உதவி செய்கிறேன்!" என்று சொல்லியபடியே,

முன்னால் நடந்தாள் மதுமிதா. இருவரும் சேர்ந்து ஜெக்கை அகற்றினார்கள்!

பிறகு,

அதை எடுத்துச் சென்று

தனது கார் டிக்கியில் போட்டான் பிரசன்னா.

அதைத் தொடர்ந்து,

காரைப் பார்த்துக் கொண்ட அந்த வெற்றிலைக் கடைக்காரனிடம் சென்ற அவள்,

"காரைப் பார்த்துக் கொண்டதுக்கு மிகவும் நன்றி பெரியவரே... இந்தாங்க இத வெச்சிக்கோங்க!" என்று சொல்லி,

இருநூறு ரூபாவை எடுத்து

அவன் கைக்குள் திணித்தான்.

"ஐயோ... இதெல்லாம் வேண்டாம் தம்பி... நான் என்ன காரை தூக்கியா வச்சிருந்தேன்... எனக்கு பணமெல்லாம் வேண்டாம் தம்பி!" அவன் அதை வாங்கவில்லை.

"இல்ல பெரியவரே... நீங்க காரை பார்த்து கொண்டதுக்காக நாங்க இத கொடுக்கல்ல எங்கட சந்தோஷத்துக்காகத்தான் கொடுக்கிறோம்!"

பிரச்சினை இப்படிச் சொன்னதும்,

அவனுக்கு நன்றி கூறி விட்டு,

அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டான் அவன்,

இதன்பிறகு,

இருவரும் தங்கள் கார்களில் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

மதுமிதாவின் கார் முன்னால் செல்ல, பிரசன்னாவின் கார் அதைப்பின் தொடர்ந்து சென்றது.

சிறிது நேரத்தில்,

இருவரும் வழக்கமாகச் செல்லும் கோல்பேஸ் ஓட்டலின் முன்னால்,

கார்கள் இரண்டும் நின்றன!

அவசர அவசரமாக காரைவிட்டு இறங்கிய மதுமிதா,

எதிரில் வந்த பிரசன்னாவிடம் ஓடிச் சென்று,

"பிரசன்னா சீக்கிரம் வாங்களேன்.... நீங்க ஒபீசுக்கு போறதுக்கு நேரமாகிறதல்லவா...?" என்று,

படபடப்புடன் சொன்னாள்.

"ஐயோ... மது நீங்க அதப்பத்தி கவலைப் படாதீங்க நான் இன்டைக்கி ஒபீசுக்குப் போகல்ல!

"அப்ப என்ன செய்யப் போறீங்க...?" கேட்டுவிட்டு,

விழிகளை வியப்புடன் உருட்டினாள் மதுமிதா...

கொழும்பில் நடக்கும் அந்த மீட்டிங் மாலை மூன்று மணிக்குத்தான் நடைபெறுகிறது...!"

"சரி... அது வரைக்கும் நீங்க இப்ப என்ன செய்யப் போறீங்க பிரசன்ன?" "இப்போது மணி ஒன்பது, 12 மணிக்கு அங்கு போனா போதும் அதுவரைக்கும் எனை செய்யிறதுன்னு தான் தெரியல்ல... இப்போது நேரமாகிவிட்டதால் ஒபீசுக்கும் போக முடியாது!"

தன்னுடன் பேசிக் கொண்டிருப்பதைத்தான் விரும்புகிறான் என்பது மதுமிதாவுக்குப் புரிந்து விட்டது!

ஆனாலும்

அதற்கான நேரடியாக பதிலை அவளால் கொடுக்க முடியவில்லை.

அதனால்,

அவள் மௌனம் காத்தாள்!

சிறிது நேரம் சிந்தித்துக் கொண்டிருந்த பிரசன்ன,

இப்போது,

கேள்வியை வேறுவிதமாகக் கேட்டான்...

"ம்... மது... உங்கள கடையை திறப்பதற்கென்று ஒரு நேரத்தை வைத்திருக்கிறீர்களா?"

"இல்லை அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை!"

"வேறு யாராவது உங்களுடன் வேலை செய்கிறார்களா?"

"நான் இல்லையென்றாலும் எட்டு மணிக்கே கடயைத் திறந்து விடுவார்கள் மூன்று பெண்கள் வேலை செய்கிறார்கள். அது தவிர மெனேஜர் ஒருவரும் இருக்கிறார். அவர் தான் காலையில் கடையைத் திறப்பார்!"

"ஓ... அப்படியானால் பிரச்சினை இல்லை... நான் ஒரு யோசனை சொல்லவா...?"

எ...எ... என்ன... யோசனை பிரசன்னா?" படப்படப்புடன் கேட்டாள் மதுமிதா.

அவள் முகத்தில்

ஒருவித அச்சம் படர்ந்திருந்தது.

"இதில் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை மது... நாங்கள் இருவரும் சந்தித்து இப்போது இரண்டு வாரங்களாகி விட்டன. ஆனாலும் நாம் இருவரும் தனிமையில் பேசிக் கொள்வதற்கு சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. இப்போது அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எங்காவது போய் கொஞ்சம் மனம் விட்டு பேசுவோம்... எங்களுக்கு மூன்று மணித்தியாலம் காலம் அவகாச மிருக்கிறது!"

இதைக் கேட்டதும், மதுமிதா நேரடியான பதில் எதுவும் சொல்லவில்லை.

ஆனாலும்,

அப்படி ஒரு எதிர்பார்ப்பு,

அவளுடைய இதயத்தின் ஒரு மூலையிலும் இருந்தது.

பிரசன்னாவுடன் தனிமையில் சந்தித்து பேச வேண்டும் என்ற ஓர் எண்ணம்,

அவனை சந்தித்த முதல் நாள் அன்றே அவள் உள்ளத்தில் படர்ந்து சென்றது.

ஆனாலும் அதற்கான வாய்ப்புகள் கிடைக்காததையிட்டு அவளும் யோசித்துக் கொண்டுதான் இருந்தாள்.

பிரசன்னா பெயரைப்போலவே பிரகாசமாகத்தான் இருந்தான்.

அழகிலும், அந்தஸ்திலும் குணத்திலும் அவன் பிரசன்னமானவன்தான்.

மதுமிதாவுடைய செல்போனை அவளிடம் கொடுத்த அன்றே

அவள் மனதிற்குள் அவன் குடிபுகுந்து விட்டான்.

ஆனாலும்,

அவளும் ஒரு பெண் என்பதால்,

அதை அன்று தெரிவிக்க முடியாமல் போய்விட்டது!

ஆனால் இன்று,

அந்த வாய்ப்பு வந்து,

அவள் முன்னால் கைகட்டி நிற்கிறது,

அதை பயன்படுத்திக் கொள்ள அவள் விரும்பினாள்.

"இல்ல... பிரசன்னா பயம் எதுவும் இல்ல... ஆனா நாங்க எங்க போறது?"

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்... எனக்குத் தெரிந்த ஒரு இடம் இருக்கிறது?"

"அது எங்க இருக்குது?"

"நீங்க வாறீங்களா?"

அவன் இப்படிக் கேட்டதும்,

வியப்புடன் அவனைப் பார்த்தாள் மதுமிதா,

**(இன்னும் வளரும்)**



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






# படித்ததும் பகர்வதும் 90



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### வரவுக்கேற்ற செலவு

ஒவ்வொருவரும் தமது வரவுக்கேற்ற வகையில் செலவு செய்ய பழகிக்கொள்ள வேண்டும். இதன் மூலமே வாழ்வில் திருப்தியும் நிம்மதியும் கிடைக்கும். மற்றவர்களைப் பார்த்து, அவர்களது ஆடம்பரங்களைக் கண்டு, அல்லது அவர்களது படாடோப வாழ்வில் மயங்கி நாமும் அவ்வாறே வாழ வேண்டும் என்று செயல்படுவதும், தமது வருமானத்தை விட அதிகம் செலவு செய்து கடனாளிகளாவதும் சிந்தனையற்றவர்களின் செயற்பாடாகும்.

இது கட்டாயமாக தவிர்க்க வேண்டிய, முற்றாகத் கைவிடவேண்டிய விடயமாகும். இன்றைய காலத்தில் பெரும்பாலானோரின் வருமானம் தமது அன்றாட வாழ்க்கைத் தேவைக்கு போதுமானதா? என்பதே கேள்விக் குறிதான். ஆயினும் பிறரைப் பார்த்து ஆடம்பரமாக வாழ முயற்சிக்கும் போது போலியாக தம் நிலையை உயர்வாகக் காட்ட முயற்சிக்கும்போது தமது வருமானத்துக்கும் மேலாக செலவு செய்து வருத்தத்துக்கு உள்ளாவது கவலைக்குரியது. 'விரலுக்கேற்ற வீக்கம்' என்பார்கள் அது போலவே வரவுக்கேற்ற செலவும் அமைய வேண்டும்.

உணவு, உடை, வீடு என்பன ஒவ்வொருவரினது வாழ்விலும் அத்தியவசியமான, அடிப்படையான கட்டாயமான தேவைகளாகும். இவற்றுக்காக தமது தேவைக்கு ஏற்ற வகையிலும், தமது உழைப்புக்கும் வருமானத்துக்கும் பொருத்தமான வகையிலும் மட்டுமே செலவு செய்ய பழகிக்கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் அணிகிறார்கள், செய்கிறார்கள் என்பதற்காகவோ, மற்றவர்களுக்கு பகட்டாக காட்ட வேண்டும் என்பதற்காகவோ, ஆடம்பரமாக வாழ்கிறோம் எனக்காட்டவோ புதுப்புது ஆடை அணிகளை வாங்குவதோ, விதவிதமான உணவு வகைகளுக்காக கூடுதலாக செலவு செய்வதோ உகந்ததல்ல இதே போல தமது இல்லங்களை மற்றவர்களுக்கு போட்டியாக பெரிதாக, அளவுக்கு அதிகமாக அலங்காரமாக அமைப்பதும் புத்திசாலித்தனமல்ல.

போதிய வசதியோ, வாய்ப்போ இல்லாவிட்டாலும் பிறருக்கு பகட்டாக காட்ட வேண்டும் என்பதற்காக, தமது தகுதிக்கும் மேலாக வங்கியில் அல்லது நிதி நிறுவனங்களில் கடன் பெற்று அல்லது லீசிங் எனும் குத்தகைக்கு அன்றேல் மாதாந்த தவனைக் கட்டணத்துக்கு வாகனங்களை வாங்கி பாவிக்கின்றனர் சிலர். பின்னர் அதற்கான எரிபொருளுக்கும், பராமரிப்புக்கும், மாத கட்டணங்களை செலுத்தவும் செலவு செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர். இது அவசியமானதா? பொருத்தமானதா?

இத்தகைய விடயங்களை நன்கு கவனத்தில் எடுத்து, சீராக சிந்தித்து சிக்கனமாக வாழ்வது, குறிப்பாக வரவுக்கேற்ற வகையில் செலவு செய்து வாழ்வது மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிவகுக்கும். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பது ஆன்றோர் மொழியல்லவா!

## நெஞ்சுக்கு நீதி

தாயின் பாதத்தடியில் பிள்ளையின் சொர்க்கம்
தெரிந்து வாழ்வோரின் வாழ்க்கையே சிறக்கும்
சேயின் வெற்றிகளே தாய்மார்களின் நோக்கம்
சரியாகப் புரிந்தாலே திறந்திடும் நல் மார்க்கம்

## புது வரவு

### "படிகள்" இலக்கிய இதழ்

இருமாத இலக்கிய இதழாக, சிறப்பாக வெளிவரும் "படிகள்" இதழின் நாற்பத்து ஒன்பதாவது இதழ் (பெப்ரவரி – 2022) வெளிவந்துள்ளது பிரபல எழுத்தாளர் கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷாவின் ஆலோசனை வழிகாட்டலுடன், எல். வஸீம் அக்ரம் பிரதம ஆசிரியராக இருந்து வெளியிடும் 'படிகள்' இலக்கிய இதழ் பல்வேறு கஷ்டங்களுக்கும், இடையூறுகளுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக வெளிவருவது பாராட்டுக்குரியது.

பிரபல "ஞானம்" மாத இதழ் நடாத்திய மாபெரும் இலக்கிய போட்டியில் சிறந்த சிற்றிதழ்களுக்கான போட்டியில் "படிகள்" மூன்றாவது இடத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏழு கட்டுரைகள், இரண்டு சிறுகதைகள், ஒரு மொழிபெயர்ப்பு கவிதை, ஒன்பது கவிதைகள் என பல விடயங்களையும் உள்ளடக்கி இந்த பெப்ரவரி – 2022 இதழ் வெளிவந்துள்ளது.

இலக்கிய இதழ் ஒன்றை தொடர்ந்து வெளியிடுவதென்பது இன்றைய காலத்தில் பெரும் சவால்தான். அதனை துணிவோடு வெற்றிகரமாக முன்னெடுக்கும் 'படிகள்' வெளியீட்டாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். இதனை வாங்கி, சந்தா செலுத்தி இவர்களுக்கு உதவுவது தமிழ் வாசகர்களது கடமையாகும்.




எனவே, சிறந்த முறையில் வெளிவரும் 'படிகள்' இருமாத இலக்கிய இதழை வாங்கி வாசிப்பதும் அதற்கு உதவுவதும் இலக்கியத்தில் ஆர்வம் உள்ளவர்கள் மீதுள்ள பொறுப்பு என்றால் மிகையல்ல.

இதழ்: **படிகள் (இருமாத இலக்கிய இதழ்),** பிரதம ஆசிரியர்: **எல். வஸீம் அக்ரம்,** விலை: **தனிப்பிரதி ரூபா 120/=,** வருட சந்தா: **ரூபா 600/,** வெளியீடு: **அனுராதபுரம் நண்பர்கள் இலக்கிய குழு,** தொடர்புகளுக்கு: 0769266446, 0718423459

## நொறுக்குத் தீனி

### சைக்கிள் ஓட்டுபவனும் பொருளாதாரமும்!

இன்றைய எரிபொருள் தட்டுப்பாட்டினால் சைக்கிள் பாவனை அதிகரித்துள்ளது. தினமும் சைக்கிள் ஓட்டுபவனால் ஒரு நாட்டின் பொருளாதாரம் மட்டுமல்ல உலக பொருளாதாரமே பாதிக்கும் என்கின்றனர் சிலர். அது எப்படி என்று கேட்டால் இப்படி பதில் கூறுகிறார்கள். வாசியுங்கள். உங்களுக்கே ஆச்சரியமா இருக்கும்!

- சைக்கிள் ஓட்டுபவனுக்கு கார் தேவையில்லை.
- அதனால் கார் வாங்க கடன் எடுக்க மாட்டான்.. வட்டியும் கட்ட மாட்டான்.
- வங்கிக்கோ, லீசிங் கம்பனிக்கோ ஒரு சதமும் பிரயோசனம் இல்லை..
- இன்சூரன்ஸ் செய்யும் தேவையுமில்லை..
- பெட்ரோல், டீசல் தேவையே இல்லை.
- வாகன சர்வீஸ், உதிரிப்பாகங்கள் என எதற்கும் இவன் செலவு செய்யறதும் இல்லை..
- பார்க்கிங் கட்டணம்னு பெரிதாக எங்கேயும் செலுத்த மாட்டான்...
- இதெல்லாம் ஒருபுறமிருக்க, சைக்கிள் ஓட்டுபவனுக்கு நீரிழிவு, இரத்த அழுத்தம் வராது. இதய நோய்களும் வராது. குண்டாகவும் மாட்டான். இதனால் ஆஸ்பத்திரி, டாக்டர், மருந்து கடை இதெல்லாம் இவனுக்குத் தேவையே இல்லை...



இப்படி, பார்க்கும்போது, சைக்கிள் ஓட்டுபவனால் பொருளாதாரம் பாதிக்கத்தானே செய்யும்!?!

## சிந்தனை செய் மனமே

### பணம்! எது வரை ..?

தன் தோளில் பிள்ளையை தூக்கிக் கொண்டு பேருந்தில் சென்றார் அந்த மனிதர். முகத்தில் ஏனோ ஒரு கவலை. 'டிக்கெட்' என்று நடத்துனர் கேட்ட போது பதில் எதுவும் பேசவில்லை. 'யோவ் எங்கயா போகணும்'னு கண்டக்டர் டென்ஷன் ஆகி, அவரது நடுங்கும் கைகளில் இருந்த காசினை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு, 'காலங்காத்தால வந்துட்டானுங்க' என்று முணுமுணுத்துக்கொண்டே நகர்ந்தார்.

ஜன்னல் ஓரத்தில் அமர்திருந்ததாலோ என்னவோ காற்றும் தூசியும் கண்ணில் பட்டு கண் கலங்கினார். தோளில் கிடந்த துண்டை எடுத்து கண்களை துடைத்துக்கொண்டு

தொடர்ந்தும் மௌனமாகவே பயணித்துக் கொண்டிருந்தார்.

அவருடன் வந்திருந்த மற்றொரு நபர் அவரை இறுக்க பற்றிக் கொண்டிருந்தார். ஏதோவொரு துயரச் சம்பவம் அவர் வாழ்வில் நடந்திருக்கிறது என்று தெரிந்தது.

நான் இறங்கும் இடம் வந்துவிட்டது. பேருந்தை விட்டு இறங்க மனமில்லை. அவர்கள் வாழ்வில் என்ன நடந்திருக்கும் என்ற கேள்வி என்னுள்ளத்தில் பூதாகரமாக இருந்தது!

'ஏன் இப்படி சோகமாக இருக்கிறார்கள்?' என்று எண்ணிக்கொண்டே பேருந்தை விட்டு இறங்கினேன். நான் இறங்கிய அதே பஸ் ஸ்டாப்பில் அவர்களும் இறங்கினார்கள்.



மனம் சற்று நிம்மதி அடைந்தது. அவர்கள் பற்றி எதையேனும்

தெரிந்து கொள்ளலாம் என்று மனம் விரும்பியது. அவர்களை பின் தொடர்ந்தேன். தோளில் பிள்ளையை சுமந்து கொண்டு நடக்கத் தொடங்கினர் இருவரும். சிறிது தூரம் அவர்கள் பின்னால் சென்ற எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

தன் பிள்ளையை தோளில் தூக்கிகொண்டு அவர்கள் சென்ற இடம் சுடுகாடு. சிலர் அங்கு கூடி இருந்தனர் அவரது நெருங்கிய சொந்தங்களாக இருக்கலாம். அவர்களை பார்த்ததும் தூக்கி வந்த தன் பிள்ளையை கீழே கிடத்திவிட்டு, தலையிலும் நெஞ்சிலும் அடித்துக்கொண்டு கதறி அழுதார்.

எதனால் அந்த நபரின் பிள்ளை இறந்தது என்று எதுவும் எனக்குத் தெரியவில்லை, ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. 'இறுதிச் சடங்கை கூட திருவிழா போல் கொண்டாடும் இந்தக் காலத்தில். இறந்து போன தன் மகனை பாடை கட்டி தூக்கி வரும் அளவுக்குக் கூட அவரிடம் பணம் இல்லை'.

உயிருக்குயிரான தன் பிள்ளையின் உயிரற்ற உடலைத் தன் தோளில் சுமந்து கொண்டு, துக்கத்தையெல்லாம் நெஞ்சில் புதைத்துக் கொண்டு, கண்டக்டருக்கும் தெரியாமல் இறந்து போன தன் ள்ளையை மயானம் வரை வந்த அந்த தந்தையின் வேதனை, வலி, துக்கம், துயரம் இன்னமும் என் மனதில் நீங்காமல் இருக்கிறது.

'உயிரோடு இருக்கும் வரை தான் பணம் தேவை என்று நினைப்பவர்களுக்கு மரணித்த பின்னரும் இந்த உலகத்தில் பணம் எவ்வாறு தேவைப்படுகிறது' என்ற எண்ணம் என் நெஞ்சைப் பிழிந்தது. (ஒரு நேயரின் நேரடி அனுபவத்திலிருந்து..)

## கைவண்ணம் காணீர்



கற்களால் காட்சியொன்றை காட்டும் கலைஞனின் கைவண்ணம் காணீர்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# திருக்குறள் இல்லாவிட்டால் தமிழ்மொழி உலகிற்கு தெரிந்திருக்காது



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 02

செந்நாப்புலவர், செந்தாப்போதர், திருத்தகுதெய்வத் திருவள்ளுவர், தெய்வத் திருவள்ளுவர், தெய்வப் புலமைத் திருவள்ளுவர், தெய்வப்புலவர், தேவர், தேவர் திருவள்ளுவர், தேவிற்சிறந்த திருவள்ளுவர், நாயனார், புலவர், பெருநாவலர், பொய்யா மொழியார், பொய்யில் புலவர், முதற் பாவலர், வள்ளுவதேவர், வள்ளுவர் நாயனார், பொய்யா மொழிப் புலவர், நான்முகன், மாதானுபாங்கி என்று பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்ட திருவள்ளுவர் திருக்குறள் தவிர கீழே பட்டியலிடப்பட்டிருக்கும் நூல்களையும் எழுதியதாக சில தமிழ் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

எனினும் திருவள்ளுவர்தான் இந் நூல்களை எழுதினார் என்பதற்கு எந்தவிதமான ஆதாரங்களும் கிடையாது . ஆயினும் இந்நூல்களை பிற்காலத்தில் திருவள்ளுவர் பெயரால் வேறு சிலர் இயற்றி இருக்கக்கூடும் என்றும் சில தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாளர்களால் கூறப்படுகிறது.

- ஞானவெட்டியான் (மருத்துவ நூல் ) 1500 பாக்கள்
- கொண்டது.
- ரத்தினசிந்தாமணி 800 பாக்கள் கொண்டது.
- பஞ்சரத்தனம் (மருத்துவ நூல் ) 500 பாக்கள் கொண்டது.
- கற்பம் 300 பாக்கள் கொண்டது.
- நாதாந்த சாரம் 100 பாக்கள் கொண்டது.
- நாதாந்த திறவுகோல 100 பாக்கள் கொண்டது.
- வைத்திய சூஸ்திரம் 100 பாக்கள் கொண்டது.
- கற்ப குருநூல் 50 பாக்கள் கொண்டது.
- முப்பு சூஸ்திரம் 30 பாக்கள் கொண்டது.
- வாத சூஸ்திரம் 16 பாக்கள் கொண்டது.
- முப்புக்குரு 11 பாக்கள் கொண்டது.
- கவுன மணி 100 பாக்கள் கொண்டது.
- ஏணி ஏற்றம் 100 பாக்கள் கொண்டது.
- குருநூல் 51 பாக்கள் கொண்டது.

இதேபோல் திருவள்ளுவர் ஞானம் எனும் சித்தர் பாடல்களும் திருவள்ளுவர் பெயரில் இருக்கிறது எனினும் தமிழ் அறிஞர்கள் சிலர் அது திருவள்ளுவர் பெயரில் வேறு ஒருவர் பதினாறாம் நூற்றாண்டில் எழுதியதாகக் கருதுகிறார்கள்.

உலகத்திலுள்ள அத்தனை விடயங்களையும் எடுத்து ஒன்றரை அடியில் குறள் எழுதிய திருவள்ளுவர் கீழ் வரும் நான்கு அடியில் உள்ள பாடலை அவரது துணைவியார் வாசுகியை நினைவு கூரும் பொருட்டு எழுதியுள்ளார் என்று ஒரு கருத்து இருந்தாலும் சில அறிஞர்களின் பார்வையில் இதுவும் திருவள்ளுவர் பெயரில் வேறு ஒருவரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது .

அடியிற்கினியாளே அன்புடையாளே
படிசொல் தவறாத பாவாய் அடிவருடி
பின்தூங்கி முன்னெழும்பும் பேதாய்
இனிதா(அ)ய் என் தூங்கும் என்கண் இரவு

திருவள்ளுவரின் பெருமையை "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று போற்றிய பாரதியார் மேலும், "கம்பனைப் போல், வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணும் பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை" என்கிறார். மனோன்மணியம் சுந்தரனார் "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந் தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொருநீதி" என்று போற்றுகின்றார். தமிழறிஞர் கி.ஆ.பெ.விஸ்வநாதம் திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால், தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்கு தெரிந்திருக்காது



அதே போல் திருக்குறள் என்னும் ஓர் நூல் தோன்றியிராவிட்டால் தமிழ்மொழி உலகிற்கு தெரிந்திருக்காது என்று கூறுகின்றார் . திருக்குறளின் பெருமையை கபிலர் ''தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட பனையளவு காட்டும் படித்தால் '' என்று வியந்து போற்றுகிறார்.

திருவள்ளுவம் எனும் தெய்வீகத் திரவியம் மக்களுக்கு ஒழுக்க நீதிகளை அறிவுறுத்தி அவர்களின் தனி மற்றும் சமூக வாழ்க்கையை ஒழுங்குபடுத்துமுகமாக சங்கம் மற்றும் சங்கம் மருவிய காலங்களில் தமிழில் பல்வேறு நீதி நூல்கள் எழுந்துள்ளன. இவ்வாறு சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்களின் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள பதினெட்டு நூல்களுள் பதினொரு நூல்கள் நீதி நூல்களாகத் தமிழ் அறிஞர்களால் இனம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமான நூல் பரவலாக எல்லோராலும் அறியப்ப ட்டதும் வெளிநாட்டு அறிஞர்களின் கவனத்தை ஈர்த்ததுமான தமிழர் வேத நூலாகிய திருக்குறளாகும்.

தனி மனித மற்றும் சமூக வாழ்வியலுடன் தொடர்புபட்ட எல்லா விடயங்களையும் திருக்குறள் கூறுவதால் முப்பால், உத்தர வேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம், பொதுமறை, திருவள்ளுவப் பயன், தமிழ் மாதின் இனிய உயர்நிலை , அற இலக்கியம் , அறிவியல் இலக்கியம் , அறம், இரண்டு, உத்தரவேதம், எழுதுண்டமறை, குறள், திருவள்ளுவர், தெய்வமாமறை, நம்மறை, பழமொழி, பால்முறை, புகழ்ச்சிநூல், பொருளுரை, முதுநெறி, முதுமொழி, முப்பால், முப்பொருள், மெய்வைத்தசொல், வள்ளுவதேவன் வசனம், வள்ளுவம், வள்ளுவ மாலை, வள்ளுவர், வள்ளுவர் வாய்மொழி, வள்ளுவர் வைப்பு, வள்ளுவன் வாய்ச்சொல், வாய்மை, வாயுறை வாழ்த்துறிக்கோள் இலக்கியம், வான்மறை , ஈரடி நூல் ,நீதி இலக்கியத்தின் நந்தா விளக்குஎன்று பல பெயர்களால் திருக்குறளானது அழைக்கப்படுகிறது .

எனினும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களின் வரிசையில் "முப்பால்" என்னும் பெயரோடு திருக்குறள் விளங்குகின்ற காரணத்தால் முப்பால் என்பதே திருக்குறளின் முதல் பெயர் என தமிழ் அறிஞர்கள் கருதுகிறார்கள் . அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களையும் பாடுபொருளாகக் கொண்டமையால் திருக்குறள் "முப்பால்" எனப் பெயர் பெற்றதாக தமிழ் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

முப்பால்கள் ஒவ்வொன்றும் "இயல்" என்னும் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ள அதேவேளை ஒவ் வொரு இயலும் சில குறிப்பிட்ட எண்ணிக்கையான அதிகாரங்களைக் கொண்டதாக மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அதிகாரமும் குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்த பத்து பாடல்களைக் கொண்டுள்ளது. திருக்குறள் தோன்றிய காலத்தில் தோன்றிய நூல்களுக்குள்ளே இவ்வகை குறள் வெண்பாக்களால் ஆகிய முதல் நூலும் ஒரே நூலும் திருக்குறள் மட்டுமே . குறள் வெண்பாக்களால் ஆக்கப்பட்டமையாலேயே "குறள்' என்றும் "திருக்குறள்" என்றும் இது பெயர் பெற்றது.

அறத்துப்பாலில் பாயிரவியல் ( 4 அதிகாரங்கள்) உட்பட இல்லறவியல் (25 அதிகாரங்கள்) துறவற வியலில் (13 அதிகாரங்கள்)ஊழியல் (1 அதிகாரம்) என்னும் நான்கு இயல்கள் காணப்படுகின்றன . பொருட்பாலில் அரசு இயல் (25 அதிகாரங்கள்), அமைச்சு இயல் (10 அதிகாரங்கள் ), அரணியல் ( 2 அதிகாரங்கள்), கூழியல் ( 1 அதிகாரம்), படையியல்( 2 அதிகாரங்கள்), நட்பியல் (17 அதிகாரங்கள் ), குடி யியல்(13 அதிகாரங்கள்) என்னும் ஏழு இயல்கள் உள்ளன. கடைசிப்பாலாகிய இன்பத்துப்பால் அல் லது காமத்துப்பாலில் களவியலில் (7 அதிகாரங்கள் ), கற்பியல் (18 அதிகாரங்கள் ) என்னும் இரு இய ல்களும் உள்ளன. எனவே திருக்குறளில் மூன்று பால்களும் பாயிரவியல் உட்பட 13 இயல்களும் , 133 அதிகாரங்களும் , 1330 குறள்களும் மொத்தம் 12000 சொற் களில் அமைந்துள்ளன .

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற் றே யுலகு...." என்று தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தாகிய "அ" வில் ஆரம்பித்து, 1330 ஆம் குறளாகிய, "ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்" என்று தமிழ் மொழியின் கடைசி எழுத்தாகிய "ன்"னுடன் முடித்திருக்கிறார் திருவள்ளுவர்.

**(தொடரும்)**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 03 திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சிரிக்கும் தொற்றுநோய்



சிரிப்பு என்பது மகிழ்ச்சியால் மாத்திரம் வருவதல்ல. மன அழுத்தம், துன்பம், கோபம் எல்லாவற்றின் உச்ச வெளிப்பாடு சிரிப்பாக வரும் என்கிறார்கள் உளவியலாளர்கள். இதற்கு நல்ல உதாரணம் 1962 ஆம் ஆண்டு ஏற்பட்ட டங்கயிக்கா சிரிப்புத் தொற்றுநோய்.

தற்போது தன்சானியா என்று அழைக்கப்படும் அப்போதைய டங்கயிக்காவில் 1962 ஜனவரி 30 ஆம் திகதி பெண்கள் மிஷனரிப் பாடசாலை ஒன்றின் மாணவி ஒருவர் கட்டுப்பாடு இல்லாமல் சிரிக்க ஆரம்பித்தார். விரைவிலேயே அவளுடன் சேர்ந்து மேலும் இரு சிறுமிகள் சம்மந்தம் இல்லாமல் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

அது பின்னர் முழு பாடசாலைக்கும் தொற்றியது. பாடசாலையில் இருக்கும் 159 மாணவிகளில் 95 பேர் கட்டுப்பாடு இல்லாமல் சிரித்தார்கள். நிலைமை மோசமடைந்ததால் பாடசாலை ஆறு வாரங்களுக்கு மூடப்பட்டது.

ஆனால் வீடு சென்ற சிறுமிகள் அங்கேயும் சிரிக்க அது ஊருக்கு பரவியது. அருகில் இருக்கும் பாடசாலைகளுக்கும் பரவியது. ஒட்டுமொத்தமாக 14 பாடசாலைகள் மூடப்பட்டன, ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர்.

இவ்வளவு நடந்தும் இந்த சிரிப்பு நோய்க்கான காரணத்தை மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பெரும்பாலும் 12 தொடக்கம் 18 வயதானவர்களுக்குத் தான் இதன் பாதிப்பு இருந்தது. 16 நாட்கள் வரை நீடிக்கும் இந்தப் பிரச்சினையில் சில மணி நேரத்திற்கு கட்டுப்படுத்த முடியாமல் சிரிப்பு வரும்.

பாடசாலையின் ஆசிரியர்கள் அல்லது வேறு எவருக்கும் அந்தப் பாதிப்பு இருக்கவில்லை. பாதிக்கப்பட்ட மாணவர்களால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை.

பதினெட்டு மாதங்கள் வரை நீடித்த இந்தப் பாதிப்பு மெல்ல மெல்ல காணாமல்போனது. இதில் சிரிப்பது மாத்திரம் நிகழவில்லை அத்தோடு வலி, மயக்கம், சுவாசப் பிரச்சினை, உடல் அரிப்பு மற்றும் அழுகையும் வரும்.

என்றாலும் இதனை உடல் ரீதியான, சராசரி வைரஸ் தொற்றாக பார்க்க முடியவில்லை என்பது தான் மருத்துவர்களின் கூற்று. இது மன அழுத்தத்தால் தூண்டப்பட்ட ஒன்று என்பது தான் பெரும்பாலானவர்களது கருத்து.

இந்த சிரிப்பு நோய் வெடிப்பதற்கு சற்று முன்னர் டங்கயிக்கா ஒரு சுதந்திர நாடாக உருவெடுத்தது. எனவே புதிய சூழலில் மாணவர்கள் இடையே மன அழுத்தம் அதிகரித்தது. ஏனென்றால் அவர்கள் மீதான ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் எதிர்பார்ப்புக் கூடியதே காரணம். குறிப்பாக இயலாமையில் அதிக ஆற்றல் இல்லாத மக்களிடையே இவ்வாறான கூட்டு உளவியல் பிரச்சினை ஏற்படுகிறதாம்.

பிரச்சினைக்குரிய ஏழை நாடுகளின் மக்களிடையே இவ்வாறு சம்பந்தம் இல்லாமல் சிரிக்கும் நோய் அடிக்கடி ஏற்படுகிறதாம். குறிப்பாக ஆப்கானிஸ்தான், கொசோவோ மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இவ்வாறான உளவியல் பிரச்சினை ஏற்பட்ட சம்பவங்கள் உண்டு. எதற்கும் கவனமாக இருப்பது நல்லது.



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# மரண தண்டனையில் தப்பியவர்

1910 ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு நீடித்த மெக்சிகோ புரட்சிக் காலத்தில் மரண தண்டனை நிறைவேற்றுவது என்பது அன்றாடம் நடக்கும் ஒன்று. துப்பாக்கியால் சுட்டு தண்டனை நிறைவேற்றப்படுவது விரும்பத்தக்கது.

இந்த மரண தண்டனை நிறைவேற்றும் குழுவில் ஒன்பது பேர் இருப்பார்கள். அவர்கள் ஒரே நேரத்தில் சூடு நடத்தி தண்டனையை நிறைவேற்றுவார்கள். இந்த ஒன்பது பேர் இலக்கும் தவறுவது கடினம் தான். ஏனென்றால் இதில் கைதேர்ந்த துப்பாக்கிதாரி ஒருவரும் இருப்பார். அவரது இலக்கு உடலில் உயிரை பறிக்கும் உறுப்பாக இருக்கும்.

இத்தனை திட்டமிட்டு மரண தண்டனை நிறைவேற்றியபோதும், அதில் இருந்து கூட ஒருவர் உயிர் பிழைத்திருக்கிறார். அவரது பெயர் வென்சஸ்லோ மகுவேல். 1915 ஆம் ஆண்டு புரட்சியில் கலந்துகொண்ட சந்தேகத்தில் மகுவேல் பிடிபட்டார். மறு பேச்சுக்கு இடமில்லை. விசாரணை இன்றியே மகுவேலுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

1915 மார்ச் 18 ஆம் திகதி மகுவேல் துப்பாக்கி படைக்கு முன் நிறுத்தப்பட்டார். ஒன்பது பேர் சுட்டார்கள். அதில் ஒருவர் மகுவேலின் தலையை இலக்கு வைத்து சுட்டார். அவர் பிழைத்திருக்கு வாய்ப்பு இல்லை என்று தான் எல்லோரும் கலைந்து சென்றார்கள்.




ஆனால் இறந்த உடல்களில் கிடந்த மகுவேல் நினைவிழந்த நிலையில் உயிருடனேயே இருந்தார். அவசரமாக மருத்துவ உதவி வழங்கப்பட்டது. சாதாரண ஒருவரை விடவும் நீண்ட காலம் மகுவேல் உயிர் வாழ்ந்தார். 1976 ஜுலை 29 ஆம் திகதி அவர் இறக்கும்போது அவரது வயது 86.

# பணம் பத்தும் செய்யாது



1923 ஆம் ஆண்டு ஜெர்மனியில் பணம் என்பது நாய்கிக் கூட மதிப்பில்லாமல் போய்விட்டது. அப்படிக்கு அந்த நாட்டில் பணவீக்கம் உச்சம் பெற்றது. அதாவது 1923 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரொட்டித் துண்டு ஒன்றின் விலை 250 ரெய்ச்மார்க்காக இருந்தது. அதுவே அந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆகும்போது ரொட்டித் துண்டு ஒன்றின் விலை 200,000 மில்லியன் ரெய்ச்மார்க்காக மாறிவிட்டது.

அதாவது ஒரு அமெரிக்க டொலருக்கு நிகரான ஜெர்மனி ரெய்ச்மார்க் ஒன்றின் பெறுமதி 9 இலக்கங்கள் கொண்டதாக 4.2 மில்லியன்களாக மாறிவிட்டது. இப்படித் தான் ஒரு ஜெர்மனி தொழிலாளர் தனது வார சம்பளத்தை கையில் சுமந்து செல்ல முடியாததால் தள்ளிவண்டி ஒன்றை எடுத்துச் சென்றார். தள்ளுவண்டி முழுவதும் பணத்தை நிரப்பிக்கொண்டு வீடு செல்லும்



வழியில் திருடன் ஒருவன் பணக்கட்டுகளை விட்டு விட்டு தள்ளுவண்டியை திருடிச் சென்றுவிட்டான். சிலர் தீ மூட்டுவதற்குக், சிறுவர்கள் பட்டம் செய்வதற்குக் கூட பண நோட்டுகளை பயன்படுத்த ஆரம்பித்தார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -














# தேனீ கலை இலக்கிய மன்றத்தின் மூன்றாம் ஆண்டு விழா

யு.எல்.எம்.ஹரீஸ்(வாழைச்சேனை விசேட நிருபர்)

தேனீ கலை இலக்கிய மன்றத்தின் மூன்றாம் ஆண்டு விழா சென்ற 26.03.2022 சனிக்கிழமை அன்று ஏறாவூர் வாவிக்கரை கலாசார மத்திய நிலையத்தில் தேனீயின் தேசிய ஒருகிணைப்பாளர் பிறைக்கவி முஸம்மில் ஹாஜியார் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் ஏறாவூர் பிரதேச செயலகத்தின் செயலாளர் நிகாரா மௌஜூத் (SLAS) பிரதம அதிதியாவும் ஏறாவூர் நகர சபையின் கௌரவ தவிசாளர் MS நழீம் ஹாஜீயார் சிறப்பு அதிதியாகவும் மற்றும் தேனீ கலை இலக்கிய மன்றத்தின் நிறுவுனர் மர்ஹூம் அல் ஹாஜ் அலியார் சுபைர் அவர்களின் மூத்த புதல்வர் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் தேனீ கலை இலக்கிய மன்றத்தின் தற்போதைய தலைவர் சுபைர் முஹம்மது றாபி அவர்களின் மேற்பார்வையின் கீழ் மற்றும் கௌரவ அதிதிகள் தேனீயின் நிருவாகிகள் ஒருங்கிணைப்பாளர்கள் போட்டிகளில் வெற்றி பெற்ற கவிஞர்கள் கலைஞர்கள் கவிப்பெருந்தகைகள் என்று அரங்கு நிறைந்த பார்வையாளர்களோடு விழா சிறப்பாக நடை பெற்றது.

தலைமை உறையை நிகழ்வின் தலைவர் பிறைக்கவி முஸம்மில் ஹாஜியார் நிகழ்த்த

சிறப்புரையை தேனீ கலை இலக்கிய மன்றத்தின் புதிய மன்றத்தலைவர் சுபைர் முஹம்மது றாபி ஆற்றினார் .அதனைத் தொடர்ந்து மறைந்த தலைவருக்கான சிறப்புரை முபஸ்தீன் (ஏறாவூர் வலயக்கல்வி பயணியும்) அவர்களால் நிழ்த்ப்பட பின்னர் மறைந்த தலைவருக்கான இரங்கல் கவிதையொன்றை மன்றத்தின் பெண்கள் அணித்தலைவி ச சி நூரா அம்மணி பாட தொடர்ந்து




இந் நிகழ்வில் மறைந்த கிராம நிருவாக உத்தியோகத்தர் தேனீ கலை இலக்கிய மன்றத்தின் நிறுவுனர் அலியார் சுபைர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் அச்சிடப்பட்ட தேனீக்கள் 2 புத்தக வெளியீடும் பிரதம அதிதிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் 13 கௌரவ அதிதிகளுக்கான நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு தேனீ கலை இலக்கிய மன்றம் சர்வதேச, நாடளாவிய ரீதியில் நடாத்திய போட்டி நிகழ்ச்சிகளான சிந்தனைக் கவிதை , கிராமியக்கவிதை, ஹைக்கூ கவிதை, குறுங்கவிதை, புதுக்கவிதை, சிறந்த அறிவிப்பாளர் போட்டி என்று எல்லா வெற்றியாளர்களுக்குமாக சான்றிதழ்கள் விருதுகள் பணப்பரிசுகள் என்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வின் மற்றுமோர் அம்சமாக தேனீக்கள் 2 நூல் வெளியீட்டின் முதற் பிரதியை பிரதம அதிதி பெற்றுக் கொள்ள சபையில் கலந்து கொண்ட சிறப்பு , கௌரவ அதிதிகளும் நூலின் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர். நூல் அரங்கு நிறைந்த பார்வையாளர்களின் கைகளுக்கு சென்ற மறுகணமே நூலுக்கான நயந்துரையை வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந் நிகழ்வை கவிஞர் ஊடகவியலாளர் அதிபர் என்று பல பரிமாணங்களுக்கு சொந்தக்காரரான ஷல்மானுல் ஹரீஸ் அவர்கள் மிகச்சிறப்பாக நிகழ்த்தி முடித்தார்.

அதனைத்தொடர்ந்து மறைந்த தலைவர் அவர்களின் பள்ளித்தோழன் சகபாடி மாத்தளைக் கமால் அவர்களால் நண்பனை பற்றிய சோகம் நிறைந்த அழகிய பாடல் ஒன்று பாடப்பட்டது. பின்னர் ஏறாவூர் பிரதேச செயலகத்தினால் தேனீ கலை இலக்கிய மன்றத்திற்கு ஆரம்ப கட்டமாக தஹறா என்று அழைக்கப்படும் வாத்திய கருவி ஒன்று வழங்கப்படதைத் தொடர்ந்து அந்த கருவியை கொண்டு முதன் முதலாக ஒரு பாடலை ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் கௌரவ நகர சபை உறுப்பினர் அப்துல் ரசீத் அவர்களினால் பாடப்பட்டது. அதன் பின்னர் கவிதை பரிசில்கள் விருதுகள் என்று விழா நிகழ்வுகள் முற்றுப்பெற நன்றியுரையைத் தொடர்ந்து விழா இனிதே நிறைவுற்றது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கவிதை மாயவித்தை

## மறுவாசல்

முல்லை முஸ்ரிபா

Design by S.Naleem

கவிதை ஒரு மாயவித்தை. சொல் எனும் மாயக்கோல் கொண்டு கவி வித்தைக்காரர் காட்டும் மாய உலகின் படிமங்களாலானது கவிதை எனும் மாயம்.

உலகம் தோன்றிய காலம் முதல் கவிதை அதன் அர்த்தச் செறிவை வெளிப்படுத்தி வரும் நுட்பங்களும் நுணுக்கங்களும் அடர்ந்த கற்பனை வெளி அல்லது அனுபவ வெளி மிகுந்த அவதானிப்புக்குரியது. சொல்லென்ற வித்தைக்கருவியை வித்தைக்காரர் அசைத்து அசைத்து அல்லது சுழற்றிச்சுழற்றிக் காட்டும் விம்ப வெளியில் ஆயிரமாயிரம் மாய ஜாலங்கள் காட்டும் தோற்றங்கள், மாறும் காட்சிகள் உள்ளிழுக்கும் உணர்வின் திரட்சியை அல்லது கவிச்சியை கவிதை வித்தையில் அதிகம் பெய்யக் காணுகிறோம். மாஜாயாலக் கவிதையிலும் காணுகிறோம்.

தெலுங்குக் கவிதை வரலாற்றில் முக்கிய அடையாளமாகத் தெரிந்தவர் அஜந்தா. பெனுமர்த்தி விசுவநாத சாஸ்திரி (19291998) என்கின்ற அஜந்தா மரங்கள் வீழும் காட்சி என்கிற முதல் கவிதையிலேயே கவனத்தை ஈர்த்தவர். குறைவாக எழுதி நிறைவாக நின்ற கவிச் சொல்லி. ஆந்திர பிரபா பத்திரிகையாசிரியராகப் பணி செய்தவர்.

தனது கவிதைகள் பிரசுரமான பின் தனக்கும் கவிதைக்கும் எந்தவித தொடர்புமில்லையென்ற கருத்துடையவர் கவி அஜந்தா. படைப்பாளி இறந்து விட்டான் என்ற கோட்பாடு இதன் சார்புடையதே.

1997இல் சாகித்ய அகாதெமி விருது வென்ற 'ஸ்வப்ன லிபி'' (கனவுப்பிரதி) கவிதைத் தொகுப்பு நண்பர் குழாத்தின் வேண்டுதலின் பேரில் பிரசுரமான கவிதைகளை நினைவுகூர்ந்தெழுதியது.

கவி வேகுண்ட மோகன் பிரசாத்(மோ) மொழிபெயர்த்த அஜந்தாவின் 'மாய வித்தைக்காரன்'' வாசிப்பின் மாயக்கவிதைதான்.

கண்ணாடியென்றால்
சுவற்றில் தொங்கும் உடலென்று பொருளல்ல
உன் மனச்சாட்சி எப்போதும்
உன் பிரதிபலிப்பின் பின்னாலிருக்கும்
மாயாஜால வித்தைக்காரன்
எப்போதும் வீரம் செறிந்த குதிரைவீரன்
எப்போதும் உலகின் ரகசியங்களை
உடைத்துத்தின்னும் ஒரு கோமாளி
வெளியாளாக கண்ணாடி உன்
உள்ளாழமான உலகம்
கண்ணாடியில் மிதக்கும்
பிம்பங்களை அகற்றமுடியாது
அதனால்
நானே கண்ணாடிக்குள் நுழைந்தேன்
என் பிம்பம் இனி
கண்ணாடிக்குள்ளில்லை
ஆனால் நான் அங்கிருக்கிறேன்
தனியாய் உடலற்று.

# இருள்

திரை விலகியது. மேடையில் இருள். சற்று நேரம் இருள் கடந்த நிசப்தம். நிசப்தத்தை விலக்கிக்கொண்டொரு பெருமூச்சு. தூரத்தே கேட்குமொரு குரல். அது நம்பிக்கைக் குரல் 'நாளை விடியும்...... விடியும் பொழுதில் முகமலர்ந்து எழுவோம். எழுந்தெம் திசை நோக்கி நிற்போம்......'' குரல் தேயவும் மீளவும் பெரு மூச்சுக்கள் சில.



அதனிடை சலசலக்கும் குரல்கள். மும்மொழிக் குரல்கள். மோதல், குற்றச்சாட்டு, இரைச்சல், இணக்கம், புரிவு, பரிவு, வெட்கம், மீளிணக்கம், குரல்கள் கலந்ததொரு உரையாடலில் மேடை கனத்தது.

இன்னும் இருளிலிருந்து மேடை மீளவில்லை. குரல் நடிப்பின் துடிப்பில் கரகோஷம் ஓங்கித் தேய்கிறது. என் மனசில் இருள் விலகுமென்ற எதிர்பார்ப்பு வளர்கிறது. மெல்ல ஒளி கிழக்கு மூலையால் பரவவும் மேடையை உற்று நோக்குகிறேன். காலுடைந்த மேசை, அதன் மேல் மூலையில் குப்பி விளக்கு, மங்கிய ஒளி, காற்றினசைவு, விளக்கொளியின் நடனம். கடதாசிகள் சில, எழுதும் கையொன்று, அது ஒளியசைவில் வளர்ந்து செல்கிறது. பழைய கதிரையொன்றில் நிலை கொள்கிறது உரு. முகத்தில் விளக்கொளி படவும்தான் காண்கிறேன். அது நானாகிறது.

எழுதும் கை ஓய்வதில்லை. எழுதிக்கொண்டேயிருக்கிறேன். ஒளி வளர்கிறது. என்னைச் சுற்றியொரு வேலி. முள் வேலி முட்களில் ரத்தம் சொட்டுகிறது. ரத்தத்தினொரு துளி என் பேனாவில் இறங்குகிறது.

நான் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

அடிமை எழுத்து, அதிகார எழுத்து, அகங்கார எழுத்து. என்று பின்னிருந்தொரு அசரீரி கேட்கிறது. திரும்பிப் பார்க்கிறேன்.....பேனாவை நெஞ்சிலூன்றி இழுக்கிறேன். அது எதிரெழுத்து. கைதட்டல், கைதட்டல் பலமாகக் கேட்கிறது. முன்னே அரங்கைப் பார்க்கிறேன். முன்வரிசையில் நான் சினம் பொங்கப் பேனாவை வெறுக்கிறேன்.

மேடையில் இருள் இன்னும் விலகவில்லை. காட்சி மாறுகிறது. எல்லாப் பக்கம் இருந்தும் வரிசைகள் வளர்கின்றன. பத்து வயதுப் பாலகன் பாணிற்கு நிற்கிறான். மண்ணெண்ணெய் வாசமெடுக்கும் சீத்தைத் துணிக்கு நிற்கிறான். வரிசை வளர்கிறது. வயசும் வளர்கிறது. இப்போது மெதுவாய் ஒளி மேடையில் படுகிறது. ஒவ்வொரு வரிசையிலும் ஒவ்வொரு இடத்தில் நிற்கிறான். மேடை முழுக்க வரிசை.

இப்போது மேடை முழுக்க ஒளியாய் நிரம்புகிறது. கைதட்டியவர்களும் மேடையில் ஏறி வரிசையில் நிற்கிறார்கள்.

திடீரென்று இருள் சூழ்கிறது. மூன்றாம் காட்சி தொடங்கும்போது எல்லோரும் பாத்திரமாகி அலைவதாக குப்பி விளக்கின் ஒளியில் அவன் எழுதிக்கொண்டு இருக்கிறான்.

சுற்றிவர வேலி அதில் பூவொன்று பூப்பதாக எழுதிக்கொண்டு இருக்கிறான்.

**பொன்மீரா**

# ஔவன் கவிதை

## பூத்தூவிய மெல்லிய பறத்தலெனும் காலம்

பூத்தூவியதும் பஞ்சுச்
சொற்களினாலானதுமான
மெல் வெளியில் நடக்க எண்ணிய
காலமிருந்தது.

கனவுகளில் ஒளியெடுத்து
நடக்கலானேன்; பறக்கலானேன்...
நடந்திட நடந்திட
பறந்திட பறந்திட
பூக்கள் நிறமெடுத்து உதிர்ந்தன..
பாதங்களிலொட்டிய மென்
பஞ்செனப் பூக்களை
சிறகு நுனி கொண்டு
சிட்டுக் குருவிகளும்
வந்தமர்ந்த காலமது..

நான்
பூத்தூவியதும் இளம்
பஞ்சுச் சொற்களினாலுமான
குளிர்த்தி மொழியிலிருந்து
கொடும் கவிச்சி வெளியில்
வீழ்ந்தேன்
கனவு முறிந்தது சிறகு
கால்களில் ரத்தத்தின் தழும்பு
திசையற்று முடங்கிற்றென் காலம்...

குருதி வழிய
அள்ளியெடுத்துப்
பொத்திக்கொள்கிறேன்

# பறவை பாடுகின்றது

'வீசு, வீசு, வீசு கடற்காற்றே!
தீவின் கடற்கரைக்கே வீசும் கடற்காற்றே!
நீ என் துணையைக் காற்றால் உய்த்துத்
திரும்பித் தரும் வரை
நான் காத்துக் கிடப்பேன்
காத்துக் கிடப்பேன்!'

ஆமாம் விண்மீன்கள் ஒளிர்கின்ற அந்நேரத்திலே
இரவுக்காலம் முழுமையுமே,
பாசி படிந்த செங்குத்தான பாறை உச்சியிலே
கீழே ஏறித் தாழ்ந்து மோதி அடிக்கும்
அலைகளின் இடையிலே
தனித்துள்ள அந்தப் பாடும் பறவை
நம் கண்ணீரைப் பொழிய வைக்கும்
அற்புதமான இசையை முடிக்கின்றது.

அதுதன் துணையை அழைக்கின்றது
அது பொருள் பொதிந்த இசையமுதம் பொழிகின்றது
அதன் பொருள் தான்
பிற மாந்தருக்குப் புரியாது
எனக்கு மட்டுமே புரியும்.

ஆம் என் உடன் பிறந்தவனே!
எனக்கு மட்டுமே தெரியும்
பிறருக்குத் தெரியாது
நானோ அதன் ஒவ்வொரு சுருதி லயத்தினையும்
கருவூலமெனக் காப்பாற்றினேன்.
ஏனெனில் ஒன்றல்ல, பலமுறை
கடற்கரை மீது ஓசையின்றி நழுவிச் சென்று,
மிக அமைதியோடு
மதியின் கிரணங்களையும் தவிர்த்தபடி
என் உருத்தெரியாதபடி நிழலினூடே இப்போதும்
அந்தத் தெளிவற்ற மங்கிய உருவங்களையும்,
எதிரொலிகளையும்
அவ்வவற்றின் காட்சிகளையும்
ஒலிகளையும் நினைவு கூர்ந்து,
கரையிலே மோதிச் சிதறும்
அலைகளாம் வெண் கரங்கள்
ஓய்வின்றி கரையை மோத
ஒரு குழந்தையாகிய நான்,
காலில் செருப்பின்றி,
என் குழற் கற்றையைக் காற்று அலைமோத
அந்த இசையை,
நீண்ட நேரம், விடிய விடியக் கேட்பேன்.

அதை உள்ளத்திலே பதிய வைக்க – பாட
அதன் சுரலயத்தினை விளக்கிக் கூற –
உடன் பிறப்பே உனக்காகவே அதைத்
தொடர்ந்து சொல்கிறேன்.

வால்ட் விட்மன்

# மனம் ததும்பும் ஹைக்கூ 3

தனிமை இல்லையெனில்
வாழ்வில் சுகமில்லை
பாஷோ

தனிமையில் ஆன்மா சுத்தமாகிறது. ஒளி பெறுகிறது.ஓவியமாகிறது. ஜென்னின் 'தனிமை'' கொள்கை சார்ந்தது. தனிமையே தியானத்தின் வழி என்கிறது ஜென். தன்னைத்தான் உணர்தலும், பிறரையுணர்தலும் தனிமையாலாகிறது. தனிமை வாழ்வின் ஒருவகை மூலம்.தனிமை இன்பம் தருவது. நிசப்தம்தனிமையில் நடப்பதுதனிமை இன்பம்

Tranquility
Walking alone
Happy alone

எந்தச் சலனமுமற்ற சூழலில் எந்தவிதச் சலனமுமற்ற மென்மனசோடு நடை பயில்வது கூட இன்பமயமானது என்கிற அனுபவத்தைத் தரிசிக்கச் செய்கிறது ஹைக்கூ.தனிமை இன்பத்தை மட்டுமே தந்துவிடுவதல்ல. அதில் அதிக துயரமும் ஒட்டியிருக்கும்.

இலையுதிர் கால மாலை
இன்பமும் இருக்கிறது
தனிமையில்
An Autumn Eve
There is Joy Too
In Loneliness

உள் மனசின் சோக இசை பரவுகிறது. இலையுதிர் காலம் மாலைப்பொழுது காற்று வீசுகிறது. அந்த நேரத்தின் தனிமை 'இன்பமும் கூட', 'There is joy Too"என்பதில் இன்பம் மட்டுமன்று துன்பமும் ததும்புகிறது. இப்போது துயரிசை பரவுகிறது. இன்பத்தை என்கிற அழுத்தம் வாழ்வின் இரு முனைகளை இரு பக்கங்களை இரு நிலைகளைச் சமன் செய்கிறது. தனிமையே இன்பம் என்பதில்லை அது தவிப்புமானது.

ஒரு பலோனியா இலை உதிர்ந்து,
இனிச் சந்திக்க மாட்டாயா
என் தனிமையில்
A Paulownia Leaf has Fallen
Will You not Visit
My Aloneliness

இலையுதிர்கிறது. அது இனித் தன் தனிமைக்குத் துணையாகாதென்பது புரிகிறது. இலையுடனான உரையாடல் துயரிழையோடிய வேதனையின் வெளிப்பாடு. ஹைக்கூ உணர்வுகளில் பொங்கி வழியும் சொற்கலவை. அது எழுப்பும் அதிர்வு மனம் ததும்பச் செய்வது. நிலவு, குளிர், தனிமை எல்லாமும் தனிமை தான்.

குளிரில் பாலம்
மிஞ்சியிருப்பது
நானும் நிலவும்
The Cool on The Bridge
The Moon and I
Alone Remain

குளிரில் நிலவோடிருக்கும் தனிமை..... துயருறு மனநிலை. Moon and I/ Alone Remainஎன்பதில் மற்றோரிலிருந்து தனித்து விடப்பட்ட துயர் பரவுகிறது.

ஹைக்கூ இப்படித்தான் மன அடுக்குகளின் அனுபவச்சாரங்களை உணர்வில் கலந்து தருகிறது. பருகப் பருக மனம் ததும்புறச் செய்வது ஹைக்கூ.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



"சம்மர்ல உனக்கு பிடிச்சது எதுடா?"

"ஸ்கூல் லீவு விடுறதுதான்!"







உங்க ஆபீஸ் வாசல்ல ஏன், 'கனவு இல்லம்'னு போர்டு போட்டிருக்கீங்க!"

"எல்லாரும் எப்பவும் தூங்கிக் கிட்டேதான் இருப்பாங்க. அதான்!"

**மனைவி :** என்னை, பெண் பார்க்க வந்தன்னிக்கு, நீங்க டிபனை தொடவே இல்லையே ஏன்?"

**கணவன் :** ரெண்டாவது 'ஷாக்' எதுக்குன்னு, தான்..!

**கணவர்:** இது மாதிரி என்கிட்டே தொடர்ந்து சண்டை போட்டுக்கிட்டே இருந்தா ஒரு நாள் மிருகமா மாறிடுவேன் ஜாக்கிரதை !

**மனைவி:** அட நீங்க வேற எலியைப் பார்த்தெல்லாம் நான் பயப்பட மாட்டேன்!



டாக்டர் பத்து நாளா ஒரே கனவா வருது!"

"கனவு தானே வருது அதனாலென்ன?"

"இல்ல டாக்டர். இடை இடையே இந்தக் கனவை உங்களுக்காக வழங்குபவர்கள்னு விளம்பரம் வேற வருதே!"

"நீங்க அடிக்கடி கட்சி மாறுவதற்கு பதிலாக, சொந்தமாக ஒரு புது கட்சி ஒன்று ஆரம்பிச்சிடலாமே?"

"ஆரம்பிச்சிடலாம், பழக்க தோஷத்திலே அப்பவும் நான் கட்சி மாறிட்டேனா?"





"உங்க கம்பெனி விளம்பரம் பார்த்தேன். பாதி நாள் வெளியூரில் வேலை சரி. திருமண மானவர்களுக்கு முன்னுரிமை என்பதற் கான காரணம்?"

"அவர்கள்தான் மகிழ்ச்சியுடன் வெளியூர் செல்வார்கள்!"



"டாக்டருக்கு ரத்தத்தை பாத்தா தலை சுத்தல் வருமாம்!"

"அதுக்காக... கண்ணை கட்டிக்கிட்டு ஆபரேஷன் பண்ணாங்க நல்லாவா இருக்கு?"

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# பல பரிணாமங்களில் மிளிரும்

# இராகலை சான் சதீஷ்






**பல பரிணாமங்களில் மிளிரும் நட்சத்திர ஆசிரியரும் காந்தக்குரலோனுமாகிய சான் சதீஷ், இராகலையைப் பிறப்பிடமாகவுமாகவும் தலவாக்கலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஒரு கலைஞராவார்.**

கலைமாணி பட்டதாரி ஆசிரியரான இவர், ஊடகத்துறையில் டிப்ளோமா கற்கை நெறியையும் ஆங்கில சிறப்புச் சான்றிதழ் கற்கை நெறியையும் பூர்த்தி செய்தவராவார். அத்தோடு சமூகசேவைகள் செய்வதிலும் இவர் சளைத்தவரல்லர், இவர் பல மேடைகளில் அறிவிப்பாளராகவும் ஜொலித்தவர், ஜொலிப்பவர்.

இவர் இதுவரை சுமார் பத்துக்கு மேற்பட்ட குறுந்திரைபடங்களிலும் நடித்துள்ளார் .குறிப்பாக CD 4, விசமி, அபி, தோடு, ஏரோபிளேன், ஜீவன் போன்ற படங்களில் நடிப்பின் முத்திரையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். கதாபாத்திரத்திற்கு ஏற்ற வகையில் தன்னை செதுக்கி கொள்ளும் அழகிய தமிழ் மகன்.

சமூக வலைதளங்களில் வெளிவந்த ஏய் கொரோனா...... பாடல் அமோக ஆதரவை பெற்றதுதோடு இப்பாடலுக்கான பாடலாசிரியாக தன்னுடைய எழுத்தின் புலமையை எடுத்துக்காட்டியுள்ளார்.




பாடசாலை காலம் முதல் சிறந்த சிறந்த இனிய பேச்சாளராகவும் பாடகராகவும் தன்னை வளர்ந்துக்கொண்ட இவர், தன்னுடைய கல்வியை தலவாக்கலை தமிழ் தேசிய பாடசாலையிலும் கோப்பாய் கலாசாலையிலும் கற்றவர், தன்னுடைய ஆசிரியர் பயிற்சி நெறியையும் ஆங்கில கற்கை நெறியையும் பேராதனை பல்கலைக்கழகத்தில் கற்றுள்ளார் .

மிகவும் இளம் வயதிலே அகில இலங்கை சமாதான நீதவானாகவும் தெரிவுசெய்யபட்டதோடு தன்னுடைய நேர்த்தியான சமூகப்பணியையும் முன்னெடுத்து வருகின்றார்.

தன்னுடைய காந்தக்குரலால் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள், கிரிக்கட் போட்டிகள், கரப்பந்தாட்ட போட்டிகள், நூல் வெளியீடு, பட்டிமன்றம் என பல பரிமாணங்களில் தன்னுடைய அறிவிப்புத் திறனால் பலரால்போற்றப்படுபவர். அத்தோடு மும்மொழிகளிலும் தெளிவாக பேசக்கூடியவரும் அறிவிப்பு செய்யக்கூடிய விசேட திறமை பொருந்தியவராவர்.

தன்னுடைய கற்பித்தல் பணியின் ஊடாக சிறப்பான மாணவர்களை உருவாக்கிய முன்மாதிரியான ஆசிரியரும் ஆவார்.

இலங்கை தாய்த்திருநாட்டில் பல வணக்கஸ்தலங்களுக்கு சென்று ஆன்மீக பணிகளையும் செய்யும் தொண்டனும் ஆவார்.

சமூக வலைதள செய்தியாளராகவும் விளங்குகின்றார் .

பல சமூக அமைப்புகளின் ஊடாக மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சமூக பணிகளில் ஈடுபடல், விசேட திறமையுடைய பயனாளிகளுக்கு உதவுதல், கல்விக்கு கரம் கொடுத்தல் போன்றவற்றில் இவர் சிறந்து விளங்குகின்றார்.



கே. ஈஸ்வரலிங்கம்











2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# இசை துறையில் மின்னும் சுபாஷினி

**நான் சுபாஷினி. நான் பிறந்து வளர்ந்தது இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை பிரதேசத்தில் தான். எனது தாய், தந்தை இருவருமே குறைந்த வருமானம் பெறுபவர்கள். நான் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள். எனக்கு வயது 21. தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட மாணவியாக கல்வி கற்கின்றேன். எனது பாடசாலைக் கல்வியை பலாங்கொடை பிரதேசத்தில் உள்ள கனகநாயகம் தமிழ் தேசிய பாடசாலையில் கற்றேன். சிறு வயதில் இருந்தே இசைத் துறையில் தனி ஈடுபாடு இருந்தது.**







பொழுது போக்கிற்காக பாடல் பாடுவது என்று என் இசைப்பயணம் ஆரம்பித்து. 2012 ம் ஆண்டு என் பாடசாலையில் நடை பெற்ற பாடல் போட்டியில் முதலாம் பரிசை பெற்றேன். இதுவே இசைத்துறையில் என் முதல் அனுபவம் எனலாம். இசையில் எனக்கு இருந்த ஆர்வம் என்னை பாடசாலைக் கல்வியிலும் சங்கீதப் பாடத்தை தேர்ந்தெடுக்க தூண்டியது. இசைத்துறையில் நான் சாதிக்க முதல் காரணகர்த்தா எனது சங்கீதபாட ஆசிரியர் செ.சிவகுமார். பாடசாலை நாட்களில் பல ஊக்கப்படுத்தல்களை எனக்கு அளித்தார். தொடர்ந்து பாடசாலை மேடைகளில் பாடுவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தன. என்னை மேலும் வளப்படுத்திக் கொள்ள என் பாடசாலை, முக்கிய மைல் கல்லாக இருந்தது.

எனது பாடசாலை அதிபரான இராஜரட்ணம் அவர்களது ஊக்கமூட்டும் பேச்சு சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்ட முக்கிய சக்தியாக இன்றளவும் இருக்கிறது. இசைகுறித்த எனது ஆர்வத்தினால் தமிழ் தினப்போட்டடிகளில் தனி இசை, குழு இசை என்பவற்றில் தவறாமல் கலந்து கொள்வேன். என் பாடசாலையின் நாடகப்பாட ஆசிரியர் நிரோஷன் இயற்றிய மேடை நாடகத்தில் சிறு பகுதியில் எனக்கு பாடும் வாய்ப்பை கொடுத்தார். மேலும் பாடசாலை மேடை நிகழ்ச்சிகளில் பாடல் பாடியிருக்கிறேன். தொடர்ந்து இசைத்துறை சார்ந்து பங்கேற்றல்கள் என்னை மேலும் வளரச்செய்தன. இவ்வாறு பாடல் பாடுவது என்ற விடயத்தை தாண்டி இசைக்கருவிகளை வாசிப்பதிலும் எனது ஆர்வம் இருந்தது. இதனால் சங்கீதப் பாடத்திற்காக வழங்கப்பட்டிருந்த வீணை, வயலின், பியானோ முதலான இசைக்கருவிகளை எனது ஓய்வு பாட நேரங்களில் வாசிப்பதுண்டு. அதில் குறிப்பாக வயலின் வாசிப்பதில் அதிக ஆர்வம் இருந்தது.





முதலில் சங்கீத பாட உருப்படிகளையும் வாசிக்கப் பழகினேன் பிறகு படிப்படியாக இணையத் தளத்தினுடாகவும் ஆசிரியரின் துணையுடனும் இசை பாடல்களை வாசித்துப் பார்ப்பேன். எனது முயற்சியின் பயனாக வயலின் இசையில் தேசிய மட்டத்தில் இரண்டாவது இடத்தை பெற்றுக் கொண்டேன். இசைத்துறை தவிர்த்து சிறுவயதிலிருந்தே ஊடகத்துறையில் அறிவிப்பாளராக வரவேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்வையிட்டும் வானொலி நிகழ்ச்சிகளை கேட்டும் எனது பேச்சுக்களை பழகிக் கொள்வேன். எனது அறிவிப்பாளர் ஆர்வத்தினால் எனது விஞ்ஞானப்பாட ஆசிரியர் தவமணி தேவி ஆசிரியரினால் பாடசாலை மட்ட நிகழ்ச்சியில் அறிவிப்பதற்கான வாய்ப்பை வழங்கினார். இதுவே அறிவிப்பு துறையில் என் முதல் அனுபவம.; என்னை ஊக்கப்படுத்திய இன்னுமொருவர் ஆசிரியை திருமதி விஜயராணி. இவர்கள் இருவரும் என்னால் மறக்க முடியாத எனது வளர்ச்சிக்கு முதல் படியானவர்கள். தொடர்ந்து ஊடகத்துறையில் எனது ஆர்வம் என்னை உயர்தரத்திலும் ஊடத்துறை கல்வியை தேர்ந்தெடுக்க அடிகோலிட்டது.




ஊடகத்துறை சார்ந்து என் ஆர்வம் அதிகரிக்க முக்கிய மைல்கள் எனது ஊடகத்துறை ஆசிரியை இர்பானா. எனது பிழைகளை, அன்பாக சுட்டிக்காட்டி என்னை வழிகாட்டினார். ஊடகத்துறை ஆர்வத்தினால் எனது பல்கலைக்கழகத்திலும் ஊடகத்துறையை ஒரு பாடமாக தேர்ந்தெடுத்தேன். தொடர்ந்து இசைத்துறைக்காக கடந்த பெப்ரவரி மாதம் கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சங்கவி பிலிம்ஸி னால் நடத்தப்பட்ட கலா விபூசண விருது வழங்கும் விழாவில் விருதினைப் பெற்றுக் கொண்டேன். இது எனது இசை துறைக்கு கிடைத்த முதல் அங்கீகாரம் என்று கூறலாம். இந்த விருதிற்காக என்னை தேர்வு செய்ததற்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். எனது இந்த வளச்சிக்கு நான் மட்டுமே காரணம் கிடையாது.

என் பாடசாலை அதிபர், ஆரம்பள்ளி ஆசிரியர்கள், சாதாரண தர மற்றும் உயர்தர ஆசிரியர்கள், சங்கீதப்பாட, ஊடகற்கை ஆசிரியர் உட்டபட எனது நண்பர்கள் குடும்பம் என அனைவரும் உறுதுணையாக இருந்தனர். எனது வளர்ச்சிக்கு முதல் படி என் பாடசாலை. அன்று நான் பாடசாலையில் ஏறிய மேடையே என்னை விருது பெற்றுக் கொள்ளும் மேடைக்கு அழைத்துச் சென்றது. எனது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இசைத் துறையிலும் ஊடகத்துறையிலும் பல விடயங்களை சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது.



**கே. ஈஸ்வரலிங்கம்**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**தல'ரசிகன் எம்.எம். இக்பால். மாபோல , வத்தளை.**

**கேள்வி:** எங்கள் தல அஜித்தின் படமான 'அஜித் 62' பற்றி குளிர்ச்சியான சில தகவல்களை சொல்லு ங்களேன் மொழி அண்ணா?

**பதில்:** வலிமை படத்தை அடுத்து மீண்டும் வினோத் இயக்கத்தில் அஜித் ஒரு படம் பண்ணுகிறார். அஜித்தின் 61ஆவது படமாக உருவாகும் இதை போனிகபூரே தயாரிக்க ஐதராபாத்தில் படப்பிடிப்புகள் தொடங்கப்படவுள்ளது. இப்படம் பற்றிய அதிகாரப்பூர்வ தகவல்கள் இன்னும் வெளியாக வில்லை.ஆனாலும் அதற்கிடையில் ,அஜீத்தின் 62,63படங்களைப்பற்றிய தகவல்கள் வெளியாகி உள்ளது. இவற்றில்'அஜித்62 படம் பற்றிய தகவல் வெளியானது உண்மையாகியுள்ளது.

ஆம்!முதன் முறையாக விக்னேஷ் சிவன் இயக்கத்தில் அஜித் நடிக்கப் போகிறார்.



இதற்கான அறிவிப்பை படத்தைத் தயாரிக்கும் லைக்கா நிறுவனம் அதிகாரப் பூர்வமாக வெளியிட்டுள்ளது.மேலும் அனிருத் இசை அமைக்க உள்ளதாகவும். மற்றைய நடிகர்கள் பற்றிய விபரங்கள் வெளி வரும் என்றும் தெரிவிக்க ப்பட்டுள்ளது. டிசம்பர் மாதத்தில் படப்பிடிப்பு ஆரம்பமா கிறதாம்.

**எம்.மாகிரட். எலபடகம.**

**கேள்வி:** நயன்தாரவைப்போல் நடிகை ஆண்ட்ரியாவும் எக்ஷன் படங்களில் நடிக்கப் போகிறாராமே?

**பதில்:** உண்மைதான். நடிகை, பாடகி, பாடலாசிரியர், பின்னணி குரல் கலைஞர் என் ஏராளமான அவதாரங்களை எடுத்திருக்கும் ஆண்ட்ரியா, தற்போது எக்ஷன் நாயகியாகவும் அரிதாரம் பூசியி ருக்கிறார். அறிமுக இயக்குநர் நாஞ்சில் இயக்கத்தில் தயாராகிவரும் 'கா'படத்தில் வித்தியாசமான வேடத்தில் நடித்து வருகிறார். இது தொடர்பாக அவர் பேசுகையில்



"காடு காடு சார்ந்த மலைப்பகுதிகளுக்குச் சென்று. சில எக்ஷன் காட்சிகளிலும் நடிக்க வேண்டும் முடியுமா?"என்று இயக்குநர் கேட்டதும் தயங்காமல் ஒப்புக்கொண்டேன்.அதே போல் வட இந்திய காடுகளில் பயணித்து படப்பிடிப்பு நடைபெற்ற போது சவாலானதாகவும் மறக்க முடியாததாகவும் இருந்தது. இந்தப் படத்தின் முன்னோட்டம் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல ஆதரவு கிடைத்து வருவதால் படமும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையில் இருக்கி றேன்"என்றார் நடிகை ஆண்ட்ரியா.

**ஆர்.எஸ்.கோபால். மத்துமகல.**

**கேள்வி:** தனுஷ் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளப் போகிறாராமே..உண்மையா?

**பதில்:** அப்படித்தான் பேச்சு அடிப்பட்டது.

ஆனால் தன் சமீபத்தியபடங்கள் எதிர் பார்த்த அளவு க்கு வெற்றியைப் பெறாததால் அப்செட்டில் இருக்கிறார் தனுஷ்.அதனால் கதைகேட்டு முடிவு செய்யும் குழுவில் தன் அண்ணன் செல்வராக வனையும் சேர்த்துக்கொண்டி ருக்கிறார்.கூடவே நண்பர் அமீரின் ஆலோசனையையும் கேட்டு நடக்க முடிவு செய்திருக்கிறாராம்

இனி கதை கேட்பது இவர்களுக்கு இடையேதான் நடக்கும் என்கிறார்கள்.

இதனிடையே அடுத்த வருடம் தனுஷுக்கு திருமணம் செய்து விடலாமா என்று பேச்சு எழுந்திருக்கிறது. 'மூச்'என தடை போட்டு விட்டாராம் தனுஷ்.



**கேள்வி:** 'கபாலி'படப் புகழ் தன்சிகா ஒரு படத்தில் இரட்டை வேடங்களில் நடிக்கிறாராமே... அந்தப் படத்தின் பெயர் என்ன?

**பதில்:** 'போராண்மை' படத்தின் மூலம் அறிமுகமான சாய் தன்சிகா ரஜினி காந்தியம் 'கபாலி'படத்தில் அவர்களாக. நடித்த பிறகு பல படங்களில் ஒப்பந்தம் செய்யப் பட்டார். இவர் முதன்முதலாக ஒரு படத்தில் இரட்டை வேடங்களில் நடிக்கிறார். படத்தின் பெயர் 'மனோகரி'இந்த படத்தில் நடிப்பதற்காக இவர் மலேசியா போய் தன்னை மெருகேற்றி வந்திருக்கிறாராம்

கவிஞர் சிநேகன் மனைவி கன்னிகா,இளவரசி ஆகிய இருவரும் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள். நவாஸ் அகமது கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார்.



**வை.பி. மாணிக்கம். தாண்டிய டி.**

**கேள்வி:** கராத்தே மணியின் மகன் தமிழ்த்திரைப்பட மொன்றில் வில்ல னாக அறிமுமா கிறாராமே.. அதைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன் மொழி சேர்...?

**பதில்:** இப்போது பல தெலுங்குப் படங்களில் வில்லனாக நடத்துக் கொண்டிருக்கும் கராத்தே மணியின்.மகனின் பெயர் ராஜ்குமார்.

இவரை தான் இயக்கும் 'மனோகரி' படத்தில், தமிழில் வில்லனாக முதலில் அறிமுகம் செய்து வைக்கிறார் இயக்குநர் நவாஸ் அகமது.

**ஆர், மதனகோபால். மன்னார்.**


**கேள்வி:** ஜெமினி கணேசன் வில்லனாக நடித்த படம் எது?

**பதில்:** 'வல்ல வனுக்கு வல்லவன்'.அவர் கதாநாயகனாக நடித்துக் கொண்டு உச்சத்தில் இருந்தபோதே இந்தப்படத்தில் வில்லனாக நடித்தார் ஆனாலும் படதில் நாயகன் போல்தான் நடித்திருப்பார்.இறுதியில்தான் தெரிய வரும் அவர்தான் வில்லன் என்று.படம் சூப்பர் ஹிட்.



**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**

**ஜே.எல். மலர்ராணி கொழும்பு 13**



# சிறந்த நடிகைக்கான ஆஸ்கார் விருதை தட்டிச் சென்றார் "ஜெசிகா சேஸ்டெய்ன்"

சிறந்த நடிகைக்கான ஆஸ்கார் விருதை ஜெசிகா சேஸ்டெய்ன் தட்டிச் சென்றுள்ளார்.

உலகமே உற்றுநோக்கும் ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தொடங்கியது. அதன்படி, 94வது ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது,

இந்த நிலையில், சிறந்த நடிகைக்கான ஆஸ்கர் விருதை ஹாலிவுட் நடிகை “ஜெசிகா சேஸ்டெய்ன்” தட்டி சென்றுள்ளார். “தி அய்ஸ் ஆப் டேமி ஃபாய்”(The Eyes of Tammy Faye) திரைப்படத்திற்காக ஜெசிகா சேஸ்டெய்னுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

★ சிறந்த திரைக்கதைக்கான ஆஸ்கர் விருதை 'பெல்ஃபாஸ்ட்' படத்திற்காக 'கென்னித் பிரனாக்' வென்றுள்ளார்.

★ சிறந்தஇயக்குனருக்கானஆஸ்கர்விருதை ’தி பவர் ஆப் தி டாக்’ திரைப்படத்திற்காக ’ஜேன் கேம்பியன்’ வென்றார்.

★ சிறந்த திரைப்படத்திற்கான ஆஸ்கர் விருதை 'ஷியான் ஹெட்டர்' இயக்கிய 'கோடா' திரைப்படம் வென்றுள்ளது.

★ லைவ் ஆக்ஷன் குறும்ப டத்திற்கான ஆஸ்கார் விருதை 'தி லாங் குட்பை' வென்றுள்ளது.

★ சிறந்த ஆடை வடிவமைப்பாளருக்கான ஆஸ்கர் விருதை 'க்ரூல்லா' திரைப்படத்திற்காக 'ஜென்னி பெவன்' வென்றார்.



# 94வது ஆஸ்கர் : 24 பிரிவுகளுக்கான விருதுகள்



ஆஸ்கர் விருது விழா கடந்த 4 வருடங்களாக தொகுப்பாளர்கள் இன்றி நடத்தப்பட்டு வந்த நிலையில், இந்த ஆண்டு வாண்டா சைக்ஸ், ஏமி ஸ்கூமர், ரெஜினா ஹால் ஆகியோர் தொகுத்து வழங்கினர் நடப்பாண்டிற்கான 94 வது ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது.

உக்ரைனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில் பிரபலங்கள் நீல நிற பேட்ச் அணிந்து வந்தனர்.

மொத்தம் 24 பிரிவுகளுக்கு ஆஸ்கர் விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருது ஹாலிவுட் நடிகர் வில் ஸ்மித்திற்கு முதன்முறையாக கிடைத்துள்ளது. 'கிங் ரிச்சர்ட்' திரைப்படத்தில் நடித்ததற்காக இந்த விருதை அவர் வென்றுள்ளார். தொகுப்பாளரும் நகைச்சுவை நடிகருமான கிறிஸ் ராக், சிறந்த நடிகருக்கான பரிந்துரைக்கப்பட்ட வில் ஸ்மித்தின் மனைவியான நடிகை ஜடா பிங்கெட் ஸ்மித்தைப் பற்றி நகைச்சுவையாகப் பேசினார்.

விருதை வழங்கும்போது, பிங்கெட் ஸ்மித்தின் மொட்டையடிக்கப்பட்ட தலையைப் பற்றி ராக் கூறி கிண்டல் செய்தார். ஆரம்பத்தில் சிரித்துக்கொண்டிருந்த வில் ஸ்மித், ஒரு கட்டத்தில் பொறுத்துக்கொள்ள முடியாமல் மேடைக்கு ஏறி வந்தார். அப்போது, தொகுப்பாளர் கிறிஸ் ராக்கின் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டு கீழே இறங்கிச் சென்றார். இந்த காட்சியை சமூகவலைதளங்களில் பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

சிறந்த நடிகைக்கான விருது ஜெசிகா சாஸ்டைனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

The Eyes of Tammy Faye திரைப்படத்தில் நடித்ததற்காக இந்த விருது கிடைத்துள்ளது.

'தி பவர் ஆஃப் தி டாக்' திரைப்படத்தை இயக்கியதற்காக ஜேன் கேம்பியன் சிறந்த இயக்குநருக்கான ஆஸ்கர் விருதை வென்றார்.

கோடா சிறந்த திரைப்படத்திற்கான ஆஸ்கர் விருதை தட்டிச் சென்றுள்ளது.

சிறந்த ஆடை வடிவமைப்புக்கான ஆஸ்கர் விருதை ஜென்னி பீவன் வென்றுள்ளார்.

டெனிஸ் வில்லெனு இயக்கிய அமெரிக்க திரைப்படமான "டியூன்" திரைப்படம், சிறந்த விஷுவல் எபெக்ட்ஸ், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு, சிறந்த பின்னணி இசை, சிறந்த படத்தொகுப்பு, சிறந்த ஒலி ஆகிய 6 பிரிவுகளில் ஆஸ்கர் விருதுகளை தட்டிச் சென்றுள்ளது.

சிறந்த அனிமேஷன் திரைப்படத்திற்கான ஆஸ்கார் விருது என்கான்டோ திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது.

சிறந்த துணை நடிகருக்கான விருதினை ‘டிராய் கோட்சர்’ பெற்றார்.

சிறந்த துணை நடிகை விருதினை ‘அரியானா டிபோஸ்’ வென்றார்.

சிறந்த பாடலுக்கானா விருதை ஜேமஸ்பாண்ட் படமான "நோ டைம் டு டை " க்குகிடைத்துள்ளது.

ஜப்பானிய திரைப்படமான "டிரைவ் மை கார்" சிறந்த சர்வதேச திரைப்படத்திற்கான ஆஸ்கர் விருதை வென்றது.

2022 ஆஸ்கர் விருது பெற்றவர்களின் முழு பட்டியல்:

## சிறந்த திரைப்படம் கோடா

கோடா படத்தில் சிறந்த நடிப்பை வெளிப்படுத்திய மாற்றுத்திறனாளி நடிகர் டிராய் கோட்சர் சிறந்த துணை நடிகருக்கான விருதை வென்று அசத்தினார். வாய் பேச முடியாத மற்றும் காது கேளாத நடிகரான டிராய் கோட்சர் சைகை மொழியில் ஆஸ்கர் விருதை வென்றுவிட்டு பேச அவருக்கு பதில் அருகே ஒரு நபர் அவருக்கு குரல் கொடுக்க ஒட்டுமொத்த அரங்கமே டிராய் கோட்சரை கைதட்டி பாராட்டியது.

சிறந்த நடிகர் வில் ஸ்மித் (திரைப்படம் கிங் ரிச்சர்ட்)

1992ம் ஆண்டு வெளியான Where the Days Take You படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானவர் வில் ஸ்மித். 1995ம் ஆண்டு வெளியான பேட் பாய்ஸ் திரைப்படம் சர்வதேச அளவில் இவருக்கு ரசிகர்களை பெற்றுத் தந்தது. அதனை தொடர்ந்து வெளியான இண்டிபெண்டன்ஸ் டே, மென் இன் பிளாக் படங்கள் மூலம் உலகளவில் ஆக்ஷன் சூப்பர்ஸ்டாராக மாறினார் வில் ஸ்மித்.

செரினா வில்லியம்ஸ் மற்றும் வீனஸ் வில்லியம்ஸின் தந்தை ரிச்சர்ட் வில்லியம்ஸின் நிஜ வாழ்க்கை வரலாற்றை தழுவி உருவாக்கப்பட்ட கிங் ரிச்சர்ட் படத்தில் ரிச்சர்ட் வில்லியம்ஸாக நடித்த வில் ஸ்மித்துக்கு சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருது 94வது ஆஸ்கர் விருது விழாவில் வழங்கப்பட்டுள்ளது.

2002ம் ஆண்டு அலி திரைப்படத்திற்கும் 2007ம் ஆண்டு பர்சூட் ஆஃப் ஹேப்பினஸ் படத்திற்காகவும் நாமினேட் செய்யப்பட்ட வில் ஸ்மித்துக்கு விருது கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 2022ம் ஆண்டு கிங் ரிச்சர்ட் படத்தின் மூலம் அவரது ஆஸ்கர் கனவு நிறைவேறியுள்ளது.ஆஸ்கர் விருதை பெற்ற வில் ஸ்மித் மேடையில் கண் கலங்கி அழுதபடியே பேசிய காட்சிகள் இணையத்தில் டிரெண்டாகி வருகிறது.

சிறந்த நடிகை ஜெசிகா சாஸ்டெய்ன் (திரைப்படம் தி ஐஸ் ஆஃப் டாமி ஃபயே)

ஆவணப்படம்: "சம்மர் ஆப் சோல்” (அல்லது, வென் தி ரிவொலியுசன் குட் நாட் பி டெலிவைஸ்ட்)

பாடல்: "நோ டைம் டு டை" , (இசை மற்றும் பாடல் வரிகள் பில்லி எலிஷ் மற்றும் ஃபின்னியாஸ் ஓ'கானல்)

சிறந்த இயக்குனர் ஜேன் கேம்பியன் (திரைப்படம் தி பவர் ஆஃப் டாக்)

கடந்த ஆண்டு நோமேட் லேண்ட் திரைப்படத்திற்காக பெண் இயக்குநர் க்ளோ சாஹோ சிறந்த இயக்குநருக்கான விருது வென்ற நிலையில், இந்த ஆண்டு தி பவர் ஆஃப். தி டாக் படத்தை இயக்கிய பெண் இயக்குநர் ஜேன் கேம்பியன் ஆஸ்கர் விருது வென்றார்.

சிறந்த துணை நடிகர் டிராய் காஸ்டர் (திரைப்படம் கோடா)

சிறந்த சர்வதேச திரைப்படம் டிரைவ் மை கார்

ஆடை வடிவமைப்பு: "க்ருயெல்லா"

சிறந்த திரைக்கதை சர் கென்னித் ப்ரானா (திரைப்படம் பில்ஃபெஸ்ட்)

சிறந்த தழுவல் திரைக்கதை சியான் ஹேதர் (திரைப்படம் கோடா)

சிறந்த துணை நடிகை ஹரியானா டிபோஸ் (திரைப்படம் வெஸ்ட் சைட் ஸ்டோரி)

ஒளிப்பதிவு "டூன்"

விஷுவல் எஃபெக்ட்ஸ் "டூன்"

சிறந்த அனிமேஷன் திரைப்படம் என்காண்டோ

ஒலி "டூன்"

ஆவணப்படம் (குறுகிய பொருள்) "தி குயின் ஆப் பாஸ்கட்பால்"

சிறந்த அனிமேஷன் குறும்படம் "தி விண்ட்ஷீல்ட் வைப்பர்"

சிறந்த லைவ் ஆக்சன் குறும்படம் "தி லாங் குட்பை"

இந்த படத்திற்காக அதன் துணை இயக்குனரும், நடிகருமான ரிஸ் அகமத்திற்கு வழங்கப்பட்டது.

விருதை பெற்ற ரிஸ் அகமத் , “ இதுபோன்ற பிளவுபட்ட காலத்தில், ’இவர்கள்’மற்றும் ‘அவர்கள்’இல்லை என்பதை நினைவூட்டுவதே கதையின் பங்கு என்று நாங்கள் நம்புகிறோம். இங்கு ‘நாம்’தான் இருக்கிறது” என்று பேசினார்.

குறும்பட பிரிவில், ஆஸ்கர் விருது பெறும் முதல் முஸ்லிம், ரிஸ் அகமத் என்று கூறப்படுகிறது.

பிரிட்டீஸ் பாகிஸ்தானியரான ரிஸ் அகமத் கடந்த ஆண்டும் ’Sound of Metal’ படத்திற்காக சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் பட்டியலில் இடம்பெற்றிருந்தார். இந்த நிலையில் அவர் எழுதி, நடித்த ’The Long Goodbye ’படத்திற்கு ஆஸ்கர் விருது வழங்கப்பட்டுள்ளது.

இசை (அசல் ஸ்கோர்) "டூன்"

சிறந்த படத்தொகுப்பு ஜோ வாக்கர் (திரைப்படம் டூன்)

தயாரிப்பு வடிவமைப்பு "டூன்"

ஒப்பனை மற்றும் சிகை அலங்காரம் "தி ஐஸ் ஆஃப் டாமி ஃபயே".



உலகமே உற்றுநோக்கும் ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தொடங்கியது. அதன்படி, 94வது ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது,

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் ஹாலிவுட் பவுல்வார்ட்டில் உள்ள டால்பி திரையரங்கத்தில் நடைபெறும் ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழாவானது, இந்த ஆண்டு வழக்கமான பாரம்பரிய முறைப்படி நடைபெறுகிறது.

ஆஸ்கர் விருது விழா கடந்த 4 வருடங்களாக தொகுப்பாளர்கள் இன்றி நடத்தப்பட்டு வந்த நிலையில், இந்த ஆண்டு வாண்டா சைக்ஸ் , ஏமி ஸ்கூமர் , ரெஜினா ஹால் ஆகியோர் தொகுத்து வழங்கி வருகின்றனர். ஆஸ்கர் விருது விழாவை மூன்று பெண்கள் தொகுத்து வழங்குவது இதுவே முதன்முறை.

இந்த நிலையில், சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதை ஹாலிவுட் நடிகர் “வில் ஸ்மித்” தட்டி சென்றுள்ளார். “கிங் ரிச்சர்ட்“ திரைப்படத்திற்காக வில் ஸ்மித்துக்கு ஆஸ்கர் விருது வழங்கப்பட்டுள்ளது.

சிறந்த வெளிநாட்டு திரைப்படத்திற்கான ஆஸ்கர் விருதை டிரைவ் மை கார் (Drive my car) திரைப்படம் வென்றுள்ளது. ஜப்பான் நாட்டு திரைப்படமான இந்த படத்தை யூசுக் ஹமாகுச்சி (ryusuke hamaguchi) இயக்கி உள்ளார்.

# சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதை ஹாலிவுட் நடிகர் வில் ஸ்மித் வென்றார்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -







# TMS, சீர்காழி கோவிந்தராஜன் இன்னிசை விருந்தும் பாராட்டு விழாவும்

















திரைப்பட பாடகர் மறைந்த இசை மேதை டாக்டர் டி.எம். சௌந்தராஜனின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவும் தமிழிசை வேந்தன் கலைமாமணி சீர்காழி கோவிந்தராஜனின் இன்னிசை விருந்தும் பாராட்டு விழாவும் கடந்த 24ஆம் திகதி சென்னை கோல்டன் பாரடைஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி கலாநிதி சிவஶ்ரீ சாம்பசிவ ஐயப்பதாஸ சிவாச்சாரியாரின் ஆசியுரையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், டாக்டர் சாம்பசிவ மணிக்குருக்கள் வரவேற்புரை ஆற்றினார். பேராசிரியர் சசாங்கன் சர்மா, ஆத்யா, சன் டிவி புகழ் ஆதவன் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள்.










2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -












# அரச வானொலி விருது விழா

## இம்முறையும் 04 விருதுளை சுவீகரித்தது கெப்பிட்டல் வானொலி

2022ஆம் ஆண் டுக்கான வானொலி அரச விருதுவிழா மருதானை எலிபின்ஸ்டன் மண்டபத்தில் 21.03.2022 திங்கட்கிழமை இடம்பெற்றது.

இம்முறை கெப்பிடல் எப்.எம். இன் ஊடகவியலாளர்கள் பலர் பல்வேறு பிரிவுகளில் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

2022 ஆம் ஆண் டுக்கான சிறந்த நேர்காணல் நிகழ்ச்சிக்கான விருதினை அலைவரசை தலைவர் கே.சிபிரகாஷ் பெற்றுக் கொண் டதுடன் சிறந்த மாலைநேர நேரலை நிகழ்ச்சிக்கான விருதினை சிரேஷ்ட முகாமையாளரும் சிரேஷ்ட ஒளிபரப்பாளருமான ஏ.எல் ஜபீர் பெற்றுக்கொண்டார்.

இவ்வாண்டுக்கான சிறந்த ஆய்வு நிகழ்ச்சிக்கான சான்றிதழை கெப்பிட்டல் செய்திப்பிரிவின் சிரேஷ்ட செய்தியாசிரியர் மற்றும் செய்திப் பிரிவின் உதவி முகானமயாளர் செல்லசாமி நிலோசன், சிறந்த சிறு விளம்பரத்திற்கான சான்றிதழை பிருந்தா ராஜகோபாலன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

சிறந்த செய்தி ஆசிரியருக்காக துரைசாமி லெட்சுமணன், சிறந்த செய்தி வாசிப்பாளர் (ஆண் ) பாஸித் நியாஸ் , சிறந்த பெண் செய்தி வாசிப்பாளராக வினிப்பிரியா மணிநாதன் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

சிறந்த நாடகப் பிரதியாளராக துளசிமணி சஞ்ஜீவ் பரிந்துரைக்கப்பட்டிருந்தோடு சிறந்த நாடக நடிகையாக கிரிஷாந்தி ரவிச்சந்திரனும் சிறந்த வானொலி நாடக தயாரிப்பாளராக ஆறுமுகம் விக்னேஷனும் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

2022 ஆம் ஆண்டுக்கான வானொலி அரச விருது விழாவுக்கு கெப்பிடல் வனொலியின் செய்திப் பிரிவு மற்றும் நிகழ்ச்சிப் பிரிவின் சார்பாக பத்து பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். கெப்பிடல் வானொலி ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருட காலத்தில் பல அரச விருதுகளை சுவீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









யதுஷா
ரவித்தியாகராஜா









2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்







## கழித்தல்

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | 25 | 35 | 15 | 55 |
| − 13 | − 16 | − 12 | − 18 | −20 |
| | | | | |
| 65 | 85 | 58 | 65 | 35 |
| − 43 | − 33 | − 18 | − 15 | − 33 |

## நிறம் தீட்டுங்கள்



## விடுகதைகள்

1.மு  றை  ற  யின்  றி  த் தொட்டால், ஒட்டிக் கொண்டு உயிரை எடுப் பான் அவன் யார்?

**மின்சாரம்**

2. வீட்டுக்கு வந்த விருந் தாளியை வரவேற்க ஆளில்லை. அது என்ன?

**செருப்பு**

3.மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கல்ல, பட்டை போட்டிருப் பான் சாமி அல்ல, அவன் யார்?

**அணில்**

4.நீரிலும் வாழ்வேன், நி ல த் தி லு ம் வாழ்வேன். நீண்ட ஆயுள் உடைய எனக்கு இறைவன் கொடுத்த கவசமும் இருக்கு. நான் யார் ?

**ஆமை**

5.தாய் குப்பையிலே, மகள் சந்தையிலே அவை என்ன?

**நெல்**

6.பூ பூக்கும். காய் காய்க் கும். ஆனால் பழம் பழக்காது. அது என்ன?

**தேங்காய்**

7.கையை வெட்டுவார்; கழுத்தை வெட்டுவார். ஆனாலும் நல்லவர். யார் அவர்?

**தையல்காரரர்**


8.வயதான பலருக்கு புதிதாக ஒரு கை அது என்ன?

**வழுக்கை / பொக்கை**

9.இளமையில் பச்சை, முதுமையில் சிகப்பு, குணத்திலே எரிப்பு. விடை தெரியுமா?


**மிளகாய்**

## APPLE



My name is apple. My colour is red or green. I'm rich in fiber and minerals. I'm the first letter of the alphabets.Eat me daily and stay healthy.

## கூட்டுங்கள்



3 + 5 =
5 + 1 =
5 + 5 =
1 + 8 =
2 + 6 =
4 + 5 =
3 + 4 =
4 + 2 =

## வழிகாட்டுங்கள்



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# வாழ்க்கையின் வலிகளை அதிகம் சுமந்து புகைப்பட கலைஞர், மற்றும் கவிஞர், நடிகர் என பல்துறைகளில் பிரகாசிக்கும் ஏ.எம். ஏ.றசூல்

**சின்னக்கிண்ணியா றஹுமானியா நகரை பிறப்பிடமாகவும் வான்எல, பணிச்சம் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஏ.எம். ஏ.றசூல் ஒரு புகைப்பட கலைஞர், மற்றும் கவிஞர், நடிகர் இன்னும் ஒரு ஆசிரியர் எனும் அடையாளங்களை கொண்டிருந்தபோதும் அமைதிப்போக்குடைய அவரை நான் ரொம்ப பிஸி பகுதிக்காக சந்தித்தபோது.**



*01. உங்களைப் பற்றி சொல்லுங்களேன்?*

வழிகாட்டுதல் இல்லாத நேரம் .வாழ்க்கையின் வலிகளை அதிகம் சுமந்தவன். தொழில் இல்லாதபோது சிலர் என் முகம் பார்க்க வெட்கப்பட்டனர். அந்நேரம் பார்த்து இந்த மண்ணில்தானா? பிறந்தேன் என்று எனக்குள்ளே கேட்டுக் கொண்ட நாட்கள் அதிகம்தான்.

*02. புகைப் படத்துறைக்கு எவ்வாறு வந்தீர்கள்?*

தொழில் இல்லாதபோது அதுவே எனது முதல் தொழிலாக அமைந்தது. நீண்டகாலம் சோறு போட்டது.

எந்நேரம் கூப்பிட்டாலும் போட்டோ எடுக்க போவேன் புகைப்படம் எடுப்பது எனக்குள் ஒரு கலையாக மாறியது. அதனால் கண்களில் காணும் அழகுக் காட்சிகளை கெமராவுக்குள் பதிவு செய்வேன்.

*03. எப்படிப் பட்ட காட்சிகளைபடம் எடுப்பீர்கள்?*

நானும் கிராமத்தில் வாழ்வதால் அங்குதானே இயற்கையின் இருப்பிடம் அதனால் ஆடுகள், வயல் நிலங்கள், வைக்கோல் சுமக்கும் மாட்டு வண்டிகள், பறவைகள், கடற்றொழில் செய்யும் மீனவர்கள் இன்னும் ஏராளம்.

*04. நடிப்புத்துறைக்கு எவ்வாறு மாறினீர்கள்?*

ஆரம்பக்கல்வியை அல் அக்ஸாவில் படித்தாலும் உயர்நிலைக் கல்வியை கிண்ணியா மத்திய கல்லூரியில் படிக்கும் போது பாடசாலை மாணவ மன்ற நிகழ்ச்சிகள் எனக்கு களமாக அமைந்ததால் நடிப்புத்துறையில் இலகுவாக உள்வாங்கப் பட்டேன்.

*05. நீங்கள் நடித்த திரைப்படம் பற்றி ?*

எனதூர் கிண்ணியாவில் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட "இரு பயணங்கள் " திரைப்படத்தில் நகைச்சுவை வேடமேற்று நடித்தேன். அது எனக்கு பலரது பாராட்டை பெற்றுத் தந்தது.

அதன் பின்னால் எனக்கு பல வாய்ப்புகள் தேடி வந்தன ஆசிரியர் தொழில் கிடைத்த பின்னர் எனது காலம் பாடசாலை சமூகத்துடன் கழிந்தது .

*06. மாணவ சமூகத்தில் உங்கள் எழுத்துப் பணி எந்தளவு பயன்படுகிறது?*

பாடசாலை பாடத்திட்டத்தில் கட்டுரை அதன் வடிவாக்கம்,சஞ்சிகைகள் உருவாக்கம், சிறுவர் பாடலாக்கம் விளம்பரம் எழுதும் முறை, துண்டு பிரசுரம் எழுதும் முறை போன்றவைகள் உள்ளன. அதனை இலகுவான முறையில் மாணவர்களுக்கு என்னால் கற்றுக் கொடுக்க முடிகிறது. முக்கியமாகச் சொல்லப்போனால் குறுக்கெழுத்துப் போட்டி பல மாணவர்கள் செய்வது அரிது இடமிருந்து வலம் மேலிருந்து கீழ் என்ற விடயங்களில் குழம்பி விடுவார்கள் அதனை ஒழுங்கு முறையில் சொல்ல செய்து கொள்வார்கள்.

## நான் ரொம்ப பிஸி...

*07.நீங்கள் எழுதிய நூல்கள்?*

உறவுகள் குதூகளிக்கடும் 2012 இலும் அன்பு 2017 இலும் வெளியீடு செய்யப்பட்டது. இரண்டும் சிறுவர் பாடல்கள் அவை சிறுவர் இலக்கியம் சார்ந்தவையாகும்.

*08. சிறுவர் இலக்கியம் தவிர்ந்த வேறெந்த துறையில் ஆர்வம் காட்டுகிறீர்கள்?*

சிறுகதைகள்,கவிதைகள்.கட்டுரைகள் இலங்கையின் தேசிய பத்திரிகைகளில் எழுதி வருகிறேன். அண்மையில் தினகரன் வாரமஞ்சரியில் கட்டுரை ஒன்று பிரசுரிக்கப்பட்டது.

*09. நூலுருவாக்கம் எனும் பணி பற்றி சொல்லுங்களேன்?*

அதிகமானவர்கள் சொல்கின்ற கருத்து பிரசவ வலிக்கு ஒப்பானது என. நூலுருவாக்கம் உண்மையில் சிரமமான பணியாகும். என்னைப் பொருத்தவரையில் பிரசவ வலி என்பது தியாகம் அதை எதனோடும் ஒப்பிட முடியாது.

*10. இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் சொல்லக்கூடியது?*

முன்னேறி வரும் நீங்கள் உங்களுக்கு முன்னுள்ள அனுபவ எழுத்தாளர்களை பின் நிறுத்திப் பார்க்க விரும்பாதிர்கள்.












**ஏ எம் கஸ்புள்ளா**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# 'டிரெண்டி லுக்கிற்கு' இதையெல்லாம் பின்பற்றுங்கள் பெண்களே...

**ஸ்டைலிஷாகத் தெரிய வேண்டும் என்று நினைக்கும் பெண்கள் முதலில் தங்களது உடல்வாகுக்கு ஏற்ற ஸ்டைல் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.**

ஆயிரம் பேருக்கு மத்தியில் செல்வதாக இருந்தாலும் தான் தனித்துத் தெரிய வேண்டும் என்பதே பெண்களின் விருப்பம். டீன் ஏஜ் பருவத்தினர் மட்டுமின்றி வேலைக்குச் செல்லும் பெண்களும் வயது வித்தியாசம் இன்றி டிரெண்டியாக தெரிய வேண்டும் என்று நினைக்கிறார்கள். டிசைனிங் பற்றி எதுவும் தெரியாமல் தனக்குத் தானே டிசைனராகி வீண் செலவுகளால் பெருமளவு பணத்தை இழந்து விடுபவர்களும் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் இனி கவலைப்படத் தேவையில்லை பெண்களே...!

ஸ்டைலிஷாகத் தெரிய வேண்டும் என்று நினைக்கும் பெண்கள் முதலில் தங்களது உடல்வாகுக்கு ஏற்ற ஸ்டைல் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஹேர்ஸ்டைல், மேக்கப், சிம்பிள் அக்சசரீஸ் மற்றும் உடைகள் உடலோடு பொருந்தி அழகை கூட்டிக் காட்ட வேண்டும் என்பதே முக்கியம். டிரெண்டில் இருக்கிறது என்பதற்காக எல்லாப் பொருள்களும் அனைத்துப் பெண்களுக்கும் ஒரே மாதிரியாகப் பொருந்தாது.

டிரெண்டியாகவும் தெரிய வேண்டும் அதே சமயம் அழகிலும் மாற்றுக் குறையக் கூடாது என்று நினைக்கும் பெண்கள் இங்கே கூறப்பட்டிருக்கும் விடயங்களை மறக்காமல் பின்பற்றி பாருங்கள்!



- உங்களை ஸ்டைலாகக் காட்டுவதில் முதல் இடம் வகிப்பது உங்களது ஹேர் ஸ்டைல். உங்கள் மனதுக்கு நெருக்கமான அழகுக் கலைஞரை சந்தித்து உரையாடுங்கள். டிரெண்டி ஹேர் ஸ்டைலுக்கு மாறுங்கள்.
- நீங்கள் உடுத்தும் உடை உங்களைப் பற்றிச் சொல்வதில் முதலிடத்தில் உள்ளது. நீங்கள் எதை உடுத்தும்போதும் நம்பிக்கையோடு உடுத்துங்கள். உங்கள் உடை கம்பீரமாகவும், தன்னம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கும் பட்சத்தில் அதுவே உங்கள் மீதான மதிப்பீட்டை உயர்த்தும். உங்கள் உடை உங்களின் உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்துவதாக இருக்கட்டும்.
- இடத்துக்கு தகுந்த உடையை தேர்வு செய்வது ஒரு கலை. அலுவலகம் செல்வதற்கு, பார்ட்டிக்கு செல்ல, திருமண விழாக்களில் கலந்துகொள்ள என்று சூழலுக்குப் பொருந்தும் உடைகளை அணிந்து செல்லுங்கள். எனது வாழ்க்கைப் பயணத்தில் எது வந்தாலும் அதனை என்னால் இன்முகத்துடன் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை உணர்ந்துகொள்ள முடியும். சூழலுக்கு ஏற்ப உங்களை மாற்றிக் கொள்வதும் எளிதாகும்.
- நீங்கள் எவ்வளவு அதிகம் பணம் கொடுத்து வாங்கி இருந்தாலும் உங்களது உடல்வாகுக்கு பொருந்தாத உடைகள் உங்களை டிரெண்டியாகக் காட்டாது. நீங்கள் செலவளித்த பணம் வீணாகி விடும். எந்த உடையாக இருந்தாலும் சிக்கென பொருந்தும்படி அணிந்து செல்லுங்கள்.

அழகிய ஆடையோடு உங்களது தன்னம்பிக்கையும், செல்லத் திமிருமே அழகிய அணிகலன்கள். அவற்றை மறந்திட வேண்டாம்.

- ஜீன்ஸ் எப்போதுமே டிரெண்டில் இருப்பதால் இரண்டு ஜோடியாவது உங்கள் வாட்ரோப்பில் இருக்கட்டும். திடீரென வெளியில் கிளம்பும் போதும், டிராவல் போன்ற சூழலிலும் சாதாரண டீ சர்ட்டையும் கொஞ்சம் ஸ்டைலாக காட்ட ஜீன்ஸ் அவசியம்.
- நீங்கள் அணியும் உடை 50 சதவிகிதம் மற்றவர்களுக்குப் பிடித்திருந்தால்போதும். மீதம் 50 சதவிகிதம் அது உங்களுக்கு ஆத்மார்த்தமாகப் பிடித்திருக்க வேண்டும். நீங்கள் செல்லும் இடத்தில் இருக்கும் நபர்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்க வேண்டும் என்பதையும் உடைகளால் தீர்மானியுங்கள். எனவே, உடையில் எப்போதும் சிறப்புக் கவனம் செலுத்துங்கள். உங்கள் மனதுக்குப் பிடிக்காத உடையை ஒருபோதும் அணிய வேண்டாம்.
- டிரெண்டியாகத் தெரியவேண்டும் என்பதற்காக உங்களது தோற்றத்தை தலைகீழாக மாற்ற வேண்டியதில்லை. சின்னச் சின்ன விஷயங்களில் மாற்றம் செய்தாலே டிரெண்டியாகத் தோன்றலாம். பெல்ட் அணிவது, துப்பட்டாவை வித்தியாசமாகப் போடுவதும் ஸ்டைலை மாற்றும். அணிகலன்களிலும் வித்தியாசம் காட்டுங்கள்.
- நீங்கள் இப்படி மட்டும்தான் இருப்பீர்கள் என்ற ஒற்றை அடையாளத்தை உருவாக்கி விடாதீர்கள். ஜீன்ஸ், டீஷர்ட் என்று டிரெண்டியாக டிரஸ் செய்தாலும் தங்கச் செயின், வளையல், கொலுசு போன்றவற்றை மாட்டிக் கொள்ளவே மாட்டேன் என்ற கொள்கை முடிவுகளை விட்டு விடுங்கள். என்ன உடுத்துகிறீர்களோ அதற்கு ஏற்ப அணிகலன்களையும் மாற்றி உங்களை பர்பெக்டாக உணருங்கள். எப்பவும் நான் புதிதாகவும் இளமையாகவும் இருக்கிறேன் என்பதை உலகுக்குச் சொல்ல நினைக்கும் பெண்கள் ட்ரெண்டில் தான் இருப்பார்கள் இல்லையா?!

இவற்றைப் பின்பற்றினால் நீங்கள் எப்போதும் ட்ரெண்டியாகத் தான் தெரிவீர்கள்! இளமை ததும்பும் புன்னகையோடு வலம் வாருங்கள். அனைத்திலும் வெற்றியை எட்டுங்கள்.





2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -















புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக்கழகம், அரச நாடக ஆலோசனைக் குழு ஆகியன இணைந்து ஒழுங்குசெய்த 49ஆவது அரச நாடக விருது வழங்கும் விழா அணமையில் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மூத்த நாடகக் கலைஞர் லலிதா சரத்சந்திர, நாடக கீர்த்தி கலாபூஷணம் பிரான்சிஸ் யூல்ஸ் கொலின் ஆகியோருக்கு விருதுகளை வழங்கினார். ஏனைய விருதுகளை இராஜாங்க அமைச்சர் விதுர விக்கரமநாயக்க, கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் அனோஜா தரணிகமகே உட்பட அதிதிகள் வழங்கினார்கள். இதில் சிறந்த நாடக தயாரிப்பு, இயக்குனருக்கான விருதுகள் ராமலிங்கம் ஸ்ரீகாந்த்தும், எஸ். ஜீவராஜா ஜீவராணியும், அபிலாஷினியும், புஷ்பலதாவும்பெற்றுக்கொண் டனர். இவர்களுடன் கிழக்கிலங்கை நுண்கலைத் துறை விரிவரையாளர் சந்திரகுமார் குழுவினரையும் படங்களில் காணலாம். படங்கள் ஏ. கே. விஜயபாலன்






# உடப்பில் ஐம்பெரும் விழா

தினகரனின் 90 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நடத் தும் ஐம்பெரும் விழா தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவானவில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்திலவேலவர் தலைமை யில் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை உடப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய கலாச்சார மண்டபத் தில் நடைபெறவுள்ளதாக சங்கவி பிலிம்ஸ் நிறுவ னத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸ் தெரிவித் தார்.

இந்த ஐம்பெரும் விழாக்களில், ஆன்மீகம் ம ற்றும் கலைத்துறைகளில் அரும்பணியாற்றி வரும் ஆன்மீகவாதிகளையும் கலைஞர்களையும்

இளம் சாதனையாளர், சாதனையாளர், வாழ்நாள் சாதனையாளர் என தரம் பிரித்து வளம் கொழிக்க விருது வழங்கி கௌரவிப்பது முத லாவது நிகழ்வாக நடைபெறவுள்ளது. உடப்பு ஸ்ரீ கிருஷ்ணா ஸ் இசைப் பயிற்சியகத்தில் (Sri krishnash music academy) தேர்ச்சி பெற்ற மாணவர் களின் அரங்கேற்ற இசை விழா ஐம்பெரும் விழாக் களில் இரண்டாவது விழாவாக நடைபெறவுள்ளது. உடப்பில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித் தியடைந்த மாணவ, மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு மூன்றாவது விழாவாக நடைபெறவுள்ளது.

உடப்பில் உள்ள கலைஞர்களினதும் மாணவ மாணவிகளினதும் கலை, கலாச்சார நடன கலை நிகழ்வுகள் நான்காவது விழாவாக நடைபெற வுள்ளது. புதிய பாடகர்களையும் பாடகிகளையும் இசைத்துறைக்கு அறிமுகப்படுத்தும் இசை நிகழ் வுகள் ஐந்தாவது விழாவாக நடைபெறவுள்ளது.



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

90th ANNIVERSARY

## தினகரனின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழா

# உதைபந்தாட்ட போட்டியில் சம்பியனான தர்ஹா நகர் மக்பூட் கழகம்



ஏற்பாட்டுக் குழு தலைவர்
**எம்.என்.எம். றிம்ஸான்**



தினகரனின் 90ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஒழுங்கு செய்த உதைபந்தாட்ட போட்டி பேருவளை பேர்கோ சிட்டி உள்ளக விளையாட்டரங்கில் (27) மாலை நடைபெற்றது. இதன்போது இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற தர்கா நகர் மக்பூட் கழகத்திற்கு விழாவின் பிரதம அதிதி EG LAb. உரிமையாளர் எம்.ரீ.எம். ஹாரிஸ் தினகரன் வெற்றிக்கிண்ணத்தை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்ட பேருவளை நகர சபை எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி, பேர்கோ சிடி உரிமையாளரின் புதல்வர் பாஹிம் தாலிப், Reeborn நிறுவன சந்தைப்படுத்தல் முகாமையாளர் சப்ரி ஸவாஹிர், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எம்.எம். அம்ஜாத், புரவலர் ஹாசிம் உமர், இணையாசிரியர் மர்லின் மரிக்கார், தினகரன் பிரதம உதவி ஆசிரியர் எஸ். ஸ்ரீகாந்த், உதவி ஆசிரியர் எம்.எப்.எம். அஜ்வாத் பாஸி, உதைபந்தாட்ட ஏற்பாட்டாளர் தினகரன் ஆசிரிய பீட றிம்ஸான், இணையத்தள ஆசிரியர் எஸ்.எம். றிஸ்வான், பேருவளை பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் பதியுத்தீன், கோல்டன் கேட் சர்வதேச பாடசாலை அதிபர், சுப்பர் சன் அணியின் முகாமையாளர் சிபான், சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.எம். முக்தார் உட்பட பலரும் அதிதிகளாக கலந்துகொண்டு வீரர்களுக்கு சான்றிதழ் மற்றும் கிண்ணங்களையும் வழங்கி வைத்தனர். அதிதிகள் வெற்றிபெற்ற அணியுடன் எடுத்துக்கொண்ட படம்.

படம்: அசங்க, இன்பாஸ் சலாஹுத்தீன்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.